பஞ்சபாண்டவர்

வனவாசம்

1906

இதே பதிப்பு மகாபாரதத்தில் இருக்கிறது.
இது ஆசிரியருக்கு.

உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சபாண்டவர்

வனவாசம்.

இஃது

மணிமங்கலம்.

வடிவேலுமுதலியாரவர்களால்

பரிசோதிக்கலுற்று,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைகாரியம்.

N. குருசாமிநாயுடு அவர்களால்

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

மாமன்சகுனியுந்தான் மருமகனுக்கேதுரைப்பான்
தூதரைபோகவிட்டு தொலைதூரமேதேடில்
வனமாய்வனங்களிலே வனவாசஞ்செய்கிறதும்
செத்ததுவும்பிழைத்ததுவும் சேதிதெரியுமென்றார்
என்றதுகேட்டவுடன் எழுந்தான்திரியோதனனும்
அங்கிருக்குந்தூதர்களை அரசுமன்னன்தானழைத்து
ஐவர்வனம்போய் அனேகநாளாச்சுது
எந்தவனத்தி லிருக்கிறாரென்றறிந்து
ஐவர்கண்காணாதே அதிசீக்கிரம்வாரும்
காற்றாய்பறந்து கடுகியேவாருமென்றான்
தாம்பூலம்வாங்கித் தானடந்தார்தூதுவர்கள்
கோட்டைகடந்தார்கள் கொத்தளமுந்தான்கடந்தார்
பட்டணமுந்தான்கடந்து பாரவனம்போகலுற்றார்
செந்நாய்புலிகரடி சீறும்வனங்கடந்தார்
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்தானிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனங்கடந்து
சூரியவனந்தனிலே போய்சேர்ந்தார்தூதுவர்கள்
பரணசாலைக்குள்ளிருக்கும் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்குமிடமறிந்து ஏகிநடந்தார்கள்
வனமாய்வனங்கடந்து வாரார்களம்பலத்தே
திரியோதிரனிருக்குஞ் சிங்காதனத்தின்முன்பால்
சாஷ்டாங்கமாகவேதான் சரணமிட்டார்தூதுவர்கள்
மகாராசர்மெச்சுகின்ற மன்னவரேநீர்கேளும்
சூரியவனத்திலவர் சுகமாயிருக்கிறார்கள்
பரணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமென்றார்
அவ்வார்த்தைகேட்டு அரசுமன்னனேதுசொல்வான்
மாமாசகுனி மன்னவரேநீர்கேளும்
எந்தவிதம்பண்ணாலும் இறவாமல்பஞ்சவர்கள்
தப்பிப்பிழைத்து யிருக்கிறார்தாரணியில்
வனவாசந்தீர்ந்து வந்தார்களாமானால்
பங்குள்ளபிரகாரம் பாதிராச்சியங்கேட்பாரே
வாராமல்பஞ்சவரை வனத்திலேகொல்லுகைக்கு
ஆலோசனைசொல்லுமையா அம்மானெனவுரைத்தான்
மாமன்சகுனி மருமகனுக்கேதுரைப்பான்
செல்வமருமகனே திரியோதிரா அஞ்சாதே
ஐவரைக்கொல்லவென்றால் ஆலோசனைசொல்லுகிறேன்
தேவலோகத்திருக்குஞ் சினமுற்றதுருவாசர்
அவரை-வருந்தித்தபசுபண்ணால் வந்திடுவாரிப்பொழுதே

வந்தபொழுதில் வருந்திச்சரண்சொல்லி
அடிசல்சமைத்து அமுதுபடைத்திரானால்
போஜனமிட்டு புகழ்வேந்தாபொற்பதத்தில்
சரணமடைந்திட்டால் சந்தோஷப்பட்டிடுவார்
துருவாசர்தன்மகிமை சொல்லிமுடியாது
தேவராலாகாது ஜெயிக்கமுடியாது
ஆராலுமாகாது அந்தரிஷியைச்செயிக்க
அப்படிக்கொத்தவரை அழைத்துநீரன்னமிட்டால்
சந்தோஷபட்டிடுவார் தபசில்பெரியவரும்
ஐவரைக்கொல்லுதற்கு அவரைமனுக்கேட்டால்
நல்லதென்றுசொன்னால் இராச்சியமுமுன்னுதடா
யாராலேயாகும் ஐவரைக்கொல்லவென்றால்
என்றுசொல்லக்கேட்டு இராசன்திரியோதிரனும்
உள்ளங்குளிர்ந்து உடனேகத்தானெழுந்தார்
அங்கொருவர்தானறியா தரவக்கொடியோனடந்தான்
முத்துமிதியடியைத் தொட்டுநடந்தசைந்தான்
பூங்காவனப்புகுந்து புதுக்கங்கைநீராடி
ஸ்நானங்கள்செய்து செபதபமுந்தான்முடித்து
நினைந்துசிவனை நெற்றியில்வெண்ணீரணிந்து
அரகராவென்று அள்ளியிட்டான்வெண்ணீறு
சலங்களைக்கொண்டு நிலங்களைசுத்திபண்ணி
தெற்பாசனம்போட்டு திரியோதிரராஜன்
துருவாசமாரிஷியை அருகுவரத்தானினைந்து
கண்ணிரண்டுமூடிக் கருத்தில்நினைந்தானே
அருந்தபசுபண்ணானே அரவக்கொடியோனும்
அப்போது அந்தரிஷி யறிந்துஞானதிருஷ்டியினால்
சர்ப்பக்கொடியோன் தபசுநிலையறிந்து
சந்தோஷமாகி தான்வருவார் அந்தரிஷி
சடையுஞ்சடைமுடியுங தம்பிரானைப்போலே
கையில்கமண்டலமுங் காஷாம்பரமணிந்து
தெண்டுகமண்டலமுந் திருநீற்றுக்கோபியுடன்
வருகிறாரந்தரிஷி வானுலகந்தான்கடந்து
வனமாய்வனங்கடந்து வாழ்மலையுந்தான்கடந்து
திரியோதிரன்தபசு நிலைசேரவந்தரிஷி
கண்டவுடன்மன்னன் கடுகியேதானெழுந்து
முக்காலுமன்னன் முடிவணங்கிதெண்டனிட்டு
ஆண்டவரேஜயாவே அடியேன்சரணமென்றான்
சிறந்ததுருவாசரிஷி சித்தமகிழ்ந்தேகுளிர்ந்து
என்னையழைத்ததுதானேது கருமமென்றார்
மனதில்நினைத்ததெல்லாம் மன்னவுரையுமென்றார்
அஞ்சிப்பயந்தவனும் அரசமன்னனேதுசொல்வான்

அமுதுபடைக்கவென்று அநேகநாளென்மனதில்
எண்ணியிருந்தேன்காண் இதுவேகருமமல்ல
வாரும்மகாரிஷியே வருவீர் அமுதுசெய்வீர்
வருந்தியழைத்துவந்தான் மாளிகைவாசலிலே
வட்டமணைபோட்டு வந்திருமென்றுசொல்லி
கைக்குச்சலங்கொடுத்தான் கட்டழகர்கோமானும்
தலைவாழையிலைபோட்டுத் தண்ணீருந்தான்தெளித்தான்
முக்கனியுஞ்சர்க்கரையும் முன்படைத்தான்திரியோதிரன்
கட்டுவர்க்கமுடனே காவலனுந்தான்படைத்தான்
உண்ணுமுண்ணுமென்று உபசாரணைபண்ணலுற்றான்
அத்தனைபோசனமும் அருந்தினரந்தரிஷி
உண்டுபுசித்தாராம் வுள்ளங்குளிர்ந்தாராம
கையலம்பிக்கொண்டு மலர் கனிவாயுஞ்சத்திபண்ணி
சிங்காதனத்தினிலே சேர்ந்தாரேயந்தரிஷி
தென்னமுடிவேந்தன் திரியோதிரராஜன்
பொற்றம்பாளந்தனிலே புட்பமுஞ்சந்தனமும்
தங்கதாம்பாளத்தில் தாம்பூலந்தான்கொடுத்தான்
மெத்தமகிழ்ந்தாரே மேன்மைதுருவாசரிஷி
சர்ப்பக்கொடிபடைத்த சதிமன்னனைப்பார்த்து
உனக்கென்னமனதில் இஷ்டமெல்லாங்கேட்டுவிடு
மனதில்நினைந்ததொரு வரங்கேளுந்தாரேனென்றார்
என்றுமவருரைக்க யேதுரைப்பான்திரியோதிரன்
ஏதுவரந்தருவீ ரென்றுரைத்தான்திரியோதிரன்
அப்போதுமாமுனியும் அவ்வார்த்தைக்கேதுசொல்வார்
நீ-கோரும்வரங்களெல்லாம் கொப்பனவேதாரேனென்றார்
அப்போதுதிரியோதிரன் ஆணழகனேதுசொல்வான்
பங்காளிபிள்ளைகளோ பஞ்சவர்களைவருண்டு
ஐவர்வனவாசம் ஆரணியம்போனார்கள்
சூரியன்வனத்திலேதான் இருக்கிறார்பஞ்சவர்கள்
ஐவரைக்கொல்லவென்று அனேகமனதாகி
உம்மைவருந்தினேன் உண்மையுள்ளமாமுனியே
பஞ்சவரைக்கொல்லவென்று பரவசமாய்ச்சொல்லுமென்றான்
எந்தவகையாலும் இறக்கவகைபண்ணுமென்றான்
பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
துருவாசமகாரிஷியுஞ் சொல்லுகிறார்வாய்திறந்து
ஏதுகாணும்மைசெய்தா ரிராஜாக்கள்பஞ்சவர்கள்
எப்படிக்கொல்வேனு னிராஜாக்கள்பஞ்சவரை
திரியனதுகேட்டு செப்புவான்வாய்திறந்து
ஆரணியந்தன்னிலே ஐவரருகிற்சென்று
போஜனங்கள்கேட்டாலே புகழ்வேந்தர்பஞ்சவரை
ஐவருக்குப்போஜனங்க ளங்கேகிடையாது

வெந்தசோறுண்டு விதமறியார்பஞ்சவர்கள்
போசனமில்லையென்றால் பொட்டெனவேசாபமிட்டு
கல்லாகமண்ணாகக் காவலரைச்செய்துவிட்டு
கடுகிவந்துசேதிசொல்லும் சனத்தரிஷியாரே
போய்வாருமென்று பொருந்தவேதெண்டனிட்டார்
துருவாசமாரிஷியுஞ் சுருக்காகவேநடந்து
தெண்டுகமண்டலமுஞ் செம்புலித்தோலாசனமும்
கடுகிநடந்தாரே· காடுஞ்செடிநோக்கி
அஸ்தினாபுரந்தாண்டி ஆறுஞ்சுனைதாண்டி
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சில்லென்றுபூத்த செடியும்வனாந்திரமும்
கடிகிவருகிறார் கனத்தரிஷிபவரும்
ஏழுலகையாண்ட யெம்பெருமாளிதையறிந்தார்
அடியளந்தமாயவனார் ஆதிமூலமேதுசெய்தார்
நம்பினவரைக்காக்கும் நாராயணரெழுந்து
காவலர்கள்பஞ்சவர்க்கு கனமோசம்வந்ததென்று
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வருகுதென்று
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதென்று
தோளிற்செபமாலை சோரவிடநாளாச்சே
பாணியெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
என்றும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
இங்கேயிருந்தோமென்றால் இறந்திடுவார்பஞ்சவர்கள்
நம்பினோமென்றவரை நாமல்லோகாக்கவேணும்
என்றுஎழுந்தாரே யெம்பெருமாள்மாயவரும்
துவாரகாபுரிதாண்டி துழாய்மவுலிதான்வாறார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சிறந்ததுருவாசருடன் சேர்ந்தாரேயெம்பெருமாள்
ஆலிங்கனம்பண்ணினார் ஆயர்பெருமாளும்
இந்தவனத்துக்கு யேதுவகையாய்ப்போறீர்
எங்கேநீபோறீர்காண் என்றார்பெருமாளும்
மாரிஷிதுருவாசர் வாய்திறந்தேதுசொல்வார்
மாயன்பெருமாளே வந்தென்னயிவ்வனத்தே
பாரிவேட்டையாகவே பாரவனங்கள்வந்தேன்
வனசாரியாகவே வந்தேன்காணிவ்வனத்தே
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தரிஷியேதுசொல்வார்
பஞ்சவர்கள்தாமிருக்கும் பாரவனங்களிலே
ஐவரிருக்குமந்த அடவியிலேபோய்ச்சேர்ந்து
புண்ணியவானவரையும் போசனங்கேட்கவந்தேன்
என்றுசொல்லக்கேட்டு எம்பெருமாளானவரும்
நாமும்வருகிறோம் ராசாக்களைப்பார்க்க
கூடநடந்தாரே கோபாலசுவாமியவர்

இருவருமாகவே இருண்டவனந்தாண்டி
ஓங்கிவளர்ந்தவொரு மூங்கில்வனந்தாண்டி
செந்நாய்புலிகரடி சீரும்வனந்தாண்டி
பாதிரிமுல்லை பருத்தவனந்தாண்டி
ஒருநாரைக்கொருநாரை வுயர்ந்தகொப்பிலேயிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தாண்டி
கடுகிவருகையிலே சுரியமாலென்னசெய்தார்
பலாமரத்தைக்கண்டவுடன் பாரளந்தாரேதுசொல்வார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
இந்தப்பலாயிலைதான் ஏதுக்குதவுமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமல்லோ அரியரிஷியேதுசொல்வார்
இந்தப்பலாயிலையி லினியபோசனங்களுண்டால்
பலாயிலையிற்போசனங்கள் பண்ணவர்க்குஇட்டாலே
அமரருக்குஅற்புதங்காண் ஆர்க்குங்கிடையாது
எல்லோர்க்குங்கிட்டாது ஸ்ரீராமாவென்றுசொன்னார்
உச்சிதங்கள்தான்கேட்டு உவந்துநடக்கையிலே
அந்தவனங்கடந்து அடுத்தவனம்போகையிலே
காமதேனுப்பாலை கருங்கல்லுப்பாறையிலே
சுரந்துஇருக்கிறதைக் கண்டார்பெருமாளும்
மாயன்பெருமாளும் வார்த்தையவர்க்கேதுரைப்பார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
தூயதவத்திற்சிறந்த துருவாசமாமுனியே
காமதேனுவின்பாலும் காரியத்துக்காகுமோதான்
(இது)ஏதுக்குதவுங்கா ணென்றார்பெருமாளும்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமுனியேதுசொல்வார்
தேவலோகந்தனிலே தேவருக்குங்கிட்டாது
(இது)எடுத்துப்புசித்தாலே ஈஸ்வரருக்கற்புதங்காண்
என்றுசொன்னவார்த்தைதனை யெம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமவர் சுவாமிநடந்தாரே
அடுத்தவனந்தனிலே அவரிருவர்போகையிலே
தாமரைதடாகத்தை சாமிகண்டேதுசொல்வார்
அய்யாபெரியவரே அமரர்க்கரிதானவரே
இந்தஜலந்தானும் ஏதுக்குஆகுமென்றார்
துருவாசமாரிஷியுஞ் சொல்லுகின்றார்பொட்டெனவே
தாமரைப்பொய்கையிலே ஸ்நானங்கள்செய்தாலும்
தபங்கள்ஜெபங்கள்பண்ணி தாகத்துக்குண்டாலும்
சிவனேயவனுகுஞ் செப்பமுடியாது
என்றுசொன்னவார்த்தை யெம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமப்போ சாமிநடந்தாராம்
இருவருமாகவே ஏகிவழிநடந்தார்

சூரியவனந்தனிலே சேர்ந்தாரிருவருமாய்
னசாலைமேலிருந்த பஞ்சவர்கள் கண்டுவிட்டார்
மாயன்பெருமாளும் மாமுனியானவரும்
வருகிறாரென்றுமந்த மகாராசர்தானெழுந்து
இடுக்கிட்டுத்தான்பதைத்துச் சீக்கிரமாய்த்தானெழுந்து
எதிர்கொண்டோடிவந்து இரங்கியேதெண்டனிட்டார்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டார்
கடுகிமுடுகியே காட்டுத்தழையொடித்து
ஐந்தடுக்குமெத்தையதாய் ஆசனம்போட்டார்கள்
இட்டசிங்காதனத்தில் ஏறியிருவருமாய்
பஞ்சிலேமெத்தையிலே பதியக்கொலுவிருந்தார்
தக்கப்புகழுடைய தருமரவர் கூறுவார்
துரியோதிரன்செய்த சேதிதனைக்கேட்டீரோ
காட்டோடிருந்தவென்னை ராஜமன்னன்தானழைத்து
விருந்தருந்தவாருமென்று விருந்தோலைதானனுப்பி
வருந்தியெனையழைத்து வஞ்சனைகள்பண்ணினானே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
வாரவழிதனிலே வசிகளைத்தான்புதைத்தான்
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
வசநாபிதண்ணீர்பந்தல் வழியில்வைத்தான்மாபாவி
அதுக்கும்பிழைத்தோமே ஆண்டவனேவுன்னருளால்
பொற்குழிவெட்டியே பொற்சிங்காதனங்களிட்டு
கொல்லநினைத்தானே குடிகேடன்மாபாவி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
எண்ணெயிட்டுக்கொள்ளுமென்று எங்களையுந்தானழைத்து
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
நீரிற்கழுநாட்டி நீராடிவாருமென்றான்
குளத்தில்வசிநாட்டிக் கொப்பெனவேபோங்களென்றான்
அதுக்கும்பிழைத்தோமே அரிராமர்புண்ணியத்தால்
உண்ணுகிறசாதத்திலே ஒருக்காலேநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரில் கொலைக்காரன்நஞ்சையிட்டான்
கொல்லநினைத்தானே குடிகேடன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆண்டவனேயுன்னருளால்
அரசர்சபைநடுவே அம்பலத்தார்தங்கள்முன்னே
சொக்கட்டான்போட்டான்காண் சோழிவிளையாடி
பகடசாலைபோட்டு பந்தயங்கள்பேசினான்
நாடுகளுஞ்சீமைகளும் ராச்சியமும்பேசினான்
தாயசீமையேழு துரைத்தனமுந்தான்பறித்தான்
பெருத்தவிலங்குமிட்டு பெருங்கிடங்கிலேயடைத்தான்
காற்றுநுழையாத கல்லறைக்கிடங்கிலிட்டான்

ஐவரையுங்கொன்று அதம்பண்ணிபோட்டீரோ
கல்லாய்சபித்தீரோ கடுகியேவந்தீரோ
என்றுசொல்லிகேட்டானே இயலானராசதுரை
துருவாசமாமுனிக்குத் தோசிமொழிகொள்ளாமல்
கோபமிககொண்டு கொப்பெனவேயேதுசொல்வார்
ஐவரையுங்கொல்லென்று அனுப்பினைமன்னவனே
ஐவர்போனுபசரணை ஆரொருவர்செய்ததில்லை
தேவர்கள்தானருந்துந் திவ்யமாபோசனங்கள்
போதப்படைத்தார்கள் பொன்னடியைத்தான்வணங்கி
சரணமடைந்தார்கள் சந்தோஷமாகிவந்தேன்
ஐவரையுங்கொல்லவென்று அனுப்பினாய்பாதகனே
உன்னுடையவங்கிஷத்தில் ஒன்றும்விளங்காது
ஐவருடைகையாலே அனர்த்தமாய்போகவென்று
சாபங்கொடுத்தாரே சமர்த்துள்ளமாமுனியும்
செப்பிநடந்தாரே தெய்வலோகந்தனிலே
துருவாசமாமுனியும் தெய்வலோகம்போனபின்பு
அப்போதிரியோதிரன் அனேகவிசனமதாய்
எண்ணுதஎண்ணமெண்ணி இருந்தான்திரியோதிரன்
ஐவருக்காகவே ஆயரிருக்கும்போது
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பெருமான்
தூயதேவுலகிருக்குந் துருவாசமாமுனியை
அரவக்கொடியோனும் அனுப்பினுனும்மைக்கொல்ல
திரியோதிரன்சொற்படிக்குச் சீறுந்துருவாசமுனி
(உம்மைக்) கொல்லமனதாகி கோபித்துவந்தாரே
அதுவறிந்துங்களைநான் ஆதரிக்க இங்குவந்தேன்
அல்லாதேபோமானல் அநீதமாய்மாண்டிடுவீர்
என்றுரைக்கமாயவரும் ஏதுரைப்பார்தருமருமே
உம்மைநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறோம்
நீரேதுணையல்லால் வேறுதுணையுண்டோ
நம்பினபேர்களையே ரட்சிக்குந்தேவனல்லோ
அடியாரைக்காக்கின்ற ஆதிபரம்பொருளே
ஏழைகளைக்காக்கின்ற எம்பெருமாளாண்டவரே
பன்னிரண்டுதென்வருஷம் பாரவனந்திரியுமட்டும்
ஏதுவினைவருமோ யெம்பெருமாள்நானறியேன்
இன்னமென்னவஞ்சனையோ எம்பெருமாள்நானறியேன்
வரும்வினையாவுக்கும் மாயவரேதுணைவாரும்
அரக்குமாமாளிகையில ஐவரைக்காத்தீரே
அபயமென்றதுரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
உன்மகிமையாரறிவார் உலகளந்தமாயவரே
சரணஞ்சரணமென்று தாள்பணிந்தார்பஞ்சவர்கள்

சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்பஞ்சவர்கள்
மாயன்பெருமாளும் மனதுமிகக்களித்து
ஐவர்மேல்பட்சம் அதிகப்பிரியமுமாய்
சந்தோஷப்பட்டுசுவாமி தன்னுடமனங்குளிர்ந்தார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளைதுசொல்வார்
இந்தவனந்தாண்டி இனியவனம்போங்களென்றார்
மற்றொருவனத்திலேதான் மன்னவரேபோங்களென்றார்
அடுத்தவனந்தனிலே ஐவரும்போய்வாசம்பண்ணூர்
தெற்குமேற்குகிழக்கு சேனதூரஞ்சென்றாலும்
வடக்குதிசையிலேதான் மன்னவரேபோகவேண்டாம்
ஏதுவினைவந்தாலும் என்னைநினைத்திடுங்கள்
என்றுமவர்சொல்லி எம்பெருமாள்தானெழுந்தார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போய்நடந்தார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
அழகாம்துவாரகைக்கு ஆண்டவரும்போய்நடந்தார்

முதலாவது சூரியவனம்-முற்றிற்று.

௨-வது, ராமரிஷிவனம்.

இரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்பஞ்சவர்கள்
கோவிலைவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
முன்னைமுசுட்டையும் முடன்விரிந்ததூதுவளை
பண்ணைகலவையும் பறட்டைபுளிகரணை
தின்றுதிரிகிறார்கள் தேசாந்திரிபோல
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்பஞ்சவர்கள்
ஐந்தடுக்குபர்னசாலை அவ்வனத்திலுண்டுபண்ணூர்
ஏழடுக்குபர்னசாலை எழிலாகவுண்டுபண்ணூர்
பர்னசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
(அந்த) வனத்திலேஐவர் வனவாசம்செய்தார்கள்
தபசில்பெரியவரும் தம்பிராணனவரும்
சரணங்கள்பண்ணினுலே சாதங்கறியிடுவான்
போஜனங்களிட்டமேலே புஷ்பங்கள்தான்கொடுப்பான்
காவிசாவடாபபாமு கைமணியுந்தான்கொடுப்பான்
புலித்தோலுமாசனமும் பொருந்தவேதான்கொடுப்பான்
சரணமடைந்து சாமிபோய்வாருமென்பான்
தாதாபெரியவர்கள் தப்பெடுத்துவைத்தாலும்
அரிராமாவென்றுசொல்லி அனந்தம்பேர்வந்தாலும்

தெற்குமேற்குகிழக்கு தேடிக்கனிபறிப்பார்
வடக்குதிசைநோக்கி மன்னவர்கள்போவதில்லை
அவ்வனத்திலேயொருநாள் அடங்காதவீமனவன்
மெத்தவகங்காரமுடனே வீமனுமங்கே நினைவாய்
கடுகியெழுந்திருந்தானே கனிகள்பறிக்கவென்று
வடக்குதிசைதனிலே போயவனே போகாதேயென்றார்
காயுங்கனியுமங்கே கடுகவேகிட்டாதோ
வேண்டியராட்சதர்கள் வேதமுனிவருண்டோ
அவ்விடத்திலதிசயங்க ளெல்லாமறிவோமென்று
கடிகியெழுந்திருந்தான் கட்டழகன்வீமனவன்
சல்லடங்கள்போட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி சாமரைப்பூச்சுங்குத்திவிட்டு
கையில்கெதையெடுத்து கடிகியேதானடந்தான்
வடக்குதிசைநோக்கி வாரான்மதகரியான்
காயுங்கனியுமங்கே கடுகப்பழுத்திருக்கும்
அவ்விடத்திலேகனியும் அனேகம்பழுத்திருக்கும்
அருநெல்லிசிறுநெல்லி அழகாந்தமர்த்தைகளும்
கொச்சித்தமர்த்தையுடன் குடகுபலாப்பழமும்
மாங்கனியுந்தேங்கனியும் வண்ணப்பலாப்பழமும்
மட்டில்லாப்பழங்களெல்லாம் வனத்திற்சொரிந்திருக்கும்
அளவில்லாக்கனிகளெல்லாம் அவ்வனத்தில்தானிருக்கும்
கண்டானேவீமனவன் கண்கள்மிகக்குளிர்ந்தான்
அங்கேகனிகள் அனேகம்பழுத்திருக்க
மெத்தகனிகளிங்கே வேணமட்டல்லாந்தானிருக்க
உண்டுபிழைப்பார்க ளென்றல்லோஉலகளந்தார்
தின்றுபிழைப்பார்க ளென்றுதிருமாலும்
வடக்குதிசைபோகாதே யென்றுரேமாயவரும்
சாமிபெருமாளவர் சதிநினைவைக்கண்டோமே
என்றுமனதிலெண்ணி ஏகிநடந்தானே
எண்ணாதுமெண்ணினான் இயல்ானவீமனவன்
அந்தவனத்திலவனுகவுள்நுழைந்து
மரத்தின்மேலேறினான் மதவீமராசனவன்
உச்சிற்கனிபறித்து உகந்துபுசித்தான்காண்
காயுங்கனிபறித்து கடுகவேதான்புசித்தான்
வாயாரதின்றுமே வயிறாரதான்புசித்தான்
அண்ணனுக்குந்தம்பியற்கும் அனேகங்கனிபறிக்க
அருநெல்லிசிறுநெல்லி அழகாந்தமர்த்தையுடன்
சோலைப்பலாக்கனியும் தய்யவிளாங்கனியும்
கிளையைவளைப்பானங் கிள்ளியொருபழம்பறிப்பான்
செடியைவளைப்பானும் சிவந்தபழம்பறிப்பான
அங்கேகனிக ளனேகம்பறிக்கையிலே

அடுத்தபுதரிலேதானரவெழுந்திருந்து
எதிர்த்தவனைத்தேடித்தான் சர்ப்பமெழுந்திருந்து
மதவீமராசனைப் பலேப்பாய்ப் புரண்டதாம்
தாமுறுக்கவே பலேப்பாய்ச் சுற்றிக்கொண்டதேதான்
மனதுமிகக்குளிர்ந்து மதவீமனுறங்கையிலே
வாயைத்திறந்துதாங்கே மதவீமனைப்பிடித்து
கடித்துவிழுங்கிறது இப்பாம்புவீமனைத்தான்
பாம்பென்றுபார்த்ததில்லை பாரமதவீமன்
சர்ப்பமென்றுபார்த்ததில்லை சார்த்தூலவீமனவன்
கல்லென்றுதாமெண்ணி மெத்தெனவேதானடந்தான்
கிளையென்றுதாமெண்ணி விசைநடந்தானே
வழியுந்தெரியாமல் வகைதவிடங்காணாமல்
பக்கந்தெரியாமல் பாம்பென்றறியாமல்
பெருங்குடல்மேல்சார்ந்துகொண்டான் பெருமாநிகர்வீமன்
அழுக்குடல்மேல்சார்ந்துகொண்டான் அந்தமதவீமன்
பாம்பென்றறிந்தானே பார்முடிவேந்தன்
சர்ப்பமென்றறிந்தானே சார்த்தூலவீமனவன்
என்னதுவிதியெனவே இருந்துவிசாரமிட்டான்
அண்ணனைத்தம்பியரை அல்லவனைநான்பிரிந்து
உடன்பிறந்தவரை கொற்றவரைநான்பிரிந்து
ஒக்கப்பிறந்தவரை உடற்பிறப்பைநான்பிரிந்து
மறுநாள்தரிசனமோ வந்தேனறியாமல்
ஆனைமிருகங்கள் ஆடிப்போகாதேயென்றார்
அறியாமல்வந்ததினால் கைப்பட்டேனென்செய்வேன்
தாயன்சொற்கேளாமல் வந்துவிட்டேன் இவ்வனத்தில்
அண்ணர்தருமராசர் அழுதுபுலம்புவரே
தம்பிமாரைத்தேடியவர் தானேபுலம்புவரே
அறியாமலிங்கேயகப்பட்டேனென்செய்வேன்
ஆயர்தேவகிமைந்தர் அர்ச்சுனசகாதேவனும்
மாயவர்கோவிந்தர் மகாதேவர்நாதகருணும்
என்றுபுலம்பியிருந்தானே வீமனவன்
தக்கபுகழுடைய தருமராசரென்னசெய்வார்
இருக்கனனகனிபறித்து அண்ணரண்டைவந்தபின்பு
மாமதிநிறைந்ததருமராயர் மதிகலங்கியேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமன்கனிபறிக்க
மாவீமனைப்போயுமல்லோ மணநேரமெத்தப்போதாச்சு
போனவிடந்தெரியவில்லை புதுமையென்றுநானறியேன்
மதவீமன்போனசெய்தி வார்த்தையொன்றுதானறியேன்
அண்ணனைத்தேடியே அழைத்தோடிவாராயோ
ஓடியழைத்துநீ யிந்நொடியில்வாராயோ
கண்டழைத்துமே கடுகெனவேவாராயோ

அப்போது அருச்சனனும் அவளுடனே தசொல்வான்
அப்படியேபோய்வாரேன் அடியேன்சரணமென்றான்
சரணஞ்சரணமென்று சாய்ந்தான்திருமுடியை
மூக்காவலம்வந்து முன்னொருகால்தெண்டனிட்டான்
போகவிடைதாருமென்ன போர்விஜயன்தெண்டனிட்டான்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் விஜயபெருமானும்
சல்லடங்கள்தானபோட்டு கட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி காமனைப்பூக்கருகிட்டு
வில்லைசமுத்தாமே பிருதிவிகதிட்டிபாணம்
பட்டுத்தட்டிகட்டவில்லே பாவலத்தான்சொல்லி
அம்புவில்லார்த்தானேயெடுத்து அருச்சனராஜனே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சில்லென்றுகாடுசெய்யுமலைதான்தாண்டி
காலடியைத்தேடவேலா எடுத்தேபோதானவருவான்
பாரவனங்களிலே பாத்திரைபோவாராமே
அவ்வனத்திலேகவிகள் அநேகமாய்ப்பழுத்திருக்கும்
கண்டானே அர்ச்சனனுங் காவலனும்மகிழ்சொல்வான்
காலடியைக்கண்டோமே காவலர்க்காரேனுமே
எங்கிருந்தாரேனுமே இயலானவிபரித்தான்
கூவியழைப்போமேயென்றுகலைகொற்றவனும்
அண்ணரேவியாமென்று அழைத்தாரேவானவிஜயன்
கூவியழைக்கவுமோதான்கேட்டுவீமனுக்கு
அருச்சனனேகேட்டு அழைப்பதென்னவென்றுசொல்லி
மாவீரமுடையான் மதவீமனேதுசொல்வான்
காளையருச்சனரே கேட்டவனோ தூரநில்லும்
அருகேநீவாராதே அருச்சனனுந்தூரநில்லும்
கிட்டநீவாராதே கிட்டநில்லுமர்ச்சனரே
இங்கேநீவாராதே இருக்கிறவாய்த்தப்பிரே
தூரநில்லுமர்ச்சனரே சேராதே மோசமடா
வதேசபெருமாம்பு வைரவிஷமிருக்கிறதுபாய்
அரவத்தின்வாயிலே அகப்பட்டுக்கொண்டேனப்பா
இனிபிழைப்பேனென்று நீயென்றுதேதம்பியரே
தப்பிப்பிழைப்பேனென்று தம்பிநீயென்னுதே
மற்றும்பிழைப்பேனென்று மனமயரேயென்னுதே
ஆயாசமாகாதே அண்ணனுடன்சொல்லாய்ப்ப
பலனருதகசொல்லாதே மன்னருக்குக்கொல்லுமய்யா
தக்கபுஜமுடைய தர்மர்கடமன்னவர்
கபடுதெரியாதார் கனமொன்றுஞ்செய்யார்
வெளுத்ததெல்லாம்பாலென்பார் வெள்ளைக்குணநீரென்பார்
பொய்சொல்லான்புண்ணியவான் புகழ்வேந்தன்னருக்கு

இத்தகாலக்ஷயம் நேருதலைசொல்லுமப்பா
மனதுகலங்காதே வார்த்தைதனைச்சொல்லுமப்பா
வனவாசந்தீர்ந்தலோவா வையத்தேபோனபின்பு
சேனைபரிவாரம் துரியோதனன்பாலேபத்தை
செண்டாட்டமாடிவைத்து சேனைகளைக்கொன்றழித்து
கர்ணனைசகுனியையுங் கண்டதுண்டமாகவெட்டி
துரியோதனன்முதலாய்ச் சேர்ந்ததம்பிநூற்றுவரை
மற்றும்படைகளெல்லாம் மண்ணோடேசாய்த்துவெட்டி
அண்ணருக்குப்பட்டங்கட்டி அரசாண்டிருங்களப்பா
தருமருக்குப்பட்டங்கட்டி தரணியையாண்டிருங்கள்
எப்போதும்போலே இராச்சியத்தையாண்டிடுங்கள்
பெற்றவயிறதனில் இட்டேன்பெருநெருப்பை
குந்திமாதன்றனைவயிற்றில் கொடியதணல்வைத்தேனே
எழுத்துப்படியல்லால் எவரால்விலக்கவசம்
தலையிலெழுதந்தான் தவறாதுதம்பிமாரே
அன்றெழுதுங்கர்த்தனவன் அறிந்தெழுதப்போரதில்லை
விதிதன்னையாரும் வெல்லவேகூடாது
இனிமேலுப்பேசுனைநீ எண்ணாதேதம்பிமாரே
இட்டேவாராதே எட்டனிலுந்தம்பிமாரே
போய்வாருமென்றனனே போர்க்கடங்காவீமனவன்
அவ்வார்த்தைதனைக்கேட்டு அருச்சுனன் துயரமுற்று
கண்ணினைச்சோரவிட்டு காளையருச்சுனனார்
மெத்தக்கலக்கமே விசாரபெரிதாகி
அண்ணாவேயென்வீமா அடியேனொருவார்த்தை
பாம்பினைவயிற்றிலேநீர் பார்வேந்தாயண்டதுவும்
அரவத்தின்வயிற்றிலேநீர் ஆனமூசாமண்டதுவும்
அண்ணன்தருமருடன் அடியேனொருவார்த்தை
உரைத்தேனேயானக்கால் உள்ளமிகப்பதறி
தன்னிப்பகைத்துயிரை துடிதுடிக்கவிட்டிடுவார்
எப்படிக்குதானுரைப்பேன் எனதுடைய அண்ணாவே
போயவனைவாருமோ போர்வேந்தா அண்ணாவே
உன்னைவிட்டுநான்பிரிந்து உயிருந்தரிப்பேனே
இப்பெரியபாம்புதனை இக்கணத்திற்கொன்றிடுவேன்
வயிற்றைக்கிழித்திடுவேன் வந்துவிடுமண்ணாவே
என்றுபெருந்தானே எழில்சேரருச்சுனனும்
வில்லினைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனிசெய்து
அம்பறுத்தூணியிலே அஸ்திரமெடுக்கையிலே
பாரமலைப்பாம்பு பார்த்ததுஅர்ச்சுனனை
காணமலைப்பாம்பு ஆவலுடன்ஓடிவந்து
அருச்சுனனைத்தானபார்த்து அருகில்வந்துவாய்திறந்து

வாள்விஜயனைப்பார்த்து வாயைத்திறந்துவந்து
எடுத்துவிழுங்கிற்று இலாயருச்சுனரை
பார்த்தனெனுமர்ச்சுனரைப் பாம்புவிழுங்கியது
எடுத்துவிழுங்கியது ஏப்பம்விட்டுத்தானிருக்கும்
அப்போதுவில்வளைத்த அருச்சுனனுமேதுசெய்தான்
அரவத்தின்தன்வயிற்றில் அருச்சுனனும்விழுந்தான்
அண்ணாவே அண்ணாவே அடியேனும்வாதுவிட்டேன்
உந்தனுடனாக வந்துவிட்டேனண்ணாவே
நானுமிங்கேவந்துவிட்டேன் நமைப்பெரிய அண்ணாவே
அண்ணன்தர்மராயருக்கு ஆர்போயுரைப்பார்கள்
எழுதப்பட்டியல்லோ இருவருக்குபோனருச்சு
என்செய்வேனென்செய்வேனென்று புலம்புகையில்
வெற்றிமதயானை வீமனையேதுசொல்வான்
வில்விஜயாவேன் விதித்தவிதிப்படியோ
என்று இருவருமாயிருந்துபுலம்புகிறார்
அநேகநெடும்பொழுது ஆனபிறகாக
தக்கபுகழுடைய தருமராஜாவேது சொல்வார்
தம்பிநகுலாநீ தாமமுடியானே
வெற்றிமதயானை வீமனைத்தான்தேடி
போனதோராருச்சுனரை பின்னேரக்காணேனே
இன்னம்வரக்காணேன் ஏதொன்றப்பான நீயேன்
ஆரோடேசண்டைகள் அமருசெய்கிறாரோ
இக்காட்டில்ராட்சதர்கள் எத்தனையோபேருண்டு
அவரோடேசண்டைகள் யிடுகிறாரென்றறியேன்
காணவும்போவேனோ கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போவேனோ பாரமன்னவீருவர்களை
தேடியழைத்து சீர்நகுலா வருவீரா
பார்த்து அழைத்துப் பரிநகுலா வருவீரோ
என்றுரைத்துமவர் எண்ணமிடக்கொண்டிருந்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தானநகுலனுமே
பட்டுதட்டி ஒட்டியாணம்பூட்டி பொன்னுடைசமுதாடு
நீண்டநெடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சலடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்பாட்டலவோ தட்டுச்சேர்ந்துகட்டி
தட்டுச்சேர்ந்துகட்டி தாமரைப்பூசுங்கிவிட்டு
தன்னுடையதக்கடேத்த தாமெடுத்துச்சீர்நகுலன்
சாடுசெடிதாண்டி சரியபள்ளந்தாண்டி
செங்காய்புலிகாடு சிறுவனந்தாண்டி
காலடியைப்பார்த்தல்லோ கடிதில்தேடியவனாக
அக்காலசந்தனிலே ஆராய்ந்துதேடுகையில்

அண்ணாவேயென்னையா அருச்சுனனென்றழைத்தான்
கூவியழைத்தானே கேட்டதருமனுமே
அழைத்ததால் கேட்டது அருச்சுனன் தம்பிமனுக்கும்
வெற்றிமதப்பனே வீமனுமேதுசொல்வான்
ஆறாவழகு மன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
தம்பிகுலாதீ தாமழுதியாளே
அண்ணனையும் காளையும் அரவம்விழுங்கினது
பக்கப்பாப்புக்கிளையாமோ மன்னவனே தம்பியரே
கிட்டிநீயாராமே கட்டநின்றுமென்பிறப்பே
அண்ணருக்குச்சொல்லும் அரவம்விழுங்கினதாய்
அவ்விதமாய்த்துக்க அண்ணனைவக்கூட்டிப்போய்
திரிபோதிரனுடனே செய்திகள்சொன்னாலும்
அருச்சுனனையாரை அரவம்விழுங்கிற்தென்றால்
வெத்தவரிந்திலவர் வசைகாகங்கொண்டவனும்
தருமபுரமுனைதேலாம் தருமரையாளுமென்பான்
எப்போதும்போலும்நீங்க ளிராச்சியத்தையாண்டிருங்கள்
(காக்கள்) இனிபிழைப்போமென்று எண்ணாதேதம்பியரே
போகனுமாதருளாதீ பக்தியுள்ள கண்மணியே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனுமே
அண்ணனேசீராமேனுள் ஆவத்தைசொல்லுகிறேன்
வெட்டிவெரிகிறேன வெளிபடுகளண்ணர்களே
உம்மைவிட்டெனக்குப் போகமனம்வருமோ
விட்டுபிரிவேனோ நானுமனம்வருமோ
அண்ணருடையிந்தில அன்னைக்கொசாரிவேனோ
சிறுவனேபெய்சொன்னேனே சிவனைவிட்டிடுவார்
மனநினைப்பாரே மதிமேடுவந்துவிடும்
போகமனம்வருமோ புண்ணியரேநந்தனுக்கு
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேதுசொல்வான்
(நீர்) தலையிலெழுதினதை தள்ளிவைக்கப்போறீரோ
(நீர்) ஒட்டியெழுதினதை யெடுத்தெரியப்போறீரோ
அருமைவினைகள்வந்தாலே மடியேகவேண்டாமோ
ஆயனெழுத்தவ்வளவு ஆகமட்டுமாண்டுவிட்டோம்
இனிமேபிழைப்போமென றெண்ணாதேதம்பியரே
மற்றும்பிழைப்போமென்று மன்னவரேயெண்ணாதே
போடாநகுலாவென்று புகன்றானருச்சுனனும்
செப்புமொழிகேட்டு சிராய்நகுலனுமே
இப்பாம்பையைவெட்டி யெறிந்தேனிப்போது
பாம்புதனைக்கொல்வேனென்று பட்டாவுருவிநின்றான்
பார்த்ததுஅப்பாம்பு பாரமுடிமன்னவனை
கண்திறந்துபார்த்தது கடுங்கோபப்பாம்பு
வாயைத்திறந்தவனை வாரிவிழுங்கினது

பாம்பின் வயற்றிலேதான் பரிகுலன் போய்விழுந்தான்
அண்ணாவேயென்னையும் அரவம்விழுங்கிற்றென்றான்
என்னையுங்கூட எடுத்துவிழுங்கிற்றென்றான
உங்களோடாக ஒருவனுஞ்சேர்த்துவிட்டேன்
மூவருக்குந்தொழுத்தாய் முடிந்ததென்னசெய்வோம்
அண்ணரைத்தம்பியரை ஆரணங்கைக்கைவிட்டோம்
என்றுபுலம்பியே இருக்கின்றவேளையிலே
வில்லாளிபார்த்தனுமே வீமனுக்கேது சொல்வான்
என்வார்த்தைகேளாமல் இங்குவந்தீர் தம்பியரே
வந்தவிடந்தனிலே வல்வினையைக்கண்டீரோ
என்றுமவர் சொல்லி இருந்துவிசாரமிட்டார்
இப்படிக்காகவேதா னிருக்கின்றவேளையிலே
அநேகநாழிசென்றபின்பு அழகான தர்மலிங்கம்
மெத்தவிசாரப்பட்டு வெகுவாய்மனக்கலங்கி
சகதேவனைப்பார்த்து தருமருரைக்கலுற்றார்
வீமன் கனிபறிக்கப்போய் வெகுநேரமாச்சுதப்பா
அழைத்தோடிவாருமென்று அருச்சனனைப்போகவிட்டேன்
அருச்சனன்தேடிப்போய் அநேகநேரம்போதாச்சு
போனதோரருச்சனனும் பின்புவரக்காணேனே
நகுலனைப்போகவிட்டு ராஜர்களைப்பாருமென்றேன்
காணோநகுலனுமே தடுகவரக்காணேனே
செத்தார்பிழைத்தாரோ செய்திதெரியவில்லை
பாண்டவரோயானறியேன் மன்னவனென்னசெய்வேன்
ஆரோடேசண்டை அமரதுசெய்கிறாரோ
எவரோடேசண்டை ஏடாகூடங்களுண்டோ
அவர்களைப்பார்த்துநீ பறைந்தோடிவாருமோ
அடியழைத்துநீ ஒருகோடியில்லாராயோ
கண்டுஅழைத்துநீ கடுகெனவேவாராயோ
அண்ணருரைகேட்டு அழைத்துமேவாராயோ
அப்போசகாதேவன் ஆணழகன்தானெழுந்து
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சொருகிட்டு
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைதொங்கவிட்டு
ஆயுதந்தானெடுத்து அடவாய்நடக்கலுற்றான
காட்டடையைத்தேடியேதான் கடுகிநடக்கலுற்றான்
காடுஞ்செடியுஞ் சனத்தமலைதாண்டி
ஆறுஞ்சுனையு நதிகளைத்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனத்தாண்டி
தேடியேவாராரனே திசைதோறுங்கானகத்தில்
எங்கெங்குந்தேடினானே இனியவிடமாராய்ந்தான்
கண்ணோலைகண்டதிலே காளைகளானவை

பாராவிடங்களில்லை பாராமுடிராசர்களை
தேடியேவந்துமவன் திகைத்தாற்போல்நின்றுவிட்டான்
அடியளந்தமாயனே ஆதிமூலம்வந்தருளும்
அண்ணுமதவீமா அருச்சுனரேசீர்நகுலா
என்று-கூவியழைத்தானே கொற்றமன்னவீரியனும்
கூவியழைத்தகுரல் கேட்டதுமூவருக்கும்
ஏன்காண்சகாதேவா என்றுவந்தீர்தம்பியரே
அரவம்விழுங்கினதா ஆணழகாமூவரையும்
நாரிலுந்தம்பியரே சேரநீவாருதே
எட்டவிலுந்தம்பியரே கிட்டநீவாருதே
அரவம்விழுங்கினதாய் அண்ணருக்குச்சேதிசொல்லும்
நீ-அழுதுபுலம்பாதே அண்ணரைக்கூட்டிப்போய்
அஸ்தினபுரிக்கு அடைவுடனேபோய்ச்சேரும்
வீமருச்சுனரை மிக்கநகுலரையும்
அண்ணமார்மூவரையும் அரவம்விழுங்கினதாய்
துரியோதனனுடனே செய்திசொன்னாலே
சந்தோஷமாவானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்திடுவான் விடநாகங்கொண்டவனும்
தருமபுரத்தையல்லோ சர்ப்பக்கொடியோன்கொடுப்பான்
சீமைதருவானே சிறந்ததுரைத்தனமும்
பூமிதருவானே பொல்லாச்சுயோதனனும்
அண்ணரும்நீருமே அவ்வரசையாண்டிருங்கள்
போங்காணுந்தம்பியரே புகழ்பெரியராசாவே
என்றுமவருரைத்து இருக்கிறவேளையிலே
இவ்வார்த்தைதான்கேட்டு இளையசகாதேவன்
அண்ணருரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
மன்னருரைகேட்டு மறுவார்த்தையேதுசொல்வான்
போயுரையுமென்றுசொல்லி புண்ணியரேசொல்வார்கள்
புகழ்வேந்தரண்ணருக்குப் போய்நானுரைத்தாக்கால்
சொக்கனேனேயாமாகில சொர்க்கபதிசேர்ந்திடுவார்
இவ்வார்த்தைதானகேட்டு இணையிருப்பாரோ
மூவரைப்பறிகொடுத்து முடிசூட்டியாளுவரோ
அவர்-செத்துமடிந்திடுவார் சிவலோகஞ்சேர்ந்திடுவார்
மாண்டுமடிந்திடுவார் வைகுந்தஞ்சேர்ந்திடுவார்
சென்றுயானசொன்னாலே சீவனைவிடுவாரே
துடித்தபுழுப்போலே துள்ளிவிழுவாரே
அடித்தமயில்போலே அலறிவிழுவாரே
சாகத்துணிவாரே தர்மவேந்தரண்ணரவும்
போகத்துணிவாரே பொறுமையுள்ளதர்மவேந்தும்
எப்படிக்குப்போயுரைப்பேன் என்னுடைய அண்ணர்களே
என்றுசகாதேவன் ஏங்கிப்புலம்பலுற்றான்

அடியற்றமரம்போலே மலறிபுரண்டழுவான்
மலைபெருவதமே மாண்டுமடிந்தீரா
செம்மலைபெருவதமே செத்துமடிந்தீரா
உங்களைப்பறிகொடுத்து ஒருத்தனைப்போனேனே
அண்ணர்களேஎன்றுசொல்லி அழுதுப்புலம்பினான்
அழுதகுரல்கேட்டு அப்பொழுதேசொல்வார்
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போறீரோ
எட்டிமேலெழுதினதை எடுத்தெறியப்போறீரோ
ஈசனெழுதியதில் எள்ளளவுங்குறையாது
சொல்லாதேதம்பிநீ சுருக்கெழுந்திருவென்றார்
பேசாதேதம்பிநீ போய்பிழையுமவையகத்தில்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான சகாதேவன்
உங்களைப்பார்த்துநடக்கவேதான் பாவிமனம் வருமோ
கண்டுநடக்கவேதான் காளைமனம்வருமோ
பொறுத்துநடக்கவேதான் போகமனம்வருமோ
இப்பாம்பைக்கொன்றிடுவேன் இயலானராசர்களே
பாம்புகளைக்கொல்லுகிறேன் பாருமென்றுவாளெடுத்தான்
என்றுஉருவினான் இளையசகாதேவன்
கத்திஉருவையிலே கண்டதுவப்பாம்பு
கண்டதுமலைப்பாம்பு கணிதநூற்கோமானை
வாயைத்திறந்து வாரிவிழுங்கினது
எடுத்துவிழுங்கினது இளையசகாதேவனையும்
அப்போசகாதேவன் ஆறுதலழுதமனன்
எனனையும்விழுங்கினது என்னுடைய அண்ணரே
உங்களுடனே ஒருவனும்வந்துவிட்டேன்
அவ்வார்த்தைதானகேட்டு ஆணழகரேதசொல்வார்
என்வார்த்தைதள்ளி இருந்தீரோதம்பியரே
நால்வருக்குமோரெழுத்து நான்முகனெழுதிவைத்தான்
அண்ணர்தர்மராசாவை அல்லவருந்தகைவிட்டோம்
ஆட்டிதுரோபதையை அரிவையரைகைவிட்டோம்
என்றுபுலம்பியேதா னிருந்தார்கள்நால்வருமே
அனேககெடுநேர மானபிறகாக
தக்கபுகழ்பெரிய தருமராவேதுசொல்வார்
அன்னமேசொர்ணமே அமிர்தப்பசுங்கிளியே
தேனேமடமயிலே தித்திக்குந்தெள்ளமுதே
கன்னல்மொழியாளே கற்கண்டேசர்க்கரையே
சாந்துகழுததுபரே சந்தனப்பூமேனியரே
கோர்வைக்கழுத்தியரே குங்குமப்பூமேனியரே
குங்குமமொத்ததொரு கொப்பேரிடையாளே
நெருப்பிற்பிறந்தபெண்ணே நீலவண்ணன்தங்கையரே
கைமோசம்வந்ததே கண்மணிநானொக்காரேனே

போகவழியறியேன் புதுமைகளொன்றறியேன்
செத்தார்பிழைத்தாரோ சேதியொன்றும்நானறியேன்
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைநானறியேன்
கடுகியெழுந்திருங்காண் கானகத்தில்தேடுவோம்
என்றுபுலம்பி எழுந்தாரிருவருமாய்
காலடியைப்பார்த்துமே கடிகியேவாரார்கள்
தேடியேவாரார்கள் சீரானகானகத்தில்
அப்பாமதவீமா அழகாமருச்சுனரே
தாமமுடிநகுலா தம்பிசகாதேவனெனக்
கூவிப்புலம்புகையில் குரல்கேட்டுதம்பியற்கு
அண்ணன்குரல்கேட்டு அர்ச்சுனனேதுசொல்வான்
ஏன்காணும்அண்ணாவே இடையகில்லுமென்பிறப்பே
சேரநீவாராதே தூரநில்லுமென்பிறப்பே
அருகேநீவாராதே அண்ணாவேதூரநில்லும்
பாம்புவிழுங்கினது பாரவனந்தனிலே
இங்கேமலைப்பாம்பு எடுத்துவிழுங்கினது
நால்வருக்குமோரெழுத்து நான்முகனெழுதிவைத்தான்
(உன்) அங்கஞ்சலியாதீர் அழுதுபுலம்பாதீர்
இனிபிழைக்கப்போறேமென் றெண்ணாதேஅண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானதர்மலிங்கம்
துள்ளிப்புலம்புகிறார் சொரணைதெரியாமல்
வெற்றிமதயானை வீமாமதகரியே
ஏழுபிராயத்தில் இடும்பனைக்கொன்றாயே
பத்துபிராயத்திற் பகாசூரனைக்கொன்றாயே
அரக்குமாமாளிகையி லைவரையும்நீயெடுத்தாய்
ஐவரையும்நீயெடுத்தாய் அந்தபலனடங்கி
பாம்புக்கிரையாக இருந்தீரோபார்வேந்தா
எழுபதுலக்ஷம்யானை இழுக்கவொண்ணாகதையெடுத்து
அமரதுசெய்கின்ற ஆண்மையுள்ளவீமாநீ
மலைப்பாம்பைக்கொல்லுதற்கு மறந்தாயேவீமாநீ
சந்தனமிருபுயத்தைச் சாய்த்தாயேபூமியிலே
குங்குமமிருபுயத்தைக் கொள்ளென்றுசாய்த்தாயே
கல்லானதூணை கரையான்எரிக்குமோதான்
இரும்பானதூணும் பித்துவிழுமோதான்
நீமடியுங்காரியத்தை நிண்ணயத்தைநானறியேன்
ஆச்சாப்பருவதமே அழிவில்லையென்றிருந்தேன்
ஆச்சாப்பருவதமும் அழியும்நாளாச்சுதே
கற்பகத்தாணுக்குக் கலக்கமில்லையென்றிருந்தேன்
கற்பகத்தாணுங் கரையுநாளாச்சதோ
என்னையலையவிட்டு இப்பாம்புக்கிரையானாய்
நாலார்கடுந்திரளார் நூறுபேர்மன்னர்களை

கொல்லுவேனென்றுசொன்ன கொடியசபதமெல்லா
மறந்தாயேதம்பிநீ மலைப்பாம்புக்கிரையாக
என்னைமறந்துநீ யிறந்துவிடஞாயமுண்டோ
என்றுபுலம்புகிறார் இயலானதருமருமே
மாரடித்துத்தோளடித்து மண்மேல்விழுந்தலறி
களைத்துவிழுந்தாரே கட்டழகர்மூர்ச்சையானார்
அப்போதுதுரோபதையும் ஆரணங்குமேபதுசெய்தாள்
பச்சைதழையொடித்து பார்தருமருக்குவீசலுற்றாள்.
காட்டுத்தழையொடித்துக் கடுகெனவேவீசலுற்றாள்
வீசினாள்தருமருக்கு விடாய்கள்மிகத்தெளிய
வீசக்களைதெளிந்து வேந்தர்புலம்புகிறார்
அப்பாடாஅப்பாடா ஆணழகாதம்பியரே
காளைஅருச்சுனா கடுங்காளைசேவகனே
எடுக்காதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டாய்
நீர்பார்த்துமீனெய்தாய் நிற்றிலங்குபூமுடியை
அழகில்மிகுந்தவரே அருச்சுனதம்பியரே
நீமடியுங்காரியமும் நிண்ணயமும்நானறியேன்
இடதுபுயமான இயலானஅருச்சுனரே
என்னைமறந்தீரோ இப்பாம்புக்கிரையாக
உங்களைமடியவிட்டு ஒருநாழிதங்குவேனோ
கூடமடிந்திடுவேன் கொற்றவரேஉங்களுடன்
நானுமடிந்திடுவேன் ராஜர்களேஉங்களுடன்
அங்கமுருகுதையோ ஆவிதணலாகுதையா
நெஞ்சந்தனிலேயே நெருப்பாயெரியுதப்பா
ஈரலுக்குள்ளே இருந்துதணல்பத்துதடா
கும்பியினுள்ளேயல்லோ குடவிளக்காயெரியுதடா
மனதுதரிக்கவில்லை வயிற்றெறிச்சல்தீரவில்லை
உங்களைப்பறிகொடுத்து உலகத்திலிருப்பேனோ
நானுமடிந்திடுவேன் ராஜர்களேஉங்களுடன்
உங்களைப்புசித்தபாம்பு எங்களைப்புசியாதோ
உன்னைபுசித்தபாம்பு என்னைப்புசியாதோ
என்றுமனந்தளர்ந்து எழுந்தாரேதர்மலிங்கம்
மலைப்பாம்புதன்னருகே வந்துதலைகொடுத்தார்
இரங்கினார்தருமலிங்கம் என்னையும்விழுங்குமென்றார்
தாராமூக்கன்மலைப்பாம்பு தள்ளிவிடுதங்கே
எதிரிலேவந்தாலும் இடைந்துவிடுகுது
பக்கத்தில்வந்தாலும் பார்த்துமேபோய்விடுது
தக்கபுகழுடைய தருமரவருரைப்பார்
சமர்த்துள்ளமலைப்பாம்பே தம்பியரைவிழுங்கிவிட்டாய்
என்னைவிழுங்குமென்று எதிரேநான்வந்தாலும்
என்னபாவம்செய்தேனோ என்னைவிலக்கிவிட்டாய்

ஏதாலும்பாவிநான் இருந்தாலுமாகாது
ஐயோவெனத்தருமர் அழுதுபுலம்புகிறார்
ஐய்யோமுறையோவென்று கூவிப்புலம்புகிறார்
தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
ஆண்டவரேஐயாவே அழகுள்ள தருமரேநீர்
மாயவரைநேருமிப்போ மனதில்நினையுமிப்போ
நம்பெருமாள்வந்தாலே எல்லாந்தெரியுமென்றாள்
அப்போதுதருமருக்கு அந்தநினைவுவந்தது
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதருமலிங்கம்
மாயனைத்தானினைந்து வருந்திப்புலம்புகிறார்
மாயன்பெருமாளே வந்தருளவேண்டுமையா
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆதிமூலம்வாருமையா
பாற்கடலில்பள்ளிகொண்ட பாரளந்தாவெம்பெருமாள்
மச்சவடிவுகொண்ட மாயவரேநின்சரணம்
கூர்மவடிவுகொண்ட கோபாலாநின்சரணம்
கல்லான அகலிகையை நல்லபெண்ணாக்கிவைத்தாய்
கல்லையளந்தீரே எதிரில்லையென்றீரே
அம்பலவாசலிலே ஐவரையுங்காத்தீரே
மலமென்றருந்தசாத்தை முகில்வண்ணாகாத்தீரே
இராமராய்நீர்பிறந்து இராவணனைச்சங்கரித்தீர்
இலங்கையழித்தீரே இராட்சதரைவென்றீரே
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீரே
அபயமென்றதுரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
உன்மகிமையாரறிவார் உம்பர்பிரான்தானறிவார்
தஞ்சமென்றபஞ்சவரைத் தற்காக்குந்தெய்வமல்லோ
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோறோமையா
கையில்செபமாலை கனங்குலைந்துபோறோமையா
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோறோமையா
இத்தனைநாள்காத்தீரே இன்றல்லோமாண்டுவிட்டோம்
ஏழையழுதகண்ணீர் கூரியவாள்தப்பாது
நானழுதகண்ணீரும் ரம்பங்கொண்டறுக்காதா
வாரீரோகிருஷ்ணாவென் மனத்துயரந்தீராயோ
(என்று) அபயமபயமென்று அழுதுபுலம்புகிறார்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அண்ணாமணிவண்ணா அடியேனுக்குதவிசெய்யும்
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன் பூவிழந்தேன்
தாலிச்சரடிழந்தேன் தலைவிரிக்கநாளாச்சே
ஐவரிட்டமங்கிலியம் அழிவில்லையென்றிருந்தேன்
மங்கிலியந்தானிழந்து மண்ணில்விழநாளாச்சே
ஆரைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குறைக்கழுத்தியானேனே

செல்வங்குலைந்துதான் சீருமழிந்தேனே
ஐவருங்கைவிட்டாரே அலைந்துவிழநாளாச்சே
மங்கிலிபப்பிச்சைநீ தாராயோமன்னவரே
என்குறைதீராயோ இங்கேநீவாராயோ
அபயக்குரலிட்டுமங்கே அழுதாள்துரோபதையும்
மார்கொண்டகண்ணீரை வழித்தெறிந்தாள்மண்மேலே
அப்போதுமாயவரும் ஆதிமூலந்தானறிந்தார்
அழுதகுரல்கேட்டு ஆயன்பெருமாளும்
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதே
பெட்டியிலேபூஷணம் பெருமைகுலையுதே
தோளிற்செபமாலை தோடவிழ்ந்துபோகுதே
கையிற்செபமாலை கணங்குலைந்துபோகுதே
வருந்திப்புலம்புகின்ற மனத்துயரந்தீர்க்கவென்று
அழுதுபுலம்புகிற அத்துயரந்தீர்க்கவென்று
ஏழைகள்தன்துயரம் தீர்க்கவென்றுஎம்பெருமாள்
வாரார்பெருமாளும் வட்டமாங்கருடனேறி
துவாரகாபுரியைவிட்டு சுவாமியவர்வாராரே
காடுஞ்செடியுங் கரியமலைதாண்டதாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
மூங்கிலடர்ந்திருக்கும் முல்லைவனந்தான்தாண்டி
சூரியன்தன்வனத்தைச் சுருக்காகத்தான்தாண்டி
ஸ்ரீராமரிஷிவனத்தில் இராமரும்வந்துவிட்டார்
மாயன்வருகிறதை வழியிலேதான்பார்த்து
தருமருந்துரோபதையும் தாமெதிரேவோடிவந்தார்
தருமருந்துரோபதையுஞ் சரணமிட்டார்மாயவரை
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
அறுகால்வலம்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
சிங்காதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருக்க
ஆசனமும்போட்டார்கள் அரிராமர்தானிருக்க
இட்டசிங்காதனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
மாயன்பெருமாளும் வாய்திறந்தேதுசொல்வார்
அடியளந்தமாயவரும் ஆதிமூலமேதுசொல்வார்
அழுதகுரலேது அழைக்கவந்தகாரணமேன்
வேண்டியழைத்த விபரமென்னசொல்லுமென்றார்
வருந்தியெனை அழைத்த வகையதனைச்சொல்லுமென்றார்
வீமரருச்சுனர்கள் வேந்தர்களெங்கேயென்றார்
தம்பிமார்நால்வர்களுந் தார்வேந்தரெங்கேயென்றார்

அழுதுபுலம்புவதேன் ஆரணங்குதுரோபதையும்
ஏதுக்கழுதீர்க ளெனக்கரியச்சொல்லுமென்றார்
தக்கப்புகழுடைய தருமரவரேது சொல்வார்
தம்பிமார்நால்வரையும் சர்ப்பம்விழுங்கிற்றென்றான்
என்னையழைத்தவகை யெனக்கரியக்கூறுமென்றார்
தாராமுக்கண் மலைப்பாம்பு தானும்விழுங்கிற்றென்றான்
தம்பியரைப்பறிகொடுத்து தரிப்பேனோபூமியிலே
பிள்ளையைப்பறிகொடுத்து மண்மேலிருப்பேனோ
அங்கம்பொறுக்குமோ அரிராமாவென்னசெய்வேன்
ஆரைச்சதமென்பே னன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பே னினியாரைத்தஞ்சமென்பேன்
ஆகையினாலேதான் ஆண்டவரேயுமையழைத்தேன்
என்றுரைக்கத்தான்கேட்டு எம்பெருமானேது சொல்வார்
எழுத்தாணிதன்னை எமராலிலக்கவசம்
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போறோமோ
எட்டிலெழுதினதை எடுத்தெரியப்போறோமோ
அன்றெழுதுங்கர்த்தரல்லோ அழித்தெழுதப்போறதில்லை
இட்டபடியொழிய எள்ளளவுங்குறையாது
பெரும்வினைவந்தாலே மடியேந்தவேண்டாமோ
ஆராலேயாகுமிது ஆயிசுக்குகர்த்தருண்டோ
எவராலேயாகுமிது இவர்களைத்தானெழுப்ப
என்னாலேதாகும் இயலானதர்மலிங்கம்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமலிங்கம்
உன்னாலேயாகாதென் றேனோகழித்துவிட்டீர்
உம்மாலேயாகாத தொன்றுண்டோவையகத்தில்
எல்லாமுமதுசெயல் என்றிருந்தேன்மாபவரே
தம்பிமார்தான்பிழைக்கச் சாமிநீகண்பாரும்
உடப்பிறப்புதான்பிழைக்க உம்பர்பிரான்கண்பாரும்
என்பிறப்புதான்பிழைக்க எம்பெருமாள்காத்தருளும்
கண்பாரிவ்வேளையெனக் கண்ணனையுந்தெண்டனிட்டார்
புண்ணியமாய்ப்போகுதென்று பெருமாளைத்தெண்டனிட்டார்
அப்போதுரோபதையா ளாரணங்குவதுசெய்தாள்
முந்தானையேந்திநின்றாள் முருகுழலாள்துரோபதையும்
மங்கிலியப்பிச்சையல்லோ மாயாவெனக்கருளும்
வாடாதமங்கிலியம் வலவாவெனக்கருளும்
என்றுமவள்சொல்லி இளங்கொடியாள்துரோபதையும்
மாயனுடபாதத்தை வணங்கித்தொழுதுநின்றாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எம்பெருமாள்மனமிறங்கி
அங்குமொருகிருஷ்ணன் ஆயரிருக்கையிலே
சின்னஎலிபோலே சுவாமிவடிவுகொண்டார்
மலைப்பாம்புதன்செவியில் மாயவரும்போய்நுழைந்தார்

அருச்சுனன் வில்காலிதனை அறுத்தாரேமாயவரும்
வில்காலிதானறவே வில்நிமிர்ந்துவாய்கிழிந்து
நகுலஞ்சகாதேவன் நல்விஜயன் வீழுமே
ராமரிஷியுடனே நன்றாய்வெளிப்பட்டார்கள்
ஜயநமாகவேதா னப்பாய்பிலெளியானூர்
மாயன்பெருமானை வந்துநமஸ்கரித்தார்
தக்கபுகழுடைய தருமருக்குத்தெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமரவர் பார்த்து
வாழ்த்திமனமகிழ்ந்து மன்னன் தர்மராயருமே
மனதுகுளிர்ந்தாரே மகாராசர் தர்மலிங்கம்
துரோபதைதாயகியும் சிந்தைமிகக்குளிர்ந்தாள்
மலர்ந்தசெந்தாமரைப்போல் மனதுமிகக்குளிர்ந்தார்
அலர்ந்தசெந்தாமரைபோல் அகமிகவேகுளிர்ந்தார்
ராமரிஷிபாருக்கு நற்காட்சிதந்தாராம்
மாயன்பெருமானும் வார்த்தைகளங்கேதுசொல்வார்
இந்தவனத்தாண்டி இனியவனம்போங்களென்றார்
அப்போதுதர்மலிங்கம் ஆயனைப்பார்த்துரைப்பார்
இந்தரிஷியாருமிங்குவந்தகன்மமென்ன
வந்தகன்மந்தனையும் வாய்திறந்துசொல்லுமென்றார்
அப்போதுமாயவரும் அருளாலேதுசொல்வார்
இந்தரிஷிகாரியத்தை இயம்புவேன் நீர்கேளும்
மாயாண்டிதன்னடியார் வந்தால்வணங்குவாகான்
சந்தனடியார்வந்தால் இகழ்ச்சிகள்பண்ணுறது
ஏடாகூடங்கள்பண்ணி எட்டியடிக்கிறது
இப்படியாகவே இருந்தார்வெகுகாலம்
அப்போதுநானொருநா ளங்கேவடிவெடுத்தேன்
தாசவடிவெடுத்து தப்புகொட்டிபிட்சையென்றேன்
அரிகரிராமாவென்று ஐயாவேபிட்சையென்றேன்
அப்போதுராமரிஷி அவசரமாயோடிவந்து
என்னையடித்தாரே இயலானராமரிஷி
அடிபட்டுக்கொண்டதொரு ஆக்ருஷமானதினுல்
நான்-பட்டஅடியாலே இட்டேன்பெருஞ்சாபம்
அப்போதுராமரிஷி ஆபரேனன்றழுது
வல்லானன்ராமரிஷி வாய்திறந்தேதுசொல்வான்
என்சாபமெப்போது தொலையுமையாசுவாமியென்றான்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளாரணியம்வந்தக்கால்
காலுபேரையெடுத்து நன்றாய்விழுந்திடுவாய்
அப்போதுன்சாபம் அடைவுடனே தீர்த்திடுவேன்
என்றுமவர்க்குரைத்து என்பதிக்குப்போய்நடந்தேன்
அப்போதிட்டசாபமது இப்போதொலைந்ததுகாண்
நீங்களிந்தவனந்தனைவிட்டு இனியவனம்போங்களென்று

அப்போதுஎம்பெருமாள் அரிராமர்தானெழுந்தார்
ராமரிஷிஇவருக்கும் நங்கைதுரோபதைக்கும்
எம்பெருமாள்மாயவற்கும் எல்லோரும்தெண்டனிட்டார்
பஞ்சவர்களைவரையும் பாஞ்சாலிதன்னையுமே
மாயன்பெருமாளும் மனங்குளிரவாழ்த்திடபின்
அத்தவனங்களிலே இடராதுவந்தாலும்
இடராதுவந்தாலே என்னைநினையுங்கள்
என்றுமவருரைத்து எம்பெருமாள்போகலுற்றார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையு மதிகவனந்தாண்டி
வெல்லைகபடார்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கொங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டார்மாயவரும்
அளபமணிமார்பன் துவாரகைபோய்ச்சேர்ந்தார்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
மாயவனார்போனபின்பு மகாராஜர்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரு மயிலனையாள்துரோபதையும்
அந்தவனத்திலனேகநாள்சென்றபின்பு
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றும்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு

இரண்டாவது இராமரிஷிவனம்-முற்றிற்று.

௩-வது, முருக்கமகாரிஷிவனம்.

அவ்வனத்தைவிட்டு அப்பாலேபோகலுற்றார்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணிவைத்தசிமாடு வனமேகுடித்தனமாய்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிகிவந்தார்பஞ்சவர்கள்
அந்தவனத்திலேதான் அல்லோரும்வந்தார்கள்
ஈரடுக்குபர்ணசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குபர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஆறடுக்குபர்ணசாலை ஆணழகருண்டுபண்ணார்
ஏழடுக்குபர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்ணசாலைமேலையல்லோ பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
இப்படியாக யிவரிருக்கு வேளையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்குஞ் சர்ப்பக்கொடியோனும்

ஆர்காணும்ராசர்களே அழகானமன்னர்களே
முத்துக்கிரீடம் முடிசூடுமன்னர்களே
வச்சிரக்கிரீடந் தரித்ததொருமன்னர்களே
மாணிக்கக்கிரீடந் தரித்ததொருமந்திரிகளே
அத்தண்டபேரையுமே அணிவரையுந்தான்பார்த்து
மாநாகங்கொண்டதொரு மகாராஜனேதுரைப்பான்
ஐவர்வனவாசம்போய் அநேகநெடுநாளாச்சே
மூன்றும்வருஷமது மொழியலாம்பஞ்சவர்க்கு
அவர்-எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைதெரியவில்லை
ஆரடாதூதுவரே அருகிருக்குமல்லர்களே
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருமே
வீரப்புலிபோலே வேந்தர்களைவருமே
எந்தவனத்தி லிருக்கிறாரென்றறிந்து
ஐவரும்ஊமைப்பாராதே அறிந்தோடிவாருமென்றான்
காவலர்களும்ஊமயவர் காணுதேவாருமென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்திருந்தார்தூதுவர்கள்
ஒற்றரொருவனவ னோடிநான்கானகத்தே
காடுஞ்செடியுங் கரியமலைதான் தாண்டி
ஆறுஞ்சுனையுமல்லோ அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளரப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வாரார்கள்தூதுவர்கள்
சூரியன்தன்வனத்தே சுருக்காய்நடந்துவாரார்
ராமரிஷிவனத்தே நடந்தார்நலமாக
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்போய்நுழைந்தார்
அந்தவனத்திலே ஐவரையுங்கண்டார்கள்
பர்னசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
அவருமறியாமல் ஆணழகர்திரும்பிவந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதாண்டிவந்தார்
அஸ்தினபுரமநாடி ஆணழகர்திரும்பிவந்தார்
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்முன்னேவந்தார்
ஆண்டவரேஐயாவே அடியேன்சரணமென்றார்
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
போனீரேதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றா
காளிபேரண்டனவன் கடிகிட்டேதுசொல்வான்
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னரைக்கண்டுவந்தோம்
பர்னசாலைமேலேயல்லோ பஞ்சவரைக்கண்டோமையா
அவ்வார்த்தைகேட்டானே அரவக்கொடியோனும்
திக்குநகலங்கியவன் திடுக்கிட்டுமெய்பறந்து

பணமுந்திடுக்கிட்டு வாய்திறந்தேது சொல்வான்
இப்பெரியசபைதனிலே யிருக்கின்றராஜர்களே
அம்பலத்தில்கொலுவிருக்கும் அரசமுடிமன்னர்களே
இத்தண்டராஜர்களே இயலானமந்திரிகளே
கத்திகட்டுந்துரைகளே கனத்தமுடிமன்னர்களே
ஆண்மையுள்ளதுரைகளே அல்லவருங்கேட்டிருங்கள்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பைங்கிளியாள்துரோபதைமேல்
தோளுவடிவழகி துரோபதைமேலெந்தனுக்கு
ஆசைபலியுதுகாண் ஆரணங்குதுரோபதைமேல்
மோகங்கிளைக்கவேதான் நெஞ்சமுருகுது
ஆசையவள்மேலே ஆதரவுபாய்மேலே
சிந்தையவள்மேலே சிவன்பதைக்குதுகாண்
கன்னியர்மேலாசைபல்லோ காமவிடாய்கொள்ளுதுகாண்
மயிலினாமேலாசையல்லோ மறக்கவில்லையெந்தனுக்கு
அவளாசைதன்னாலே யவளைவரவழைத்து
வணங்குவாயென்றுசொல்லி வார்த்தைபலபேசினேன்
இணங்குவாயென்று எத்தனையோசொன்னேன்காண்
வணங்காமற்போனாளே மாதுகருங்குழலாள்
இணங்காமற்போனாளே ஏலம்பசுங்கிளியாள்
வந்திருக்கு அம்பலத்தில் வார்த்தைகள்பேசினேன்காண்
வாருமிருமென்றேன் மடிமேலேயேறுமென்றேன்
மார்போடேமார்பணைத்து மருவிமுத்தந்தாருமென்றேன்
தோளோடேதோளணைத்து சேர்ந்துமுத்தந்தாருமென்றேன்
வாருமிந்துரோபதையே வலதுதுடையேறுமென்றேன்
அவள்மெத்தப்பேச்சுகளும் அகந்தைகளும்பண்ணினாளே
அகந்தைகள்பண்ணுகிறாள் ஆக்கியஞ்சொல்லுகிறாள்
ஆகையால்துரௌபதையை அடித்துநானோட்டிவிட்டேன்
ஆரணங்கைகூடுகைக்கு ஆசைமெத்தத்தோணுகுது
மயிலினையைக்கூடுகைக்கு மனதுமெத்தத்தோணுகுது
அவள்மீதிலாசைகொண்டல்லவர்க்குஞ்சொல்லுகிறேன்
துரோபதையைக்கொண்டுவர துரைகளுண்டோசொல்லுமென்றான்
பாஞ்சாலன்பெண்ணை பாவைதுரோபதையை
சிறைபிடித்துக்கொண்டுவர துரைகளுண்டோசொல்லுமென்றான்
கொண்டுவருவோர்க்கு கோடிதனந்தருவேன்
அழைத்துவருவோர்க்கு ஆனைசேனைநான்தருவேன்
சீமையும்பூமியும் துரைத்தனங்கள்நான்கொடுப்பேன்
ஐவறியாமல் ஆரணங்கைக்கொண்டுவந்தால்
துரோபதையைக்கொண்டுவந்து தூங்குமஞ்சமேத்திவைத்தால்
பாவையரைக்கொண்டுவந்து பளிக்குமஞ்சமேத்திவைத்தால்
என்னுடையசாதிகளும் [illegible]

சிலைகளும்பூமிகளும் செல்வமும்தான்தருவேன்
வல்லாண்மைக்காரருண்டோ சத்திரியெழுந்திருக்கள்
போராதுரைகளுண்டோ புல்லனிடசேனைகளை
பிடியுங்கள் தாம்பூலம் பேர்பெரியராசர்களே
என்றுசொல்லக்தான்கேட்டு இப்பலராசாக்கள்
அனைவோரும்பேசாம லஞ்சிப்பயந்திருந்தார்
சிந்துதேசாதிபதி சயன்மனதையூருதலும்
சொல்லுவான்வாய்திறந்து துரையோனிருக்க
மைத்துனரேநீர்கேளும் மகாராஜபூபதியே
தோராவடிவழகி துரோபதைநாயகியை
பத்துகோட்டுக்குள்ளாகப் பைங்கிளியைக்கொண்டுவாரேன்
எட்டுகோட்டுக்குள்ளாக இளங்கொடியைக்கொண்டுவாரேன்
ஒருவரறியாமல் ஆரணங்கைக்கொண்டுவாரேன்
மன்னரறியாமல் மயிலினைக்கொண்டுவாரேன்
தாம்பூலந்தானெடுத்தான் தாமுடையானும்
அந்தமொழிதான்கேட்டு அரவக்கொடியோனும்
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே வேந்தன் துரியோதனனும்
உள்ளங்குளிர்ந்துசிலிர்க்க உடம்பெங்கும்பூரித்தான்
அள்ளியேதாம்பூலம் ஆனமுகனைக்கொடுத்தான்
போட்டிருந்தஆபரணம் பொட்டெனவேதான்கொடுத்தான்
இட்டிருந்தபூஷணங்கள் இட்டமுடன்தான்கொடுத்தான்
பொன்னிழைத்தபட்டாடை போர்த்தானேமேலாக
போய்வாருமென்றுசொல்லி புகழ்வேந்தன் தானுரைத்தான்
வெகுமானம்பெற்றுமல்லோ விடைபெற்றுமன்னவனும்
பயணம்பயணமென்று பயணபேரிகையடியுமென்றான்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
ஆனையின்மேல்சண்டாவும் அழுந்தனப்பிடியுமென்றார்
ஆனையின்மேல்பேரிகையை அடியுமென்றான்ஆசையுடன்
குதிரையின்மேல்டக்காவும் கொடுமுரசுகளும்
பாஞ்சசன்யம்தேவதத்தம் பலவாத்தியமுழங்க
சக்கரிவைசவிரணம் தாக்கிமுரசறைய
அக்குரோணிசேனை அடங்கலும்பயணமென்றான்
அமரகரும்சமரகரும் அர்த்தரதத்தானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் காம்பீரக்கன்னடரும்
சமுத்திரவங்கரும் இலாட்டச்சோனகரும்
சட்டைகழற்றுத சாலவரானவரும்
போட்டசட்டைவாங்காத போசகிலியமன்னவரும்
இட்டசட்டைவாங்காத எழிலாமன்னவரும்
குப்பாசம்வாங்காத குச்சிலியமன்னவரும்
[illegible] அரைமுற்றமன்னவரும்

வெள்ளித்தடிக்காரர் வேணலட்சங்கோடியுண்டு
மகுடமுடிதரித்த மன்னவர்களனைவரும்
பட்டணத்துராசர்களும் பார்மகுடவர்த்தனரும்
அத்தனைபெயருடனே ஆணழகன்பயணமானான்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கினைக்குங்கால்களுக்குத் தூதங்ப்பூச்சல்லடமாம்
குத்திமிதிக்குங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பட்டுதட்டிகட்டியல்லோ பாங்கெடுத்துதான்சொருகி
முத்திலுருமாலை முகத்தழகாய்கட்டினானே
இட்டானே திருநாமம் எரிகின்றசூரியன்போல்
பொன்னிழைத்ததுப்பட்டாவை போர்த்தானேமேலாக
அம்புவில்லுங்கைபிடித்து ஆணழகன்வெளியானான்
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்வென்றுஏறினான்
ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடையை
பக்கத்திலேவெண்சாமரை பட்டுக்குடைகவிய
இருபக்கம்வெண்சாமரை இரத்தினக்குடைகவிய
முத்துக்குடைகவிய முடிமன்னர்தான்சூழ
மேளதாளம்முழங்க வேந்தர்களும்பயணமிட்டார்
வாரான்சயிந்தவனும் மச்சுரதம்குலுங்க
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
ஆயிரந்தெருதாண்டி அங்காடிதான்தாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
பட்டணத்தெருதாண்டி பார்மன்னன்வாரானே
செந்தூளெழும்புகுது தெருவெல்லாங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வாரானசயிந்தவனும் மச்சுரதங்குலுங்க
அப்போசயிந்தவனும் ஆலோசனைகள்பண்ணி
துரோபதையைக்கொண்டுவரத் துரிதமுடன்போறோமே
போரிடந்தனிலே புதுமைகளைநாமறியோம்
வழியிற்சகுனங்கள் மனதில்குறிப்போமென்று
தருமதேவதையேநீ சாட்சிசொல்லவேண்டுமென்றார்
அப்போசகுனங்கள் ஆகுதுமன்னனுக்கு
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதுமன்னனுக்கு
வாயசம்இடமாச்சு வலியனும்வலமாச்சு
காடைவலமாச்சு கள்ளரெதிர்பட்டார்கள்
சாரைகுறுக்காச்சு சயிந்தவன்மேற்பல்லிசொல்லும்
குத்திப்பிடியுமென்று கோட்டானும்ஓலமிடும்

வெட்டுவெட்டுமென்றுசொல்லி வேடரெதிரானார்கள்
நரியலரிடவே ஓர்பாப்பானெதிரானான்
பச்சைமரத்திலே பதுங்கிருந்தபல்லியது
பட்டமரமேறி பலபலென்றுசொல்லிடுமாம்
எட்டுசொல்லாந்தையது கிட்டடனவேமரணமென்று
நெருப்பெடுத்தோர்கிழவி நின்றிழவுதான்கொடுத்தாள்
இந்தச்சகுனமெல்லாம் இராசனுமகண்டானே
நினையாத்துயரமெல்லாம் நினைத்துமனமிரங்கி
என்னாதுமெண்ணி இருந்துவிசனமிட்டான்
இச்சகுனந்தன்னாலே இறந்துவிடப்போரோமோ
வந்தபயணமினி வழிதிரும்பப்போரோமோ
திரும்பினோமானால் சிரிப்பார்கள்ராசாக்கள்
என்னைமதியார்கள் எளிதஞ்செய்வார்கள்
வந்துதிரும்பிவிட்டால் மதியான்திரியோதிரன்
அன்றெழுதுங்கர்த்தன் அழித்தெழுதப்போறானோ
எமனெழுத்தலவோ எள்ளளவுங்குறையாது
வருப்வினைகள்வந்தாலே மடியேந்தவேண்டாமடா
உள்ளபடிக்கு ஒருநாளுங்குறையாது
என்றுமனதிலெண்ணி இராசனும்போய்நடந்தான்
காடுசெடிதாண்டி சரியமலைதானதாண்டி
ஆறஞ்சுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
புலிகள்கரடிகளும் பெருத்தவனநதான்தாண்டி
சூரியன்தன்வனத்தில் சேர்ந்தானேசயிந்தவனும்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
காலையில்பயணமாகி கடுகவழிநடந்தான்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்சேனையெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
அந்தவனந்தனிலே அத்தண்டசனம்நிறுத்தி
உத்தண்டமன்னவனும் ஒருத்தனுந்தேரேறி
முருக்கமகாரிஷிவனத்தில முடுகிநடந்தானே
சயிந்தவனும்பர்ணக சாலைதேடிவாரானே
தூரதம்நிறுத்தி துரோபதையாள்முன்னேவந்தான்
பர்ணகசாலையிலே பத்தினியாள்வீற்றிருந்தாள்
ஒருத்தியுமாகவேதா னுத்தமியாள்வீற்றிருந்தாள்
பாவிசயிந்தவனும் பர்ணசாலைமுன்னேவந்தான்
அப்போதுபாஞ்சாலி ஆரணங்குதுரோபதையும்
கண்டாள்சயிந்தவனைக் கட்டழகிதுரோபதையும்
அண்ணனைக்கண்டு அலறியேஓடிவந்தாள்
தமயனைக்கண்டாளே தானெழுந்துசரணமிட்டாள்

வட்டப்பலகைபோட்டு மணித்தடுக்குதான்போட்டாள்
இருமிருமென்றுசொல்லி இளங்கொடியாளுமிடவே
அப்போசகிதங்களும் ஆனந்தமாயெழுந்து
வட்டப்பலகைமேலே வந்திருந்தான் சகிதங்களும்
தோளுமழகுடைய துரோபதையாளேதுசொல்வாள்
இந்தவனத்திலே ஏதுக்காய்வந்தீர்கள்
வனசஞ்சாரம்வந்தீரோ மாதவசாய்வந்தீரோ
அன்றேகூடிவந்த அதிசயத்தைசொல்லுமென்றாள்
பாலமுனியோனும் வாய்திறந்தேதுசொல்வான்
இருவரும்நீயுமாக ஆரணியம்வந்தீர்கள்
வனவாசம்வந்தீரென்று மண்டலத்தோர்பேச்சு
பார்க்கும்படியாகப் பைங்கிளியேவந்தேனே
உன்னுடையமேன்மையும் உலகத்தைவிட்டுவிட்டு
வனவாசமாகவந்த தோகைபெண்ணே தங்கையரே
இந்தப்பரதேசமாய் ஏன்வந்தீர் தங்கையரே
ஒன்றுமறியாமல் உரையுங்கள் தங்கையரே
அப்போது துரோபதையாளாரணங்குதான்கேட்டு
தோளுமழகுடைய துரோபதையாளேதுசொல்வாள்
அன்றேகூடிவந்த அதிசயத்தைநீகேளும்
பாண்டவர்க்கோவெங்கள் பரிதாபங்கேளுமென்றாள்
தருமாபுரத்தையல்லோ தாரணியையாண்டிருந்தோம்
இவரையுங்கொல்லவென்று அரான்திரியோதனனும்
பஞ்சவரைக்கொல்லவென்று பாவிதிரியோதனனும்
விருந்தருந்துமென்றுசொல்லி வேந்தரைக்கொல்லவென
போன்றுமாமென்று பூநாற்கலியாணமென்று
பூநாற்கலியாணம் பொருந்தத்தப்பிப்போகுதென்று
உடனேவரத்தருமருக்கு ஓலையெழுதிவிட்டான்
மெய்யாலும்ஓலையென்று வேந்தர்மனதிலெண்ணி
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அஸ்தினாபுரம்நாடி
வாரவழிதனிலே மன்னவரைக்கொல்லவென்று
வசநால்தண்ணீர்பந்தல் மன்னவர்க்குப்போடுமென்றான்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
நடக்கும்வழிதனிலே நச்சுமுள்ளைநாட்டினான்
ஊசிமுளாச்சி ஒருகோடிநாட்டினான்
கூடபுகத்திசனுவ குறுக்கேபுதைத்துவைத்தான்
கொடிமுள்ளுகத்திகளும் குறுக்கேபுதைத்துவைத்தான்
தண்ணீர்குடித்துமே சாவார்களென்றுசொல்லி
பாரவிசநீரையே பருவதம்போல்நாட்டிவைத்தான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுக்குமபிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்

மாளிகைவாசலிலே வந்தபிறகாக
பொய்க்குழியைவெட்டியல்லோ போதமனிதர்வைத்தான்
பொய்ச்சிங்காதனங்களிட்டுப் புகழ்வேந்தர்பஞ்சவரைக்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அக்குழிபிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
என்னையிட்டுக்கொன்றுமென வன்னமிட்டழைத்தானே
மல்லர்களைவிட்டு வதைத்தெறிந்துபோடுமென்றான்
அதுக்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
பவனந்திருக்குளத்திற் பாரவசிராட்டினானே
சீர்ப்சூழுகாட்டி நீர்மேடன்குளியுமென்றான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சகுராதி
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
உண்கிறசோற்றிலேதான் ஒருக்காலேநஞ்சைவிட்டான்
குடிக்கின்றதண்ணீரில் கொலைகாரன்நஞ்சைவிட்டான்
சோறுண்ணையாடி சொக்கட்டான்சூதாடி
ஆடாதசூதாடி அரவக்கொடிவேந்தன்
சீமைதனைத்தனங்கள் தேசமுழுதும்பறித்தான்
நாடுபறித்தான் நகரெல்லாந்தானபறித்தான்
ஆணிப்பொன்தேரும் அலைபவிசிங்காதனமும்
அத்தனையுந்தான்கெலித்து ஆல்கானந்தானகெலித்தான்
ஐவரையுந்தான்கெலித்தான் ஆல்கானந்தான்கெலித்தான்
ஐவரையுங்காவலாக அரையிலடைத்துவிட்டான்
பாரவிலங்குகொண்டு பருவிலங்குபூட்டினானே
எழுலட்சம்பெருவிலங்கு எடுத்துவந்துபூட்டினானே
காறுநாழைபாத கல்லறைத்தான்கிடங்கில்
தள்ளிப்பேகொண்டுவந்து கடிவீரர்காவல்வைத்தான்
சுத்திநவரங்கம் தூதுவரைக்காவல்வைத்தான
அறையிலிருக்கவென்னை அம்பலத்தில்தள்ளிவைத்தான்
மூலையிலிருக்கவென்னை முற்றத்தில்தள்ளிவைத்தான்
ஒருவர்மயிர்பிடிக்க ஒன்பதுபேர்துகிலுரிய
இருவர்மயிர்பிடிக்க இருபதுபேர்பின்னிழுக்க
பாவிமயிர்பிடிக்கப் பதறும்பேர்துகிலுரிய
ஆடம்பலத்தே அரசாசபைநடுவே
பேரம்பலத்தே பெரியோர்சபைநடுவே
அரசர்சபையிலே மேலாக்குதுகிலுரிந்தான்
வாய்வரிசையில்லாமல் வசைபாட்டம்பண்ணினானே
வாடிபோடியென்றேசி வலதுதுடைபேறுமென்றான்
துஷ்டத்தனங்கள்பண்ணும துரியோதிரன்பாவி
ஆகடியம்பேசினானே அம்பலவர்தன்சபையில
பாரவனவாசம் பரதேசமோட்டிவிட்டான்

பன்னிரண்டு வருஷம் பாரவனந்திரியுமென்றான்
மறைவா யொருவருஷம் வந்திருமென்றுசொன்னான்
பதினமூன்றாஞ்சென்றபின்பு பட்டணந்தேவந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம் பாதிநாந்தாரேனென்றான்
வந்துவிட்டோமண்ணாவே வனமேகுடித்தனமாய்
கூடைதலைமேல் குடிவாழ்க்கைகானகத்தில்
மண்ணிலைத்தசீமாடு வனமேகுடியிருப்பாய்
வேடரைபோலாகவேதான் வில்லியரைப்போலாக
கள்ளக்குறவரைப்போல் காட்டியிருக்கின்றோம்
எங்கள்குறைதீர எக்காலஞ்செய்திடுமோ
நாங்கள்சுகமாக ராச்சியத்தை ஆள்வோமோ
பஞ்சவர்கள்சுகமாகப் பாருலகமாள்வாரோ
(நீர்) அறியாதபோலாக அண்ணாவேகேட்கவந்தீர்
தெரியாதபோலாக கேட்கவந்தீரண்ணாவே
ஒன்றுமறியீரோ உத்தமரே அண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்மன்னவனும்
பகுதிபணம்வாங்கப் போயிருந்தேன்பைங்கிளியே
சேனைத்திரளுடனே சென்றிருந்தேன்வெகுதூரம்
போனபிறகாக புதுமைபிறந்ததுகாண்
சாற்றுவிசேஷமாகக் கேட்டுவந்தேன்தங்கையரே
நான்-அறிந்தேனேயாமாகில் அவகேடுவாராது
அன்றிருந்தேனேயாமானால் அம்பலமுமேற்றுவரோ
துகிலுரியப்பார்ப்பேனோ துரோபதைநாயகியே
என்தன்மனம்பொறுத்து இருப்பேனோதங்கையரே
நான்-வந்தபிறகிந்த வயணமறிந்தேன்காண்
மனதுதரியாமல் வந்தேனுனைக்காணச்
சிந்தைமனங்கலங்கித் தேடிவந்தேன்தங்கையரே
உன்வார்த்தைகேட்டபின்பு உள்ளமுருகுதம்மா
நீ-சொன்னபடியாலேஎன் சிந்தைகலங்குதம்மா
நீ-பத்தினியாளென்று சொல்லி சற்றுமறிவானோ
உத்தமியாளென்றுசொல்லி ஊதாரியறிவானோ
காமாட்சிஎன்கிறதை கழுசிறையனறிவானோ
ஏதுமறியாமல் இகழ்ச்சிகள்பண்ணினானே
ஒன்றுமறியாமல் உதாசினங்கள்பண்ணிவிட்டான்
அவன்-வாழ்வுந்தொலைந்துவிடும் மகிழ்ச்சியடங்கிவிடும்
செல்வமடங்கிவிடும் செருக்குங்குலைந்துவிடும்
பொறுத்தனோலேயம்மா பொல்லாங்குவாரதில்லை
அவனுக்கேநாசகாலம்ர ஆகுதுபொறுத்திரம்மா
அஞ்சாதேதங்கையரே ஆபாசங்கொள்ளாதே
நீ-ஆபாசப்படுவதல்லவமவனுக்கேகேடுவரும்
பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்

ஏதுக்குமஞ்சாதே என்பிறப்பேதங்கையரே
பாரப்புலிபோலே பஞ்சவர்களெங்கேயம்மா
வீரப்புலிகடுபோல் வீரர்களெங்கேயம்மா
மைத்துனமாரைவர்களும் மகாராஜரெங்கேயம்மா
ஐவரையும்காணவென்று ஆவலாய்வந்தேனம்மா
அவர்-போனவிடமறியேன் போயிருக்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
பார்க்கமனதாகிப் பைங்கிளியேவந்தேனம்மா
காணமனதாகிக் கானகத்தேவந்தேனம்மா
இன்னேரமாச்சுதே இராசர்களைக்காணேனம்மா
தனியாகவுன்னைவிட்டு தருமரெங்கேபோனாரோ
ஒண்டியாயுன்னைவிட்டு உத்தமர்களெங்கேபோனார்
இன்றுநான்காண்பதற்கு இல்லாமற்போச்சுதம்மா
இன்னமொருவேளை யிவர்களைநான்காணுகிறேன்
அவ-ராணாய்ப்பிறந்தவர்களலைந்தாலுங்குற்றமில்லை
நீ-பெண்ணாய்ப்பிறந்தவள்தான் பின்தொடரநீதியுண்டோ
ஐவருடனேநீ அழுதுதிரிவானேன்
அழுதுதிரிவானேன அல்லற்படுவானேன்
என்-மாளிகைவாசலுக்கு வாரீரோதங்கையரே
பாரவனந்திரிந்து பஞ்சவர்கள்வாரமட்டும்
எந்தனதுமாளிகைக்கு வாரீரோதங்கையரே
அரண்மனைக்குன்தனைநானழைத்துமேபோகவந்தேன்
வெதும்பிவிடாய்த்துநீ வெயிலில்திரிவானேன்
வாரீரோதங்கையரே மாளிகைக்குக்கொண்டுபோறேன்
என்று-வருந்தியழைத்தானே மாபாவிசயிந்தவனும்
அவ்வார்த்தை தானகேட்டு ஆரணங்குமேதுசொல்வாள்
ஐவரையும்விட்டுவிட்டு வருவேனோஅண்ணாவே
விட்டுப்பிரிவேதான் வேகமேதமனம்வருமோ
அண்ணாவேநீர்கேளும் ஆனாலொருவார்த்தை
நான்-வரவேணுமென்று மனதிலுமக்கிருந்தால்
வனம்போனபஞ்சவர்கள் வருகிறபோதாச்சு
ஐவர்வரும்வேளை ஆச்சுது அண்ணாவே
ஐவரைக்கேட்டுநீ அழைத்துப்போமண்ணாவென்றாள்
பஞ்சவரைக்கேளுமண்ணா பாரவனந்துலைத்துவாரேன்
ஐவர்வரும்வேளை ஆச்சுது அண்ணாவென்றாள்
இவ்வார்த்தைதான்கேட்டு இடும்பசயிந்தவனும்
எண்ணதுமெண்ணியல்லோ இருந்துவிசாரமிட்டான்
ஐவர்வந்தால்மோசமல்லோ ஆனதகாரியங்கள்
என்றுசயிந்தவனும் எண்ணினான்தன்மனதில்
காவலர்கள்வந்தாலே காரியங்களாகாது
கைபிடித்திருந்தகொண்டு [illegible]

கடுகவெழுந்தானே கட்டழகன்சயிந்தவனும்
ஐவர்வந்தால்சேதிசொல்லு மஸ்தினாபுரம்போறேன்
இட்டுன்னைபோகவென்றே இந்நேரம்காத்திருந்தேன்
ஐவரையுங்காணோமம்மா ஆரணங்குதுரோபதையே
இன்னமொருவேளைவந்து இட்டுக்கொண்டுபோறேனம்மா
ஐவருக்குச்சொல்லி அழைத்துக்கொண்டுபோறேனம்மா
போகவிடைதாரும் போய்வாரேன்தங்கையரே
என்றுமவன்கேட்க ஏதுசொல்வாள்துரோபதையும்
அப்படியேபோய்வாரும் அண்ணாவேயென்றுசொன்னாள்
விடைபெற்றுச்சயிந்தவனும் வேந்தனெழுந்திருந்து
பர்ணசாலைவிட்டிறங்கிப் பார்வேந்தன்போகலுற்றான்
கடுகநடந்தானே கட்டழகன்சயிந்தவனும்
அழகுரதமேறி அக்கானகந்தாண்டி
(அவன்) மச்சுரதமேறி வாரானேமன்னவனும்
போரான்சயிந்தவனும் பொன்னின்ரதமேறி
அனேகதூரம்போனபின்பு ஆரணங்குதுரோபதையாள்
கத்திதனைக்கண்டாளே கட்டழகுபாஞ்சாலி
வைத்துமறந்தானே மன்னவனும்ஆயுதத்தை
இங்கேவைத்துத்தான்மறந்தா னென்றுமவளெழுந்து
கத்திதனையெடுத்துக் கடுகிநடந்தாளே
அண்ணாசயிந்தவனே அனேகதூரம்போகாதே
நில்லுங்காணண்ணாவே நெடுந்தூரம்போகாதே
(என்று) கூடநடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
அப்போசயிந்தவனும் அழும்புநினைவுகொண்டு
அறியாதுபோலே நடந்தானேஆணழகன்
கூடநடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
சேரநடந்தாளே தேன்மொழியாள்துரோபதையும்
அண்ணாவேஅண்ணாவென்று அக்கணமேகூச்சலிட்டாள்
அழும்பன்சயிந்தவனுக் கப்போதான்கேட்டதுபோல்
திரும்பியவன்பார்த்து தேரைநிறுத்தினானே
(அவன்) நெடுந்தூரம்வந்தபின்பு நிறுத்தினான்தன்ரதத்தை
அப்போதுரோபதையும் அருங்கிளியாளேதுசொல்வாள்
அண்ணாவேஏன்காணும் அனேகதூரம்வந்துவிட்டாய்
ஆயுதத்தைமறந்து அனேகதூரம்வந்துவிட்டாய்
இந்தாருமென்றாளே ஏலங்கருங்குழலாள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டியேதாருமென்றான் இருந்தபடிசயிந்தவனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்கேதுசெய்தாள்
ஒருபடியேறியல்லோ உத்தமியாளிந்தாவென்றாள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டவில்லைகத்தியென்றான் இன்னங்கொடுப்பதற்கு

மற்றுமொருபடியே மயிலனையாளேறினளே
அப்போதுஎட்டவில்லையென்றானே ஆணழகன்
மூன்றாம்படியேறி மொய்குழலாள்நின்றுகொண்டு
ஆயுசமிந்தாவென்றான் ஆரணங்குதுரோபதையும்
சயிந்தவனுந்தான்பார்த்து சந்தோஷமாகியல்லோ
(நாம்) வந்ததொருகாரியங்கள் வசப்பட்டதென்றுசொல்லி
மெத்தெனமகிழ்ந்து மெல்லியரைக்கொண்டுபோக
அவனேறினபோதேயல்லோ ஏகரவிட்டான்தன்ரதத்தை
காற்றாய்ப்பறந்ததுகாண் கட்டழகன்தன்ரதமும்
போகுதேயந்தரமாய்ப் பொல்லாதகானகத்தில்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அண்ணாசயிந்தவனே அழிநினைவுதேடிவிட்டாய்
ஐவர்களுந்தானறிந்தால் அனர்த்தம்வருமுந்தனுக்கு
பஞ்சவர்களறிந்தாலே பழுதல்லோவுன்குடிக்கு
நிறுத்தும்ரதத்தையென்றாள் நிறுத்தானேபாதகனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமனங்கலங்கி
சிந்தைகலங்கியவள் திடுக்கிட்டுமெய்மறந்து
மாதுமனஞ்சலித்து மயிலனையாளேதுசொல்வாள்
அப்போதுரோபதையாள் அபயக்குரலிடுவாள்
ஐவர்பஞ்சபாண்டவரே அபயமபயமென்றாள்
ஆகாயவாணியம்மா அல்லவரும்பார்த்திருங்கள்
ஐயன்பிடாரியரே அந்தரதேவதையே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
காளிகளேகூளிகளே கானகத்துபட்சிகளே
இந்தவனத்திலிருக்குமிருகங்களே
பாருங்கள்பாருங்கள் பாவியிவன்செய்கிறதை
எல்லாரும்பாருங்கள் இவனுடையதுற்குணத்தை
என்னைச்சிறைபிடிக்க யிழுத்துகொண்டுபோறானே
பஞ்சவர்க்குத்தானுறையும் பார்த்திருந்தபட்சிகளே
ஐவருக்குந்தானுரையும் ஆகாயவாணியம்மா
நாய்க்குங்கிடைக்குமோ நல்லமுழுதேங்காயும்
செரிப்பேனோஉந்தனுக்கு சேறுபந்துநான்தருவேன்
(உனக்) காவனென்றுபாராதே அடிப்பேன்முறத்தாலே
என்றதுரோபதையு மிளங்கொடியாளேதுசெய்தாள்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்புகிறாள்
மாயவரேசுவாமியென்று மாதுபுலம்புகிறாள்
அப்போதுபஞ்சவர்கள் அரன்பூசைதான்முடித்து
அரிபூசைசிவபூசை எல்லாமவர்முடித்து
நடந்தார்கள்பஞ்சவர்கள் ஞாயிறுதித்தாப்போல்
வாரார்கள்பஞ்சவர்கள் வடக்கெழுந்தசூரியன்போல்
பர்ணசாலைதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்

அகம்கதான துரோபதையை ஆரணங்கைக்காணுமல்
காணுமல்பஞ்சவர்கள் கலங்கிஞரன்னேரம்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாமதகரியே வில்லேவந்தாயென்பிறப்பே
நெருப்பிற்பிறந்தவளை நீலவர்னன் தங்கையரை
அக்கினியில்வந்துதித்த அபிஷேகபத்தினியை
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பைங்கிளியைக்காணேனே
அழகில்சிறந்தபெண்ணை ஆரணங்கைக்காணேனே
ஆரெடுத்துப்போனரோ அறியேனேதம்பியரே
யாவரெடுத்துப்போனரோ ஏதுமறியேனே
பார்த்துவாதம்பியென்றார் பாரமதகரியை
என்றதுகேட்டு எழுந்தார்கள்தம்பியர்கள்
கட்டிவரிந்துகட்டித் தாமரைப்பூச்சுங்குவிட்டு
ஆயுதங்கள்தானெடுத்து அடைவுடனேபோய்நடந்தார்
தெற்குத்திசையிலே தேர்விஜையன்தேடிவாரான்
வடக்குதிசைநோக்கி வாரான்சகாதேவன்
மேற்குத்திசையிலேதான் நகுலனுந்தேடிவாரான்
கிழக்குதிசைநோக்கி வீமனுந்தேடிவாரான்
அந்தவனங்களிலே ஆராய்ந்துவாரபோது
தேரடியைக்கண்டுமல்லோ திரு பிஞன்வீமனவன்
காற்றுவேகமாகவேதான் கடிகிவந்தான்வீமனவன்
எட்டிப்போய்த்தான்பிடித்தான் இயலானரதத்தையவன்
வீமனைக்கண்டாளே மெல்லிநல்லாள்துரோபதையும்
அழுதகண்ணைத்தான் துடைத்தாள் ஆயாசமுந்தீர்ந்தாள்
கைகொடுத்தான் துரோபதைக்கு கடுகஇறக்கிவிட்டான்
கண்டுஇடிவிழுந்தான் காளைசயிந்தவனும்
பார்த்துஇடிவிழுந்தான் பாவிசயிந்தவனும்
சிந்தைகலங்கியவன் திடுக்கிட்டுமெய்மறந்து
மூர்ச்சையாய்விழுந்தானே முடிமன்னன்சயிந்தவனும்
ஒருகையால்ரதந்தூக்கி உதிரடித்தான்மண்மேலே
அவனுடையதேர்சட்டமும் அழகுகுதிரைகளும்
சட்டஞ்சட்டமாகவேதான் தவுடுபொடியாச்சுதங்கே
தேருமுறிந்ததுகாண் சேர்ப்பித்தான்மண்மேலே
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
ஏதடிபெண்ணேநீ யிளங்கொடியேதுரோபதையே
வந்தவபணமென்ன வகையாகச்சொல்லென்றான்
அப்போதுரோபதையா ளாரணங்குதான்பார்த்து
அஞ்சிப்பயந்துமவள் அருங்கிளியாளேதுசொல்வாள்
வந்தானேசயிந்தவனும் வாருமிருமென்றுசொல்லி
நான்-வனவாசம்வந்ததொரு வயணங்கள்கேட்கையிலே

சொன்னேன்வசனமெல்லாம் சூதாகத்தான்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயுதத்தைக்கீழேவைத்தான்
மறந்துவிட்டாயென்று மன்னவரேசொல்லி
ஆயுதத்தைத்தானெடுத்து அன்றுவென்றோடிவந்தேன்
எட்டிக்கொடுமென்றான் ஏறினனேதேர்மேலே
ஏறினபோதே எகிறவிட்டான்தன்ரதத்தை
இவ்வளவுசேதியென்று இளங்கொடியாள்துரோபதையும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
காட்டுசெடிபிடுங்கி கடுகியேயோடிவந்தான்
மூர்ச்சைதெளிந்தானே முடிமன்னன்சயிந்தவனும்
காட்டுக்கொடியாலே கட்டினான்சயிந்தவனை
அப்போமதவீமன் ஆங்காரங்கொண்டவனும்
தன்காலில்கட்டிக்கொண்டு தானடந்தான்வீமனுமே
பர்ணசாலைதன்னருகே பாவிதனைக்கொண்டுவந்தான்
தருமருக்குமுன்னாலே தள்ளிகொண்டுவந்தானே
கண்டாரேதர்மராயர் காளைசயிந்தவனை
வாருங்காண்மைத்துனரே வந்தீரெனைத்தேட
தேடியேவந்ததென்ன பிராணகானகத்தில்
வந்தவசனமெல்லாம் வாய்திறந்துசொல்லுமென்றார்
தர்மவர்கேட்கையிலே தாம்வேந்தன்வாய்திறந்து
மாபாவிசயிந்தனும் வார்த்தைகளேதுசொல்வான்
(உங்களை) பார்க்கபிரியமுடன் வந்தேனேபஞ்சவரே
காணமனதாகி வந்தேனேகாவலரே
வந்தவிடந்தனிலே உன்னைநான்காணவில்லை
தங்கையரைக்கண்டேனே தங்கள்வசனமெல்லாம்
விபரமாய்ச்சொல்லுமென மெல்லியரைத்தான்கேட்டேன்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
வனவாசம்வந்தொரு வசனமெல்லாந்தானுரைத்தாள்
திரிபோதிரனுரைத்த சேதிகளைதானுரைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தேன்
இரும்புமென்றுசொல்லி பேசிவழிநடந்தேன்
வச்சிராயுதத்தை வைத்துமறந்துவிட்டேன்
கையிலெடுத்துக்கொண்டு கடுகவந்தான்தங்கையரும்
எட்டிக்கொடுமென்றேன் இயலானதங்கையரை
அவ்வளவில்வீமனவன் அடித்தானேகதையாலே
இடுப்பிலேகயறுகட்டி இழுத்துவந்தான்தங்கள்முன்னே
இவ்வார்த்தைசொல்லி இளைத்தாற்போலேயழுதான்
சாமாம்புமன்னவரும் தருமராசுகேட்டு
மெத்தமனமுருகி வேந்தரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து

கனிகள்பறித்துக்கொண்டு கடுகியேவாருமென்றார்
அந்தசொல்தான்கேட்டு அனைவருங்கோபமுற்றார்
நகுலசகாதேவ ராஜாக்கள்கோபமுற்று
கண்கள்சிவந்துமவர் காந்தாளக்கோபமுற்று
நெற்றிவிழிசிவக்க நீலவிழிபொறிபறக்க
உச்சிமயிர் துடிக்க உத்தமர்களேதுசொல்வார்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
துரோபதையைக்கொண்டுபோக வந்ததொருதோசியற்கு
பாவையவளைக்கொண்டுபோக வந்ததொருபாதகற்கு
போசனமும்போடுவாரோ புகழ்பெரிய அண்ணாவே
ஆக்கினைகள்பண்ணி அனுப்புவோமில்லையென்றார்
பொல்லாதபாதகனை போகவிடலாகாது
என்றுமவர்சொல்லி எல்லவருமோர்முகமாய்
ஆனந்தயர்பவரெல்லாம் அண்ணருடனே கோபமிட்டார்
தக்கபுகழ்பெரிய தருமராவரேதுசொல்வார்
கோபித்தகோபமெல்லாங் குளிர்ந்ததமையார்க்கு
வெறுத்ததைப்பாலென்பார் வெள்ளத்தைதண்ணீரென்பார்
கபடறியார்சூதறியார் கள்ளமொன்றுந்தாமறியார்
பொய்சொல்லாதருமரவர் புண்ணியனேதுசொல்வார்
கோபித்துக்கொண்டாக்காலாகாதுகொற்றவரே
ஆங்காரகோபமது ஆருக்குமாகாது
ஆனவமுண்டானா லழிந்துவிடுங்காலமப்பா
பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார்
மனக்குறைவையாதே வந்தவற்குபசியாற்றும்
கனிகள்பறித்துமே கடுகியேவாருமென்றார்
எனக்கெதிர்பேசவேண்டாம் எழுந்துநடவுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அண்ணரடிவணங்கி
அஞ்சிப்பயந்தெழுந்தார் அழகானதம்பியர்கள்
கட்டிற்பறந்தோடி கனிகள்பறித்துவந்து
கொண்டுவந்துவைத்தார்கள் கோபமான அண்ணரண்டை
வாங்கியேதருமரவர் மைத்துனனுக்கீயுமென்றார்
மனதிற்பயமுடனே வாங்கிப்புசித்தானே
கனிகள்புசித்துமவன் கைபூசிக்கொண்டானும்
போய்வாரேனென்றுமே போட்டிடனே சரணமிட்டான்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
மைத்துனர்தன்னுடனே மன்னர்களேநீங்களும்போய்
வழிகூட்டியனுப்பிவைத்து வாருங்கள்தம்பியென்றார்
அப்படியேநல்லதென்று அழகானதம்பியர்கள்
வெற்றிமதயானை வீமனவர்தானெழுந்து
அண்ணருரைப்படிக்கு அழைத்துவந்தான்சயிந்தவனை

சென்றாரிருவருமாய் சிலதூரமானபின்பு
போர்வீமனேதுசெய்தான் போரவழிதனிலே
ஐந்துகுடுமிவைத்து அப்பாலேதலைசிரைத்தான்
மீசைசிரைத்தானே மின்போடிபண்ணினானே
தாடிசிரைத்தானே தலைபோடிபண்ணினானே
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்தழகாபொட்டுவிட்டான்
செம்புள்ளிகரும்புள்ளி சேர்த்தழகாபொட்டுவிட்டான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழ்பெரிய தருமரவர்பார்த்து
அருச்சுனா தம்பியரே அண்ணனைக்காணோமே
மைத்துனரைக்கூட்டிப்போய் வழிவிட்டுவாருமென்றேன்
போய்நெடும்போதாச்சு புகழ்வீரன்வீமனைத்தான்
வீமனைத்தேடிநீ விரைவில்வந்துசேருமென்றார்
கடுங்காளைவீமனைத்தான் கண்டழைத்துவாருமென்றார்
அப்படியேநல்லதென்று அருச்சுனனுந்தானெழுந்தான்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
வில்லெடுத்துக்கைபிடித்து விஜயனும்போய்நடந்தான்
அண்ணனைத்தேடிவந்தான அருச்சுனராஜதுரை
வீமனைப்பார்த்தாரே விஜயனருச்சுனனும்
கண்டானேசயிந்தவனைக் காளைமனமகிழ்ந்து
பார்த்தானேசயிந்தவனைப் பலகாலும்பூரித்து
வீமனைத்தான்பார்த்து விஜயனுமேதுசொல்வான்
என்னமரியாதை செய்தீரண்ணனன்றோவே
மட்டையடிமொட்டையிட்டால் வாகனங்கள்வேண்டாமோ
இருமிருமண்ணாவென்று ஏகிநடந்தானே
கானகத்திலேநுழைந்து கழுதையொன்றுதான்பிடித்து
மலைக்கழுதைகொண்டுவந்து மன்னவனைபேற்றினானே
இப்படியாகவேதானிவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
நகுலனைத்தானழைத்து ராசர்களைத்தேடுமென்றார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
கண்டழைத்துவாருமையா காளையிருவர்களை
நாமமுடியான் நகுலனதுகேட்டு
அருளாருளுமென்னையா அழைத்தோடிவாரேனென்று
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
ஆயுதங்கைபிடித்து அடவியினிற்போய்புகுந்து
பார்த்தரைத்தேடிப் பரிநகுலனோடிவந்து
கானகமெல்லாந்தேடிக் கண்டானே அண்ணர்களை
கண்டான்சயிந்தவனுங் கண்காட்சியானதெல்லாம்
பார்த்தான்சயிந்தவனைப் பாவிக்குவற்குமென்று
சந்தோஷப்பட்டானே சயிந்தவனைக்கண்டவுடன்

வீமாமதகரியே வில்லேந்துமன்னர்களே
மூவிரண்டுகுடுமிவிட்டு மொட்டையடித்தீரே
என்னுலுபகாரம் என்னசெய்வேன்மைத்துனற்கு
சாணியெடுத்துவந்து சரியானவுண்டைவைத்து
தலைமேலேஉண்டைவைத்து தனிவிளக்குவேற்றிவைத்தான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
அனேகநெடும்பொழுது ஆனபிறகு
தருமரவரெழுந்து தம்பியைத்தானழைத்து
மூவர்களும்போனாரே முடிமன்னராசாக்கள்
இன்னம்வரக்காணேன் என்னமோநானறியேன்
தேடியழைத்துநீ சீக்கிரத்தில்வாருமென்றார்
தாபமுடியானும் சகாதேவன்தானகேட்டு
அப்படியேதான்போ யழைத்துமேவாரேனென்று
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆணழகனபோகலுற்றான்
அப்போதுரோபதையும் ஆரணங்குதானெழுந்து
தர்மருக்கெதிரில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
நானுங்கூடப்போய்வாரேன் ராஜர்களைதேடவென்றாள்
தருமராதுகேட்டு தளராமலேதுசொல்வார்
அப்படியேபோய்வாரும் ஆரணங்குதுரோபதையே
சீக்கிரத்தில்வாருமென்று செலவுதந்தார்தர்மலிங்கம்
கூடத்தொடர்ந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
இருவருமாகவல்லோ யிசைந்துவழிநடந்தார்
அண்ணர்களைத்தேடியல்லோ ஆணழகனவந்துவிட்டான்
கானகத்தில்நுழைந்து கண்டான் அண்ணர்களை
மைத்துனரைக்கண்டு வரிசையெல்லாந்தானபார்த்து
உள்ளங்குளிர்ந்துசிலிர்த் துடம்பெல்லாம்பூரித்து
சந்தோஷப்பட்டு சர்வாங்கம்பூரித்து
மரியாதைதானென்ன மைத்துனற்குச்செய்வேன்காண்
கழுதையின்மேலிருந்தவனைக் கடுகியிறக்கிவிட்டான
முன்னும்பின்னுக முகந்தெரியஏற்றினன்
எருக்கமாலைகொண்டுவந்து இவன்கழுத்திலேபோட்டான்
இந்தவரிசையெல்லாம் விந்தைகண்காட்சியென
மன்னவர்கள்தன்னருகே வந்துநின்றாள்பாஞ்சாலி
அண்ணரைக்கண்டாளே ஆனந்தமானாளே
தமயனைக்கண்டாளே சந்தோஷமானாளே
தாமமுடி வீமரேநீர் தலைபோடி பண்ணீரே
வாள்விஜய அர்ச்சுனரே வாகனங்கள்தந்தீரே
காளைநகுலரேநீர் கரும்புள்ளிபோட்டீரே
முன்னூற்சகாதேவா முன்பின்னாய்வைத்தீரே
எருக்கமாலைகொண்டுவந்து இவர்கழுத்திற்போட்டீரே

என்னமரியாதை அண்ணருக்குநான்செய்வேன்
பாஞ்சாலன்பெற்ற பைங்கிளியுமேதுசொல்வாள்
வானத்தருந்ததியாள் மாசுபடாபத்தினியாள்
ஐவருக்குந்தேவியாகி அழியாதபத்தினியாள்
கற்புடையபத்தினியைக் காப்பதுமெய்யானால்
இக்கழுதையைத்தொட்டவர்கள் கடுகாடவாமல்
அரவக்கொடியோன்பார்க்க அம்பலம்போமளவும்
ஏறினகழுதை யிறங்காமலிருக்கவென்று
கட்டவிழ்க்கவந்தவொரு காவலர்களெல்லோரும்
ஓட்டிக்கொண்டுபோகவென்று உத்தமியுஞ்சாபமிட்டாள்
என்-வங்கிஷத்தார்தொட்டால் வனக்கழுதைவிட்டிறங்க
காட்டுக்கழுதையிது கடுகெனவேதானிறங்க
மற்றவர்கள்தொட்டாலே வலித்துக்கொண்டோடவென்று
இப்படிக்குச்சொல்லியல்லோ யிட்டாள்பெருஞ்சாபம்
சாபங்கொடுத்தாளே தருமர்பெருந்தேவியவள்
இப்படியாகச்சொல்லி இருந்தாளேதுரோபதையும்
அடித்துத்துரத்தினர் அந்தசயிந்தவனை
துரியனுக்குச்சொல்லுமென்று துரத்தினர்சயிந்தவனை
வருகுதே அக்கழுதை வனமாய்வனந்தாண்டி
தான்விட்டுவந்தவொரு தன்னுடையசேனையண்டை
வந்துகலந்தானே வனக்கழுதைதன்னுடனே
கண்டாரேசேனையர்கள் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தாரேசயிந்தவனைப் பார்வைரெண்டுங்கொள்ளாமல்
இதுவென்ன அதிசயங்க ளெவர்செய்தகோலமென்று
கட்டையவிழ்க்கவென்று காவலர்களோடிவந்து
தொட்டுவலிக்கவேதான் ஓட்டிக்கொண்டுபோனர்கள்
ஓட்டிக்கொண்டேசேனையுடன் உத்தமனும்போய்நடந்தான்
அக்ரோணிசேனையுடன் ஆணழகன்போகலுற்றான்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி பதிகவனந்தான்தாண்டி
அஸ்தினபுரமதனில் அடுத்ததுஅக்கழுதை
கடையுங்கடைத்தெருவிற் கழுதைவருகையிலே
கழுதையைத்தொட்டவர்கள் கடுகியேகூடவாரார்
பட்டணத்திலெல்லவரும் பரிவாகப்பார்த்தார்கள்
என்னஅதிசயங்க ளென்பார்களெல்லவரும்
மாடத்திலமண்டபத்தில் வந்தேறிப்பார்த்தார்கள்
கோபுரத்திலேறிநின்று குலுங்கநகைப்போரும்
சொல்லிச்சிரிப்போரும் சிச்சிச்சியென்போரும்
இவனுக்குஇக்கழுதை ஏதென்றுசொல்வோரும்
சாமத்துரோகியிவன் சதிசெய்தானென்போரும்

இப்படியாக இவர்களுஞ்சொல்லையிலே
மற்றுமொருவன்வந்து வாய்திறந்தேதுசொல்வான்
துரியனுடசொற்கேட்டு துரோபதையைக்கொண்டுவர
போனானே கானகத்திற் போர்மன்னராசரண்டை
ஐவரில்லாவேளையில்லை ஆரணங்கைக்கொண்டுசென்றான்
அப்போதுரோபதையும அபயமபயமென்றாள்
அபயக்குரல்கேட்டு ஐவர்களுமோடிவந்தார்
வெற்றிமதயானை வீமனவனகேட்டு
மயிலனையைக்கொண்டுபோக வந்ததொருபாவிதன்னை
விடலாகாதென்றுசொல்லி வீமன்மனதிலெண்ணி
அடையாளம்பண்ணி யனுப்பினான் றிரியனண்டை
என்றுமவர்கள்சொல்லி யிருக்கின்றவேளையிலே
அந்தத்தெருத்தாண்டி அப்பாலேபோரானே
மாடத்தெருதாண்டி மன்னவர்வீதிவிட்டு
துரியோதிரனிருக்கும் சிம்மாதனத்தருகே
வந்தது அக்கழுதை மகாராஜன்முன்னாலே
அம்பலத்தார்கண்டார்கள் ஆச்சரியப்பட்டார்கள்
துரியோதிரன்கண்டு சிந்தைமனங்கலங்கி
உள்ளங்கலங்கியல்லோ ஓடிவந்தான்சயிந்தனண்டை
இறங்கென்றுகைகொடுந்தா னிழுத்துக்கொண்டோடுகுது
ஐயோதெய்வமேயிந்த அனியாயமானதேயேன்
என்னையிழுத்துக்கொண்டு ஓடுகுதிக்கழுதை
கூவியலறுகிறான் கொப்பெனவேதிரியோதிரன்
அபயமிட்டுச்சுற்றுகிறா னம்பலத்தார்தங்கள்முன்னே
அங்கேயிருந்தவர்கள் அனைவோருந்தான்பார்த்து
கலுக்கென்றுதான்சிறித்தார் கட்டழகரெல்லோரும்
சிரித்ததைத்தான்பார்த்து திரியனுடன்சொல்லுகிறார்
சிரிக்கஉடலெடுத்தோம் சீயென்னப்பேரெடுத்தோம்
என்றுமவர்கள்சொல்லி யிவனருகிலோடிவந்து
தம்பிமாரெல்லோரும் தமயனுக்குகைகொடுத்தார்
அத்தனைபேர்களையும் அக்கழுதைவலித்தோடும்
அப்போதுஎல்லோரும் அலறுகிறார்கூச்சலிட்டு
ஐயையோதெய்வமென்று அல்லவரும்புலம்புகையில்
அங்கிருந்தராஜாக்க ளானதொருமந்திரிகள்
பார்த்துமவர்நடுங்கிப் பதுங்குவார்துரைகளெல்லாம்
இப்படியாகவே இவர்கள்படும்பாடதனை
தூயகுலத்துதித்த துரோணரவரோடிவந்து
காசிவளநாடாளுங் கர்னரைக்கண்காட்டி
சர்ப்பக்கொடியோனுடனே தம்பிமாரானவரும்
சாயாம்புமேனி சயிந்தவரானவரும்
மற்றுஞ்சிலமன்னவரும் மகுடமுடிராசர்களும்

இன்னுஞ்சிலசேனைகளும் எல்லோருமொன்றாகக்
காட்டுக்கழுதையுடனே கலந்துமவரோடுகிறார்
(நாம்) கண்டுசும்மாவிருக்க காரியங்களல்லவென்றார்
பார்த்திருப்போமென்றால் பரிதாபந்தோனுதையா
இதுக்கொருயோசனைகள் இயம்புங்காண்மன்னவரே
அப்போதுகர்ணருமே ஆனமுகர்எதுசொல்வார்
துரோபதையைச்சொன்னதொரு தோஷமிதுகாணும்
பத்தினியைப்பேசினதோர் பாவமிதுகாணும்
என்றுசொல்லிகர்ணருமே யாவரையுந்தானபார்த்து
அப்போதுகர்ணருமே அனைவரையுந்தான்பார்த்து
குலுங்கநகைநகைத்துக் கொப்பெனவேஓடிவந்து
பாரளந்தமாயன் திருப்பாதமனதிலெண்ணி
பெருமான்துணையென்று பிடித்தானேதன்கையில்
கட்டியிழுத்தானே கர்ணமகாராஜன்
கழுதையைக்கட்டி கடுகவிறக்குமென்றார்
அத்தண்டபேர்களுமே அல்லவருங்கையைவிட்டார்
அப்போசயிந்தவனும் அங்கேயிறங்கிவிட்டான்
துரியோதிரன்முதலாய்ச் சேனையெல்லாம்வந்தார்கள்
அவரவர்களாசனத்தி லனைவோரும்வீற்றிருந்தார்
அம்பலவாசலிலே அழைத்துவந்தார்சயிந்தவனை
தென்னமுடிவேந்தன் துரியோதிராசன்
மைத்துனரைத்தான்பார்த்து மகாராசனேதுசொல்வான்
கோதைதுரோபதையைக் கொண்டுவரப்போனவீரா
மட்டைபடிமொட்டையிட்டு வாகனத்தின்மேலேற்றி
அனுப்பினார்காணும் ஆனமுகாசொல்லுமென்றான்
(அவன்) பேசப்பலனற்றிருந்து பின்வேந்தனேதுசொல்வான்
போனதுவும்வந்ததுவும் புதுமைநடந்ததுவும்
அங்கேநடந்ததொரு ஆச்சரியந்தானுரைத்தான்
தேசத்தையாளும் துரியோதிரன்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு அதிவேமனஞ்சலித்தான்
வரிசிந்துராஜனுமே மைத்துனற்கேதுசொல்வான்
வெற்றிமதயானை வீமனைக்கொல்லவென்று
பரமனைநோக்கியே பாரதவசபண்ணி
வீமனைக்கொல்லுவென்று வேணவரம்பெற்றுவாரேன்
என்றுநடந்தானே இபலானசயிந்தவனும்
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
குறிஞ்சுனையுமங்கே அதிகவனந்தான்தாண்டி
மகாமுனிகள்தபசுபண்ணும் மாயமலைமேலே
தானுந்தபசுபண்ணுறான் தாமமுடியாளும்
ஆதிசிவனைபல்லே அடிபணிந்துதானினைந்து

அருந்தபசுபண்ணினானே அங்கேசயிந்தவனும்
அப்போபரமசிவன் அவனுக்கெதிரில்வந்து
என்னவரம்வேணுமென்று எந்தனைக்கேளுமென்றார்
அப்போசயிந்தவனும் அநேகவரம்கேட்டான்
கேட்டவரங்களெல்லாம் கிருபையாய்த்தான்கொடுத்தார்
ஆதிசிவன்கையினாலே அதிகவரம்பெருபெற்றான்
வீமனைக்கொல்லவென்று வேணவரங்கள்பெற்றான்
கதைகொன்றைமாலையுங் கேட்டுமேபெருபெற்றான்
வரங்களும்பெருபெற்று வாரானேசயிந்தவனும்
அஸ்தினாபுரத்தே ஆணழகன்போகவென்று
வரங்களும்பெருபெற்று வாரானேசயிந்தவனும்
அஸ்தினாபுரத்தே ஆணழகன்போகவென்று
மகாதபசுபண்ணதொரு மாமலையைவிட்டிரங்கி
நடந்தானேசயிந்தவனும் நாலுதிக்குந்தானதிர
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைகளுமே அதிகவனந்தான்தாண்டி
வெங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
மூங்கிலடர்ந்தவனம் முல்லைமல்லிபூத்தவனம்
சிங்கப்புலிகரடி இருக்கும்வனந்தாண்டி
மலைப்பாம்புகுடியிருக்கும் மல்லர்வனந்தாண்டி
இருளர்குடியிருக்கும் இருண்டவனந்தாண்டி
கள்ளர்குடியிருக்கும் கனத்தவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி யிளாந்தோப்புந்தான்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டானத்திபுரம்
அத்தினாபுரத்தே ஆணழகன்போய்ச்சேர்ந்தான்
தென்னமுடிவேந்தன் திரியோதிரனிருக்கும்
சபையிற்சிம்மாசனத்திற் சயிந்தவனும்வந்தானே
மானாகங்கொண்டவனும் மைத்துனரைத்தான்பார்த்து
அரவக்கொடியோனும் அத்தானைத்தான்பார்த்து
கடுகவேதானிறங்கிக் கைகொடுத்துதான்தழுவி
ஆடாமல்லர்களே அங்கிருக்கும்சேவகரே
சயிந்தவனார்வீற்றிருக்கத் தங்காசனம்போட்டு
ஏவல்பணிசெய்கிறவர் எல்லவருந்தான்கேட்டு
சொல்லப்பெற்றோமென்றுமவர் சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து
சேவகரெடுத்துவந்தார் சிம்மாதனமுமிட்டார்
அப்போதிரியோதிரன் அத்தானைத்தான்பார்த்து
வந்துநெடுநேரம் நின்றீரேமைத்துனரே
இட்டசிம்மாதனத்தில ஏறியவன்வீற்றிரென்றான்
அப்போசயிந்தவனும் ஆணழகுமன்னன்
இட்டதொருசிம்மாதனம் ஏறியவன்வீற்றிருந்தான்

அப்போதிரியோதிரன் ஆனைமுகனேதுசொல்வான்
கானகங்கள்போனீரே கத்தாவைக்காணீரும்
கத்தாவைக்கண்டீரோ கனத்தவரம்பெற்றீரோ
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்பெற்றீரோ
பஞ்சவரைக்கொல்லுதற்குப் பலத்தவரம்பெற்றீரோ
எந்தன்மனங்குளிர எனக்கறியச்சொல்லுமென்றான்
அப்போசயிந்தவனும் ஆனைமுகனேதுசொல்வான்
போனதுவும்வந்ததுவும் புனிதரைக்கண்டதுவும்
ஐவரையுங்கொல்லவென்று ஆனவரம்பெற்றதுவும்
காலிரண்டுவார்த்தைகளைப் நடத்தினான்சயிந்தவனும்
கேட்டுமனமகிழ்ந்தான் கீர்த்திபெற்றோமென்றுசொல்லி
வெற்றிபெற்றோமென்று வேந்தன்மகிழ்ந்திருந்தான்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றாவதுவருஷம் முடிந்ததுமன்னவர்க்கு

மூன்றாவது முருக்கமகாரிஷிவனம்முற்றிற்று.

)(*)(

௪-வது காளமகாரிஷிவனம்.

நான்காம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
முருக்கமகாரிஷிவனத்தை முடிமன்னர்தான்தாண்டி
கூடைகலைமேலே குடிவாழ்க்கைகாணத்தில்
கோலிவைத்தசிமாடு கூடைகலைமேலே
மண்ணிவைத்தசிமாடு வனவாசங்குடித்தனமாம்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் குடிவந்தார்பஞ்சவர்கள்
அவ்வனத்திற்போய்ச்சேர்ந்தார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
பச்சைத்தழைபொறுத்துப் பர்ணசாலையுண்டுபண்ணார்
நாலுக்குப்பர்ணசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குப்பர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஐந்தடுக்குப்பர்ணசாலை ஆனைமுகருண்டுபண்ணார்
பர்ணசாலைமேலேபல்கோ பஞ்சவர்குடித்தனமாம்
மாதுதுரோபதையும் மன்னர்பஞ்சபாண்டவரும்
காயுங்கனியுந்தின்று காலங்கழிக்கிறார்கள்
அவ்வனத்திற்பஞ்சவர்கள் அவரிருக்கும்வேளையிலே
மானுதங்கொண்டதொரு மகாராசனேதுசெய்தான்
அரவக்கொடியோனும் அங்கவனேதுசொல்வான்
சனபகன் மேனாக்கிருக்கச் சர்ப்பக்கொடியோனும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ வார்த்தைதெரியவில்லை

எந்தவனத்தி லிருக்கிறரென் றறியேன்
காணிபோரண்டாலே கடுகவேதானேகி
ஐவரையுந்தேடி அவரிருக்கு மிடமறிந்து
தேடியேநீர்பார்த்துத் திரும்பிவந்துசேருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருகிருந்த தூதர்கள்
சொல்லைப்பெற்றோமென் றுசுருக்காயெழுந்தார்கள்
கூறப்பெற்றோமென் றுகும்பிட்டெழுந்து
அஸ்தினாபுரிதாண்டி ஆரணியந்தேடிவந்தார்
காமெல்லைகளிலுங் கடுகவேதேடிவாரார்
தினகரன்வனந்தனிலே தேடினார்பஞ்சவரை
அங்கிலுங்காணமல் அப்பாலேதேடிவாரார்
ராமகிரிவனத்தில் நலமாகத்தேடிவாரார்
அங்கிலுந்தேடினர்கள் அப்பாலேதேடிவாரார்
ஸ்ருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்தேடிவாரார்
அங்கெங்குங்காணவில்லை ஐவர்பஞ்சபாண்டவரை
காளமகாரிஷிவனத்தே கடுகியேவந்தார்கள்
காளமகாரிஷிவனத்திற் காவலர்கள்பஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்கிறரென்றறிந்து ஏகிவழிநடந்தார்
காடுஞ்செடிதாண்டி கடுகியேவாரார்கள்
ஆறுங்கரைதாண்டி அவசரமாயோடிவந்தார்
மகாராசன்வீற்றிருக்கும் மண்டபத்தருகில்வந்தார்
துரியோதனனிருக்கும் சிம்மாதனமுன்னேவந்து
அரசனெதிரில்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டுதுரியோதனன் கட்டமுகனேதுசொல்வான்
பார்த்துதுரியோதனன் பார்மன்னனேதுசொல்வான்
போனீரேதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றார்
ஐவரைத்தேடியே ஆரணியம்போனோமே
காளமகாரிஷிவனத்திற் கண்டோமேபஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமே
என்றுசொல்லத்தானகேட்டு எரிகோபங்கொண்டவனும்
கண்கள்சிவந்தானே காந்தாளப்பட்டவனும்
மாமாவைத்தானழைத்து மாநாகனேதுசொல்வான்
இன்னமும்பஞ்சவர்க ளிருக்கிறர்கானகத்தில்
மானமற்பஞ்சவர்கள் வனமேதிரிகிறர்கள்
தப்பிப்பிழைத்தாலே தாரணியையாள்வாரே
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுஆள்வாரே
எவ்விதமாகிலும் இறக்கவகைபார்க்கவேணும்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆலோசனைசொல்லுமென்றான்
மாமாவேயென்தனுக்கு வார்த்தையுரையுமென்றான்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மருகனுக்கு

சாமத்துரோகியவன் சகுனியெடுத்துரைப்பான்
சொல்லிக்குப்பல்லி குடிக்குச்சகுனியல்லோ
துரியனைத்தான்கெடுக்கச் சொல்லுகிறான்யோசனைகள்
அப்பாமருமகனே ஐவரையுங்கொல்லவென்றால்
கொடிக்குட்காளமாரிவல்லய கோச்சிதவம்பண்ணினாலே
அருந்தபசுபண்ணினாலே அந்தமுனிவந்திடுவார்
ஐவரைக்கொல்லவென்று அவரைமனுக்கேட்டாக்கால்
நல்லதென்றுசொன்னாலே நாடெல்லாமுன்னுதப்பா
தபசில்பெரியவர்காண் சாபிக்கொப்பானவர்காண்
வரத்திற்பெரியவர்காண் மகாதேவர்க்கொப்பாவார்
அவராலேயாகுமப்பா ஐவரையுங்கொல்லுதற்கு
உன்னாலேயானமட்டும் உத்தமரேபாருமென்றான்
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தான்திரியோதிரன்
உக்கிரமுடனெழுந்து ஒருவனுமாய்ப்போறானே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையுமல்லோ அரியவனந்தாண்டி
ஆரணியந்தன்னிலே அரவக்கொடியோனும்
வசதமிருந்துமவன் மகாதவசுபண்ணுகிறான்
காளமகாமுனியைக் கருதிமனதிலெண்ணி
அருந்தபசுபண்ணினானே அரவக்கொடியோனும்
வேணதபசுபண்ணான் வேந்தரைக்கொல்லவென்று
பாவிதபசுபண்ணான் பஞ்சவரைக்கொல்லவென்று
இப்படியாத்தவமிருந்தான் எரிநாகக்கொடியவனும்
அப்போமகாமுனியும் அறிந்தார்தவத்திலையை
சடையுஞ்சடைமுடியும் தம்பிரான்போலாக
இவருடையசடையழகும் ஈஸ்வரனைப்போலாக
காலில்மிதவடியும் கையிற்கமண்டலமும்
திரியோதிரனருகே சேரவருகையிலே
கண்டுதிரியோதிரனும் கடுகவெழுந்திருந்து
பார்த்துதிரியோதிரனும் பற்றற்றோர்க்கெதிரில்வந்து
முத்துமுடிவேந்தன் முனிகெதிரேலோடிவந்து
சுற்றிவலம்வந்து தொழுதிறைஞ்சித்தெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன்கோமானும்
வாய்மூடிநின்றானே மன்னவன்திரியோதிரன்
காளமகாமுனியுங் கண்டுமனங்குளிர்ந்தார்
சிந்தைமனங்குளிர்ந்து தேகங்கள்பூரித்து
சந்தோஷமானாரே சாமிபெரியவரும்
மெத்தமகிழ்ந்தவரும் வேந்தனைப்பார்த்துரைப்பார்
ஆர்காணும்ராசாவே அரசபெருங்கோமானே

ஏதுக்காய்வந்தாய்நீ இங்குதவம்பண்ணுகிறாய்
என்னைநினைந்தாய்நீ எதுகருமமென்றார்
மனதில்நினைத்ததெல்லாம் மன்னவனேசொல்லுமென்றார்
வேண்டும்வரங்கொடுப்பேன் வேந்தனேசொல்லுமென்றார்
அப்போதிரியோதிரன் ஆணழகன்தான்பார்த்து
சர்ப்பக்கொடியோனும் அங்கேமனமகிழ்ந்து
ஆண்டவரேநீர்கேளும் அடியேனோர்விண்ணப்பம்
என்சாமிகேளுமையா யெந்தனுடவிண்ணப்பம்
அஸ்தினாபுரமாண்ட அரவக்கொடியோனான்
திக்கரசையாண்டதொரு திரியோதிரனென்பார்
எந்தன்மனக்குறையால் வந்தேனுமைக்காண
கண்டேன்களிகூர்ந்தேன் கவலையைச்சொல்லுகிறேன்
பண்டும்பகையாளி பாதிநாள்தாயாதி
என்னும்பகையாளி யிருக்கிறார்சத்ராதி
எந்தன்பகையாளர் இவலான பஞ்சவர்கள்
பாண்டுமகாராஜன் பெற்றெடுத்தபஞ்சவர்கள்
இப்போதுதங்கள்வனத் திருக்கிறார்பஞ்சவர்கள்
ஐவரையுங்கொல்ல அதிகமனதெந்தனுக்கு
ஐவரையுங்கொன்றாலே ஆளுவேன்ராச்சியத்தை
அவர்களைக்கொல்லுதற்கு அடியேனாலாகாது
உம்மாலேயாகுமென்று உம்மைநினைத்தழைத்தேன்
ஆகையாலெந்தனுக்கு அதிகவரந்தாருமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதற்கு பலத்தவரந்தாருமையா
அநேகநாளுமைக்கோரி அரியதவம்பண்ணிநின்றேன்
(நீ) வந்தபொழுதெந்தன் மனங்குளிர்ந்தேனாண்டவரே
இந்தவரமெனக்கு ஈந்திடுவீர்கர்த்தாவே
கொல்லவரமெனக்குக் கொடுத்தருளவேணுமையா
(என்று) பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
அந்தமகாமுனியும அவர்மனதுதான்குளிர்ந்து
காளமகாமுனியுங் கடிகிமனமகிழ்ந்து
சந்தோஷப்பட்டாரே சரீரங்கள்பூரித்தார்
மெத்தமகிழ்ந்தாரே வேந்தரந்தமாமுனியும்
மனதிக்கிசைந்தபடி மன்னவனேசெய்கிறேனான்
சித்தத்துக்கேற்றபடி செய்வேன்நீஅஞ்சாதே
ஐவரையுங்கொன்றுநான் அதம்பண்ணிப்போடுகிறேன்
பஞ்சவரைக்கொன்று பாருலகையாளவைப்பேன்
ஐவர்தனக்காக ஆதிசிவன்வந்தாலும்
பஞ்சவரைக்காக்கப் பாரளந்தார்வந்தாலும்
நான்குமுகம்படைத்த நற்பிரமன்வந்தாலும்
வெற்றிமயிலேறும் வேலவர்தான்வந்தாலும்
தேவர்க்கதிபதியாம் தேவேந்திரன்வந்தாலும்

இவர்களைக்காப்போமென்று எமனவன்வந்தாலும்
எந்தவிதத்தாலும் இறக்கவகைபண்ணுகிறேன்
என்றுவரங்கொடுத்தார் எரிநாகங்கொண்டவர்க்கு
அப்போதிரியோதிரன் ஆனந்தமானானே
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே விஷநாகங்கொண்டவனும்
மனதுமிகப்பூரித்து மாநாகனபோய்நடந்தான்
காளமகாமுனியுங் கடுங்வனத்தில்வந்தார்

காளமகாரிஷி ஐவரைக்கொல்லநினைத்தது.

அப்போதுமாமுனியும் ஆலோசனைகள்பண்ணி
வேதாளந்தானைப்பிறக்க வேள்விதனைவளர்க்க
அக்கினிக்குண்டம்வெட்டி அனலைவளர்த்தானே
பாதாளக்குழியைவெட்டி பகவானைமூட்டினானே
மந்திரத்தாலேபல்லோ வாவென்றார்வேதாளத்தை
ஆயன்பெருமானும் அவ்வயணந்தானறிந்தார்
ஏழுலகாளனுங்கூற எம்பெருமானென்னசொல்வார்
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
பங்கும்பகையாளி பாதிகாள்தாயாதி
என்னும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
எந்தவிதத்திலேயும் இறக்கவகைபண்ணுகிறான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வரலாச்சே
செலவத்திரவியங்கள் சீரழிந்துபோகுதே
தோளிற்பூமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கணங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகுதே
நம்பினபஞ்சவர்கள் ராசாக்கள்மாளுகிறார்
நம்பினபேர்களைத்தான் நாமல்லோகாக்கவேணும்
கைமோசம்வந்துதென்று கரியமால்தானினைந்து

எம்பெருமாள் பஞ்சவரைக்காப்பதற்கு
எமபுரம்போனது.

அப்போதுஎம்பெருமாளாயரெழுந்திருந்து
வட்டமாங்கருடனேறி வருகிறார்மாயவனார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாபூத்தவனம்
இளமானைப்போலே யிசைந்துவருங்காவேரி
வடமலைரங்கர் வனங்களெல்லாந்தாண்டி
எமபுரந்தேடியே எம்பெருமாளோடிவந்தார்
எமனுக்கெதிராக எம்பெருமாள்வந்துநின்றார்

யமதர்மராஜனவன் எம்பெருமாளைக்கண்டு
கரியமாலைப்பார்த்து கடுகவெழுந்திருந்து
மாயன்பெருமாளை வந்துநமஸ்கரித்தான்
எமபடாளோடி எடுத்துவந்தார்சிம்மாதனம்
இட்டதோராசனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
அப்போதுஎம்பெருமாள் அரிராமர்தானெழுந்து
சிம்மாதனமேறி ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
வேர்க்கவிருவிருக்க வேந்தரவர்வீற்றிருந்தார்
அப்போதுயமனவன் ஆயரைப்பார்த்துரைப்பான்
எங்குவந்தீர்மாயவரே எனக்கரியச்சொல்லுமென்றார்
எதுவகையாக எம்பெருமாளிங்குவந்தீர்
வந்தகருமத்தை வாய்திறந்துசொல்லுமென்றான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
உன்னுடையமைந்தனல்லோ உரிமையுள்ளதன்மருமே
ஐவர்பஞ்சபாண்டவர் அநீதமாய்மாளுகிறார்
இறந்துவிடலாச்சு இயலானபஞ்சவர்கள்
மாண்டுவிடலாச்சு மகாராஜமன்னவர்கள்
செத்துவிடலாச்சு சீரானபஞ்சவர்கள்
பாவிகெடுத்தானே படுபாவிதிரியோதிரன்
கொடிக்குள்காளமாமுனியை நோக்கித்தபசுபண்ண
அந்தமகாமுனியும் வந்துஎதிரில்நின்றார்
கண்டுதிரியோதிரன் கடுகசரணம்பண்ணி
கைகட்டிவாய்புதைத்துக் கட்டமுகன்நின்றானே
அப்போதுமாமுனியும் அதிகமனமகிழ்ந்து
காளமகாமுனியும் கண்டுமனமகிழ்ந்து
என்னவரம்வேண்டும் எந்தனைக்கேளுமென்றான்
அப்போதிரியோதிரன் ஆணழகனேதுசொல்வான்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்வேண்டுமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதற்குப் பலத்தவரம்வேண்டுமென்றான்
உம்முடையகையாலே உத்தமரைக்கொல்லுமென்றான்
அந்தமுனிகேட்டு அப்படியேநல்லதென்று
வாக்குவரங்கொடுத்து வந்தானேயந்தமுனி
ஆழக்குழிவெட்டி அக்கினியைமூட்டிவைத்தான்
வேதாளமுண்டுபண்ணி மிக்கவனல்மூட்டிவைத்தான்
அக்கினிக்குழியிலே ஆங்காரவேதாளம்
பிறக்கும்படியாகப் பெருத்தவேள்விபண்ணுகிறான்
அதுபிறந்துதாமாதல் ஐவர்பிழையார்கள்
தோளிற்பூமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருகுலைந்துபோகுதே
நம்பினபஞ்சவர்கள் நாசக்கள்மாளுகிறார்

ஆகையாலும்மை அழைக்கவேவந்தேன்காண்
வேதாளம்பிறந்தாலே வேந்தரைக்கொன்றுவிடும்
மாண்டுமடிவார்கள் மகாராசர்பஞ்சவர்கள்
செத்துமடிவாரே சீரானபஞ்சவர்கள்
என்றுரைத்தார்மாயன் எமனுடனுக
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயருக்கேதுரைப்பான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவர்காலப்உள்ளமட்டும்
உம்மையேநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறார்
கார்க்கக்கடனுனக்கு கரியமாலென்றுசொன்னார்
அப்போதுமாயவனர் அறமேவமனமகிழ்ந்து
மாயவனர்தான்கேட்டு மனதுபெரிதுகந்து
கூடவருவீரோ கொப்பெனவேபோகவென்றார்
ஆயருரைகேட்டு அப்படியேவாரேனென்றார்

எம்பெருமாளும் எமதர்மராஜனும் பஞ்சவரைக் காக்கவருதல்.

மாயவரும்எமனுமே வருகிறார்வனந்தனிலே
எமபுரத்தைவிட்டுமெல்லோ இருவருமாய்வாரார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான் தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இருவருமாய்வந்தார்கள்
காளமகாமுனிவருட கானகத்தில்வந்தார்கள்
எமன்கிடாமேலே எம்பெருமாள்கெருடன்மேலே
அந்தவனத்திலே வந்தாரிருவர்களும்
வந்துஇறங்கினர் மகாமுனிவர் தனவனத்தில்

எம்பெருமாள் தடாகம்உண்டுபண்ணல்.

ஆயர்பெருமாளும் அங்ஙனமேஏதுசெய்தார்
மாயமாய்ப்பொய்கையொன்று மாயவரும்உண்டுபண்ணர்
அகலநிகளமாய் ஆறுயோசனைகாதம்
பத்துயோசனைதூரம் பாரளந்தாருண்டுபண்ணர்
தாமரைப்பொய்கைதனை சாமிபவருண்டுபண்ணர்
அலர்தாமரைப்பொய்கை அங்ஙனவேயுண்டுபண்ணர்
அல்லியுடன்தாமரையும் ஆம்பலுமுண்டாச்சு
அழகானபொய்கையிலே அதிசயமென்னவென்றல்
அல்லியுங்கொட்டியுமே அதில்நெருங்கவுண்டாச்சு
அந்தாத்தாமரை அக்குளத்திலுண்டாச்சு
நாணலுங்கோரையுமே நடுவேயதிலுண்டாச்சு
அக்குளத்துக்கரைமேலே அழகானபூமரங்கள்
பல்லிகைமுல்லையுமே மாதளையுமுண்டாச்சு
நல்லதொருபூமலரும் நற்றூய்மையுமுண்டாச்சு
கொன்றைகுருக்கத்தி கோங்குமுல்லையுண்டாச்சு
ஆற்றலரிமந்தாரை அழகானசண்பகங்கள்

ஆலஞ்செடிமுளைத்து அரசுபேஉண்டாச்சு
வேம்புமரசுமங்கே வேணதுமுண்டாச்சு
பாளைமணம்வீசும் பன்னீருபூக்கும்
வண்ணவண்ணப்பூமரங்கள் மாவிருட்சமுண்டாச்சு
கமுகுகுலைசரியும் கஸ்தூரிமணம்வீசும்
வேரிற்பலாப்பழங்கள் வெடித்துவிழுந்திருக்கும்
மாம்பழமெங்கெங்கும் வனத்திற்பழுத்திருக்கும்
பார்த்தவிடங்களெல்லாம் பழங்கள்பரிமளிக்கும்
கண்ட இடங்களெல்லாம் கனிகள்மணம்வீசும்
இப்படியாவுண்டுபண்ணூர் எம்பெருமாள்மாயவரும்
காலாகாலங்களிலே கட்டினகுளம்போலே
ஆயன்பெருமா ளதிசயமாயுண்டுபண்ணூர்

எமனும்பெருமாளும் வேறுவடிவுகொண்டது.

எமதர்மராசனவ ரென்னவடிவெடுத்தார்
எமபுரத்தையாளுகிற எமன்குயிலானூர்
எம்பெருமாள்மாயவனு ரென்னவடிவானூர்
புள்ளிமான்குட்டியைப்போல் பொன்மான்வடிவெடுத்தார்
அந்தநல்லபொன்மானி னதிசயத்தைச்சொல்லுகிறேன்
தங்கமுருக்கியே தரையிற்கவிழ்த்தாப்போல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டாற்போல்
மேகத்திலேயெழும்பும் மின்னலதுபோலே
ஆரத்திலேயெழும்பும் சோதியதுபோலே
எட்டுநாள்சென்றகுட்டி யேந்துங்குழந்தையைப்போல்
மான்குட்டிபோலாக மாயவனூர்வடிவெடுத்தார்
பஞ்சவர்கள் தானிருக்கும் பர்னசாலைதேடிவந்தார்
முன்றடுக்குபர்னசாலை எதிராகவந்துநின்றூர்
நடந்துவிளையாடி ராஜாத்திமுன்னேவந்து
துள்ளிக்குதித்துதங்கே துரோபதையாள்முன்னூலே

தருமரை துரோபதை மான்பிடித்துத்
தரச்சொன்னது.

கண்டாளேபாஞ்சாலி கானகத்துமானதனை
மானழகைப்பார்த்தாளே மயிலனையாள்துரோபதையும்
கண்டுமனமகிழ்ந்து கட்டழகிதுரோபதையும்
பார்த்துமனங்குளிர்ந்தாள் பஞ்சவர்கள்தேவியவள்
மான்பிடிக்கவேண்டுமென்று மனதில்நினைத்தோமே
ஆர்பிடித்துத்தருவார்க ளழகான இம்மானை
தருமரைக்கேட்போமென்று தானெழுந்துவோடிவந்தாள்
தருமரருகேவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டாள்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
வணங்கிநமஸ்கரித்தாள் மாது துரோபதையும்

தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வணங்குமுடியாளே மங்கைதுரோபதையே
எதுக்குபெண்ணேநீ என்னவந்துதெண்டனிட்டாய்
பின்னையுந்தெண்டனிட்டாய் பிள்ளைகளைப்பெற்றிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
தெண்டனிட்டகாரியத்தைத் தெரியவுரையுமென்றார்
வந்துபணிந்ததொரு வயணத்தைச்சொல்லுமென்றார்
என்றுமவர்கேட்க ஏதுசொல்வாள்துரோபதையும்.
ஏதோஒருமான்வந் தெதிரிலேவருகிறதே
தங்கமுருக்கியே தரையிற்கவிழ்த்ததுபோல்
மேகத்துமின்னலைப்போல் மேகமதுதோணுகுது
தூரத்துச்சோதியைப்போல் தோணுகுதுஎந்தனுக்கு
உச்சிதமாகவே உருகுதுஎந்தனுக்கு
அதிசயமாய்த்தோணுகுது அந்தமானெந்தனுக்கு
மானெனக்குமேவேணுமையா வனத்தில்விளையாட
விளையாடவெந்தனுக்கு வேணும்பிடித்துத்தாரும்
மான்பிடித்துத்தருவீரென்று மன்னவரேதெண்டனிட்டேன்
எந்தவிதத்தாலும் எனக்காகப்பிடியுமென்றாள்
பிடியும்பிடியுமென்று பின்னொருக்கால்தெண்டனிட்டாள்
மான்பிடித்துதாருமென மற்றொருகால்தெண்டனிட்டாள்
அப்போதருமலிங்கம் ஆணழகர்தான்கேட்டு
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
ஆர்வளர்த்தமானோயிது அரியேனிளமயிலே
எவர்வளர்த்தமானோயிது யேதுமறியேனே
இந்தவனத்தி லிருக்கும்பெரியவர்கள்
தவத்திற்பெரியவர்கள் சன்னியாசியானவர்கள்
வரத்திற்பெரியவர்கள் மகாரிஷியானவர்கள்
யோகத்திற்றனிருக்கும் யோக்கியமுள்ளவர்கள்
ஆர்வளர்த்தமானோயிது அரியேனேஆரணங்கே
எவர்வளர்த்தமானோயிது ஏதுமறியேனே
மனிதர்வளர்த்ததனால் வந்ததுநம்மருகே
அல்லாதேயாமானால் அருகில்வந்துநிற்காது
வளர்த்தமானதினால் வந்துவிளையாடுகுது
மானைப்பிடித்தாலே வஞ்சமோசம்வந்துவிடும்
பெண்புத்திகேட்டுமோசம் போனவர்கள்மெத்தவுண்டு
பெண்ணாலேகெட்டவர்கள் பூமியிலேமெத்தவுண்டு
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
ஸ்ரீராமர்பட்டதொரு சேதிபோலாகுமிது
அரிராமர்பட்டதொரு அலைச்சல்போலாகுமிது
ஆகையாற்பெண்மயிலே அம்மானைப்பிடியென்றாய்
அதுகேட்டுதுரோபதையாள் ஆரணங்கேதுசொல்வாள்

அந்தக்கதையெனக்கு ஆண்டவரேசொல்லுமென்றாள்
மாயவனார்பட்டதொரு வரலாற்றைச்சொல்லுமென்றாள்
எம்பெருமாள்பட்டதொரு இடுக்கங்கள்சொல்லுமையா

தருமர் துரோபதைக்கு மான்பிடிக்க லாகாதென்று ஸ்ரீராமர் கதையைச்சொன்னது.

அப்போதுதர்மலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
ஆனாற்கேள்பெண்ணே அவர்கதையைச்சொல்லுகிறேன்
ராமருமலக்ஷ்மணரும் நற்சீதைதன்னுடனே
கைகேசிசொற்படிக்கு கானகத்தேபோயிருந்தார்
தென்னிலங்கைராவணனும் சீதையழகுகண்டான்
சூர்ப்பநகைசொல்லாலே துள்ளிப்பதைபதைத்து
இலங்கைவிட்டுமவன் ஏகிநடந்தானே
சீதையவளைச்சிறையெடுக்க தென்னிலங்கைவிட்டுவந்தான்
கண்டானே மூவர்களைக் கானகத்தில்ராவணனும்
ஜானகியைக்கொண்டுபோகச் சமையமில்லையென்றவனும்
உற்றுநினைத்தானே ஒருகோடிபுத்திகளை
இருந்துநினைத்தானே யெண்ணமுற்றசிந்தையிலே
ஆலோசனைபிரிந்து அந்தப்படுபாவி
மாரீசனையழைத்து மானாகச்செய்துவிட்டு
போய்நில்லும்சீதையிடம் பொன்மானே யென்றுரைக்க
பொன்மானதுகேட்டுப் போகமாட்டேனென்றுசொல்லும்
மாட்டேனென்றசொல்லை மாபாவிதான்கேட்டு
அவ்வளவிலம்மானை அடித்தான்பிரம்பாலே
அடிபட்டுஓடுகுது அந்தவனந்தனிலே
மாளவனுப்பிவைத்தான் மாரீசப்பொன்மானை
சீதையிருக்குமிடந் தேடியேஓடிவந்து
மயிலனையாள்முன்னேவந்து மானும்விளையாடும்
கண்டாளேசீதையரும் கானகத்துமானதுவை
ஸ்ரீராமர்முன்னேவந்து தேவியருமேதுசொல்வாள்
மானழகைக்கண்டேனதைத் தான்பிடித்துதாருமென்றாள்
மான்பிடித்துதாருமென மலரடியைத்தெண்டனிட
ஸ்ரீராமர்தான்கேட்டுச் சிந்தைமனங்கலங்கி
மான்வந்தமாயமெலாம் மாயவனார்தாமறிந்து
மானல்லபெண்ணேயிது மாயமானென்றுசொன்னார்
அல்லவென்றார்கேளாமல் அனேகந்துயரமுற்றாள்
துயரமுற்றாளென்றுசொல்லி சுவாமிமனதிலெண்ணி
ராமருமலக்ஷ்மணரை நலமாகத்தானழைத்து
மான்பிடித்துநான்வருவேன் வாரமட்டுந்தம்பியரே
சீதையருகாகத் திறமாயிருப்பாயென
இளையபெருமாளும் இவ்வார்த்தைதான்கேட்டு
அப்படியேகாத்திடுவேன் அண்ணாநீவேபோவென்றான்

அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமர்போகலுற்றார்
அம்புவில்லுங்கைபிடித்து அவ்வனத்திலூடாக
மானைத்துரத்தியே மாயவனார்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் உன்னுடல்வேசமதாய்
பத்துதலையொளித்து பத்திரண்டுகைமறைத்து
நல்லவொளிமறைத்து ராவணன்பேர்மறைத்து
ஜங்கமனைப்போலேயல்லோ சண்டாளன்வாரானே
பண்டாரம்போலேயல்லோ படுபாவிவாரானே
வனமாய்வனந்தாண்டி வந்தானேபர்னசாலை
இருவரிருந்தசாடை யிவனறிந்தானப்போது
மானைநினைத்தானே மாபாவிசண்டாளன்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
மான்பிடிக்கப்போனதொரு மாயவனாரேதுசெய்தார்
அந்தமான்தன்கையிலே அகப்படாத்தன்மையினால்
கையினால்வில்வளைத்துக் கணைகளைதான்தொடுத்தார்
அற்புதனைத்தொடுத்து அம்மானையெய்தாரே
ராட்சதமான்விழுந்து லட்சுமணாவென்றலர
அந்தமொழிகேட்டு அழகானசீதையரும்
மான்கையிலுங்களண்ணர் மடிந்தாரெனவுரைத்தாள்
இளையபெருமாளும் எழுந்துநடந்தாரே
ராமரைத்தேடியே லட்சுமணர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் சீதையருகில்வந்து
பிச்சையென்றுகேட்கையிலே அச்சமில்லாதள்ளிவந்தாள்
கூசாமல்ராவணனுங் கொண்டுசென்றான்தென்னிலங்கை
சீதைசிரைபோனபின்பு திருமாலவர்பார்த்து
நல்லதென்றுசொல்லியல்லோ நடந்தாரிருவருமாய்
சவரியைக்கண்டுமல்லோ சந்தோஷம்பண்ணூரே
அனுமாரைக்கண்டுமே அவர்களுறவாகி
அனுமாருரவாலே அங்கதனுஞ்சுக்ரீவனும்
மெத்தவுறவானார் வேந்தரிருவர்களும்
வாலியைக்கொன்றபின்பு வானரவீரருக்குள்
சுக்ரீவனுக்குபட்டஞ் சூட்டிக்கடல்தனிலே
வாராவதிகட்டியல்லோ வந்தார்கள்தென்னிலங்கை
ராவணன்கும்பகர்னன் ராட்சத இந்த்ரசித்தன்
மூலபலச்சேனை முடிந்ததுராமர்கையால்
சேனைகளைக்கொன்றல்லோ சீதைசிறைமீட்டு
புட்பரதமேறி புண்ணியர்கள்வந்தாரே
அயோத்தியாபுரியதனில் அரிராமர்வந்துவிட்டார்
சீதாசமேதராக சிம்மாதனமேறி
தம்பிமார்மூவர்களுந் தானுங்கொலுவிருந்தார்
நீதிதவறாமல் நெறிப்படியேயாண்டிருந்தார்

ஐம்பத்தாறுதேசமதை ஆண்டாரேஒருகுடைக்கீழ்
அந்தகதையாகும் ஆரணங்கேநீர்கேளும்
சீதையம்மாள்பட்டதொரு சேதியிதுவாகும்
மானைப்பிடிக்கவே மாட்டேனெனவுரைத்தார்

மானைப்பிடித்துத் தரவில்லையென்று துரோபதை
யம்மாள் பிணங்கினது.

தக்கபுகழுடைய தருமரிவையுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடைதுரோபதையும்
ஏதேதுசொன்னாலும் இரங்காமனதுடையாள்
வரும்விதியறியாளே மாதுகருங்குழலும்
எந்தவிதத்தாலும் இந்தமானைவேணுமென்றாள்
மானெனக்குவேண்டுமென்று மாதுபிணங்கிநின்றாள்
அறவேயனுஞ்சலித்து அங்கேதுயரமிட்டாள்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
சாயம்புமன்னவனார் தானுமங்கேதுரைப்பார்
வெற்றிமதயானை வீமரைத்தானழைத்து
வீமாமதகரியே வில்வேந்தேஇப்போது
மான்குட்டிவேணுமென்று மாதுபிணங்கினதால்
குட்டிமானைப்பிடித்துக் கொப்பெனவேவாருமையா
காட்டுமானைப்பிடித்துக் கடுகெனவேவாருமையா
ஓடிப்பிடித்துநீ ஒருநொடியில்வாருமென்றார்

வீமன் மான்பிடிக்கப் போகிறது.

அண்ணருரைகேட்டு ஆங்காரவீமனவன்
இதுபோதுமென்று எழுந்தானேவீமனவன்
சல்லடந்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசங்குவிட்டு
ஆயுதங்கையைப்பிடித்து ஆணழகன்போகலுற்றான்
மானைத்தொடர்ந்தானே மதவீமராசாவும்
துள்ளிப்பதைபதைத்துச் சுருக்காய்வருவாராம்
வீமரைக்கண்டுமல்லோ மெள்ளநடப்பாராம்
அப்போமதவீமன் ஆங்காரங்கொண்டவனும்
மானைப்பிடிக்க மாயவனார்பின்தொடர்ந்தான்
எட்டிப்பிடிக்க எதிரில்வருவானும்
பதுங்கிவருவானும் பாரமதவீமன்
ஐம்பதிங்காதவழி அனேகதூரந்தானடந்தார்
கண்ணுக்குதெரியாமல் கடுகவேயேகிவிட்டார்
தேடித்திரிந்தானே சீரானகானகத்தில்
என்னதுமெண்ணுகிறான் இயலானவீமனவன்
அண்ணல்தருமருக்கும் ஆரணங்குதுரோபதைக்கும்
என்னவென்றுசொல்வேனு னிந்தவதிசயத்தை
எத்தனைதூரம்வந்தேன் இம்மானைக்காணேனே

போனவிடமறியேன் போயிருக்குந்தாவரியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
மாயமான்போனதொரு வகையொன்றுணறியேன்
என்றுமனங்கலங்கி எண்ணுகிறன்கோடிசிந்தை
நின்றுவிசாரமிட்டு நெடுமூச்செறிந்தானே
விடுவிடுநேரமங்கே வெயிலானவேளையிலே
நல்லஉருமமது நாவுவறளுகுது
தண்ணீருந்தாகவிடாய் தனிமையாய்க்கொள்ளுகுது
நாவுவரட்டுகுது நல்லசலங்காணுமல்
குடலைப்பிரட்டுகுது குடிக்கசலங்கிட்டாமல்
என்னசெய்யப்போறேனென்று ஏங்கிநடந்தானே

எம்பெருமாள்வீமராசனை விஷத்தண்ணீர்குடிப்பித்து
கொல்லுகிறது.

இதுதான்சமயமென்ன எண்ணிதிருமாலும்
மாணுயிருந்தவரும் மயிலாய்வடிவெடுத்தார்
மயிலாய்வடிவெடுத்து மரத்தின்மேலேறினரே
எமன்குயிலாகி யிருந்தானேமாயரண்டை
எமன்குயிலானர் எம்பெருமாள்மயிலானர்
மயிலுங்குயிலுமே வனந்தனில்கூவுகையில்
அந்தகுரல்கேட்டான் அழகானவீமனுமே
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலும்மயிலிருக்கும்
தேடியேவந்தானே சீரானபொய்கையண்டை
தாமறைபொய்கை தடாகத்தைக்கண்டானே
தாகவிடாய்தீர்ந்து தமயரண்டைபோவமென்ன
தண்ணீர்தடாகத்திலே இரங்கினன்தார்வேந்தன்
அந்தரமாய்மாயவரும் அங்கொருவரேதுசொல்வார்
ஆரடாதப்பியரே அள்ளிசலமுண்கிறவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தகுளமென்னுதடா இந்தனதியென்னுதடா
இந்தகுளத்திலே இறங்கிசலமுண்ணுதே
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அந்தரமாய்பேசுகது ஆரென்றுதெரியவில்லை
அந்தரதேவதையோ ஆகாசதுற்கைகளோ
மந்திரதேவதையோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்திண்ணும்பூச்சுகளோ
ஆரென்றுநானறியேன் அறியவுரையுங்கள்
வெற்றிமதயானை வீமனவன்கேட்கவுமே
அந்தசமயத்தில் ஆபரவரேதுசொல்வார்

ஆராலுந்தனக்கேன் அப்புறத்தேபோவென்றார்
அப்போதுவீமனவன் அவ்வார்த்தைக்கேதுசொல்வான்
தாகவிடாய்கொண்டு தண்ணீர்குடிக்கவந்தால்
தண்ணீர்குடியாதே யென்றுமேசாற்றுவரோ
தடாகமிருக்கையிலே தண்ணீர்களைதீராமல்
குடியாமற்போவேனோ கொற்றவரேசொல்லுமென
தண்ணீர்குடிக்கவென்றால் தாரணியிற்பயிர்களுக்குள்
வாடாதபயிருமேது வருத்தமானபாரமேது
அதிசயமானவார்த்தை அறிந்தாலுரையுமென்றார்
அப்போதுவீமனவன் அவ்வயணமறியாமல்
தெரியாமல்வீமனவன் தீர்த்தம்புசித்துவிட்டான்
தாகக்களையாலே தண்ணீர்குடித்துவிட்டான்
காளையந்தவீமனுக்கு கண்ணைச்சொருகுதே
தலையைச்சுழற்றுதே தாமமுடியானுக்கு
உடம்புபறக்குதே உத்தண்டவீமனுக்கு
மரத்தடியிற்பள்ளிகொண்டான் மாலைமுடியானும்
மறந்துபடுத்தானே மதகரிவீமனவன்
தன்னைமறந்துமல்லோ தார்வேந்தன்பள்ளிகொண்டான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
காலனையெச்சரித்து கடுகவுயிர்வாங்குமென்றார்
ஏமனைதானழைத்து யிவனுயிரைவாங்குமென்றார்
அப்போதுஏமனவன் அவசரமாயோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினனே
சூலத்தால்குத்தியே துடிக்கவுயிர்வாங்கினனே
பாசத்தால்கட்டியே பதைக்கவுயிர்வாங்கினனே
குளத்தங்கரையோரம் குளிர்ந்தநிழல்தனிலே
பொய்கைகரையோரம் போர்வீமன்மாண்டுவிட்டான்
மாண்டுபடுத்தானே மதவீமன்குளக்கரையில்
செத்துபடுத்தானே சிரானவீமனுமே
இப்படியாக யிவனிருக்கும்வேளையிலே

மான்பிடிக்கப்போனதொருவீமனைக்காணோமென்று
தருமராஜர்புலம்புகிறது.

தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
காயம்புமன்னர் தருமரவரேதுசொல்வார்
மான்பிடிக்கப்போனகொரு மன்னவனைக்காணேனே
இந்நேரமாச்சுதே இன்னம்வரக்காணேனே
மானைப்பிடிக்கையிலே வளர்த்தவர்கள்கண்டாரோ
ஆர்கண்டெதிர்த்தாரோ அமரதுசெய்கிறாரோ
எவர்கொன்றுபோட்டாரோ ஏதுமறியேனே
மண்ணாக்கிகல்லாக்கி மரமாக்கிவிட்டாரோ
கல்லாக்கிமுள்ளாக்கிக் கானகத்திற்போட்டாரோ

செத்துமடிந்தானோ யெமன்பாதம்சேர்ந்தானோ
மாண்டுமடிந்தானோ வைகுந்தம்சேர்ந்தானோ
காணவும்பெறேனோ கட்டழகன் தம்பியரை
பார்க்கவும்பெறேனோ பாரமதகரியை
காணாமல்தம்பியரைக் கலக்குதேதேகமெல்லாம்
பாராமல்தம்பியரைப் பதைக்குதேதன்மனது
காளையருச்சுனரே கடுகியேபோய்வாரும்
பார்த்துவா அர்ச்சுனரே பாரமதவீமனை நீ
தேடியழைத்துநீ சீக்கிரத்தில்வாருமென்றார்
காளைமதவீமனை நீ கண்டழைத்துவாருமென்றார்
என்றுமவர்சொல்லி யிருந்தாரொருவிதமாய்

அருச்சுனமகாராஜன் தருமர்சொல்லைக்கேட்டு வீமனைத் தேடிப்போனது.

குறையறுமன்னன் அர்ச்சுனராஜனை
தருமனாக்கேட்டுத் தானெழுந்தார்விஜயன்
சல்லடைக்கவிட்டுமெல்லே தட்டுவரிந்துகட்ட
தட்டுவரிந்துகட்டி தாமரைப்பூச்சொருகிட்டு
குந்திமிதிக்கால்களுக்குக் குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்தயப்பூச்சல்லடமாம்
நீண்டுமிதிக்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
பில்லிமுகதாடு பிருதெடுத்தொட்டியாணம்
கச்சைவரிந்துகட்டி கருக்கச்சைசொருகிட்டு
பாங்குசொருகினேன பார்த்தனிடப்புறத்தே
கத்திசொருகினேன காலைவலப்புறத்தே
சிங்காணிவில்லெடுத்து சிறுகாணிதான்பூட்டி
அன்னருடபாதம் அதுவணங்கித்தெண்டனிட்டு
போகவிடைதாருமென்றான போர்விஜயக்கோமானும்
தக்கப்புகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்திமெடுத்தவரும மார்போடேகொண்டணைத்து
காளையருச்சுனரே கட்டழகாநீகேளும்
வனத்திலேபுகுந்து மனனவனைநீதேடி
கண்டழைத்துவிமனைநீ கடுகவேவாருமென்றார்
போய்வாருமெனறுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தாரே விஜயபெருமாளும்
வாராளே அர்ச்சுனனும் வனமாய்வனந்தாண்டி
கானகந்திலேபுகுந்து காளையரைத்தேடுகிறான்
எங்கெங்குந்தேடினான இலியவிடமாராய்ந்தான்
அந்தவனந்தனிலே அண்ணரைக்காணாமல்
மற்றுமொருவனத்தில் மாவிஜயன்தேடுகிறான்
இன்னமொருவனத்தில் இளவிஜயன்தேடுகிறான்

அண்ணனைத்தேடி அநேக தூரம்வாரானே
காட்டிலேதேடியல்லோ களிப்பேவாரானே
ஆறுகுளமுதுமன்னன் அருச்சுனராசனுக்கு
தண்ணீர்களங்கள் தாகவிடாய்கொண்டு
தாவுவரட்டுது நல்விஜயன் அர்ச்சுனற்கு
மெத்தக்களைத்தானே வேர்வைகளிருந்திடவே
அப்போதருச்சுனனும் ஆனமுகனோடுசொல்வான்
இந்தவகைதனிலே எங்கும்ஜலங்கிட்டவில்லை
தண்ணீர்களைப்பிலே தாகவிடாயானதினால்
தண்ணீர் தண்ணீரென்று தவித்துப்புலம்புகிறான்
இப்படியாக இவனிருக்கும்வேளையிலே

மாயவனார் அருச்சுனராசனை விடுவேர்க் கொப்பித்துச் சொல்லுகிறது.

எம்பெருமான்மாயவரும் ஏதுசெய்தாரக்கேரம்
மயிலாங்குயிலாக வனத்திலேகூவுகிறார்
அருச்சுனன்காதிற்கேட்க அவ்வனத்திற்கூவுகிறார்
அந்தக்குரலோசை அருச்சுனனுந்தான்கேட்டு
குயிற்குரல்கேட்டான் கோபாலர்மைத்துனனும்
அவ்வோசைதான்கேட்டு அருச்சுனனுமேதுசொல்வான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமவன்சொல்லி யகிடைக்கலுற்றான்
அந்தவிடம்போகவென்று ஆராய்ந்துதேடிவந்தான்
குயிலிருக்குமிடந்தனிலே கொற்றவனும்வந்தானே
மயிலிருக்குமிடந்தனிலே மன்னவனும்வந்துநின்று
சுற்றுப்பார்த்தானே ஒளிபிறந்தவண்ணமேலே
பார்த்தவிடங்களெல்லாம் பச்சென்றுதானிருக்கும்
கண்டவிடங்களெல்லாம் கமகமென்றுபூமணக்கும்
தாமரைப்பொய்கைகளுஞ் சாலைகளுஞ்சோலைகளும்
ஆலவிருட்சத்தின்கீழ் அண்ணர்பள்ளிகொண்டதுவும்
வெற்றிமதயானை வீமனைக்கண்டானே
கண்டுமனமகிழ்ந்தான் காளையருச்சுனனும்
பார்த்துமனமகிழ்ந்தான் பார்த்திபனருச்சுனனும்
உற்றுப்பார்த்தானே உள்ளங்குளிர்ந்தானே
நின்றுவைசாமி நினைத்தானேகோடிபுத்தி
அண்ணர்தருமருமே அங்கேமனஞ்சலித்து
வீமனைக்காணாதே மெத்தமனஞ்சலித்து
தம்பியைக்காணாமல் தவித்துப்புலம்புகையில்
அங்கேதருமரவர் ஆபாசப்பட்டிருக்க
இங்கேமதவீமன் இப்படித்தூங்குறானே
மாணும்பிடியாமல் மரத்தடியில்தூங்குறானே

தண்ணீர்குடித்துமல்லோ தாகமுந்தீர்ந்தபின்பு
அண்ணரைத்தானெழுப்பி அழைத்துநாம்போவோமென
தாமரைப்பொய்கையிலே இறங்கினான்தார்வேந்தன்
அப்போதுமாயவரும் அருச்சுனரைத்தான்பார்த்து
ஆயர்பெருமாளும் அந்தரத்திலேதுசொல்வார்
ஆரடாயென்குளத்தில் அள்ளிஜலமுண்கிறவன்
எவனடாஎன்குளத்தில் எடுத்துஜலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்காதேயென்குளத்தில்
அள்ளிஜலமுண்ண அதிசயஞ்சொல்லுமென்றார்
தாகந்தணியவென்றால் சந்தேகஞ்சொல்லுமென்றார்
அப்போதருச்சுனனும் அவ்வார்த்தைக்கேதுரைப்பான்
என்ன அதிசயமோ எந்தனுக்குச்சொல்லுமென்றான்
எம்பெருமாள்மாயவரும் ஏதுசொல்வாரர்ச்சுனற்கு
வாடாப்பயிருமேது வையகத்தில்பாரமேது
இவ்வார்த்தைசொன்னா லிறங்கிசலமுண்ணுமென்றார்
ஆணலழகுமன்னன் அர்ச்சுனராசதுரை
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுமேதுசொல்வான்
ஆர்காணும்பேசுரது அந்தரத்திலேயிருந்து
எவர்காணும்பேசுரது எங்கையோதெரியவில்லை
வேண்டிவிடாய்த்துநான் வோர்வைமிகவொழுக
தண்ணீர்விடாயாகித் தாகத்துக்குண்ணவந்தால்
வேண்டாமெனமறித்துத் தீண்டாதெனவுரைத்தார்
எதிரிட்டுவந்தாலே இருதுண்டாய்போட்டிடுவேன்
கண்டித்துப்போட்டிடுவேன் கண்ணில்தெரியடாநீ
எதிரிலேநிற்கவேணும் என்சண்டைபார்க்கவேணும்
சரியாகநின்றல்லோ சண்டைபண்ணிப்பார்க்கவேணும்
என்றதுபேசியே இறங்கிசலங்குடித்தான்
தாகவிடாய்தீரத் தண்ணீர்குடித்தானே
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுழற்றுகுது
அப்போதுமயக்கமல்லோ அதிகமயக்கமாகும்
கஞ்சாமயக்கம் கனமயக்கமாகுது
அபினிமயக்கமல்லோ அவனைச்சுழற்றுகுது
தள்ளாடிவாரானே தாமமுடியானும்
ஆணலழகுமன்னன் அருச்சுனராசனவன்
எண்ணுதுமெண்ணுகிறான் இந்திரன்குமாரனுமே
நினையாதுநினைக்கிறா நீலவர்னன்மைத்துனரும்
ஆரோதெரியாது அந்தரத்திற்பேசினார்கள்
எவரோதெரியாது எந்தனுடன்சொன்னாரே
தண்ணீர்குடியாதேயென்று சமர்த்துகள்பேசினாரே

தீர்த்தங்குடியாதேயென்று வார்த்தைபலசொன்னாரே
அவ்வார்த்தைதள்ளினா னள்ளியேதீர்த்தமுண்டேன்
சொன்னசொல்தனைமறுத்துச் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
உண்டபொழுதே உடம்பைபிரட்டுதையோ
தலையைசுழற்றுதையோ தருமருக்காருரைப்பார்
அண்ணற்கும்தம்பியற்கும் ஆரணங்குதுரோபதைக்கும்
இந்தவிசேஷமதை எவர்கள்போய்சொல்லுவார்கள்
செத்தவிசேஷமல்லோ சேதிபோயசொல்வாரார்
மாண்டவிசேஷமது மறுவார்த்தைசொல்வாரார்
என்றுமவன்சொல்லி ஏகிவழிநடந்தான்
தள்ளாடித்தத்தளித்து தானேநடந்துவந்து
அண்ணாருக்காக அருச்சுனன்வந்துநின்றான்
வீமருக்காக விஜயனும்வந்துநின்றான்
கண்ணுறக்கம்போலவே கடுகிவந்துபடுத்தானே
எம்பெருமான்மாயவரும் இதுதான்சமயமென்று
காலனையெச்சரித்தார் கரியமால்பொட்டெனவே
அருச்சுனன்தன்னுயிரை அதிவிரைவாய்வாங்குமென்றார்
அப்போது எமனவர் அதிவேகமாகவந்து
சூலங்கொண்டுகுத்தியே பாசங்கொண்டுகட்டினானே
பதைக்கஉயிர்மாய்த்தான் பார்த்திபஅருச்சுனனை
இப்படியாக இவன்மாண்டிருக்கையிலே
தக்கபுகழுடைய தருமருடசேதிசொல்வோம்

வீமனைத்தேடப்போன அருச்சுனனும் வீமனும் இன்னம் வந்துசேரவில்லையென்று தருமர்புலம்புகிறது.

அருச்சுனன்போனபின்பு அழகானதருமரவர்
மனதுகலங்கியே மன்னவருமேதுசொல்வார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
இந்நேரமாச்சுதே யின்னம்வரக்காணேன்
நாமத்தழகா நகுலாநீவாருமென்றார்
தக்கபுகழுடைய தருமரழைக்கவேதான்
தாமமுடியான் நகுலனுமோடிவந்து
அண்ணரெதிரேவந்து அடிவணங்கிதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கட்டழகன்னேதுசொல்வான்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
அழைத்தகாரியத்தைநீ ரண்ணாவேசொல்லுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகர்தருமலிங்கம்
கண்ணீர்ததும்பிடவே கட்டழகரேதுசொல்வார்
வீமனைத்தேடியே வில்விஜயன்போனானே
மான்பிடிக்கபோனதொரு மதவீமனைக்காணேன்
தேடியேபோனதொரு தேர்விஜயனைக்காணேன்
போனவிடமறியேன் போய்ப்பதுங்குந்தாவறியேன்

தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
ஆரோடேசண்டை அமாதுசெய்கிறாரோ
எவரோடேசண்டை எதிர்த்துப்போர்செய்கிறாரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைசெய்தாரோ
கண்டுவதைத்தாரோ கண்டதுண்டமாக்கினரோ
செத்ததுவும்இருப்பதுவும் சேதிதெரியவில்லை
மாண்டதுவும்பிழைத்ததுவும் வார்த்தைதெரியவில்லை
சந்தனமிருபுயத்தை சரியவெட்டிபோட்டாரோ
குங்குமமிருபுயத்தை குலையவெட்டிபோட்டாரோ
மலையபருவதமே வாழ்மலையேகுஞ்சரமே
காணவும்போரேனோ கட்டழகர்தம்பியரே
பார்க்கவும்போரேனோ பாவியென்கண்ணாலே
இன்னமொருவேளை யினிகாணப்போறேனோ
இருவரையுந்தேடியே இட்டுவருவாயே
போநீரோதம்பியரே புத்தியுள்ள கண்மணியே
அண்ணனுரைகேட்டு ஆணழகனுஞ்சொல்வான்
அஞ்சிப்புலம்பாதே ஆயாசமாகாதே
ஆரோடேசண்டை அமாதுசெய்தாரோ
எவரோடேசண்டை எதிர்த்துப்போராடினாலும்
சண்டையதுஜெயித்துச் சடுதியிற்கொண்டுவாரேன்
அமரதுநான்ஜெயித்து அவர்களைக்கொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இப்போதே ஆராய்ந்து
ஓடியழைத்து ஒருநொடியில்வாரேனென்றான்
தேடியழைத்து சீக்கிரத்தில்வாரேனென்றான்

நகுலன் தருமராயர் சொற்படிக்கு வீமனையும்
அருச்சுனனையும் தேடிப்போனது.

கடுகவெழுந்தானே கட்டழகன்சீர்நகுலன்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூசல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூசல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூசல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டுவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டித் தாமரைப்பூச்செருகிட்டு
பாக்கெடுத்துச்சொருகினானே மன்னனிடப்புறத்தே
ஆயுதத்தைதானெடுத்து அண்ணனுக்குத்தெண்டனிட்டு
போகவிடைதாருமெனப் போர்மன்னன்கைதொழுதான்
தக்கபுகழுடைய தருமர்மனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
நாமமுடியானே நகுலாஎன்கண்மணியே
போனவனைத்தேடியே பொறுமையுடன்நீபார்த்து
சென்றவனைத்தேடி சீக்கிரமாயாராய்ந்து

காளையிருவரையுங் கண்டழைத்துவாருமென்றார்
வீமனருச்சுனரை விரவிலழைத்துவாரும்
போய்வாருமென்னப் பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தனநகுலனுமே
வாரானேசீர்நகுலன் வடக்கெழுந்தசூரியன்போல்
ஆயுதத்தைக்கைப்பிடித்து அண்ணர்களைத்தேடிவாறான்
தேடியேவாரானே சீரானகானகத்தில்
ஆரணியமெங்குந்தேடி அண்ணர்களைக்கூவினான்
அங்கேயுங்காணாமல் அப்பாலேபோகலுற்றான்
மற்றோர்வனந்தனிலே மன்னர்களைத்தேடினான்
அங்கேயுங்காணவில்லை அழகானமன்னர்களை
நாமமுடியான் நகுலன்மனங்கலங்கி
சிந்தைகலங்கியவன் திடுக்கிட்டுமெய்மறந்து
அழுதுபுலம்பினானே அண்ணர்களைக்காணாமல்
அப்போநகுலனுக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயாகுது
நாவுவறட்டுகுது நகுலமகாராசனுக்கு
அண்ணரைத்தேடியே அனேகதூரம்வந்தானே
அண்ணரைக்காணாமே அதிகதாகமுண்டாச்சே
என்னசெய்யப்போறேனென்று ஏங்கிமனந்தளர்ந்து
என்றுவிசாரமிட்டு இருக்கின்றவேளையிலே

எம்பெருமாள் நகுலராசனை விஷநீர்குடிப்பித்துக் கொல்லுகிறது.

அப்போதுமாயவரும் அக்கணமேயேதுசொல்வார்
நாமமுடியான் நகுலனைக்கொல்லவென்று
எம்பெருமான்மாயவரும் எமனையெச்சரித்து
எமனும்ராமனுடன் இருவருமொன்றாகி
மயிலுங்குயிலுமங்கே வனத்திலேகூவுது
நாமமுடியான் நகுலனவன்பார்த்து
அந்தக்குரல்கேட்டு ஆலோசனைபண்ணுகிறான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமனங்குளிர்ந்து ஏகிநடந்தானே
அண்ணரிருவர்களு மங்கேபடுத்திருந்தார்
கண்டுமகிழ்ந்தானே கட்டழகன்சீர்நகுலன்
ஆனந்தமானானே அண்ணர்களைக்கண்டவுடன்
நாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
அண்ணர்தருமராயர் ஆயாசப்பட்டிருக்க
ஆரணங்குதுரோபதையு மங்கேபுலம்பிநிற்க
என்னமனதுகொண்டு இங்கேபடுத்தார்கள்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்ந்தபின்பு

அன்னவர்களைபெழுப்பி அழைத்துநாம்போவோமென்றார்
குளத்திலிறங்கினானே கொப்பெனவேநகுலனவன்
மாயப்பெருமாளும் மனிராமர்தான்பார்த்து
அக்கிரமாய்நின்று ஆயாவிரதுசொல்வார்
ஆரடா தம்பியரே அவ்விசலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இக்கனியுமெய்னுதடா இறங்கிசலமுண்ணாதே
தண்ணீர்குடியாதே தாமரைப்பொய்கையிலே
குளத்தைவிட்டுப்புறவா கொற்றவாவென்றுசொன்னார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனவன்
ஆரோதெரியாது அக்கிரமாய்ப்பேசுகிறீர்
எவரோதெரியாது எங்கைப்போல்பேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வடிவந்தெரியவில்லை
சொன்னசொல்கேட்குது சொரூபந்தெரியவில்லை
அக்ரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதுர்க்கைகளோ ஊயவபிடாரிகளோ
ஆரோதெரியவில்லை அருகில்வந்துபேசுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
எங்கள்குளத்திலே நீ இறங்கிசலமுண்ணவென்றால்
வையகத்திலதிசயமும் வருத்தமானபாரங்களும்
வாடாபயிரின் வர்ண முறைத்தாயானால்
இறங்கிசலமுண்ணும் இல்லையென்றால்போய்கடவும்
சொன்னவேநீர்குடிப்ப சொல்லாமற்போனாலே
தண்ணீர்குடியாதே தாமமுடியாதே
குளத்திலடையாதே கொற்றம்போர்மன்னவனே
என்றதோர்சொற்கேட்டு ஏதுசொல்வான்வீரநகுலன்
நீர்கேட்டவார்த்தைக்கு நான்கேட்கத்தன்மையென்ன
நீதியல்லநீர்தூர நின்றுதான்பேசறது
என்னெதிரில்வந்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
என்றசிலவார்த்தை நின்றுமவன்பேசினானே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
மறுவார்த்தைசொல்லாமல் மாயவருக்காயிருந்தார்
அப்போநகுலனுமே ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கொப்பெனவேநகுலனவன்
தாகந்தெளியவே தண்ணீருந்தான்புசித்தான்
தாகந்தெளிந்தானே தருமர்தம்பியானவனும்
தண்ணீர்புசித்தவுடன் தாறுமாறாய்விழுந்து
தலையைச்சுழட்டுதே தாவேந்தரானவனுக்கு
உடம்புபறக்குதே உத்தண்டவீரனுக்கு
என்னதுமென்னுகிறான் இயலானநகுலனுமே
ஆரோதெரியாது அக்கிரமாய்ச்சொன்னார்கள்

அவ்வார்த்தைகேளாமல் அள்ளியேதீர்த்தமுண்டேன்
சொன்னசொற்கேளாமல் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
கண்ணுந்தெரியவில்லை காணும்புறந்தோணவில்லை
நிலமுந்தெரியவில்லை நினைவைமறக்குதே
அறியாதநான்புசித்தே னென்றல்லோ ஆணழகன்
அண்ணர்க்குந்தம்பியற்கு மாரணங்குதுரோபதைக்கும்
அந்தவனந்தாண்டி ஆர்தான்போய்ச்சொல்வார்கள்
இந்தவிசேஷமதை எவர்போயுரைப்பார்கள்
தருமரிதையறிந்தால் சற்றும்பொறுக்காரே
அண்ணுவுந்தம்பியரும் அழுதுபுலம்புவார்கள்
இங்கேவுயிர்வாங்கி யிவர்களிருக்கையிலே
அங்கேநகுலனுமே அண்ணரண்டைமாண்டானே
மாண்டானேசீர்நகுலன் வசநாபிநீரையுண்டு
செத்தாங்கநகுலனுமே சீரானகானகத்தில்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே

வீமனையும் அர்ச்சுனனையும் அழைக்கப்போன நகுலனையுங் காணோமேயென்று தருமர்புலம்புகிறது

அப்போதுமன்னவரும் ஆணழகனேதுசொல்வார்
சகாதேவனையழைத்து தருமரவரேதுசொல்வார்
அப்பாசகாதேவா அதிசயத்தைநீர்கேளும்
மான்பிடிக்கப்போனவொரு மதவீமராசனையும்
வீமனையுங்காணவென்று வில்விஜயராஜாவும்
தேடியேபோனானே தேர்விஜயனர்ச்சுனனும்
நல்விஜயனைத்தேட நகுலனும்போய்நடந்தான்
மூவர்களும்போனாரே முடிவேந்தராஜாக்கள்
ஒருவனையுங்காணேனே உத்தரவுதானறிய
மான்பிடிக்கப்போனவர்கள் வந்தின்னஞ்சேரவில்லை
தேடியேபோனவர்கள் திரும்பிவந்துசேரவில்லை
தம்பிசகாதேவா தாமமுடியானே
தேடியேபோராயோ சேதிவந்துசொல்வாயோ
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைநானறியேன்
மானைப்பிடிக்கையிலே மான்வளர்த்தார்கண்டாரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைபண்ணுரோ
சத்தரிஷிகளோ சந்நியாசியானவரோ
சத்தரிஷியவர்கள் சபித்துமேபோட்டாரோ
காணவும்போறேனே கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போறேனே பாவியென்கண்ணாலே
இன்னமொருக்கால் இங்கேவந்துசேர்வாரோ
இளையசகாதேவா இட்டிங்கேவாராயோ

காளைசகாதேவா கண்டழைத்துவாராயோ
பாரமுடிமன்னர்களைப் பார்த்துமேநீயழைக்க
வருவாயோதம்பியரே வார்த்தைகள்சொல்லுமென்றார்
அப்போசகாதேவன் அண்ணரைத்தெண்டனிட்டு
தாமமுடியான் சகாதேவனேதுசொல்வான்
அஞ்சாதீரண்ணாலே அழைத்தோடிவாரேன்நான்
காளையர்தமூவரையும் கண்டழைத்துவாரேனென்றான்
பார்த்தழைத்துவாரேனென்றான் பாரமுடிமன்னர்களை
என்றெழுந்தானே இளையசகாதேவன்

சகாதேவன் தருமர்சொல்லைக்கேட்டுதமையன்மார்
மூவரையுந்தேடிக்கொண்டு போனது.

சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
நீண்டியிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு அத்தியப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
ஈட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
அண்ணரைத்தெண்டனிட்டு ஆனமுகனேதுசொல்வான்
போகவிடைதாருமென்றான் போர்விஜயன்தம்பியவன்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
அப்பாசகாதேவா அறிவுள்ளகண்மணியே
அண்ணன்மார்போனதொரு அடவிதனிற்சென்று
காளையந்தமூவர்களைக் கண்டழைத்துநீர்வாரும்
அண்ணர்களைக்கண்டு அழைத்தோடிவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தன்சகாதேவன்
அண்ணரைத்தேடியே அதிவிரைவாய்ப்போய்நடந்தான்
தமையர்களைத்தேடியே தார்வேந்தன்போகலுற்றான்
எட்டிநடந்தானே எழிலானசூரியன்போல்
தேடிவருகிறானே சீரானகானகத்தில்
எங்கெங்குந்தேடியே இனியவிடமாராய்ந்து
கடுநவருகையிலே காதுமடைத்திடுது
நாவுமறட்டுது நல்லசலங்கிட்டாமல்
மெத்தக்களையாச்சு வேந்தன்சகாதேவனுக்கு
அப்போதுசகாதேவன் ஆனமுகனேதுசொல்வான்
அண்ணர்களைத்தேடி அநேகதூரம்வந்தோம்
தண்ணீர்களையால் தாகமெடுக்குதையோ

எங்கெங்கேபார்த்தாலும் இனியசலங்கிட்டவில்லை
அண்ணரையுங்காணுமே ஆரணியங்கனனிலேதான்
என்றுமவன்சொல்லி யிருக்கின்றவேளையிலே

எம்பெருமாள் சகாதேவமகாராசனை விஷத்தண்ணீர் குடிப்பித்துக் கொல்லுகிறது.

அப்போதெம்பெருமாள் ஆயரவரேதுசெய்தார்
வந்தசகாதேவனையும் வல்லுயிரைவாங்கவென்று
ஏமனும்பெருமாளும் ஏறினார்மரமேலே
மயிலுங்குயிலும் வனத்திலேகூவுகுது
இந்தக்குரல்கேட்டு இளையசகாதேவன்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தானே இளையசகாதேவன்
தாமரைப்பொய்கைகளும் தண்ணீர்தடாகமுடன்
பூவளரும்சோலைகளும் புதுமைகளைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
நாம்செய்தபுண்ணியத்தால் நல்லசலங்கிடைத்ததென்று
அங்கேநடந்து அவசரமாய்வாரபோது
மன்னரந்தமூவர்களும் மரத்தடியிற்படுத்திருந்தார்
தமையர்தமைக்கண்டு சந்தோஷமானானே
அப்போதொருவார்த்தை ஆணழகனேதுசொல்வான்
அண்ணர்தருமரங்கே அழுதுபுலம்பியேதான்
தம்பியரைக்காணாமல் தயங்கியவரிருக்க
ஆரணங்குதுரோபதையா ளங்கேபுலம்பிநிற்க
என்னநினைவுகொண்டு இங்கேபடுத்தார்கள்
பச்சைமரத்தினகீழ் மன்னர்படுத்தாரோ
இந்தமரத்தடியில் இவர்படுத்தகாரியமேன்
குளிர்ந்தநிழலென்று கோமான்படுத்தாரோ
மலர்ந்தமரமென்று மன்னர்படுத்தாரோ
தாகத்துக்குண்டபின்பு தமையர்தமையெழுப்பி
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்று
தாமரைப்பொய்கையண்டை தார்வேந்தன்வந்துநின்று
அந்தக்குளத்திலே அள்ளிஜலமுண்ணப்போனான்
அந்தச்சமயத்தில் ஆயரவர்பார்த்து
அந்தரமாய்நின்றலவோ ஆயரவரேதுசொல்வார்
ஆராடாதம்பீ அக்குளத்திலிறங்கினவன்
எவண்டாதம்பீ என்குளத்தில்வந்தவனும்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தநீரென்னுதடா இந்தக்குளமென்னுதடா
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும

இத்தனையுமென்னுதடா இறங்கிஜலமுண்ணாதே
இறங்கினாலுந்தனுக்கு யிடறுகள்வந்துவிடும்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
அந்தரத்தில்நின்றுகொண்டு ஆர்காணும்பேசுறவன்
தூரத்திலிருந்துகொண்டு சொல்கிறவனார்காணும்
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதுர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
பேயோபிசாசுகளோ பிணந்தின்னுங்கழுகுகளோ
ஆரோதெரியாது அதட்டியேகேட்கிறவர்
எவரோதெரியாது எந்தனைக்கேட்கிறவர்
மற்றுமொருக்கால்தான் வாய்திறந்துபேசுங்கள்
இன்னமொருக்கால்தான் எதிரில்வந்துசொல்லுங்கள்
என்றசொற்கேட்டு எம்பெருமாளேதுசொல்வார்
தண்ணீர்குடிக்கவென்றால் தாரணியில்புதுமைசொல்லும்
வாடாப்பயிருமெது வருத்தமானபாரமெது
அந்தவதிசயங்களறிந்தாலுரையுமென்றார்
அறிந்துநீர்சொன்னாலே அள்ளியேதீர்த்தமுண்ணும்
சொல்லுவாயாமானால் சுருக்காகதீர்த்தமுண்ணும்
இல்லாமற்போனாலே யிப்பாலேவந்துவிடும்
தாமமுடியான் சகாதேவராசனவன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
ஆரோதெரியாது அந்தரத்தில்மிரட்டுகிறீர்
எவரோதெரியாது என்னைமிரட்டுகிறீர்
அருகாகவந்தாலே அடித்தெறிந்துபோட்டிடுவேன்
சரியாயிருக்கவேணும் சண்டைபண்ணிபார்க்கவேணும்
மறைவாயிருந்துகொண்டு வாதாடநீதியுண்டோ
என்றுமவனுரைக்க எம்பெருமாள்தான்கேட்டு
ஒன்றுமேசொல்லாமல் உலகளந்தார்வீற்றிருந்தார்
மறுவார்த்தைபேசாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போசகாதேவன் ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கினானே கொப்பெனவேதீர்த்தமுண்டான்
அள்ளியேதீர்த்தமுண்டான் ஆவல்தெளிந்திடவே
தண்ணீர்குடித்தானே தாமமுடியானும்
அள்ளிஜலமுண்டபின்பு ஆனந்தமார்பனுக்கு
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுழற்றுகுது
உடம்புமறக்குது உள்ளங்குலையுது
நாவுகுளறுகுது நாமமுடியானுக்கு
தன்னைமறக்குது தார்வேந்தராசனுக்கு
ஆரோதெரியாது எந்தனுக்குச்சொன்னார்கள்
எவரோதெரியாது எந்தனுக்குச்சொன்னவர்கள்

தண்ணீர்குடியாதேயென்று சத்தம்பிறந்ததங்கே
அவர்சொல்லைக்கேளாமல் அள்ளிநான் தீர்த்தமுண்டேன்
சொன்னசொல்கேளாமல் சுருக்காகதீர்த்தமுண்டேன்
தெரியாமல்நீர்குடித்தேன் சிந்தைகலங்குது
அறியாமல்நீர்குடித்தேன அங்கம்பிரட்டுகுது
என்றுநடந்தானே இளையசகாதேவன்
அண்ணமார்தன்னருகே ஆணழகன்வந்துநின்று
அப்போசகாதேவன் ஆலோசனைபண்ணி
தம்பிகளைக்காணோமென்று தருமரிங்கேவந்தாக்கால்
வசநாபிதண்ணீருண்டு மாண்டிடுவார் தப்பாது
என்றுமனதிலெண்ணி யெழுதுகிறான்மரத்தடியில்
அண்ணேவமரத்தடியில் அதிசயமானவார்த்தை
இந்தகுளத்திலே எவர்தாகமுண்டாலும்
வசநாபிதண்ணீரிது குடித்தால்மடிந்திடுவார்
அண்ணேயிக்குளத்தி லள்ளிநீர் குடியாதே
எங்களிதைகுடித்து நாலும்பேருமடிந்தோம்
செத்துமடிந்துவிட்டோம் சிவலோகஞ்சேர்ந்துவிட்டோம்
மாண்டுமடிந்துவிட்டோம் வைகுந்தஞ்சேர்ந்துவிட்டோம்
என்றுமவன்சொல்லி எழுகினை மணமேலே
கல்லையசூற்றுகையில் தானும்படுத்துகொண்டான்
அந்தசமய மறிந்தாரேயெம்பெருமாள்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
காலனையெச்சரித்து ·டுகஉயிர்வாங்குமென்றான்
எமனையெச்சரித்து யிவனுயிரைவாங்குமென்றான்
எம்பெருமாள்சொற்கேட்டு எமனவனோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினானே
பாசத்தாலகட்டியே பதைக்கஉயிர்பிடித்தான்
சூலத்தால்குத்தியே துடிக்கஉயிர்பிடித்தான்
மாண்டுமடிந்தானே மன்னன்சகாதேவன்
செத்துமடிந்தானே சீரானகானகத்தில்
இப்படியாக இவரிருக்குமவேளையிலே

ஆரணியத்தில் எம்பெருமாள் ஆக்கினைமேல வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் இன்னாகும்பேரும் மாண்டபின்பு காளமகாரிஷி யாகத்திலுண்டாகியவேதாளம் ஐந்துபேரையுங்கொல்லவருவது.

அந்தசமயத்தில் ஆங்காரமாகவேதான்
காளமகாரிஷியுங் கருதித்தபசுபண்ணி
அக்கினிகுழியிலே ஆங்காரவேதாளம்
உண்டாகிவந்துதங்கே உலகந்திடுக்கிடவே
கருத்தநிறமுடனே கைதனிலேவாளுடனே
பெருத்தமுகமுடனே பெருந்தொப்பைதன்னுடனே

செவந்தமயிரழகும் சீழ்வடிந்தவாயழகும்
கண்களைப்பார்த்தாலே கருங்குன்றுபோலிருக்கும்
கைகளோகாதவழி கால்கள்வெகுதூரம்
அகண்டபுஜங்களது ஐந்நூற்றுகாதவழி
பல்லழகைபார்த்தாலே பனைமரம்போலிருக்கும்
மூக்கழகைபார்த்தாலே முதலைகளைப்போலிருக்கும்
இப்படியாகவே யிருக்குமந்தவேதாளம்
பொல்லாதவேதாளம் பிறந்ததுஅக்கினியில்
காளமகாரிஷியருகே கடுகவந்துதெண்டனிட்டு
என்னையழைத்ததுதானேது வகையாக
ஆரைநான்கொல்கிறது அடுத்துபோர்செய்கிறது
எவரைப்போய்க்கொல்கிறது எந்தனுக்குசொல்லுமையா
கைகள்பதைக்குது காளமகாமுனியே
வயிறுபசிக்குது மாமுனியேசொல்லுமையா
அப்போதுமாமுனியும் அதுசொல்லத்தான்கேட்டு
காளமகாமுனியும் கடுகவெடுத்துரைப்பார்
அக்கினியில்வந்துதித்த ஆங்காரவேதாளமே
நான்சொல்லநீகேளும் ராஜாக்கள்ஐவருண்டு
இந்தவனத்திலே இருக்கிறார்பஞ்சவர்கள்
வீரப்புலிபோலே வேந்தர்களைவருண்டு
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருண்டு
ஐவரையுங்கொன்றுதின்று அரைநொடியில்வாருமென்றார்
வேதாளம்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
அவ்வளவுபோதுமென்று ஆக்ரமித்துப்பற்கடித்து
ஆக்ரமித்துப்பற்கடித்து அதட்டிவருகுதங்கே
எங்கெங்கேயென்றுசொல்லி எழும்பியேகொக்கரித்து
கொக்கரித்துவேதாளம் கும்மாளமாய்வருகுது
அந்தவனங்க ளெல்லாம் ஆராய்ந்துவருகையிலே
செந்தாமரைப்பொய்கையண்டை செத்திருக்கக்கண்டது
மாமரச்சோலையின்கீழ் மாண்டிருக்கக்கண்டது
இறந்தவரல்லாம லின்னமொருவரிலலை
செத்தவரில்லாமல் மற்றுமொருவரில்லை
எங்கேமடிந்தாரோ எவ்விடத்திலசெத்தாரோ
செத்தபிணந்தின்ன மாமுனிபோகச்சொன்னார்
எத்தனைநாளைக்குமுன்னே செத்தபிணமிதுவோ
செத்தபிணத்தையோநான் சென்றுபுசிக்கிறது
நாறும்பிணமெடுத்து நானேபுசிக்கிறது
மாண்டபிணத்தையோநான் வயிறாரவுண்பேனோ
என்றுமேசொல்லி யெழுந்ததுவேதாளம்
அங்கேதிரும்பி அகோரகோபத்துடனே
மகாவேகந்தனுடனே வருகுதுவேதாளம்

காளமகாரிஷியருகே கடுகவந்துவுக்கிரமுடன்
எடுத்துமகாமுனியை இரண்டாய்க்கிழித்தது
வாரியெடுத்துமல்லோ வயிற்றைக்கிழித்தது
நெஞ்சைப்பிளந்து நெருப்புத்தணலெழும்ப
மாமுனியைக்கொன்றபின்பு மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷமாகியல்லோ வேதாளந்தானடக்க
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோச்சுது
மனதுமிகக்குளிர்ந்து மற்றோர்வனந்தனிலே
போனதுபிழைத்திருக்கும் பொல்லாதவேதாளம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

தருமராசர் தம்பிமார் நாலுபேரையுங் காணோமென்று
துரோபதையுடன்சொல்லி புலம்புகிறது.

வேதாளம்போனபின்பு வேல்வேந்தர்தருமரவர்
சாயாம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
பாஞ்சாலன்பெண்ணே பைங்கிளியேதுரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நீலவர்ணர்தங்கையரே
அணலிற்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
ஐவரையுமாலையிட்ட ஆதிபராஞ்சுடரே
கோராவடிவழகி துரோபதையேநீர்கேளும்
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணோம்
வீமனைத்தேடிப்போன விஜயன்வரக்காணோம்
இருவரையுந்தேடிப்போன நகுலன்வரக்காணோம்
மூவரையுந்தேடிப்போன சகாதேவனைக்காணோம்
நால்வரையுங்காணோமே நாயகமேயென்னசெய்வோம்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
ஆரோடேசண்டைகள் அமரதுசெய்கிறாரோ
எவரோடேசண்டைகள் எப்படிப்போர்செய்கிறாரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைபண்ணுறாரோ
எந்தத்தபோதனர்கள் எவர்கள்கொன்றுபோட்டாரோ
தபசிற்பெரியவர்கள் சபித்தாரோநானறியேன்
வரதிற்பெரியவர்கள் வதைசெய்துபோட்டாரோ
போனவிடமறியேன் போர்செய்ததாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
தேடியேபோவோமவா தேவியேயென்றழைத்தார்
ஆணங்குதுரோபதையா ளெப்படியேநல்லதென்றாள்

தருமரும் துரோபதையும் வீமன் அருச்சுனன்
நகுலன் சகாதேவன் இவர்கள் நாலுபே
ரையுந் தேடிக்கொண்டு போனது.

துரோபதையுந்தருமருந் துள்ளியெழுந்திருந்து
தேடிப்புறப்பட்டார்கள் சீரானகானகத்தில்

கூவிப்புலம்பியே கொப்பெனவேவாரார்கள்
அழுதுபுலம்பியே அந்தவனந்தேடிவாரார்
இருண்டவனங்களெல்லாம் எங்கெங்குந்தேடினோமே
தம்பிமாரைக்காணாமல் தயங்கினார்தருமரங்கே
பாராமல்தம்பிமாரைப் பதைத்துப்புலம்பினார்கள்
தக்கபுகழுடைய தருமரங்கேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேபாஞ்சாலி
இந்தவனத்திலே எங்கெங்குந்தேடினோமே
காளையர்நால்வரையும் காட்டிலேகாணவில்லை
இந்தவனந்தாண்டி இனியவனம்போவோமென்று
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோய்நடந்தார்
தேடியேவாரார்கள் சீரானவனந்தனிலே
தருமருக்குந்துரோபதைக்குந் தாகமெடுக்குது
நாவுவறட்டுகுது நாமமுடியார்க்கு
ஆணங்குதுரோபதைக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனமுந் தாகவிடாயாச்சு
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
என்செய்வோம்பெண்ணேநாம் எங்குஞ்சலம்கிட்டாது
மன்னவரைக்காணேனே மாதரசேயென்னசெய்வேன்
தம்பிகளைக்காணோமே தாகவிடாய்கொள்கிறதே
என்னசெய்வேனென்றுசொல்லி இளைத்துப்புலம்புகையில்
அந்தச்சமையத்திலே அரிராமரேதுசெய்தார்
மயிலுங்குயிலுமிங்கே மரத்தின்மேலேறியே
வனத்திற்குயிலு மயில்களுங்கூவுகுது
அந்தக்குரல்கேட்டார் ஆணழகர்தருமலிங்கம்
கூவுங்குரல்கேட்டுக் கொப்பெனவேஏதுசொல்வார்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தாரே இளந்தோப்புத்தன்னருகே
தாமரைப்பொய்கையண்டை தம்பிமார்தானிருந்தார்
பள்ளிகொண்டிருக்கிறதைப் பார்த்தாரேதருமலிங்கம்
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேகண்டாயோ
தம்பிமார்பள்ளிகொண்ட தயிரியத்தைப்பார்த்தாயோ
மானும்பிடியாமல் வந்துசேதிசொல்லாமல்
குளிர்ந்தநிழலருகே கூசாமற்பள்ளிகொண்டார்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்ந்தபின்பு
தம்பிமாரைத்தானெழுப்பித் தையலரேபோவோமென்றார்
என்றுமவருரைத்து இளந்தோப்பிற்போய்புகுந்து
தாமரைப்பொய்கையிலே இறங்கினார்தருமரவர்
அப்போதுமாயவரும் அரிராமர்தான்பார்த்து

அந்தரமாய்நின்றுகொண்டு ஆயரங்கேதுசொல்வார்
ஆரடாதம்பிநீ அக்குளத்திலிறங்கினவன்
எவனடாதம்பிநீ இறங்கிஜலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிசலமுண்ணாதே
என்றசத்தங்கேட்டுமே ஏதுசொல்வார்தருமரவர்
ஆரோதெரியாது அந்தரமாய்பேசுரது
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதுர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
வானுலகதேவர்களோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னுந்ராட்சதரோ
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரென்றுநானறிவேன் எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
உத்தரவுகேட்குது உருவந்தெரியவில்லை
பேச்சுகள்கேட்குது பேருந்தெரியவில்லை
தாகவிடாயாக தண்ணீர்குடிக்கவந்தேன்
தாவுவரட்டுகுது நடுங்குதுதேகமெங்கும்
உள்நாக்குவரட்டுகுது உத்தரவுதாருமையா
உத்தரவுதந்தாலே உண்ணுகிறேன்தீர்த்தமிங்கே
வார்த்தையுரைத்தாலே வாரிசலமுண்ணுகிறேன்

எம்பெருமாள் தருமர்தம்பி நாலுபேரையும்
அதிசயங்கேட்டதற்கு யாருஞ்சொல்ல
வில்லை தருமர் சொல்லுகிறது.

என்றுரைக்கதர்மலிங்கம் ஏதுசொல்வார்மாயவனார்
இப்பூமிதன்னிலே என்ன அதிசயங்கள்
அதிசயத்தைசொன்னீரானா லள்ளியேதீர்த்தமுண்ணும்
இல்லாமற்போனாலே இப்பாலேவந்துவிடும்
சொல்லாமற்போனீரானால் சுருக்காய்நடவுமென்றார்
என்றசொல்தான்கேட்டு ஏதுசொல்வார்தருமலிங்கம்
மனிதர்பிறக்கிறதும் மனிதரிறக்கிறதும்
இதுவேஅதிசயங்கள் இனியொன்றுமில்லையென்றார்
அவ்வயணங்கேட்டு அரிராமரென்னசொல்வார்
இதுவேஅதிசயங்காண் இனியொன்றுமில்லையோதான்
இன்னமொருவார்த்தை உண்மையுரையுமென்றார்
வையகத்துமாந்தருக்கு வருத்தங்களாவதுகாண்
ஏதுவருத்தமென்றார் இனிப்பிறந்தபேர்களுக்கு
அப்போதருமரவர் ஆயருரைகேட்டு
சாயாம்புமன்னவனார் தருமரங்கேதுசொல்வார்
பத்துமாதஞ்சுமந்து பாலகனையுண்டாக்கி

முன்னூறுநாள்சுமந்த முருகுழலாள்தன்னருகே
பெற்றெடுத்ததாயாற்குப் பெரியசுமையொழிய
மற்றஞ்சுமையுமில்லை வையகத்துமாந்தருக்கு
இவ்வயணங்கேட்டு ஏதுசொல்வார்மாயவனார்
இன்னமொருவார்த்தை இயம்புவேன் சொல்லுமென்றார்
வையகந்தனிலே வாடாப்பயிர்சொல்லும்
என்றைக்கும்வாடாத இனியபயிர்சொல்லுமென்றார்
ஆயரிவையுரைக்க அவ்வார்த்தைதான்கேட்டு
சாயாம்புமன்னவனார் தருமாங்கேதுசொல்வார்
வாடாதிருக்குங்காண் வளருமருகம்புல்
அந்தசொல்தானுரைத்தார் அங்கெனவேமாயவற்கு
இவ்வயணங்கேட்டுமே எமபெருமாளென்னசொல்வார்
சந்தோஷமாச்சுது தாகந்தெளியுமென்றார்
உத்தரவுந்தாரேன் உலகளந்தாரெம்பெருமாள்
தக்கபுகழுடைய தருமரவர்கேட்டு
உண்ணுமென்றுசொன்ன உத்தரவுதான்கேட்டு
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தாகந்தெளிவதற்கு தண்ணீர்குடித்தார்கள்
அள்ளிப்புசித்தார்கள் ஆவல்தெளிந்திடவே
தருமருந்துரோபதையுந் தாகத்துக்குண்டார்கள்
தாகந்தெளிந்தபின்பு தம்பிமாரண்டைவந்தார்

தருமர்வந்து தம்பிமார்களை எழுப்ப நாலுபேரும்
இறந்துவிட்டாரென்றறிந்து புலம்புகிறது.

நாலுபேரண்டைவந்து நடுவேயிருந்துகொண்டு
சகாதேவன்படுத்திருந்த தலைமாட்டிலெழுதியதோர்
வாசகத்தைபடித்தாரே மன்னர்தருமலிங்கம்
என்னவென்றெழுதி யிருந்ததென்றால்வாசகத்தில்
நால்வருமாகவே நச்சுபொய்கைதீர்த்தமுண்டு
விஷநீரையுண்டல்லோ வெந்தர்மடிந்துவிட்டோம்
மாண்டுமடிந்துவிட்டோம் நீங்கள்வந்தாலுண்ணாதே
தாகத்துக்குண்ணாதே தம்பிப்பிழையுமென்று
இவ்வயணமாகவே எழுதியிருக்குது
பார்த்துப்படித்துப் பயந்தாரேதருமராயர்
செத்துமடிந்தார்கள் சீரானதம்பியர்கள்
மாண்டுமடிந்தார்களென்று மன்னர்புலம்புகிறார்
என்னசொல்லிப்புலம்புகிறார் இருண்டவனந்தனிலே
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்பாலையேபருவதமே செத்துமடிந்தீர்களோ
நீலமலையே நிலத்தோடேசாய்ந்தீரோ
கல்லான தூணுக்கு கலக்கமில்லையென்றிருந்தேன்
கல்லான தூணைக் கரையானரித்ததோ

இரும்பான தூணுக்கு யென்ன குறையென் றிருந்தேன்
இரும்பான தூணுமே இற்று விழுந்ததோ
வச்சிரத் தூணுக்கு வாட்டமில்லையென் றிருந்தேன்
வச்சிரத் தூணலவே மண்ணோடுளுத்ததோ
செப்பருந் துவந்தென்னைச் சிறகாலடித்ததோ
குஞ்சைபறிகொடுத்த கோழிபோலானேனே
ரெக்கைபறிகொடுத்த பட்சிபோலானேனே
கையறுந்த ஆனையைப்போல் கலங்கினேன் தம்பியரே
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாற்போல்
உள்ளங்குலைந்து உருகிறேன் தம்பியரே
என்னைத் தவிக்கவிட்டு எங்கேமறந்தீர்கள்
ஐயையோ தெய்வமே அலையவிட்டுப்பார்த்தீர்களோ

தருமர் வீமனைப்பார்த்து புலம்புகிறது.

தக்கப்புகழுடைய தருமரெழுந்திருந்து
வீமனருகில்வந்து வேந்தர் புலம்புகிறார்
வெற்றிமதயானை வீமாமதகரியே
கட்டிக்கரும்பேயென் கண்மணியே யெங்கொளித்தாய்
நூலார்கடுந்திறலார் நூற்றொருமன்னரையும்
கொல்லுகிறேனென்றுநீ கொடியசபதமிட்டாய்
அவ்வார்த்தைதான்மறந்து அப்பாநீயெங்கொளித்தாய்
வச்சிரமுடியேநீ மண்ணோடேசார்ந்தாயோ
தங்கமுடியேநீ தரையிற்கவிழ்ந்தாயோ
தாயைமறந்தாயோ தமையனைநீமறந்து
எங்கேயொளித்தாயோ என்னோடுபோனாயோ
என்னையலையவிட்டு எங்கேநீபோயொளித்தாய்
என்றுபுலம்பி இளைத்துமண்ணில்மூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர் தருமலிங்கம்

தருமராஜர் களைதெளிந்து எழுந்திருந்து அர்ச்சுனனைப்
பார்த்துப்புலம்புகிறது.

அன்றுவொருநாழி சென்றபிறகாக
தோராவடிவழகி துரோபதையாளோடிவந்து
களைத்த தருமருக்கு கடுகமூர்ச்சைதெளியவென்று
காட்டில்தழையொடித்து கடுகவேவோடிவந்து
பச்சைதழையொடித்து பைங்கிளியாள் வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்து
என்னவென்றுசொல்லி எடுத்துபபுலமபுகிறார்
ஆணழகுமன்னா அர்ச்சுனாஎன் பிறப்பே
என்னைத்தனியவிட்டு எங்கேநீபோயொளித்தாய்
மீசைமுறுக்கழகா விழியிற்கறுப்பழகா
நாவில்லநட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
தோளில்துளசியாலை தொப்புளிலயிர்தகசைய

பல்லிலேபாசவீணை பாதத்தில்செந்தாமரைப்பூ
முதுகிலேபச்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
இடதுகால்விருதுபொமமை வலதுகால்வீரதண்டை
சலவிருதுகுலவிருது சத்ராதிபோர்விருது
எதிர்த்தவன்தன்விருதும் எதிராளிமுகவிருதும்
இத்தனை விருதுகளை எடுத்துநீபூட்டிக்கொண்டு
கட்டியெதிர்த்தாலே கலங்குமேசேனையெல்லாம்
சத்ராதிகளைசெயிக்கும் தனஞ்செயரேஅர்ச்சுனரே
எதிரிகளைசெயிக்கும் என்பிறப்பேஅர்ச்சுனரே
என்னைப்பிரிந்துநீ இறந்துமடிந்தாயோ
அழகையெழுதினவர் ஆயுளையெழுதாரோ
வடிவமெழுதினவர் வயதைஎழுதாரோ
பெற்றாளேகுந்தியம்மாள் பிரபலங்கள்காணவென்று
பெற்றாள்வயிற்றிலேநீ பெருநெருப்பையிட்டாயோ
என்னைத்தவிக்கவிட்டு இறந்துவிடஞாயமுண்டோ
என்றுசொல்லிதருமரவ ரேங்கிமனந்தளர்ந்து
அழுதுபுலம்பியே அங்கனேமூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர்தர்மலிங்கம்

தருமராஜர் மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்து நகு
லனைப்பார்த்துப் புலம்புகிறது.

களைத்ததருமரையே கண்டந்ததுரோபதையாள்
துள்ளியெழுந்திருந்து துரிதமுடனோடிவந்து
காட்டில்தழையொடித்துக் கடுகெனவேயோடிவந்தாள்
தருமருகாகத் தையலரும்வந்துநின்று
பச்சைதழையொடித்து பைங்கிளியாளவீசலுற்றாள்
காட்டுதழையொடித்துக் கடுகெனவேவீசினாளே
மற்றுமொருநாழி யுற்றபிறகாக
வீசக்களைதெளிந்து வேந்தனெழுந்திருந்து
மூர்ச்சையதுதெளிந்து முன்னின்றுபுலம்புகிறார்
அப்பாநகுலாவென் னறிவுள்ளகண்மணியே
மலையேபருவதமே வாழ்மலையேகுஞ்சரமே
நீமடியுங்காரியங்கள் நிண்ணயத்தைநானறியேன்
மாண்டிடுவீரென்றுநான் மனதில்நினைத்ததில்லை
செத்துமடிவீரென்று சற்றுமறியேனே
என்னைநீகையைவிட்டு இறந்துவிடஞாயமுண்டோ
(நீங்கள்) போவதறியாமல் பூரித்துநானிருந்தேன்
சாவதறியாமல் சந்தோஷமாயிருந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேர்த்துமுகங்காணுதையா
கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகமாகுதப்பா

கூடப்பிறந்தீர்களே கூடபாலுண்டீர்களே
ஒக்கப்பிறந்தீர்களே ஒருஸ்தனப்பாலுண்டீர்களே
காட்டுக்குள்ளேயைவிட்டு கைலாசம்போனீரே
தங்கத்தரிக்கவில்லை தரையில்கால்பாவவில்லை
நிற்கத்தரிக்கவில்லை நிலைதிற்கால்பாவவில்லை
உங்களைநான்பிரிந்து ஒருநாழிதங்குவேனே
கூடமடிவேன்காண் கொற்றவரேஉங்களுடன்
ஒக்கமடிவேனே உங்களுடனாக
அணைண்டுபிரண்டழுதார் அடித்துக்கொண்டார்தலைமேலே
மூட்டிக்கொண்டார்பூமியிலே மோதிக்கொண்டாரப்போது
மார்கொண்டகண்ணீரை வழித்தெரிந்தார்மண்மேலே
அடித்துபதைத்தலைந்த துள்ளிப்புரண்டழுதார்
களைத்துவிழுந்தாரே கட்டழகாதருமலிங்கம்
மூர்ச்சையாய்விழுந்தாரே முடிமன்னராசனும்

தருமராசர் மூர்ச்சைதெளிந்து சகாதேவனைப்
பார்த்துபுலம்புகின்றது.

தோருவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
தளைத்ததருமருக்கு களைகள்தெளியவென்று
காட்டிலேதழையொடித்து கட்டழகிவீசலுற்றாள்
பச்சைதழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்தார்
மூர்ச்சைதெளிந்தெழுந்து மோதிப்புலம்புகிறார்
சாஸ்திரக்கொடிவேந்தன் சகாதேவராசாவே
முன்னேவருங்காரியத்தை முதலறிந்துசொல்வாயே
இனிநடக்குங்காரியத்தை எந்தனுக்குநீயுரைப்பாய்
அப்படிக்கொத்ததொரு அறிவுள்ளகண்மணியே
உன்னைப்பறிகொடுத்து உலகத்தில்வாழ்வேனோ
பனிரெண்டுதன்வருஷம் பாரவனந்தீர்ந்தபின்பு
அஞ்ஞாதவருஷ மதுவுங்கழித்தபின்பு
பாரவனந்தீர்ந்து பட்டணம்போய்ச்சேர்ந்தால்
குந்தியம்மாளோடிவந்து குழந்தைகளெங்கேயென்றால்
மைந்தர்களெங்கேயென்று மாதாவுமேகேட்டாலே
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்தாயாருக்கு
கட்டிக்கரும்பேஎன் கண்மணியேயெங்கொளித்தாய்
முடிக்கிமுடியானாலும் முத்துமுடியாகுமோதான்
தங்கமுடியானாலும் உங்கள்முடியாகுமோதான்

தருமர்நாலுபேர் தம்பியரையும் நினைத்துபுலம்ப அப்போது
துரோபதைதன்புருஷர்களைப்பார்த்துபுலம்புகிறது.

தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
மாலையிட்டமன்னர்கள் மாண்டுவிடநீதியுண்டோ
தாலிகட்டும்ராசாக்கள் தரையிலவிழலாச்சோ

மங்கிலியமுண்டு மணமுண்டுஎன்றிருந்தேன்
உலகத்துபெண்டுகள் ஒருவனுக்குகைகொடுப்பார்
(நான்)ஐவருக்குங்கைகொடுத்து அம்பலத்துக்காளானேன்
செல்வததலையிலே செப்போடெழுதினதும்
அல்லற்படுந்துயரம் அமைத்தாரேபிரமதேவன்
ஆரைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குறைக்கழுத்தியானேனே
தங்கக்கழுத்தி தலைவிரிக்கநாளாச்சே
மல்லிகைச்சாலையிலே மயிர்விரிக்கநாளாச்சே
குங்குமச்சாலையிலே குழல்விரிக்கநாளாச்சே
ஐயையோதெய்வமே அநியாயஞ்செய்தீர்களோ
பார்த்துமிருந்துமென்னைப் பரதவிக்கவிட்டீர்களோ
கண்டுமிருந்துமென்னை கணக்குலையவைத்தீர்களோ
தோள்சார்ந்தராசர்கள் சோர்ந்துவிடகாரணமோ
மார்சார்ந்தராசர்கள் மடிந்துவிடகாரியமேன்
காட்டிலேமடிந்தலவோ கையைவிட்டுநின்றீர்களோ
அடவியிலேதான்மடிந்து அலையவிட்டுப்பார்த்தீர்களோ
சூரியரைசாட்சிவைத்து தெருவில்கையைவிட்டீர்களோ
சந்திரரைசாட்டிவைத்து சாகத்துணிந்தீர்களோ
சந்திலேகையைவிட்டு சமர்த்தாய்படுத்தீர்களோ
மஞ்சளிழந்து மணமிழந்து பூவிழந்து
தாலிசரடிழந்து தரணியிலேநிற்பேனோ
மஞ்சள்சரடிழந்து மண்மேலிருப்பேனோ
கூடமடிவேன்காண் கொற்றவரேஉங்களுடன்
ஒக்கமடிவேன்காண் உத்தமரேஉங்களுடன்
நானும்மடிவேன்காண் ராசர்களேஉங்களுடன்
அலண்டுபிரண்டழுது அப்பிக்கொண்டார்மார்மேலே
எங்கேயோவானம் இடித்ததென்றிருந்தேன்
தப்பாமல்வானமல்லோ தலையிலிடித்ததே
என்றுபுலம்பியே இளங்கொடியாள்தானழுதாள்
கோவென்றசத்தம் குமரிப்புலம்புகிறாள்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
சாயாம்புமன்னவனா தருமரவரேதுசொல்வார்
தோராவடிவழகிதுரோபதையேநீர்கேளும்
வசநாபிதண்ணீருண்டு மாண்டாரேதம்பியர்கள்
நாமும்புசித்தோமே நல்லவிஷதண்ணீரை
இறவாமல்நாமு மிருப்பதென்னகாரணங்கள்
மாண்டதொருதம்பியர்கள் மன்னவர்கள்தன்னுடனே
நாமும்மடிந்தாக்கால் நல்லதென்றெண்ணுகிறேன்
கூடமடிந்தாலே குணமென்றெண்ணுகிறேன்
ஒக்கமடிந்தாலே ஒருமிக்கத்தீர்ந்துவிடும்

கதியைத் தலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத் தலைக்கவல்லோ வேறுவகையறியோம்
என்னசெய்வோமென்றுசொல்லி ஏங்கிப்புலம்புகிறார்

தருமர்மனதறிய எம்பெருமாள் ஓட்டனைகவும் ஏமன் ஓட்டச்சி யாகவும்வந்து பிணத்தையிழுக்கிறது.

ஏமனும்பெருமாளும் இருவருமாகவேதான்
தருமர்நினைவறிய சாமிவடிவெடுத்தார்
எம்பெருமாள்மேகவண்ண ரென்னவடிவானார்
இருவருமாகவே இவர்களண்டைஓடிவந்தார்
தருமரைத்தான்பார்த்து சாமியவருரைப்பார்
ஆரையாயிங்கே அழுதுபுலம்புவது
இந்தகுளத்திலே யெவர்தானிறந்தாலும்
வசனாபித்தண்ணீரில் மாண்டுமடிந்தாலும்
எங்களையல்லாமல் எவரெடுக்கலாகாது
எடுத்துப்புதைக்கிறது எங்களுக்குத்தாரமையா
நாங்களெடுக்கும்படி ராசாவின்கட்டளைதான்
என்றேயெம்பெருமாள் இழுத்துப்போனார்வீமனையும்
இளையவன் அர்ச்சுனனை இழுத்துப்போனாள் ஓட்டச்சியும்

எம்பெருமாளும் ஏமனும்சவத்தை யெடுத்துக்கொண்டுபோக தருமராசர்பரிதாபப்பட்டு தன்சவத்தை வாங்குகிறது.

சவத்தையவரிழுக்க தருமரவர்பார்த்து
கண்டாரே தருமரவர் கடுகவயிறெரிந்து
பார்த்துமனங்கலங்கிப் பதைத்துப்புலம்பியவர்
ஓட்டர்களருகில்வந்து உத்தமருமேதுசொல்வார்
ஆரையா ஓட்டர்களே ஐயாவேநீர்கேளும்
அண்ணன்தம்பிமார்களிங்கே அருநாகவந்திருக்க
தமையனென்னநானும் தனதாகவந்திருக்க
பூமியைவெட்டிப் புதைக்கும்வயணமென்ன
எங்கள்பிணத்தைநீங்கள் இழுக்காதீர்விட்டுவிடும்
தரையிலிழுக்காதே தர்மமாய்ப்போகுதையா
பூமியிலிழுக்காதே புண்ணியமாய்ப்போகுதையா
கோடிசரணமையா கும்பிடுவேன்விட்டுவிடும்
ஆயிரஞ்சரணங்காண் அடிபணிந்தேன்விட்டுவிடும்
மூவாயிரஞ்சரணம் முடிசாய்த்தேன்விட்டுவிடும்
என்றுவருந்திடவே இயல்கான தருமலிங்கம்
ஏமனும்ராமனும் இருவருந்தான்பார்த்து
பெருமாள்மனமிரங்கிப் பிரியமுடனே
வீமனைத்தானிட்டார் வேதர்பெருமாளும்
தக்கபுகழுடைய தருமரவரோடிவந்து
வீமனையெடுத்துவந்து மெத்தெனவேதான்வளர்த்தி
வீமருகாக வேந்தரும்வீற்றிருந்தார்

தோராவடிவழகி துரோபதையாளேது சொல்வாள்
ஒட்டச்சிபாதத்திலே உத்தமியாள் தான்விழுந்து
தாயேஒட்டச்சியுன் தருமமாய்ப்போகுதம்மா
(என்னை)மாலையிட்ட மன்மதண்டி வலியாதே பூமியிலே
(இந்த)வையகத்தையாண்டவரை வலியாதே தாயாரே
பூமியையாண்ட வர்கள் புரட்டாதேமாதாவே
அங்கம்பொறுக்கவில்லை ஆச்சிநீவலியாதே
ஆயிரந்தெண்டனம்மா அடிபணிந்தேனுந்தனுக்கு
மூவாயிரஞ்சரணம் முடிவணங்கித்தெண்டனிட்டேன்
கோடிசரணமம்மா கும்பிட்டேன் விட்டுவிடும்
என்றுவருந்தினளே இளங்கொடியாள் துரோபதையும்
ஏமனும்பெருமாளும் இருவருந்தான் கேட்டு
பரிதாபந்தாளாமல் பார்த்தனைவிட்டார்கள்
தோராவடிவழகி துரோபதையுமோடிவந்து
இளங்கொடியாளர்ச்சுனரை எடுத்துவளர்த்திடவே
ஒட்டனும்ஒட்டச்சியும் உத்தாரமேனசொல்வார்
எடுத்துப்புதையுமென்று ஏகிநடந்தார்கள்
தோராவடிவழகி துரோபதையுமேது சொல்வாள்
இன்றெல்லாமிங்கிருந்து ஏங்கியழுதாலும்
நம்பாலேயொவாது ராசாவேயொன்றுமில்லை
மாயன்பெருமாளை மனதில்நினைத்தழுதால்
வருந்தியழுதாலே வருவார்காணும் பெருமாள்
மாயன்வந்தபிற்பாடு வயணந்தெரியுமென்றாள்

தருமராஜர் தன்தம்பிமார் பிழைப்பதற்காக எம்
பெருமாளை நினைத்துப்புலம்புகிறது.

சாயாம்புமன்னவரும் தருமரவரென்னசொல்வார்
அடியளந்தமாயவரே ஆதிமூலவாருமென்று
எல்லையளந்தசாமி யெம்பெருமாள்மேகவண்ணா
கல்லான அகலிகையை நல்லபெண்ணாக்கிவைத்தாய்
மூலமென்னுங்குஞ்சரத்தை காத்தமுகில்வண்ணா
ஆலிலைமேல்பள்ளிகொண்ட அரிராமாவாருமையா
மச்சவடிவுகொண்ட அச்சுதரேயிச்சகத்தில்
கூர்மவடிவுகொண்டு பாதாளம்போய்வந்தீர்
சிங்கமாயிரணியனைப் பங்கஞ்செய்துமார்பிளந்தீர்
ராமர்வடிவுகொண்டு ராவணனைச்சங்கரித்தீர்
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீரே
அம்பலத்தில்துரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
மண்டலங்கள்தானறிய மாளாத்துகில்கொடுத்தீர்
பகையாளிவாசலிலே பட்சமவைத்துக்காத்தீரே
எதிராளிமுன்னாலே எங்களைக்காத்தீரே
உன்மகிமையாரறிவார் உம்பர்பிரானறிவார்

நீரேதுணையுமல்லால் வேறேதுணையுமில்லை
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகங்காணுது
கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகங்காணுது
ஏழைபழுதகண்ணீர் கூரியவாள்தைக்கிலையோ
நானழுதகண்ணீர் ரம்பங்கொண்டறுக்கிலையோ
என்றுபுலம்புகிறார் இயலானகருமராயர்
தருமருடனுக தவிக்கிறாள் துரோபதையும்
கூடப்புலம்புகிறாள் கொம்பனையாள் துரோபதையும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

தருமருந்துரோபதையும் வருந்துகிறதை எமனும்பெருமாளும்
கேட்டு சந்தோஷித்து இவர்களிருவரும் வருவது.

எமனும்மாயவரும் இருவருந்தான்கேட்டு
சந்தோஷப்பட்டாரே சாமிபெருமாளும்
எமன்கடாமேலே எம்பெருமாள்கருடன்மேலே
இருவருமாகவே எழுந்தருளிவந்தார்கள்
தருமரிடத்திலே இருவரும்வந்துநின்றார்
தருமருந்துரோபதையும் சாமியைக்கண்டவுடன்
சரணமடைந்தாரே சாமிபெருமானை
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
இருவரையுந்தெண்டனிட்டு இட்டார்சிம்மாதனத்தில்
சிம்மாதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இருமிருமென்றுசொல்லி இருவரையுந்தெண்டனிட்டார்
எமனுமாயவரும் இருந்தார்சிங்காதனத்தில்
வண்ணச்சிங்காதனத்தில் வந்திருந்தாரிருவருமாய்
ஆடியனந்தமாயவரும் ஆண்டவருமென்னசொல்வார்
என்னவகையாக எனையழைத்தீர்தருமலிங்கம்
அழுதுபுலம்புவதேன் ஆயாசமாகுவதேன்
என்னபுதுமை எனக்கறியச்சொல்லுமென்றார்
அப்போது தருமலிங்கம் ஆயருக்கேதுசொல்வார்
சுயம்புமன்னவனார் தருமரெடுத்துரைப்பார்
மான்பிடிக்கவந்தவர்கள் மாயவரேதம்பியர்கள்
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்குடித்தார்கள்
விஷநீரைத்தான்குடித்து வேந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
தம்பியரைத்தேடியே தையலருநானும்வந்தேன்
அழுதுபுலம்பிவந்து அண்ணாரைக்கண்டோமே
தட்டியெழுப்பினேன் செத்துமடிந்திருந்தார்

பார்த்துவயறெரிந்து பதைத்துப்புலம்பினான்
கண்டுவயறெரிந்து கார்வண்ணனுபுலம்புகையில
எவனோதெரியாது இராட்சதனைபோலொட்டனவன்
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவொட்டன்
ஒட்டன்மனைவியவள் ஒட்டச்சிகூடவந்தாள்
இந்தவனத்திலே எவரெவர்மாண்டாலும்
எடுத்துப்புதைக்கிறது இங்கேயவர்க்குத்தரலாம்
வீமரருச்சுனரை வெகுதூரங்கொண்டுபோனார்
தம்பிமாரிருவரையுந் தானிழுத்துப்போனார்கள்
கண்டுமனம்பதைத்துக் கதறிப்புலம்பினோம்
பார்த்துமனந்தாளாமல் பற்றிவயிறெரிந்தோம்
பாதத்தின்மேல்விழுந்து பத்துலட்சந்தெண்டனிட்டோம்
விட்டுவிடச்சொல்லி வெகுகோடிதெண்டனிட்டோம்
எங்கள்பரிதாபம் பார்த்துமனமிரங்கி
எடுத்துப்புதையென்றுசொல்லி இந்தவழிதான்கடந்தார்
அவர்கள்போனபிற்பாடு ஆண்டவனேயுனைநினைந்தேன்
தம்பியரைவிட்டு தரிக்கமனங் கூடவில்லை
என்செய்வேனென்றுதானேங்கிப்புலம்புகிறார்
தருமர்புலம்புவதை சாமியவர்பார்த்து
மாயன்பெருமாளும வார்த்தையங்கேதுசொல்வார்
தருமர்முகம்பார்த்து சாமியுமேதுசொல்வார்
என்செய்வோம் தருமரே எழுத்துப்படியிவ்வளவு
அன்றெழுதுங்கர்த்தன் அழித்தெழுதப்போறதில்லை
கதிரைதொலைக்கலாங் காவேரிநீந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வெல்லவகையறியோம்
பிரமனெழுத்திற்குப் பிசகுகள்வாராதே
மாண்டார்பிழைத்தாலே வையகங் கொள்ளுமோ
செத்தார்பிழைத்தாலே செகமெல்லாங்கொள்ளுமோ
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டாலும்
ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவாரென்று மனதில்நினையாதே
செத்தார்வருவாரென்று சித்தத்திலெண்ணாதே
தம்பியரையெடுத்து தகனங்கள்செய்யுமென்றார்
இவ்வண்ணமாகவே எம்பெருமான்சொல்லவுமே
தருமர்மனதறிய சாமியுரைக்கலுமே

எம்பெருமான் செத்தவரை தகனஞ் செய்யுமென்று தருமர் மனமறியசசொன்னார் அதுகேட்டு தருமருந் துரோபதையும் புலம்பி சுவாமியை மடிபிச்சைகேட்டது.

எம்பெருமான்மாயவரும் இப்படித்தானுரைக்க
சாமியுரைகேட்டு தருமர்மிகத்தளர்ந்து

சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
மெத்தமனதுநொந்து வேந்தர்புலம்புகிறார்
அடித்தபயில்போலே அழுதுபுலம்புகிறார்
பச்சைபுழுவெடுத்து பெருநெருப்பிற்போட்டாபோல்
துடித்தபுழுப்போலே துள்ளிப்புலம்புகிறார்
உன்னையேநம்பி உயிர்கொண்டுலாவுகிறேன்
நம்பியிருந்தவென்னை நட்டாற்றில்விட்டுவிட்டாய்
இப்படிநீகைவிட்டால் எப்படிக்குநான்பிழைப்பேன்
ஆற்றங்கரையருகில் ஆலமரம்போலானோம்
குளத்தங்கரையருகில் கோடாலிக்காம்பானோம்
நட்டாற்றிலேமுளைத்த நாணலுங்கோரையானோம்
உள்ளங்கைநெல்லிக்கனி உருக்குலைந்துபோகுதே
கையில்செபமாலை எனக்குலைந்துபோனோமே
இனியிந்தபூமியிலே இருக்கவுமாகாது
என்னையுங்கொன்றுவிட்டு எம்பெருமாள்தகனஞ்செய்யும்
நால்வருடனே நம்மைத்தகனஞ்செய்யும்
என்றுபுலம்பினார் இயலானதருமலிங்கம்
துகில்வளர்ந்தபத்தினியாள் துரோபதைபேதுசொல்வாள்
தமயனருகில்வந்து தையலருமேதுசொல்வாள்
அண்ணருகேவந்து அழுதுபுலம்புகிறாள்
மங்கிலியப்பிச்சையது மாயவரேதாராயோ
மூநாணிபிச்சையது முகுந்தரேதாராயோ
என்றுமடியேந்தினாள் இளங்கொடியாள்துரோபதையும்

தருமருந்துரோபதையும் புலம்புவதை எம்பெருமாள்பார்த்து
மனமிரங்கி இங்கேயிருந்து வேறேயொரு ஜோகியாகவும்
வந்து நாலுபேரையுமெழுப்புகிறது.

தருமருந்துரோபதையுந் தானழுததைப்பார்த்து
கரியமால்மனமகிழ்ந்து கடுகநினைவுகொண்டு
இவர்களுக்குமுன்னாலே இருந்தாரேமாயவரும்
எம்பெருமாள்மாயவரும எண்ணவடிவெடுத்தார்
வேறேயுருவாக விஷ்ணுவடிவெடுத்தார்
மலையாளஜோகியைப்போல் வாராரேமாயவரும்
கைதனிலேமருந்துபையுங் காவியுடுப்புகளும்
தோளிலேசோளியுடன் தொங்கிறதடிகளும்
கையில்செபமாலை கமண்டலந்தானுடனே
தொண்ணூறுபத்துஞ்சென்ற தவண்டகிழவனைப்போல்
நானூறுமபத்துஞ்சென்ற நரைத்தகிழவனைப்போல்
தோலுநரம்புகளுந் தொங்குங்கிழவனைப்போல்
முள்ளுதடுத்தாலே முப்பதிடம்விழுவார்
நாணல்தடுத்தாலே நாற்பதிடம்விழுவார்
அறுகம்புல்தடுத்தாலே ஐம்பதிடம்விழுவார்

தள்ளாடித்தத்தளித்து தடிக்கோலையூன்றிக்கொண்டு
பஞ்சாட்சரமோதி பாதைவழியாக
சிவாவென்றுசொல்லி சீக்கிரமாய்வந்தாரே
அரகராவென்றலவோ அந்தவழியாகவந்தார்
தருமரருகில்வந்து அருமையோகியேதுசொல்வார்
அத்திபுரத்துக்கு சுத்திப்போறேனிதுவழியாய்
ஆரோ இருவர்கள் அழுதுபுலம்பினார்கள்
ஏதுக்கழுதார்கள் எனறறியஓடிவந்தேன்
அழுதவயணமென்ன ஐயாவேசொல்லுமென்றார்
புலம்பியழுவதென்ன புதுமைகளைசொல்லுமென்றார்
அப்போதுதர்மலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அப்போதெடுத்துரைப்பார்
மானபிடிக்கவந்தார்கள் வனத்திலேதம்பியர்கள்
வசநாபிதண்ணீருண்டு மாண்டாரேதம்பியர்கள்
விஷநீரைத்தான்புசித்து வேந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஒப்பிட்டவாளை உரையுருவிவிட்டாற்போல்
தப்பிப்பிழையாமல் சதிசெய்துமாண்டுவிட்டார்
என்றுசொல்லிதருமலிங்கம ஏங்கிப்புலம்பினார்
மாயவடிவெடுத்த மலையோகியேதுசெய்தார்
இறந்தொருநாலுபேரும எனனவேணுமுந்தனுக்கு
மாண்டதொருமன்னவர்கள மன்னருனக்கென்னவேணும்
உண்மையைச்சொல்லுமென்றே உத்தமரைகேட்கலுமே
தக்கபுகழுடைய தருமரெடுத்துரைப்பார்
இறந்தவர்நாலுபேரும் எந்தனுக்குதம்பியர்கள்
மயிலனையாள் துரோபதைக்கு மாலையிட்டமன்னவர்கள்
எங்களைத்தனியாய்விட்டு இறந்துமடிந்தார்கள்
என்றுமவருரைத்து ஏங்கிப்புலம்புகிறார்
மாயவடிவெடுத்த மலையோகியென்னசொல்வார்
இறந்தவர்நாலுபேரில் எவர்வேணுமுந்தனுக்கு
செத்தவரிலொருவரைநான் சீக்கிரமெழுப்பிதாரேன்
எவர்வேணுமுந்தனுக்கு இப்போதேசொல்லுமென்றார்
ஆமானால்சொலிவிடும் அல்லவென்றால்நானபோரேன்
தக்கபுகழுடைய தருமரவர்கேட்டு
மலையோகசொன்னதற்கு மன்னரெடுத்துரைப்பார்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்தாயார்குந்தியம்மாள் ஈன்றெடுத்தமூவர்களில்
இருவரிறந்தார்கள் இறக்கிறேனொருவன்
மறுதாயார்மைந்தர்களில் நகுலனையெழுப்புமென்றார்
தக்கபுகழுடைய தருமருரைக்கலுமே

மாயமாய்வந்ததொரு மலேசொகிதான்கேட்டு
தருமர்தினைவரிக்க சந்தோஷப்பட்டாரே
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தேகங்குளிர்ந்து திருத்தோளும்பூரித்து
உண்ணுமல்பூரித்து உடம்பெல்லாம்பூட்டுவிட்டு
கரியமாலஉளமகிழ்ந்து காலனையெச்சரித்து
நால்வருயிரையுமே நமனேரேவிட்டிடென்றார்

விஷநீர்குடித்து இறந்துபோனநாலுபேரும்
பெருமாளால் எழுந்திருந்தது.

எம்பெருமான்தானுரைக்க யெமனவர்கேட்டு
அப்படியேநல்லதென்று அந்தஎமனும்
பிடித்தவுயிரைவிட்டுப் போதவெழுந்திரென்றார்
தூங்கிவிழுந்ததுபோற் பாங்காயெழுந்தார்கள்
துள்ளியெழுந்தாரே துரைகளவர்நாலுபேரும்
மாயன்பெருமானை வணங்கியெதெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
பக்தபணிசெதவரை கண்டுமனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மாரோடேகொண்டணைத்து
சந்தோஷமாகத் தானிருந்தார்பெருமாளும்
தக்கபுகழுடைய தருமரடிபணிந்து
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமரெடுத்தணைத்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வாழ்ந்திருப்பீரென்னுடனே
நிற்பீர்நிலைதரிப்பீர் நீடூழிவாழ்ந்திருப்பீர்
கல்பதித்ததூணதுபோல் கலங்காமல்வாழ்ந்திடுவீர்
எண்ணைப்பெறுவீர் எதிர்த்தார்முடியறிவீர்
மைந்தர்களைப்பெற்றெடுத்து மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவீர்
போருக்குப்போயிடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றுகளறியிலே விரபட்டங்கட்டிடுவீர்
ஆல்போலவேதழைத்து அறுகுபோலவேவேரோடி
மூங்கில்போலெந்நாளும் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்களென்றுசொல்லி மனங்குளிரவாழ்த்தினார்
இருமிருமென்றுசொன்னார் இனிதாகத்தம்பிமாரை
அண்ணனுரையாலே அழகாகவீற்றிருந்தார்
மாயருரையாலே மகிழ்ச்சியாய்வீற்றிருந்தார்
தம்பிமாரைக்கண்டல்லவோ சந்தோஷப்பட்டாரே
தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
புருஷர்களைப்பார்த்து பூரித்தாளுத்தமியும்
கணவரைக்கண்டல்லவோ கட்டழகிமனங்குளிர்ந்து
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

எம்பெருமாள் துரியோதனன் சூதும் காளமகாரிஷி
செய்தயாகமும் வேதாளம்வரவும் தான் இவர்
காப்பாற்றினதும் பஞ்சவர்களுக்
குச் சொல்லுகிறது.

மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
திரியோதிரன்செய்த சேதியெல்லாம்சொல்லலுற்றார்
காளமகாரிஷியையுங் கடிகிவருந்தியவன்
கொல்லஅனுப்பினான் கொம்பனேயுங்களைத்தான்
காளமகாரிஷியுங் கடுகிவனந்தனிலே
அக்கினிகுழியருகே அனந்ததபசுபண்ணி
வேதாளமுண்டுபண்ணி வேந்தருங்களைக்கொல்ல
தாமரைப்பொய்கையொன்று தண்ணீருமுண்டுபண்ணேன்
மானுகவந்தலவோ வரவழைத்தேனுங்களைத் தான்
அந்தரமாய்தான்பேசி அனைவரையுங்கொன்றுவிட்டு
ஓட்டனைப்போலேவந்து உங்களைவலித்திருந்தேன்
என்னபலன்கண்டேன் இராசா வுங்களாலே
(என்ற) மாயனுரைகேட்டு எம்பெரியதருமராயர்
பாதத்திலேவிழுந்து பணிந்துமுறையமிட்டார்
உம்மையன்றிவேறுதெய்வம் ஒருவரெனக்கில்லையையா
உம்மைச்சதமென்று வுயிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
நீரேதுணையல்லால் வேறேதுணையுமில்லை
அடியாரைகாக்கிறது ஆண்டவரேயுன்பெருமை
காக்கிறேனென்றுசொல்லி கங்கணங்கட்டினீரே
இரட்சிக்கவேண்டுமென்று எம்பெருமாளாய்ப்பிறந்தீர்
இன்னமென்னவினைவருமோ யானறியேனாண்டவனே
ஏதேது செய்வானோ இராசன்திரியோதிரன்
அத்தனைக்குமவந்திருந்து அடியாரைக்காருமென்றார்
என்றல்லோ ஐவருமாய் இறங்கியடிபணிந்தார்
மெத்தமனமகிழ்ந்தார் மேகவண்ணரெம்பெருமாள்
சித்தமகிழ்ந்தார் தேசமெல்லாந்தான்குளிர்ந்தார்
நல்லது பஞ்சவரே ராசர்களேநீர்களும்
இந்தவனத்தைவிட்டு இன்னமொருவனத்தில்
மற்றுமொருவனத்தில் வாசங்கள்பண்ணுமென்றார்
என்னவினைவந்தாலும் என்னைநினையுமென்றார்
போய்வாரோமென்று பெருமாள்பயணமிட்டார்
எமன்கடாவின்மேல் எம்பெருமாள்கருடன்மேல்
வாகனத்தின்மேலேறி வழிபிடித்துப்போனார்கள்

எமபுரந்தான்தேடி யேமனும்போய்விட்டான்
நாலாம்வருஷம முடிந்தது பஞ்சவர்க்கு

நான்காவது காளமகாரிஷிவனம்

முற்றிற்று.

௫-வது, சமிந்தவமகாரிஷிவனம்.

ஐந்தாம்வருஷம் பிறந்தது ஐவருக்கு
கூடைசலைமேலே குடிவாழ்ந்தகைகானகத்தில்
அத்திபுளிசாலை தும்பையும்தூதுவளை
தினமுந்திரிகிறார் தேசாந்திரிபோலே
சமிந்தவரிஷிவனத்தில் தானடைந்தார்பஞ்சவர்கள்
ஓரடுக்குப்பர்ணசாலை கண்டுபண்ணுமவர்களும்
மூன்றடுக்குப்பர்ணசாலை முடிபண்ணருண்டுபண்ணார்
ஐந்தடுக்குப்பர்ணசாலை ஆனைமுகருண்டுபண்ணார்
ஆறடுக்குப்பர்ணசாலை ஐவர்களுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்ணசாலை ஸ்திரிகளுண்டுபண்ணார்
பர்ணசாலைமேலாக பஞ்சவர்கள்குடியிருந்தார்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவ்வனத்திற்றானிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாள்வாசம்பண்ணார்
அநேகநாள்சென்றபின்பு ஆரணங்குதுரோபதையும்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கையிலே
உச்சிதங்கள்பார்த்தே உலாவிவருகையிலே
ஆகாயந்தனையளாவி அங்கேயொருமரந்தான்
வளர்ந்துதழைத்து மரத்திலேபழுத்திருக்கும்
ஒண்டிப்பழந்தான் உயர்ந்தகிளைமேலிருக்கும்
சூரியகாந்தியைப்போலே தானுந்துரோபதைக்கு
மெத்தாசைப்பட்டாளே மெல்லியிளங்கொடியாள்
கண்டாசைப்பட்டாளாம் காண்டீபன்தேவியரும்
இந்தகனியை எவர்பறித்துதான்கொடுப்பார்
தருமருடனேசொன்னால் தலைவிரிதைக்கேளாரே
மதவீமருக்குரைத்தால் வயிறாவுண்டிடுவார்
நகுலசகாதேவர் நம்மால்முடியாதென்பார்
அருச்சுனற்குதானுரைத்தால் அவராலேயாகுமது
மற்றொருவர்தானாலே மாளாதுகனிபறிக்க
அருச்சுனனைமெள்ள அழைத்துவருவோமென்று
மெல்லநடந்தாளே மேல்பொருதங்கண்ணாளும்
கொஞ்சிநடந்தாளே கொம்பேரிடையாளும்
அருச்சுனராசரண்டை அணுகிவந்துநின்று
அருச்சுனனைக்கண்காட்டி அழைத்தாளே இப்புறத்தில்
ஜாடையறிந்தல்லவோ தார்வேந்தனோடிவந்து

தருமராஜியால் தையலருமேது சொல்வாள்
ஒருமனுவுனந்தனுக்கு உத்தாரந்தாருமென்றாள்
அந்தவுரைகேட்டு அருச்சுனருமேதுசொல்வார்
மனதில்நினைத்ததெல்லாம் பயமின்னியேசொல்லுமென்றார்
சிந்தையிலெண்ணமெல்லாம் சீராகச்சொல்லுமென்றார்
கேட்டமனுவுக்கு கிளிமொழியேதாரேனென்றார்
உரைத்தபடியுனக்கு தருவேன்காணுத்தமியே
அந்தமொழிகேட்டு ஆயணக்குத்துரோபதையும்
கொஞ்சினவார்த்தையுடன் கோபாலன் தங்கையரும்
முத்துநகையாளும் முருகுழலாளேதுசொல்வாள்
காணாதுகண்டேனையா கண்டாசைப்பட்டேனையா
பாராதுபார்த்தேனையா பார்த்தாசைபட்டேனையா
தங்கத்தைக்காய்ச்சியே தரையிற்கவிழ்த்ததுபோல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டதுபோல்
சூரியனைப்போலழகாய்த் தோணுதுமாங்கனிதான்
சந்திரனைப்போலழகாய்க் காணிருக்குமாங்கனிதான்
அக்கனியையுண்பதற்கு ஆசைமெத்தத்தோணுது
மாங்கனியையுண்பதற்கு மனதுமெத்தத்தோணுது
அந்தக்கனிபறித்து அருச்சுனரேதாருமென்றாள்
மாங்கனிகளைப் பறித்து மன்னவரேநீர்தாரும்
என்றுவணங்கினாளே இளங்கொடியாள்பாஞ்சாலி
வணங்கியெழுந்திருந்து மன்னனுக்கேதுசொல்வாள்
தனஞ்சயரேகனி றித்துத் தாராமற்போனக்கால்
தண்ணீர்குடியேன்காண் தாகவிடாய்தீரேன்காண்
ஆறுமாதமானாலும் அன்னம்புசியேனென்று
சொல்லிப்பிணங்கினாளே துரோபதைபாஞ்சாலி
ஆணழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
கனிக்காகநீபிணங்கலாகுமோகட்டழகி
இதற்காய்பிணங்குவரோ இட்சணமேதாரேனென்றான்
அந்தரமாயிருந்தாலும் அறுத்துநான்தாரேனென்றான்
எந்தமரத்திலேயிருக்குது பெண்ணரசே
பழங்களிருக்கிறது பாரவனமெங்கேயென்றான்
என்றுமவர்கேட்க இளங்கொடியாளப்போது

அருச்சுனன் துரோபதைக்கு மாங்கனிபறித்துக் கொடுக்க வருகிறது.

வாருமையாவென்றுசொல்லி வணங்கியெழுந்திருந்து
அழைத்துவருகிறாள் அருச்சுனராசாவை
கூட்டிவருகிறாள் கொப்பெனவேயருச்சுனனை
கடந்தார்சிலதூரம் கனியிருக்கும்வனத்தே
வந்தாரிருவருமாய் மங்கைதுரோபதையும்
இதுதான்மரமென்று இளங்கொடியாள்காட்டலுற்றாள்

ஆறுமுழந்தான்மன்னன் அர்ச்சுனராசதுரை
மரந்தனிலிருக்குமந்த மாங்கனியைத்தான்பார்த்து
ஆயிரம்யோசனைதூரம் அந்தரமாயிருக்கிறது
இந்தக்கனிபறிக்க எவராலேமுடியுமென்றார்
இத்தனைதூரந்தனிலிருக்கின்றமாங்கனியை
எப்படிக்குநாம்பறித்து ஈந்திடலாம்துரோபதைக்கு
என்றுநினைத்து எழில்விசையனப்பொழுது
வில்லனைத்துநாரிபூட்டி வில்லைதணத்தொனித்தான்
அம்புறாத்தூணியிலே அலகபுதானெடுத்து
அர்த்தசந்திரபாணமதை அருச்சுனனுமுச்சரித்தார்
மந்திரதூபமிட்டு வாங்கிவிட்டானக்கனிமேல்
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளவிட்டானே
வருகுது அஸ்திரந்தான் மாங்கனியைத்தள்ளுது
மரத்தில்பழுக்கையல்லோ பாணமறுக்கையிலே
அந்தக்கனிவிழுமாம் அண்டரண்டந்தானதிர
பூமியதிர்ந்துவிழ பூலோகந்தத்தளிக்க
எல்லையதிர்ந்துவிழ எமலோகந்தத்தளிக்க
செற்பங்கலங்குது செந்தருவலோகமெல்லாம்
ஓங்கும்பெருங்கால்தான் ஒருபக்கம்நீர்வாங்கும்
நட்சத்திரங்களெல்லாம் நாலுதிக்கும்தானதிர
பூமிபாதிசேடன் புஜக்கோடேபுஜமதிர
ஆதிசேடன்தானும் அதிர்ந்துமேநஞ்சுகக்க
ஆகாசம்பிளக்கறதிர அங்கப்போய்விழுந்தது
மரத்திலிருந்தகனி மண்மேலவிழுந்தது
அருச்சுனருந்துரோபதையும் அக்கனியைப்பார்த்தார்கள்
பாரமலைபோலே பருவதம்போற்றோணுது
இருவராலாகாது இந்தக்கனியெடுக்க
இந்தக்கனியைநாமெடுத்து முடியாது
ஆறுமுழுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
வெற்றிமதயானை வீமரையழையுமென்றான்
அப்படியேநல்லதென்றாள் ஆனந்தவாழ்மாரி

துரோபதை வீமனை அழைக்க வீமன்வருகிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அன்னமதுபோலே ஆரணங்குவந்துமல்லோ
வெற்றிமதயானை வீமருகில்வந்து
அருச்சுனராசரும்மை அழைத்தோடிவாருமென்றார்
சீக்கிரம்வருகவென்று தேன்மொழியுந்தெண்டனிட்டார்
வெற்றிமதயானை வீமருகில்வந்து
அப்படியேநலலதென்று ஆனந்தவாழ்மாரி

இருந்தவிடத்தைவிட்டு எழுந்துநடந்தானே
இருவருமாகவே ஏகிநடந்துவந்து
கனியிருக்குமவ்வனத்தே சடுதியேகண்டார்கள்
தருமரறியாமல் அழைத்துவந்தானதையவரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
அசைக்கியேபார்த்தானே அசையவில்லை அக்கனிதான்
வெற்றிமதயானை வீமனவனே சொல்லுவான்
நகுலசகாதேவர் ராஜாக்களையழையுமென்றான்
ஆரணங்குதுரோபதையும் அப்படியேநல்லதென்று

துரோபதை நகுலசகாதேவர்களை அழைக்க அவர்களவருகிறது.

கொஞ்சியேவந்தாளே கொம்பேரிடையாளும்
நகுலசகாதேவ ராஜாக்கள்முன்னேவந்து
அருச்சுனரும்வீமரும் அழைக்கிறார் நங்களைத்தான்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்
நகுலசகாதேவ ராசாக்கள்தான்கேட்டு
அப்படியேநல்லதென்று அணந்தமாயெழுந்தார்
மூவர்களுமொன்றாக முடுகிவந்தார் வனத்தே
மாங்கனிதானிருக்கும் வனத்திலேவந்துசேர்ந்தார்கள்
நகுலசகாதேவ ராஜாக்கள்வந்தாரென்று
எல்லவருமொன்றாகி யெடுப்போங்கனியையென்று
ஐந்துபேருங்கூடி அக்கனியைத்தானெடுத்தார்
என்னபலங்கொண்டு இழுத்துவலித்தாலும்
எந்தவிதத்திலேயும் எடுபடலை அக்கனிதான்
சிந்தைகலங்கினார்கள் திடுக்கிட்டுமெய்மறந்தார்
மெத்தப்பயமாச்சே வேந்தர்கள்நால்வருக்கும்
தோராவடிவழகி துரோபதையைத்தானபார்த்து
அழகானதருமருக்கு அறிக்கையிடும்பெண்ணேயென்றார்
தோராவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்று

மாங்கனியினால் ஐந்துபேருந் திகில்பட்டுத் துரோபதை தருமரை அழைக்க தருமர்வருகிறது.

துள்ளியெழுந்தாளே துரோபதைநாயகியும்
ஓடிநடந்தல்லோ ஒருநொடியில்வந்தாளே
தருமரிருப்பிடத்தில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
வாள்விசையருச்சுனரும் மாங்கனியைத்தானறுத்தார்
எடுத்தாலெடுபடலையென்றுரைச்சொன்னார்கள்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
தக்கபுகழுடைய தருமரதுகேட்டு
இதுவென்ன அதிசயங்களென்றேயெழுந்திருந்தார்
தருமருந்துரோபதையும் இருவருமேவந்தார்கள்

மாமரத்தருகேவந்தார் மகாராசர்தருமலிங்கம்
உற்றுற்றுப்பார்த்துமே யோசனைபண்ணுகிறார்
தம்பிமார்நால்வரையும் தருமர்வரவழைத்து
சாயாம்புமன்னவனார் தருமரங்கேதுசொல்வார்
ஆருண்ணுமாங்கனியோ அறியேனே தம்பியரே
எவருண்ணுமாங்கனியோ யேதுமறியேனே
எங்கெந்தகத்தவர்கள் எடுத்துப்புசிக்கிறதோ
சத்தரிஷியவர்கள் சந்யாசியுண்கிறதோ
மேலுலகக்கந்தருவர் சாலவந்துண்கிறதோ
கைம்மோசம்வந்ததென்று கடிகியேதருமராயர்

மாங்கனியினால் மோசம்வந்ததென்று தருமர்எம்பெருமானை நினைத்து தோத்திரம்பண்ணுகிறது.

தர்க்கபுரமுடைய தருமரவர்பார்த்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
உள்ளங்குலைந்துமல்லோ உடம்புவிடவிடத்து
மன்னர்மனஞ்சலித்து மனதிலேயெண்ணுகிறார்
ஆரைநினைக்கிறார் அளவற்றசிந்தையிலே
எவரைநினைக்கிறார் எண்ணமற்றசிந்தையிலே
மாயனைபெருமானை மனதில்நினைத்தாரே
அண்டமுலகளந்த ஆதிமூலமிங்கேவர
ஏழுலகமாண்டசுவாமி எம்பெருமாளிங்கேவாரார்
மண்ணளந்துசனக்குரைத்த மாயவரிங்கேவர
தாடகைமேற்கறிந்த தயாளதனுயிங்கேவர
அகலிகைசாபந்தீர்த்த ஆண்டவரேவாருமையா
எல்லையளந்தவரே எம்பெருமாளிங்கேவர
ஏழைவருந்துகிறேனே எழுந்தருளிவாருமையா
இப்படியாக யிவர்வருந்துமவ்வேளையிலே

தருமர் இங்கே இப்படிவருந்துவதை எம்பெருமாள் அறிந்து தான்தருமரண்டை வருகிறது.

பஞ்சவர்கள்வருந்துவதைப் பாரளந்தார்தாமறிந்து
இவருக்குமிங்கேதான் அனர்த்தம்வருகுதென்று
சமிந்தவரிஷியாலே சாபம்வருகுதென்று
ஆபரவரறிந்து அங்கெனமேதானெழுந்து
இவரையுங்காக்கவென்று அப்பொழுதேவாறாராம்
பட்சிமாங்கருடனேறி மாயவனார்வாராரே
வனமாய்வனந்தாண்டி வாராரே தருமரண்டை
காடுசெடிதாண்டி கரியமலைதானதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இலவிலவறகாடும் செடியுமவனந்தாண்டி
சமிந்தவரிஷிவனத்தை தான்கண்டார்மாயவரும்
பஞ்சவர்கள்தானிருக்கும் பாரவனத்தில்வந்தார்

மாயவரைக்காவலகையில் வளர்பெரியதருமராயர்
ஐந்துபேருமாகவே ஆயவரைத்தெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
தெண்டனிட்டமன்னவர்கள் திருப்பிஎழுந்திருந்து
சிங்காதனங்களிட்டார் ஸ்ரீராயர்வீற்றிருக்க
இட்டதோராசனத்தில் எம்பெருமான்வீற்றிருந்தார்
பஞ்சவரைத்தான்பார்த்து பாரளந்தோரேதுசொல்வார்
ஏதுவகையாக என்னையழைத்தீர்கள்
அழைத்ததொருகாரியத்தை அடைவுடனேசொல்லுமென
(உங்கள்) மனதிலிருக்கிற மருமதனைச்சொல்லுமென்றார்

தருமர்மாங்கனியின் வரலாறுசொல்லுதல்.

மாயன்பெருமானும் வார்த்தைதனேதுசொல்வார்
சாபம்புமன்னவனார் தருமராயரேதுசொல்வார்
ஆகாததம்பிமாராகருடன்பிறந்தேன்
பொல்லாததம்பியுடனல்லாமற்பிறந்தேன்
எந்தவிதிவசத்தை என்னவென்றுசொல்வேன்காண்
ஆருண்ணுமாங்கனியோ அறியேனேமாயவரே
எவருண்ணுமாங்கனியோ பேதமறியேனே
ஆகாததம்பிகள் அறுத்துவிட்டாரெனசெய்வேன்
எம்பெருமான்தனையழைத்தா லெல்லாந்தெரியுமென்று
வந்தோமேமாயவரே வணங்கிச்சொல்லுமென்றார்

எம்பெருமான்மாங்கனியின் வரலாறுகேட்டபஞ்ச வர்களைப்பயங்காட்டி மனஞ்சோதிக்கிறது.

தர்மருரைகேட்டு சாமியவரேதுசொல்வார்
மாயன்பெருமானும் வார்த்தையைக்கேட்டுசொல்வார்
கைம்பாசமவக்குதேத கட்ட முகாபெனசெய்வோம்
தவசிற்பெரியவர்காண் சமிதவரிஷியாரு
வரத்திற்பெரியவர்காண் மகாதேவர்க்கொப்பிடலாம்
போகத்திற்பெரியவர்காண உற்றசப்பாபோகான்
ஒருநூறுவருஷமட்டும் போகத்திலேயிருப்பார
அவ்வருஷம்சென்றபின்பு அறுத்திடுவார்மாங்கனியை
அறுத்துப்புசித்திடுவார் அந்தமகாமுனியும்
அந்தமகாரிஷியும் இந்தவனந்தனக்கு
வருகிறநாளாச்சே மாங்கனியறுத்தீரே
வந்துஅவர்பார்த்து மாங்கனியெங்கேயென்று
கோபித்துக்கண்சிவந்து கொல்லநினைப்பாரே
கொல்லநினைப்பாரே குடிகெடுவாந்திடுமே
கல்லாகமண்ணாகச் சடுதிச்சபிப்பாரே
முள்ளாகமண்ணாக முனிவேசபிப்பாரே
இன்னுள்பிழைத்திருந்தேன் இறந்துவிடலாச்சே

சேனைகள் பிழைத்திருக்க செத்துவிட நாளாச்சே
திரியன் செய்த குற்றமோ, சிவன சாபப் பிழைத்தீரோ
மாபாவி செய்ததருமம் வாமனுராதிகன்
இந்தவனந் தன்னிலே இறந்துவிடக் காலமோதான்
சபிக்கத் தகவிதியாலே சாவுநாளாச்சே
இதற்கோ வெகுபிழைத்தீர் என்றுரைப்பாய் மாயவனுர்

கப்பெருமாள் கனியின் வரலாறுசொல்லி தன்னாலேயொன்றும்
ஆகாதென்றுசொல்ல தருமர்புலம்புகிறது.

இப்படியாகவேதான் செப்பதிருமாலும்
இவ்வார்த்தைகேட்டபோதே வழியிலான தர்மலிங்கம்
முகில்வண்ணர் முன்னாலே முறையிடத் தொடங்கினார்
ஆகாதுதயாபரா அசடருடன் பிறந்தேன்
பொல்லாதகட்டருடன் பிறந்ததொரு தன்மையினால்
(என்) அங்கக்குடையைத்தே ஆண்டவரே என்னசெய்வேன்
கண்ணா நீயாமே சிக்கனியைத் தானறுத்தார்
ஆதிக்கேசவமாயவனே அறாவெட்டேனிக்கனியை
பார்த்தபோதே மாயனால் பறிக்கவொட்டேன் மாங்கனியை
அடியார்கள் செய்தபிழை ஆண்டவனே பொறுத்து
தெரியாதார் செய்தகுற்றம் தேவரீரே பொறுத்து
(உன்) உள்ளங்கைநெல்லிப்பழம் உருகுலைந்துபோகாமல்
(உன்) பொட்டியின் பூஷணங்கள் பெருமைகுலையாமல்
(உன்) தோளில்செபமாலை தொண்டழிந்துபோகாமல்
(உன்) கையில்செபமாலை சண்குலைந்துபோகாமல்
காக்கக்கடவனுக்கு கரியமாலைப் பெருமாள்
ஆரைச்சதமென்பேன் அவனியரைத் தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத் தஞ்சமென்பேன்
என்றுதருமரங்கே நின்றுபுலம்பக்கேட்டு
மாயன்பெருமானுமப்போ மறுவார்த்தையேது சொல்வார்
அண்ணாவெறுக்காதே என்மேலேசலியாதே
உத்தமரே உங்களாலே மெத்தப்பெப் பழுதாச்சே
ஏகச்செல்வருரும் என்றார்பெருமாளும்
தக்கபுகழுடைய தருமராஜரேது சொல்வார்
பரிதாபங்கள்படப் பார்த்ததுமேபோவதற்கு
மனமுறாவருத்தமே மாயவரேவுந்தனுக்கு
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்மாயவரும்
புகழ்வேந்தர்வார்த்தைக்குப் பொருந்தவேணுமிக்கனிதான்
ஐவருடன்வார்த்தையினால் அம்மரத்திலொட்டவேணும்
அல்லாதேபோனால் ஆராலுமுடியாது
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
அடியேனாலேதாகும் ஆண்டவரேசொல்லுமையா

எம்பெருமான் ஐவருடைய எண்ணமும் துரோபதை எண்ணமும் அறிந்து மாங்கனிமரத்தில் பொருந்தினது.

தருமருரைகேட்டு சாமிமனமகிழ்ந்து
மாயனபெருமானும் வார்த்தையவரேதுசொல்வார்
ஐவர்மனதறிய ஆண்டவரேதுசொல்வார்
தக்கபுகழ்பெரிய தருமரேநீகேளும்
(௨௯) மனதிலேகொண்டிருக்கும் மர்மத்தைச்சொன்னீரானால்
வஞ்சனைகளெண்ணாதே மனக்கவடுவையாதே
உண்டானபடியாக உரைத்தீரேயாமாகில்
அற்றுவிழுந்தகனி அம்மரத்திலொட்டுமென்றார்
மண்மேல்விழுந்தகனி மரத்தின்மேலேறுமென்றார்
அல்லாதேயாமானால் அக்கனிபொருந்தாது
இல்லாதேயாமானால் இறந்துமடிவீர்கள்
சொல்லாதேபோனால் சுருக்காய்மடிந்திடுவீர்
பெருமாளவர்சொல்லப் பேர்பெரியதர்மலிங்கம்
மாயருரைகேட்டு மகாராசரேதுசொல்வார்
மனதிலிருக்கின்ற மர்மத்தையேதுசொல்வார்
தன்மனதிலுள்ளபடி தார்வேந்தரேதுசொல்வார்
பெரியதந்தைபெற்றெடுத்த பிள்ளைதுரியோதிரன்
தம்பிமார்தனுடனே தானுஞ்சுகமானால
ராச்சியம்நலமாகி நாமும்சுகமானால்
நாடெங்கும்வாழ்ந்திருந்தால் சேதமொன்றுமில்லையென்று
பெரியோருரைப்படிக்குப் பூமிசுபிக்காதோ
என்றுநினைவொழிய இனியொன்றுநானறியேன்
இப்படிக்குதானுரைத்து இருந்தாரேதர்மலிங்கம்
அப்போதுமாங்கனியும் ஆகாசமேயெழும்பி
அறுந்துவிழுந்தகனி அந்தரத்திலெழும்புகுது
இருநூறுயோசனைகள் எழும்பியேநின்றதங்கே

மாயனுக்குதருமர் மனதுபாவஞ்சொல்லமாங்கனி இருநூறுயோசனைதூரமெழும்ப பெருமாள் வீமனைக்கேட்கிறது.

எம்பெருமாள்மாயவரும் ஏதுசொல்வாரப்போது
மதவீமனையழைத்து மாயவனுமேதுசொல்வார்
உன்மனதிலுள்ளபடி யுரையுமென்றார்மாயவரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
துரியோதிரராசன் சேனைபரிகலங்கள்
குருடன்மகனோராங் குடிகெடுத்தராசர்களை
நூலல்கமுந்திரளார் நூற்றொருவர்ராசர்களை
கௌரவர்சேனைதன்னைக் கண்டதுண்டமாக்கியல்லோ
ஆனைகுதிரைகளை அழகுள்ளசேனைகளை

சூதத்துரோகி சகுனியவனையுமே
கொன்றுவதைக்கி கொடும்பனையாள் துரோபதையை
சொர்ணக்குழலி மைக்கூந்தல்முடிக்கவைப்பேன்
துகிலையுரிந்தவொரு துர்ச்சாதனனுதிரமெல்லாம்
வாரிக்குடித்தாலே வயிறெரிவு தீருமையா
அள்ளிக்குடித்தால அந்தரிக்குமையா
பார்பெரிய அண்ணருக்குப் பட்டந்தரித்தாலே
அப்போதுஎன்மனதில் ஆயாசந்தீருமையா
வெற்றிமதயானை வீமனுரைக்கையிலே
என்றுமொழிந்தே எழும்புதமாங்கனிதான்
சாற்றும்நானூறுயோசனை தூரம்பறந்திடுமாம்

மாயனுக்குவீமன் மனோபாவஞ்சொல்ல மாங்கனி
நானூறுயோசனை தூரமெழும்பப் பெருமாள்
அருச்சுனனைக்கேட்கிறது

அப்போதுஎம்பெருமாள் அங்கனமேது செய்தார்
அருச்சுனரைப்பார்த்து ஆணழகர்கேட்கலுற்றார்
வான்விசையாவுந்தனிட மனதில்நினைந்ததெல்லாம்
ஒன்றுமொளியாமல் உரையுமென்று மாயவனார்
என்றவருரைக்க எழில்விசையனர்ச்சுனனும்
மாயனுரைகேட்டு வாள்விஜயனேது சொல்வான்
கர்ணன்சகுனியும் சாங்கேயரானவரை
கொல்லுகிறேனென்று சொல்லிக் கொடியசபதமிட்டேன்
சங்கமரைகொல்லுகையில் சமர்பூமிக்ஷேத்திரத்தில்
அமரதர்சமரதர் அளவற்றராஜனங்கள்
அனைவரையுங்கொன்றுமே அண்ணருக்குப்பட்டங்கட்டி
அண்ணருக்குப்பட்டங்கட்டி அடிபணிந்துநிற்கவென்று
எண்ணியிருக்கிறேன் இனியொன்றுமில்லையென்றான்
அறுநூறுயோசனையில் நின்றது அக்கனிதான்

மாயனுக்கு அர்ச்சுனன் மனோபாவஞ்சொல்ல
மாங்கனி அறுநூறுயோசனை தூரமெழு
ம்பப் பெருமாள் நகுலனைக்கேட்கிறது.

அப்போதுஎம்பெருமாள் அங்கெனவேயேதுசெய்தார்
நகுலனைத்தானழைத்து நாரணருமேது சொல்வார்
நாமமுடையானை நகுலனையன்றழைத்து
மனதில்நினைத்தவொரு மர்மத்தைச்சொல்லுமென்றார்
மாயருரைகேட்டு மன்னவனுமப்பொழுது
நாமமுடியான் நகுலனுமேது சொல்வான்
திரியோதிரன்படைகள் சேனைகளைக்கொன்றழித்து
ஆனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
மாற்றலராத்தங்கள் வழியைவிட்டுமண்மேலே
அதமாக்கிசேனைகளை அண்ணருக்குப்பட்டங்கட்டி

(என்) கண்ணாலே பார்ப்பதற்கு சுருக்கில் நினைத்தேனையா
என்றுமவனுரைக்க இருந்தானந்தனனுமே
அந்தவுரைகேட்டு அழகான மாங்கனியும்
அந்தரத்தில் நின்றகனி அப்புறத்திலே போகுது
எண்ணூறுயோசனையில் நின்றது அக்கனிதான்

பெருமானுக்குநகுலன் பமைைபாவஞ்சொல்ல மாங்
கனி எண்ணூறுயோசனை தூரமெழும்பப்
பெருமாள் சகாதேவனைக் கேட்டது.

எம்பெருமாள்மாயவரு மேதுசெய்தாரப்பொழுது
சகாதேவராசாவை சாமிபார்கேட்கலுற்றார்
இளையசகாதேவா எண்ணமெல்லாஞ்சொல்லுமென்றார்
காமமுடியழகன் சகாதேவனேதுசெல்வான்
திரியோதிரன் படையை சேனைபரித்தளத்தை
உனபாதம்சிரசில்வைத்து உக்கிரமாய்சண்டைசெய்து
அண்ணனுக்குப்பட்டங்கட்டி அவனிதனையாளவென்று
எண்ணியிருக்கிறேனே இதுவே நினைவொழிய
மற்றொன்றுமில்லையென்று மாயர்பதம்பணிந்தான்
இவ்வாறுதானுரைக்க இருந்தான்சகாதேவன்
அப்போதுமாங்கனியும் அனேகதூரமெழும்பி
தொலாயிரம்யோசனை தூரம்நின்றதக்கனிதான்

எமபெருமானுக்குசகாதேவன் மமைபாவஞ்சொல்ல
மாங்கனி கொள்ளாயிரம்யோசனை தூரத்திலே நிற்க
எம்பெருமாள் துரோபதையைக் கேட்கிறது.

ஆதிநாராயணரும் அங்கெனமேவேது செய்தார்
மாயன்பெருமானும் வார்த்தைகளேது சொல்வார்
பாஞ்சாலனைபெற்றபெண்ணே பத்தினியே துரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நீலப்பசுங்கிளியே
ஐவருக்குந்தேவியரே அழியாதபத்தினியே
மனதில்நினைத்ததெல்லாம மங்கையரேசொல்லுமென்றார்
நெஞ்சில்நினைத்ததெல்லாம் நேராகச்சொல்லுமென்றார்
அப்போதுதிரௌபதையுமாரணர்க்குமேது சொல்வாள்
தூயதகிலைப்புலியாள் துரோபதாப்பத்தினியாள்
வானத்திலப்புலியான மாசுபடாப்பசுங்கிளியாள்
என்னவென்றுசொல்லலுற்றாள் மேலப்பசுங்கிளியாள்
திரியோதிரன்பாளயத்தை செருக்களங்கள் தொன்றழித்து
ஐவர்களிட்டதொரு அருஞ்சபதஞ்சென்றபின்பு
வெற்றிமதயானை வீருடைகையாலே
பாம்புக்கொடிவேந்தன் பட்டபிறகாக
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்பட்டபின்பு
நாகக்கொடியோனும் நாசமடைந்ததாலே
(அவன்) மல்லாக்காய்விழுந்தவுடன மார்மேலேதானிருந்து

மார்பைப்பலகையாக்கி மார்பெலும்பைச்சிப்பாக்கி
மார்பில்வருமுதிரமெல்லாம் வாரித்தலைதடவி
கல்லெண்ணெய்ப்போலே நலங்கிட்டுகூந்தலுக்கு
சிப்புசிக்கங்கோலெடுத்து சீவிமயிராற்றி
அவன்-குடலைப்பிடுங்கியல்லோ கொண்டைக்கயிறுகட்டி
காலிப்பிச்செடுத்து யிறுக்கித்தலைக்கயிர்முடிப்பேன்
என்-விரி தமயிர்முடிக்க வெணநாள்சென்றிடுமோ
அவிழ்ந்தமயிர்முடிக்க அநேகநாள்சென்றிடுமோ
கூந்தல்முடிப்பேனென்று குறைசொல்ல தீர்வேனே
சாமியவராலே தலையைமுடிப்பேனே
என்றுநினைத்திருந்தேன் இனியொன்றுநானறியேன்
இந்தவிதஞ்சொல்லி இருந்தாளேபாஞ்சாலி

துரோபதை மனேபாவஞ்சொன்னது சரியல்லாமல்
தொலாயிரம் யோசனைதூரம்போன மாங்கனி
பூமியில்விழ பெருமாள் துரோபதையைக்
கேட்கத் துரோபதை சொல்லல்.

துரோபதைசொல்லலுமே தூரஇருந்தகனி
அந்தரத்தில்நின்றகனி அவனியதில்விழுந்தது
ஆகாசப்போனகனி அற்றுவிழுந்தது
கண்டார்சபையோரும் கடுகெனவேயேதுசொல்வார்
மனதில்கபடுவைத்து வஞ்சனைகள்சொன்னதினால்
அந்தரத்தில்நின்றகனி அவனியிலேவிழுந்ததென்றார்
ஏதேதொளித்தாயோ எந்தனுக்குச்சொல்லுமென்றார்
ஒன்றுமொளியாமல் உத்தமியேசொல்லுமென்றார்

துரோபதைமறுபடியும் பெருமாளுக்கு உண்மையைச்
சொல்லமாங்கனி மரத்தில் பொருந்தினது.

அப்போதுரோபதையும் ஆரணங்கேதுசொல்வாள்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இன்னமொருபாவம இனியொன்றுநானறியேன்
மற்றுமொருபாவம் வஞ்சனைகளொன்றறியேன்
அண்ணாநரியமாலே அடியேனொருவார்த்தை
பார்த்தனைமாலையிட்டப் பாஞ்சாலனென்னைப்பெற்றான்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குடக்கொடுமைசெய்ததில்லை
அடிக்கிறகாற்றதனில் அலைத்துரும்புதானுமுண்டு
காலவிஷமுண்டவர்க்கு கண்டங்கருப்புமுண்டு
நீரிற்சுழலுமுண்டு நிலமதனிற்பூச்சுமுண்டு
தண்ணீர்க்கலையுமுண்டு சந்திரற்குமாசுமுண்டு
சந்திரற்குமாசுமுண்டு சற்றேகருப்புமுண்டு

குண்டுமணிக்காணுலும் கொஞ்சங்கருப்புமுண்டு
எனக்கு-மையேகருப்பொழிய மற்றக்கருப்புமில்லை
பொட்டேகருப்பொழிய பின்னைகருப்புமில்லை
அக்கினியிற்பெண்பிறந்தேன் ஐவரையுமாலையிட
நெருப்பிலேபெண்பிறந்தேன் அருச்சுனரைமாலையிட
என்-கூடப்பிறந்தது கோதண்டமானவில்லு
பத்தரையில்நான்வளர்ந்தேன் பார்த்தனீரமேலுமென்று
அடுக்கரையில்நான்வளர்ந்தே னர்ச்சுனமேல்மேலுமென்று
வளர்ந்துசமைந்தேனே மாலையிடுநாளானேன்
போதவளர்ந்தேனே பிள்ளைபெறுநாளாச்சு
இப்படியாக விருக்கின்றவேளையிலே
எழிலான அர்ச்சுனற்கு என்னைக்கொடுக்கவென்று
என் தகப்பன்பாஞ்சாலன் எண்ணியிருக்கையிலே
அரக்குமாமாளிகையில் ஐவர்மடிந்தாரென்று
மாண்டார்களென்றுசொல்லி மண்டலத்திற்பேராச்சு
செத்தார்களென்றுசொல்லி ஜெகமெல்லாம்பேராச்சு
அப்போதுஎன்தகப்பன் ஆயாசப்பட்டுருகி
அருச்சுனற்கென்றபெண்ணை ஆர்க்குநீகொடுப்பேனென
அருச்சுனரைப்போலாக ஆண்பிள்ளையில்லையென்று
வில்லுவளைப்போர்கள் மேதினியிலில்லையென்று
ஏலம்பசுங்கிளியை எப்படிகாப்பேனென்று
எண்ணுதுமெண்ணியே இருந்துவிசாரமிட்டார்
இப்படியாக யிருக்கின்றகாலத்தில்
வந்தாரேஅந்தவேளை மகாவியாசபகவானும்
என் தகப்பன்பாஞ்சாலன் எழுந்திருந்துஓடிவந்து
கண்டவுடனேயல்லோ கடுகஎழுந்திருந்து
வந்தவியாசனை வணங்கியேதெண்டனிட்டு
இருமிருமென்றுசொல்லி யிட்டார்சிங்காதனங்கள்
இட்டசிம்மாதனத்தில் எரியவர்வீற்றிருந்தார்
என்தகப்பனைப்பார்த்து என்னவென்றுநன்க்ஷேமம்
அப்போதுஎன்தகப்பன் ஆயாசமாயுரைப்பார்
எந்தன் விசேஷமெல்லாம் எடுத்து அவர்க்குரைத்து
அருச்சுனற்கென்றுநான் அனலிற்பிறந்ததுவும்
அரக்குமாமாளிகையிலே இறந்ததுவும்
இக்கதையுஞ்சொல்லி இருந்தாரே என்தகப்பன்
அப்போவியாசரும் அரசனுடைவார்த்தையெல்லாம்
செவிகொடுத்துக்கேட்டுமனமகிழ்ந்து [illegible]
உடக்கமிபாள்தலனுடனே ஒன்றாய்ப்பிறந்தவில்லு
கூடப்பிறந்ததொரு கோதண்டமானவில்லு
[illegible]
பொருவில்வளைக்கவர்க்குப் பெண்ணைத்தருவேனென்று

ஐம்பத்தாறுதேசத்துள்ள அரசர்கள்தானறிய
அரசர்கள்தானறிய அறையும்பறையோசை
அப்போதறிந்திடலாம் ஐவருட்சேதி
என்றுமவருரைத்து ஏகிநடந்தாரே
அந்தவுரைகேட்டு ஆனந்தமாயெழுந்து
கூடப்பிறந்ததொரு கோதண்டமானவில்லை
வந்துவளைத்தவற்கு மாலையிட்டுத்தருவேனென்று
வில்லைவளைத்தவற்கு மெல்லியைத்தருவேனென்று
ஐம்பத்தாறுதேசத்து அரசர்க்குமோலைதந்தார்
பெண்ணைத்தருவேனென்று பிடித்தார்கள்சின்னத்தொனி
சின்னத்தொனியையல்லோ தேசமெல்லாம்ஊதிவைத்தார்
பாஞ்சாலன்சீமையெல்லாம் பந்தலலங்கரித்தார்
எங்குமலங்கரித்தார் இராசாக்கள்வந்திருக்க
பாஞ்சாலன்சொன்னதொரு பரிவானவார்த்தையினாலே
ஐம்பத்தாறுதேசத்துள்ள அரசர்கள்வந்திருக்க
நாலுபுறத்திலுள்ள ராஜரெல்லாம்வந்தார்கள்
முத்துமுடிதரித்த முடிமன்னரானவரும்
பச்சைமுடிதரித்த பட்டத்துராசர்களும்
வச்சிரமுடிதரித்த மண்டலத்துராசர்களும்
காசிநாடாண்டதொரு கர்ணமகாவீரியரும்
நாலுதிக்கிலுண்டான ராஜரெல்லாம்வந்தார்கள்
அப்பெரியபந்தலிலே அருச்சுனரும்நீருமாய்
அன்றொருபார்ப்பானாய் அங்குநீங்கள்வந்தீர்களே
பாஞ்சாலன்தானறியான் பாராளுந்தாரணவரை
ஆருமறியாமல் அவரெடுத்தமார்க்கமெல்லாம்
உங்கள்வடிவுதனை ஒருவரறியார்கள்
அந்தசமயத்தில் அடைவுடனேஎன்தகப்பன்
வந்திருந்தராசர்களை வளையுமென்றார்வில்லதனை
எப்பெரியராசர்களும் இவ்வில்வளைக்கறியார்
கண்டபந்தனையெடுப்பார் கலங்கிவைத்திடுவார்
ஆராலும்முடியாது அப்பெரியவில்வளைக்க
காசிநாடாண்ட கருணனெழுந்திருந்து
வில்லைவளைத்துமல்லோ வில்நாரிபூட்டுகையில்
கண்ணுதுமெண்ணினனே இவனேபுருஷனென்று
வடிவுசிலையுடையான் மாலையிடவேணுமென்று
எண்ணினேனென்மனதில் இனியொன்றுநானறியேன்
வில்லைவளைக்காமல்கர்ணன் வில்தெறித்துப்போய்விழுந்தான்
அன்றுமொருபார்ப்பானாய் அருச்சுனர்வில்வளைத்தார்
நீர்பார்த்ததுமில்லைப்பார் நிலக்கிலக்குமுடியார்
பார்ப்பான்கழுத்திலே பணிமாலைபோடுமென்றார்
குஷ்டரோகியானவர்க்குக் குடித்தனஞ்செய்வேனோ

என்றல்லோ மாலைதன்னை எடுத்தே சுழற்றிவிட்டேன்
கர்ணன்கழுத்திலே கைமாலைவிழாமல்
பார்ப்பான்கழுத்திலே பணிமாலைவிழுந்தது
அப்பாவஞ்செய்ததல்லால் ஆயமேயொன்றில்லை
அருச்சுனற்குமாலையிட்டு ஐவருக்குந்தேவியானேன்
பார்த்தருக்குமாலையிட்டு பஞ்சவற்குதேவியானேன்
மற்றொருபாவங்கள் மாயவரேசெய்தறியேன்

எம்பெருமானுக்குத் துரோபதை தன்கலியாணச் சங்கதி சரியாய்ச்சொல்ல மாங்கனிமரத்திற் பொருந்தியது.

தோராவடிவழுகி துரோபதையாள்சொல்லுகையில்
என்றபொழுதிலே எழும்புதுமாங்கனிதான
பொட்டெனவேதானெழும்பிப் பொருந்துதேமாங்கனியும்
தருமர்மனங்குளிர்ந்து சந்தோஷமானாரே
பஞ்சவர்கள்ஐந்துபேரும் பார்த்துமகிழ்ந்தார்கள்

எம்பெருமாள் பஞ்சவர்க்குப் புத்திசொல்லி தான் அவர்கையில் செலவுபெற்று துவாரகைக்குப்போகிறது.

ஐவர்மகிழ்ந்தபின்பு அரிராமரேதுசொல்வார்
பஞ்சவரைத்தானழைத்துப் பாரளந்தாரேதுசொல்வார்
இந்தவனந்தனிலே இருந்துசிலகாலம்
மற்றொன்றுவந்தாலுமென்னை நினையுமென்றார்
பத்திரமாக விருக்கவென்றார்பஞ்சவரை
போகச்செலவுதாருமென்றெழுந்தார்புண்ணியரும்
பஞ்சவர்களைவரும் பாஞ்சாலிதுரோபதையும்
ஐவருந்துரோபதையும் ஆண்டவனைத்தெண்டனிட்டு
போய்வாருமென்றுசொன்னார் புகழ்வேந்தரைவர்களும்
விடைபெற்றெழுந்தாரே வேந்தர்பெருமானும்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
காடுஞ்செடி தாண்டி சரியமலைதானே தாண்டி
ஆறுகளைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரியைநாடி துரிதமுடன்வந்துவிட்டார்
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போனபின்பு
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
பண்ணார்பஞ்சபாண்டவரும் மயிலனையாள்துரோபதையும்
அந்தவனந்திலே அநேகநாள்வாசம்பண்ணார்
இப்படியாக விருக்கிறார்பஞ்சவர்கள்

ஐந்தாவது சயிந்தவாகாரிஷிவனம் முற்றிற்று.

௯-வது, காமதேனுபர்வதம்.

ஆறுவருஷம் பிறந்தது ஐவருக்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோருர்கள்
கூடைதலையிலே குடிவாழ்க்கைசாமானத்தில்
கோவினைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னினைத்தசிமாடு வனவாசம்போருர்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோருர்கள்
காமதேனுபர்வதத்தை கிட்டியேதானடைந்தார்
காமதேனுவனந்தனிலே கடுகிவந்துசேர்ந்தார்கள்
ஐந்துபேர்க்குப்பர்ணசாலே அழகாகஉண்டுபண்ணுர்
எழுபேர்க்குப்பர்ணசாலே எழிலாகஉண்டுபண்ணுர்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
அநேகநெடுநாளாய் அவ்வனத்திலேயிருந்தார்
இப்படியாக யிருக்குமவேளையிலே

துரியோதிரன் ஆலோசனை.

தென்னமுடிவேந்தன் துரியோதிரன்தானும்
மணிக்காமுடிவேந்தன் மபாவியென்னசெய்தான்
சபைகளிலிருந்திருந்து சர்ப்பக்கொடியோனுரைப்பான்
காளமேகாரிஷிபாரைக் கருதித்தயவுபண்ணி
ஐவரையுங்கொன்றுவர பாண்டவர்வனந்தனிலே
கொல்லுகிறதெனறு நல்லசோபனமேபோனீரே
ஐவர் செத்ததுவும் பிழைத்ததுவுஞ் சேதிதெரியவில்லை
ஆகாதுதானென்று ஆளனுப்பவேணுமென்றான்
அப்படிச் சொல்லிவிடவே ஆள் வேருக வந்தார்கள்
துரியோதரனைவந்து வணங்கிநின்று சொல்வார்
எங்களை யாதுகாரியம் ஏவப்பணிசொல்லுமென்றார்
அப்போதுதிரியோதிரன் அவர்களுக்குப்பதில்சொல்வான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் இருக்குமிடம்பாருமேரே
எந்தவனத்தில் இருக்கிறுரோ ...றதையும்
ஐவருங்கைக்காணுமல் ஆறுமாதம்பார்த்துவாருங்கள்
காணுமல்போஞ்சொன்னல் பரிதாபங்கொண்டவனும்

துரியோதிரன தூதுவர்கள் பஞ்சவரைக்காணவருகிறது.

மகாராசன்சொன்னதெல்லாம் மல்லர்கள்தான்கேட்டு
வாருர்கள் தூதுவர்கள் மகாராஜன்சொற்படிக்கு
அத்திபுரந்தாண்டி அவசரமாய்வாருர்கள்
குருக்ஷேத்திரபூமி குருபூமிதேசம்விட்டு
காடுஞ்செடிகடந்து கடுகவேவாருர்கள்
சிலவனமுதலாகச் செடியுமவனந்தாண்டி
துரியனவனந்தனிலே ஆராய்ந்துபார்த்தார்கள்
அங்கேயுங்காணுமல் அப்பாலேதேடிவாருர்

ராமரிஷிவனத்தில் நடந்தெங்குந்தேடிவாறார்
அங்கேயுங்காணாதே அப்புறந்தேடிவாறார்
மூருக்கமகாரிஷிவனத்தில முடிகியே தேடினார்கள்
அங்கேயுந்தேடியே அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடிகியேதேடிவந்தார்
அங்கேயுங்காணாமல் அப்போதேபோகலுற்றார்
சயிந்தவரிஷிவனத்தில் கடிகியேதேடிவந்தார்
அங்கேயுங்காணாமல் அப்புறந்தேடிவாரார்
காமதேனுபர்வதத்திற் கண்டார்கள் பஞ்சவரை
ஐவரையுங்கண்டவுடன் அங்கேபயந்தொளிந்தார்
பஞ்சவர்களைவரையும் பார்த்துதிருமபினார்கள்
காவலர்களைவரையுங் கண்டுதிரும்பினார்கள்

துரியோதிரனனுப்பிய தூதுவர்கள் காமதேனு வனத்தில் பஞ்சவரைக் கண்டு துரியோதனற்குச் சொல்லல்.

கண்டல்லோ தூதுவர்கள் கடிகிவழிநடந்தார்
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
காடுவனங்களுமே கறியமலைதான் தாண்டி
ஆனந்தமாகவே அத்திபுரத்தில்வந்தார்
திரியோதிரனிருக்கும் சிங்காதனத்தருகே
மகாராசன்முன்னாக வந்துபணிந்தார்கள்
வந்துபணிந்துமல்லோ மன்னருக்கேதுரைப்பார்
துரியோதிரராசனுக்கு சேதிகளைச்சொல்லலுற்றார்
ஐவரைத்தேடியே ஆரணியமபோனோமே
மாண்டார்களென்றீரே வனத்திலேகண்டோமே
காமதேனுபர்வதத்திற கண்டுவந்தோம்பஞ்சவரை
அந்தவனத்திலே ஐவரிருக்கின்றார்கள்
பார்த்துபறந்துவந்தோம பஞ்சவர்களைவரையும்
கண்டுபறந்துவந்தோம் காவலர்களைவரையும்
என்றுமொழிந்தார்கள் ஏகிவந்த தூதுவர்கள்
துள்ளிமனங்கொதித்து சொல்லுவானோர்வார்த்தை

துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்கிபோகச் சகுனியுடன் ஆலோசனை பண்ணுகிறது.

என்றவுரைகேட்டு எரிநாசங்கொண்டவனும்
சபைகள்நிறைந்திருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போய் ஐந்தாறுவருஷமுண்டு
வில்வித்தைஆண்மைகளை மெத்தமறந்திருப்பார்
ஆனைசனுஞ்சேனையும் அண்டவொண்ணாப்படையுமில்லை
அக்ரோணிசேனைகூட்டி ஐவர்மேல்படையெடுத்தால்
ஐவரைக்கொன்றிடலாம் அதம்பண்ணிபோட்டிடலாம்

இதுவேசமயங்காண் இராசரைக்கொல்லுகைக்கு
அம்மான்சகுனியேநீ ஆலோசனைசொல்லுமென்றே

சகுனி திரியோதினனைப் பஞ்சவர்களுடன் சண்டைக்குப் போகச்சொல்லுகிறது.

அப்போசகுனியும் அங்கேயெடுத்துரைப்பான்
கொல்லைக்குப்பல்லியவன் குடிக்குச்சகுனியம்மான்
இதுசமயமிதுசமயம் இவர்குடியைக்கெடுக்கவென்று
மருமகனுக்காக வார்த்தைகளேதுசொல்வான்
மெய்வார்த்தைசொன்னீர்காண் விஷநாகங்கொண்டவரே
ஐவர்பிழைக்கஇனி ஆரணியம்விட்டுவந்தால்
தப்பிப்பிழைத்துவந்தால் தர்மர்பஞ்சபாண்டவர்கள்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுகேட்பாரே
இப்போபடையெடுத்து இராசரைக்கொன்றிடலாம்
நல்லசமயங்காண் நமக்குக்கிடைத்ததென்று
தென்னைமுடிவேந்தன் திரியோதிரப்பெருமான்
மாமனுரைகேட்டு மகாராசரேதுரைப்பார்

திரியோதிரன் சண்டைக்குப்போகச் சேனைகளைத் திட்டப்படுத்துகிறது.

ஆர்க்கனும்ராசர்களே அருகிருக்கும்மந்திரிகளே
ஐந்துகுருக்களுமே ஆயிரஞ்சேவகரும்
பலபலராஜனுமும் பத்துலட்சஞ்சேவகரும்
நாலானசேனைகளும் நடப்பார்கள்தாதியரும்
அத்தண்டசேனைகளும் அடங்கலும்பயணமென்றார்

திரியோதிரன் பஞ்சவர்களுடன் சண்டை பண்ணவருகிறது.

அப்போதுதிரியோதிரன் அவனுடையசேனைகளும்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றான்
இன்றுவெளிகூடாரம் இயலுடனேபோடுமென்றார்
நாட்டுமென்றார்சண்டாவை நகராவடியுமென்றார்
அங்கேநட்டான்சண்டாவை அடியுமென்றார்பேரிகையை
அடிபடுதாராயபேரி அண்டங்கிடுகிடென்ன
சண்டை சண்டையென்றுசொல்லி சண்டைநகாரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
ஆனையின்மேல்பேரிகையும் அசுவத்தின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஒருகோடிமுரசுகளும
தாளமொடுமத்தளமும் தவுல்முரசுவீராணம்
பதினெட்டுவாத்தியமும் பலதிசையுந்தானமுழங்க
அண்டரண்டந்தானதிர அடிபடுதுபேளவகை
முக்காதத்தூரமட்டும் முரசுமுழங்கிவர
நாற்காதத்தூரமட்டும் நாகசின்னமூதிவர

ஐங்காததூரபட்டும் அடிபந்தோரிகையும்
ஆனையின்மேல்நகபத்கா குதிரையின்மேலேடக்காவும்
கானனுக்கெடுத்தார்கள் கருப்புநல்கூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்கூடாரம்
மழைகாருக்கெடுத்தார்கள் வர்ணவெள்ளைகூடாரம்
பனிகாருக்கெடுத்தார்கள் பட்டுநல்லகூடாரம்
காற்றுக்கெடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
குதிரையொருகோடி தொக்கரித்தாருகுங்க
யானையுஞ்சேனைகளும் அண்டமொன்றானமுழும்
அமாதரும்சமாதரும் அதிரதமானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியராசவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
வேதியரும்மாகியரும் வில்வேந்தராசர்களும்
தொழுவர்பலைபானர் சோனகரும்வெட்டுவரும்
பட்டாவுஞ்சூரியமும் பாரிபவில்சமுதாடு
கேரிசமும்பெரியகத்தி நிகராணபாங்குகளும்
அதிருமிருப்புலக்கை ஆயுதவரிசையுடன்
ஈட்டிகத்திவேலாயுதம் எடுத்தார்கள்சூலாயுதம்
அத்தண்டராணுவமும் அல்லவரும்பயணமென்றார்
துரோணரும்அசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாச்சாரி கீர்த்திபெற்றகர்ணனுமே
சாமத்துரோகி சகுனிபவன்கூட
மாமாசகுனியும் மைத்துனன்சேசத்தரசன்
தங்கைமணவாளன் தறுதலைப்பொட்டிமகன்
அக்காள்மணவாளன் அறுதலியாள்பெற்றபிள்ளை
காந்தாரிபிள்ளைகளும் கவுரவர்சேனைகளும்
குருடன்பெற்றபிள்ளைகளும் கோடியரசர்களும்
ஐவரைக்கொல்லவென்று அனேகம்பேர்பயணமானார்
செந்தூளெழும்புகுது செய்யலோகங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
கொடிகள்பறக்குது குவலயமெட்டுது
முடிகள்திரிகுது மூன்றுலோகந்தத்தளிக்க
அச்சுகிறுகிறென்ன ஆனைநெடுந்தேரசைய
வண்டிக்கிரிச்சிகளும் மதயானைகோஷ்டமுடன்
குதிரைகளைததுவிழக் கோடிமன்னர்சத்தமிட
சங்கையினொச்சலது சமுத்திரகோஷ்டமுடன்
செல்லுமைவர்கள்தொகை சொல்லிமுடியாது
பாரஜெனங்களென்றால் மட்டுமிதக்கவில்லை
பஞ்சவரைக்கொல்லவென்று பட்டத்துராசவரானே
ஐவரைக்கொல்லவென்று அநேகம்பேர்வாறானே
அஸ்தினாபுரந்தாண்டி அப்புறம்வருகையிலே

துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குவருகிறபோது
துரோணரைச் சாஸ்திரம்பார்க்கச் சொன்னது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பாவி
துரோணரைப்பார்த்துச் சொல்வான திரியோதிரன்
பஞ்சவரைக்கொல்லவென்று பாரவனம்போறோமே
வாருந்துரோணரே வழிநிமித்தம்பாருமென்றான்
ஐவரைக்கொல்லவென்று ஆரணியம்போறோமே
சகுனத்தைப்பாருமென்றான தாமமுடியானும்

துரியன்சொற்படி துரோணர் சகுனம் பார்க்கிறது.

என்னசகுனங்கள் இனிநிமித்தந்தோணுகுது
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்சொற்படி
அரசனுரைப்படிக்கு ஆசாரியானவரும்
தாமமுடியானுக்குச் சகுனங்கள்பார்க்கையிலே
என்னசகுனங்கள் எதிராகக்காணுகுது
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதுமன்னனுக்கு
வாயசமிடமாச்சு வலியன்வலமாச்சு
கரையானிடமாச்சு நரிகள்குறுக்காச்சு
பாம்புகுறுக்காச்சு பார்ப்பானெதிரானான்
சாரைகுறுக்காச்சு சந்திரர்மேல்பல்லிசொல்லும்
வேடரெதிர்வருவார் வில்லியரெதிரானார்
வெட்டிப்பிடியுமென்று வேடரெதிர்வருவார்கள்
குத்திப்பிடியுமென்று கோட்டானுமோலமிடும்
பட்டப்பகலிலே பகலாந்தைசீறுகுது
நெருப்பெடுத்துக்கூன்கிழவி நின்றிழவுதான்கொடுத்தாள்

துரோணாசாரியர் திரியோதிரனுக்குச் சகுனங்கள்
நல்லதல்லவென்றுசொல்ல துரியன் அவர்
சொல்லை தடுத்துவருகிறது.

துரியோதிரனுக்குத் துரோணருரைப்பார்
அப்பா திரியோதிரா அரசர்சிகாமணியே
எந்தனுடவார்த்தைதனை யிராசாவேநீர்கேளும்
ஆகாச்சகுனங்கள் ஆகுதேயிப்பொழுது
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதேயென்னசெய்வோம்
இன்றொருநாள்போக்கி இனியொருநாளநாம்வரலாம்
சண்டைக்குப்போகவேண்டாம் வாருமென்றழைக்கையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரராசன்
அவ்வார்த்தைதான்கேட்டு அரசுமன்னனேதுசொல்வான்
சகுனத்தால்பழுதுமுண்டோ சதிரானராஜர்களே
பொல்லாச்சகுனமென்று போகாமல்நிற்பார்களோ
ஐவருமல்லாமல் அடப்பக்காரபையனில்லை
பஞ்சவருமல்லாமல் பலவகையோரொருவரில்லை
இந்தசகுனத்தில் எதொருகுற்றமில்லை

நடவும்நடவுமென்று நடைபேரியடியுமென்றார்
வருகுதுபாளையங்கள் மண்ணுவிண்ணுங்கொள்ளாமல்
செந்தூளெழும்புகுது சூரியனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பிலேயிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தான்தாண்டி
செந்நாய்புலிகாடி சீறும்வனந்தாண்டி
எல்லையதுதூரம் முல்லைவனந்தாண்டி
சூரியன்வனந்தனிலே துரைகளெல்லாஞ்சேர்ந்தார்கள்
அங்குநட்டான்சண்டாவை அடியுமென்றார்பேரிகையை
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றநாள்
மற்றநாட்காலையிலே வாரார்கள்துரைகளெல்லாம்
ராஜரிஷிவனத்தில் நடந்தார்கள்துரைகளெல்லாம்
சண்டாவைநாட்டுமென்றான் சல்லரியடியுமென்றான்
அடித்தார்கள்பேரிகையை அடிவானத்திடிபோலே
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றநாள்
மற்றநாட்காலையிலே வருகுதுபாளையங்கள்
காளமகாரிஷிவனத்தில் கடுகவந்துசேர்ந்தார்கள்
ரணபேரியரையுமென்றான் வல்லசின்னமூதுமென்றான்
அரசன்தன்சொற்படியே அறைந்தார்கள்பேரிகையை
ஊதினார்சின்னத்தொனி உலகேழுந்தானதிர
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றநாள்
மற்றநாட்காலையிலே மன்னர்பயணமிட்டார்
காமதேனுபர்வதத்திற் கடுகிவருகையிலே
ஐவரைக்கொல்லவென்று அருபாவிவருகையிலே

துரியோதிரன் ஐவரையுங் கொல்லவருகிறதை
எம்பெருமானறிந்து வந்தவர்க்கெல்லாந்
தாகமுண்டாக்கினது.

ஐவருக்கும்வந்தவிதி ஆயருந்தாமறிந்து
கைமோசம்வந்துதே காவலர்கள்பஞ்சவர்க்கு
மோசங்கள்வந்து முடிந்ததுபஞ்சவர்க்கு
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
தோஷிகெடுத்தானே தொண்டர்களைக்கொல்லவென்று
என்நாளும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
எந்தவிதத்திலுமே இறக்கவகைபண்ணுகிறான்
அசதியாய்நாமிருந்தால் ஐவரிறந்திடுவார்
மறதியுடனிருந்தால் மாண்டிடுவார்பஞ்சவர்கள்
செல்வக்கிரணியங்கள் சீரழிந்துபோகுதே

உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகுதே
தோளிற்செபமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை சுணங்குலைந்துபோகுதே
என்னஉபாயமது செய்கிறாரெம்பெருமாள்
வருகிறராசருக்கும் மாநாகம்கொண்டாற்கும்
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயுண்டுபண்ணார்
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயானார்கள்
அத்தண்டராசருக்கும் அடிநாக்குலருகுது
நாவுவரட்டுகுது நடுநாக்குலருகுது
அவ்வனத்தில்தீர்த்தங்கள் அள்ளியுண்ணக்கிடையாது
மாயர்பெருமாளும் மலைராமரேதுசெய்தார்
தேவேந்திரனுடைய சுரபியெனுங்காமதேனு
அப்பசுக்கள்தீர்த்தமுண்ணும் அக்குளமொன்றொழிய
தீர்த்தங்களில்லாமற் செய்துவிட்டாரப்போது
அத்தண்டஜெனங்களுக்கும் அனேகம்விடாயாச்சு
தண்ணீர்களையாறி தவிக்குதுபாளையங்கள்
சேனாதிபடைத்துக் கண்டார்துரைகளெல்லாந்
தூதுவரைத்தானழைத்து திரியோதிரனுரைப்பான
இந்தவனத்திலே எங்குநதியிலையோ
எங்குங்குளமிலையோ யிறங்கியேதீர்த்தமுண்ண
தேடியேபாருமென்று யேப்பியனுப்பினான்
அப்படியேநல்லதென்று அந்தவனங்களெல்லாம்
தேடப்புறப்பட்டார் திரியோதிரன் தூதுவர்கள்
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துபார்த்தார்கள்
காமதேனுதன்குளத்தைக் கண்டார்கள் தீர்த்தமுண்ண
ஒட்டநடையுமாய் ஓடிவந்தார் தூதுவர்கள்
திரியோதிரனுக்குச் சேதியுரைத்தார்கள்
அகலமுள்ளதாயிருக்கும் அலங்காரப்பொய்கைகண்டோம்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்

திரியோதிரன் காமதேனுக் குளத்தில தண்ணீர் குடிக்க சேனையுந்தானும் வருகிறது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்கேட்டு
நல்லதுவாரோமென்று நடந்தார்கள்சேனையெல்லாம்
வருகிறவேளையிலே வானுலக இடையரெல்லாம்

தெய்வலோகத்து இடையர் காமதேனுபசுக்களுக்கு அந்தக்குளத்தில் தண்ணீர்காட்ட வருகிறது.

அந்தச்சமயத்திலே அந்தரத்து இடையரெல்லாம்
வானுலக இடையரெல்லாம் மாடுகளைத்தானெழுப்பி
காட்டிலேமேய்கின்ற காமதேனுஅத்தனையும்
மேய்த்துத்துரத்தியே மிரட்டிக்குளத்தில்விட்டார்
குளத்திலேநீர்குடித்துக் குளமெல்லாஞ்சேறாக்கி

தண்ணீர்கலங்கியே தரையில்மண்மேல்கிளம்பும்
குளங்கள்கலங்கியல்லோ குளத்தின்மேலே கிளம்பும்

பசுக்கள் குளங்கலங்கினதை தூதர்சொல்லத் திரி
யோதிரன்கேட்டுக்கோபித்து இடையர்
களைக்கொன்று பசுக்களைமடக்கச்
சொல்லுகிறது.

அந்தசமயத்திலே அரவக்கொடியோன் தூதர்
தூதுவர்கள்தான்பார்த்துச் சொல்லுவாரரசருக்கு
ஐயையோராசாவே ஆரோதெரியாது
ஆயிரம்இடையர்கள் ஆக்களைக்கொண்டுவந்து
விட்டுமேஅக்குளத்தை மிதக்கச்சேறாக்கிவிட்டார்
தண்ணீர்குடிக்கவேதான் உதவாதென்றார்கள்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்ராசனுமே
ஆயிரம்இடையரையும் அங்கேபலியிட்டுவிட்டு
அத்தண்டபசுவையெல்லாம் அத்திபுரம்மாட்டுமென்றான்
இராசனுரைகேட்டு நடந்தாரேதூதுவர்கள்
மாடுகளத்தனையும் மடக்கித்திருப்பினார்கள்
எதிர்த்தஇடையர்களை யாவரையுங்கொன்றுவிட்டார்
சண்டைபண்ணவந்தவரைச் சதைத்தங்கேபோட்டார்கள்

காமதேனு பசுக்களை மேய்க்கவந்த இடையர்களைத்
திரியோதிரன் தூதுவர்கள் கொன்றவர்கள்
போக மற்றஇடையர்கள்போய் தே
வேந்திரனுடன் சொல்லுகிறது.

தப்பிப்பிழைத்தவர்கள் தான்விழுந்தோடலுற்றார்
தேவேந்திரன்முன்னே தெண்டனிட்டார்இடையர்கள்
வந்துபணிந்தவர்கள் வார்த்தைகளேதுசொல்வார்
காமதேனுபர்வதத்திற் காளைகளைமேய்த்திருந்தோம்
காட்டிலேமேய்த்தோட்டிக் கடுகிகுளத்தில்விட்டோம்
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளமன்னன்
சேனைபரிவாரந் திரமுடன்கூட்டிவந்தான்
மாடுகளையடக்கிக்கொண்டான் வல்லுயிரைவாங்கிவிட்டான்
அல்லவரையுங்கொன்றானடியார்கள்தப்பிவந்தோம்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வாரிந்திரரும்
உருட்டினான்கண்ணை உருமினான்பெரும்புலிபோல்
கண்கள்சிவக்குதே காந்தாளமாகுதே
மீசைதுடிக்குதே மின்கோபமாகுதே
அவ்வலரிகண்கள்ரெண்டும் செவ்வரிபூத்திடுதே

நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்புத்தணலாய்விடுது
என்றுயில்லாக்கோபம் பிறந்தது இந்திரர்க்கு

தேவேந்திரன் தன்மகனைச் சண்டைக்குப்போகச்
சொல்ல சித்திராங்கதன் மாதலிடைத் தேர்
கொண்டுவரச்சொன்னது.

என்மகனேசித்திராங்கா இயலானரத்தினமே
மாட்டையடக்கின மன்னவராசாவை
பிடித்தபிடியோடே பின்கட்டாய்க்கட்டிவாராய்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
பிடித்தபிடியோடே கொண்டுவாராய்பொட்டெனவே
கைப்பிடியாய்க்கொண்டு கண்ணெதிரேவந்துநில்லு
இல்லாதேபோனால் எதிர்த்துவந்துநில்லாதே
உத்தாரப்பண்ணுமே உபயபர்பிரானிந்திரரும்
தேவேந்திரன்மகனார் சித்திராங்கதராசன்
அவ்வார்த்தைதானேகேட்டு அதிகமாய்ச்சிந்தித்து
மாதலியைத்தானழைத்து மச்சரதமெங்கேயென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரங்கொண்டுவா
என்றவுரைகேட்டு எழுந்தானே மாதலியும்
ஆறுவண்டி ஆறுசட்டம் அதுக்கேற்றகுத்துக்காலும்
குத்துக்கால்சொருபணிட்டுக் கொடுங்கைத்திரைவளைத்து
கொடுங்கைத்திரைவளைத்துக் கும்பக்கலசம்வைத்து
கும்பகலசத்தின்மேற் குடைகளைக்கட்டினான்
அங்கெனவே தேரிலே அலங்காரப்பண்ணினே
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்சொருபணிட்டான்
வாசியைக்குளிப்பாட்டி வாயிற்கடிவாளமிட்டான்
நாலுகால்வண்டயமும் நடுக்கழுத்திற்கொலுசுகளும்
முன்னுலேகட்டினுளும் பின்னுலேகுச்சுகளும
பக்கத்தில்அங்குவடி பதிப்பித்தான் சேணங்களை
முதுகிலேசினிமுடும் முனைகடிவாளம்
சந்திரபிறைசூரியபிறை தரித்தான்குதிரைக்கு
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகனேதெண்டனிட்டான்

திரியன்மேல்சித்ரசேனன்சண்டைக்குப்போகிறது.

கடுகவெழுந்தானே கட்டழகன்சித்ரசேனன்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்குக் குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
பில்லைசமுதாடு பிதம்பெடுத்தொட்டியாணம்
கட்டியரைதனிலே காங்குகச்சைசுங்குவிட்டு
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
முத்திழையுருமாலை முகத்தழகுகட்டினுனே

சிங்காணிவில்லெடுத்து சிறுநாரிபூட்டினான்
அம்புராதூணியை அணிந்துகொண்டான் தன்முதுகில்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்விலவேயேறினனே
ஏறினபோதே யிபலானசாரதிதான்
துரகதம்வார்கைப்பிடித்துத் துரிதமுடன்காரிசெய்ய
வருதுதுமச்சுரதம் வானுலகந்தானதிர
தேர்தனிலேசங்குநாதம் சித்ரசேனன்பண்ணினான்
சங்குநாதம்பண்ணினனே தான்திரும்பசுரபியெல்லாம்

திரியோதிரன்சேனைகளைக்காமதேனு அதம்பண்ணினது.

அந்தச்சமயத்தில் அறிந்ததுகாமதேனு
சங்குதொனிகேட்டுத் தான்வருதுகாமதேனு
குதித்துக்குமாளமிட்டு வருகுதுகாமதேனு
வந்துவிழுந்தது வளம்பெரியபாளையத்தில்
குத்துதுகொம்பாலே குளம்பால்மிதிக்கிறது

திரியோதிரனும் அவனுடையசேனைகளும்சித்ரசேனனும்
சண்டைபண்ணுகிறது.

அத்தண்டசேனைகளை அதம்பண்ணும்காமதேனு
மாண்டஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தஜனங்களென்றால் செப்பமுடிபோகாது
அந்தசமயத்தில் வந்துவிட்டான்சித்ரசேனன்
வில்வளைத்துநாரிபூட்டி விட்டான்சரபாணம்
கைகண்டபாணமெல்லாம் கடுகனவேவிட்டுவிட்டான்
கூச்சலெழும்புகுது கொப்பெனவேபாளையத்தில்
கண்டான்திரியோதிரன் கட்டழகனேதுசொல்வான்
எவனோதெரியாது இங்குதான்சண்டைபண்ண
இத்தண்டதுரைகளெல்லாம் எல்லாரும்முஸ்தீப்பாய்
கோபமாய்க்கிருபாசாரி கோடானபாணமவிட்டார்
ஆயுதங்கள்தானெடுத்து அமரதுசெய்யுமென்றான்
எண்ணூன்கு ஆயுதத்தை எடுத்துஅறையிற்கட்டி
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைதொடுத்தார்
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதானடித்தார்
எட்டினார்சண்டை எழும்புதுசமரப்போ
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாரிவர்கணையை
ஒருவர்க்கொருவர் ஒழிவில்லாபாணம்விட்டார்
அமபுவரும்வேகமதை ஆர்த்தமுடியாது
பாணமவரும்விதங்கள் பார்க்குமுடியாது
ஒருகோடிபாணங்கள் ஒருமித்துவிட்டுவிட்டார்
துரியன்விடும்பாணம் சொல்லிமுடியாது
கர்ணன்விடும்பாணம் கணக்குமிதங்களில்லை
து[illegible]ணர்விடும்பாணம் சொல்லிமுடியாது

வீஷ்டுமாசாரியரும் வேணபாணங்கள்விட்டார்
அசுவத்தாமாவும் அனேநெடும்பாணம்விட்டார்
சகுனிசயிந்தவரும் சரமேற்சரம்பொழிந்தார்
அவரவர்கள்விடும்பாணம் அபரிமிதமில்லை
ஒருவர்க்கொருவர் ஒருகோடிபாணம்விட்டார்
வாயுவாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும்
சந்திரஅஸ்திரமும் இந்திரஅஸ்திரமும்
சங்கஞ்சங்கம்போலே சரணங்கள்பொழிந்தார்கள்
கண்டானேசித்திரசேனன் கணைகொள்ளாகோபமுடன்
வில்வளைத்துநாரிபூட்டி விட்டான்நெடும்பாணம்
தன்மேல்விடும்பாணமெல்லாம் தாக்காமலேவிலக்க
பின்னையுங்கோடிசரம் பிரளயமாய்விட்டுவிட்டான்
அத்தனைபேர்விட்டசர மத்தனையுங்கொள்ளைகொண்டான்
அங்காரசர்கெருடைந்து அவரவர்கள்வில்பறித்து
ஆனையின்மேலிருந்ததுரை அசுரியோபண்ணைக்கவ்வ
ஒட்டையின்மேலிருந்ததுரை ஓலமிட்டுக்கீழேவிழ
தென்னங்குலைபோலே திருகினான்வேணதலை
பருப்பங்கருணையைப்போல் கண்டித்தான்வேணதலை
ஆலக்கரும்புபோலே அறுத்திட்டான்வேணதலை
பேய்க்காலெறும்புபோல் பிசைந்தெடுத்தான்பாளயத்தை
பனைநுங்குபோலாகப் பருத்தவிழிபிதுங்க
கண்டச்சதைபறிந்து கழுகுக்கிரைபோடுகிறான்
ஈரல்சரியுது இறச்சிவெளியாகுது
குடல்கள்சரியுது குழிப்பாகஅப்பொழுது
ரெப்பையிலாவெலும்பு கெறங்கறெண்டகால்முறியும்
பட்டஜெனங்களெண்ணுறல் செப்பமுடியாது
செத்தஜெனங்களெண்ணுறல் மட்டுமிதங்களில்லை
சித்ரசேனன்சண்டையிலே ஜெனங்களுமாளுது
அபயமபயமென்று அலையுதுபாளயங்கள்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்குதுபாளயங்கள்
ரத்தாறோடுது ரணமுண்டங்கொக்கரிக்க
இந்தவிதம்பாளயங்க ளோடாகூடமாச்சுது
திரியோதிராசன் தேரிழந்துநின்றுவிட்டான்

சித்திரசேனன் திரியோதிரனைக்கட்டி இழுத்துக்கொண்டு போகிறபோது திரியோதிரன் முறையிடுவது.

அங்கந்துளையாக்கி அதிரடித்தான்சித்ரசேனன்
அந்தரவீதியிலே அவனைப்பிடித்துக்கட்டி
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டினான்
தேர்க்குத்துக்காலோடே திரியனைப்பிடித்துக்கட்டி
வைதினார்சங்குநாதம் உம்பர்பிரான்றன்மகனும்

திரியன்பிடிபடவே திகிலெடுத்தூராசரெல்லாம்
ஒருவருடனொருவர் சொல்லாமலோடலுற்றார்
திரியனைக்கட்டிக்கொண்டு தெய்வலோகம்போறாராம்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
எண்ணுதுமெண்ணுகிறான் எண்ணிப்புலம்புகிறான்
ஆரோதெரியாது ஆகாசங்கொண்டுபோறான்
எவனோதெரியாது எமலோகங்கொண்டுபோறான்
ஐவர்பஞ்சபாண்டவரை அனாத்தம்பண்ணவந்தேனே
என்னையொருவர் இழுத்துப்போறாரென்ன செய்வேன்
கூடவந்தராஜாக்கள் கோடானகோடியுண்டு
மட்டில்லாராஜாக்கள் வந்தார்கள்வீரியர்கள்
அத்தண்டராஜாக்கள் அல்லவருங்கைவிட்டார்
கட்டியிழுத்துக் கைலாசங்கொண்டுபோறார்
ஆர்வந்துகாப்பார்கள் ஆபத்துவேளையிலே
எவர்வந்துகாப்பார்கள என்சீவன்பிழைக்கயிப்போ
தருமரைத்தானினைத்தால் தயவுவைத்துக்காத்திடுவார்
இந்தவனத்திலே யிருக்கிறாரென்றார்கள்
கூவிப்புலம்பினால் குரல்கேட்குந்தருமருக்கு
தம்பியரைத்தானனுப்பி தயவுவைத்துக்காத்திடுவார்
ஐவருமிப்போது அன்புவைத்துக்காத்தாலே
ஐவரைக்கொல்லுகைக்கு ஆலோசனைதேடிடுவோம்
தப்பிப்பிழைத்தோமானால் தருமரைக்கொன்றிடுவோம்
என்றவன் யோசனையாய் என்னசொல்லிப்புலம்புகிறான்
கூவிப்புலம்புகிறான் கொற்றவன்துரியோதனன்
அண்ணாவேயண்ணாவே அழகானதர்மலிங்கம்
ஐவர்பஞ்சபாண்டவரே அண்ணாவேநீர்கேளும்
ஐவரைப்பார்க்கவே அதிகப்பிரியமுமாய்
பார்க்கும்படியாக வந்தேன்காண் பஞ்சவரே
காணும்படியாக வந்தேன்காண்காவலரே
எவனோதெரியாது இழுத்துப்போறான் அநியாயமாய்
ஆரோதெரியாது அழைத்துப்போறானந்தரமாய்
கூடப்பிறக்கலையோ கூட்டுப்பாலுண்கிலையோ
தாயாரும்வேறானால் தகப்பனுமொன்றலவோ
மனதுமிரங்கலையோ மகாராஜர்தருமலிங்கம்
தம்பிதமையன்மேல் தயவிலையோ உத்தமனுக்கு
அநீதமாய்கொண்டுபோறான் ஆரோதெரியாது
(என்)ஆவியைக்காத்தாலே அனேககோடிபுண்ணியங்காண்
சாயாம்புமேனியனே தயவிலையோவென்மேலே
என்றுபுலம்பியே இடிபோலேகூச்சலிட்டான்
கூவுங்குரல்கேட்டுச் சொப்பெனவேதருமருக்கு
உற்றுற்றுக்கேட்டாராம உத்தமவர்தம்பியெல்லாம்

திரியோதிரன்முறையிடுவதைத் தருமர்கேட்டு அருச்சுனனைப்போய் திரியோதிரனை அழைத்துவரச் சொன்னது.

தருமர்மனங்கொள்ளாமல் தம்பியரைத்தானழைத்து
ஆண்மைமிகுமன்னே அருச்சுனனேநீர்கேளும்
பெரியதகப்பன்பெற்ற பேரான அண்ணன் தம்பி
திரியோதிரனம்மைத் தேடியேபார்க்கவந்தான்
ஆரோவொருவன் ஆகாசங்கொண்டுபோறான்
எவனென்றுதெரியாது இழுத்துப்போறான் அந்தரமாய்
பார்த்துமிருந்தோமானால் பாதகமெத்தவரும்
மெத்தவருந்துகிறான் வில்வேந்தனிப்போது
நம்மைமவருந்துகிறான் ரட்சிப்பாயென்றுசொல்லி
ஆபத்துவேளையிலே ஆதரித்தால்புண்ணியங்காண்
கடுகவிரைந்துக் கையோடே கூட்டிவாராய்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்வாள்விஜயன்
ஊரோடிருந்தநம்மை உரகதன் தானழைத்து
கொல்லநினைத்தானே குருடன்மகன் சத்ராதி
எத்தனைவஞ்சனைகள் இடறுகள்செய்தான்காண்
சூதுபொருத்தானே ராச்சியத்தைக்கொள்ளைகொண்டான்
ஐவரையும்விலக்கிவிட்டு அரையிலடைத்தானே
அரிவையைப்பெண்களையும் அம்பலமேற்றிவைத்தான்
அண்ணன்பெருந்தேவி யாடையுரியவைத்தான்
பாரவனவாசம் பரதேசமோட்டினான்
இந்தப்பரதேசம் இனித்திரியுமென்றானே
சாமத்துரோகனுக்கு தயவுநினைப்பாரோ
பொல்லாதபாவிக்குப் புண்ணியந்தேடுவரோ
தென்னமுடிவேந்தன் திரியோதிரராசன்
எத்தனைநாளிருந்தாலும் இடரல்லோதேடுகிறான்
கொல்லநினைக்கிறான் கொடும்பாவிதிரியோதிரன்
இன்றோடொழிந்து எமலோகஞ்சேரட்டும்
செத்தார்பழுதுமில்லை சீரானஅண்ணாவே
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
அவரவர்செய்தவினை அவரேயனுபவிப்பார்
நன்மையைச்செய்தவர்கள் ராச்சியத்தையாண்டிடுவார்
பொல்லாங்குசெய்தவர்கள் போவார்பெருநரகில்
நன்மையைச்செய்தவர்க்கு நட்சேத்திரங்காணும்
தீமையைச்செய்தவர்க்குத தெரியாதிருளாகும்
வஞ்சனைகள்வேண்டாமோ மாயன்துணையாவார்
இக்கணமேநீயேகி யிட்டுவந்துசேருமென்றார்
என்வார்த்தைதள்ளாதே எனதுணைதம்பியரே

அருச்சுனன் திரியனை யழைக்கப்போவது.

என்றவுரைகேட்டு எழுந்தானருச்சுனனும்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்குக் குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் தந்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
சந்திரகாந்திகட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு,
கட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
சிங்காணிவில்லெடுத்து தேர்விஜயன்பயணமானான்
வாரானே அர்ச்சுனனும் வழிபட்டான் அங்கெனவே
நடந்தானே அர்ச்சுனனும் நாழிகைக்குக்காதவழி

அருச்சுனனும் சித்திரசேனனும் சண்டைபண்ணுதல்.

அப்போதருச்சுனனும் அதிவேகமாகவல்லோ
அக்கினிபாணத்தை அதிவிரைவாய்த்தானெடுத்து
வரிவில்லிலே தொடுத்து மார்புளவாங்கினான்
அக்கினிபாணமது அதிரவேபாய்ந்தடுக்கும்
கண்டானே சித்ரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
சீரியெழும்பியே சீக்கிரமாய்வந்தெதிர்த்தான்
சண்டை சண்டையென்று சமர்ப்பேரிமுழங்குது
ஒருவர்க்கொருவர் வயுக்தங்களாகுது
ஒருவர்விடுஞ்சரங்கள ஒருவர்விலக்குவாரும்
இருவர்சமானமாக யிசைந்துமேசண்டைபண்ணார்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டார்
சூரியனைத்தான்மறைக்கு சூர்விடும்பாணமெல்லாம்
நான்குகடிகைமட்டும் நல்லசண்டைபண்ணார்கள்
அருச்சுனன்சண்டைகளை அண்டர்பிரானையகனறிந்து

அருச்சுனனும் சித்திரசேனனும் சமாதானமாகி திரியோதிரனை தருமராண்டை அழைத்துப்போகிறது

என்னினும்வல்லபிரான் என்றுமனதிலெண்ணி
(இவன) யாரோதெரியாது ஆண்மையுள்ளசேவகர்தான்
வம்மிசத்தைநாமறிந்து மறுதல்லோசண்டை செய்வோம்
என்றல்லோசித்ரசேனன் எதுசொல்வானருச்சுனனை
ஆரடாதம்பிநீ ஆண்மையுள்ளசேவகனே
எவனடாதம்பிநீ எதிர்த்துசண்டைசெய்யவந்தாய்
ஊரேதுபேரேது உன்தகப்பன்வார்த்தது
எவருடையபுத்திரன்நீ எனக்குரியச்சொல்லுமென்றார்
இவ்வார்த்தைகேட்கவே எதுசொல்வான் அருச்சுனனும்
பத்தகளந்தனிலே உடனவினமுறைகேட்டபடியே

படுகளத்திலேப்பாரி கேட்பாரேபாருலகில்
ஆண்பிள்ளையாமானல் அமரதுசெய்யுமென்றார்
உன்தகப்பன்றன்பெயரும் ஊர்ப்பெயருஞ்சொன்னாலே
நானுரைப்பேன்பிற்பாடு நவிலென்றான்போர்விஜயன்
தேவேந்திரன்மகனும் சித்திரசேனன்தான்கேட்டு
உத்திரவுதான்கேட்டு உச்சாகங்கொண்டவனும்
தேவர்க்கதிபதிதான் தேவேந்திரனென்தகப்பன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான் அர்ச்சுனனும்
அண்ணனென்றறியாமல் அமரதுசெய்தேனே
தமையனென்றறியாமல் சண்டைகள்செய்தேனே
வில்லைத்தரையில்வைத்து விஜயனுமோடிவந்தான்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்து மூவொருகால்தெண்டனிட்டான்
அண்ணாவேசரணமென்று அடிபணிந்தானர்ச்சுனனும்
தேவேந்திரன்மகனுஞ் சித்திரசேனனேதுசொல்வான்
ஆர்வீட்டுப்பிள்ளைநீ அறியவுரையுமென்றார்
என்னையறியாயோ என்னுடையஅண்ணாவே
என்தாயார்குந்தியம்மாள் என்தகப்பன்தேவேந்திரன்
என்தகப்பன்தேவேந்திரன் என்பேரு அருச்சுனன்காண்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சித்திரசேனன்
(என்) தந்தைக்குநீபிறந்த தம்பையிலைதப்பியரே
நான்விட்டபாணத்தால் நம்பியேநீர்பிழைத்தீர்
ஆலாதேயமானல் அமரில்மடிந்திருவீர்
தப்பிப்பிழைத்தீரே சாமியுடபுண்ணியத்தால்
என்றிவர்களோர்மனதா யிருவருறவாடி
ஒருவர்க்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்
எழில்விஜயனப்போது ஏதுசொல்வான் அண்ணனுக்கு
தென்னமுடிவேந்தன் திரியோதிராசன்
என்னசெய்தானென்றுநீர் இட்டுபோரண்ணாவே
அவன்செய்தகுற்றமெல்லாம் அண்ணாவேநீர்சொல்லுமென
இவ்வார்த்தைதான்கேட்டு என்னசொல்வான்சித்திரசேனன்
காட்டிலேமேய்ந்ததொரு காமதேனு அத்தனையும்
பாற்பசுக்கள்தன்னையிந்தப் பாவிமடக்கிக்கொண்டான்
ஆயிரமிடையரையும் அநீதமாகொன்றுவிட்டான்
அவ்வார்த்தைதானக்கேட்டு அனுப்பினாரென்தகப்பன்
கைப்பிடியாய்க்கொண்டுவர கட்டளையுமிட்டார்கள்
அவர்சொன்னபடியினாலே அமரதுசெய்தேன்காண்
இவனுடையசேனைகளை எல்லாம்நான்கொன்றழித்து
விரைவாகக்கைப்பிடியாய் விண்ணுலகங்கொண்டுபோறேன்
என்றவுரைகேட்டு என்னசொல்வான் அர்ச்சுனனும்
ஆனால்கேள் அண்ணாவே அடியேனொருவார்த்தை

சாயம்புமேனியரும் தருமரவரெங்களண்ணர்
என்னைவிடுவித்து இட்டுவாவென்றுசொன்னார்
என்னையனுப்பினார் இயலானதர்மலிங்கம்
அழைத்துவரச்சொன்னாரே அண்ணருமிப்பொழுதே
உன்முகத்தில்நான்விழிக்கேன் என்றுமேதர்மலிங்கம்
கூட்டியனுப்பினார் குறிப்பாகவுந்தனையும்
என்மேல்தயவுவைத்து இவனையனுப்புமென்றான்
தேவேந்திரன்மகனார் சித்ரசேனனைத்தான்சொல்வான்
மாடுமடக்கியே வல்லுயிரைக்கொன்றவனை
கைப்பிடியாய்க்கொண்டுவர கடுகியனுப்பினார்
ஆகையாற்கொண்டுபோறே னருச்சுனனென்னசெய்வேன்
ஆனாற்கேளண்ணாவே அடியேனொருவார்த்தை
அருச்சுனன்வந்து அழைத்துப்போனுனென்றுசொல்லும்
ஐவரென்றுசொன்னாலே அதிகமனமகிழ்வார்
அல்லாதேயாமாகில் அழைத்துமேபோனாலே
என்வார்த்தைதள்ளிநீர் இட்டுக்கொண்டுபோனாலே
அண்ணாவேநாளைக்கு அமராபுரம்வருவேன்
தேவேந்திரபுரத்தைச் சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுகளைமாடுகளை அழகானவூருகளை
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும் அரமனைத்தெருவுகளும்
அத்தனையுங்கொள்ளையிட்டு அதம்பண்ணிப்போட்டிடுவேன்
என்வார்த்தைதான்கேட்டு இவனைவிடுவிடென்றான்
சித்திரசேனன்கேட்டுச் சிந்தைமகிழ்ந்தவரும்
சந்தோஷப்பட்டவரும் சர்ப்பக்கொடியோனை
கட்டவிழ்த்துவிட்டுவிடுங் காணென்றான்சித்திரசேனன்

சித்திரசேனன் தேவேந்திரனைக்காண்கிறது.

போய்வாரேனென்றல்லோ புறப்பட்டான்கேறேறி
அமராபதிதேடி அடைவுடனேதானடந்தான்
தேவேந்திரனாற்கு சித்திரசேனன்தெண்டனிட்டான்
அருச்சுனன்தன்னுடைய அதிசயச்சேதிகளும்
அரவக்கொடிவேந்தன் அகப்பட்டசேதிகளும்
இவ்விருவர்சேதிகளும் இயலாகத்தான்சேதி
தகப்பனுடனுரைக்கச் சந்தோஷமாகினார்
அந்தசமயத்தில் அரவக்கொடியோனும்
திரியோதிரனுரைத் தேர்விஜயன்கூட்டிவாரான்
அண்ணாருகாக அழைத்துவந்துவிட்டாராம்
அண்ணர்தருமருக்கு அடிபணிந்தான்திரியோதிரன்
சரணம்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
எமன்மகன்தருமராயன் எடுத்தணைத்தான்திரியனையும்
எங்கிருந்துவந்தீரப்பா எனக்கறியச்சொல்லுமென்றார்

அத்துவானகானகத்தில் பூரணியம்வந்ததென்ன
அந்தரமாகவே ஆர்காணுங்கொண்டுசென்றார்

திரியோதனன் தருமருக்குத் தன்வரலாறு கூறல்.

திரியோதிரராசன் சொல்லத்தொடங்கினான்
ஆசைபாம்பாசமதா லண்ணருமேபார்க்கவந்தேன்
எத்தனைநாள்காடுறைதீர் இட்டுப்போகவேணுமென்று
அஸ்திநாபுரத்துக் கழைத்துக்கொண்டுபோவோமென்று
என்றெண்ணியிருந்தேன் இக்காடுதேடிவந்தேன்
என்னை-ஆரோதெரியாது அந்தரமாய்க்கட்டிப்போனான்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்தானுமங்கே அமர்செய்துவிட்டுவந்தான்
எத்தனைநாள்காடுறைவீர் இயலானராஜாவே
பாரவனவாசம் பரதேசந்திரிவானேன்
வேடரைப்போலாக வில்லியரைப்போலாக
பரதேசந்திரிவானேன் பட்டணத்தில்வாங்கவென்றான்
அஸ்தினாபுரத்தை ஆண்டிடுவீர்வாங்கவென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
ஆறுவருஷமாச்சு ஆரணியவனநாட்கள்
இன்னஞ்சிலகாலம் இப்படியேதானிருந்து
பன்னிரண்டுவருஷம் பரவனந்திரிந்து
வந்தபிறகாக மனதுணைத்தெனமேனே
சொன்னபடியினை துணைத்தனக்காருமென்றார்

வீமன்கனிபறித்துவர திரியோதிரன் புசித்து தருமரிடத்திற் செலவுபெற்று அஸ்தினாபுரம் செல்லுகிறது.

வெற்றிமதயானை வீமாமதகரியே
அண்ணர்களைபாசி அதிகபசியானார்
காடெல்லாந்தான்திரிந்து கனிபறித்துவாருமென்றார்
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
அறுகலைகிறுசெல்லி அழகானதயர்த்தையுடன்
காட்டுவிளாம்பழமும் கருங்கலிப்பழங்களுடன்
வேரிலபழுத்திருக்கும் வெடித்தபலாப்பழமும்
மலைத்தேனைச்சுனைத்தேனும் மாங்கனியுந்தேங்கனியும்
மட்டில்லாப்பழம்பறித்து மதவீமன்கொண்டுவந்தான்
தேக்கிலைதானபறித்து திறல்வீமன்கொண்டுவந்தான்
பறித்தகனியெல்லாம் பசியாறவுண்ணுமென்று
கைக்குச்சலங்கொடுத்து கட்டழகருண்ணுமென்றார்
ஆசனந்தான்போட்டு அமுதுபுசியுமெனறார்
விஷநாகங்கொண்டவனும் வேந்தனுந்தான்புசித்தான்
எண்ணுதுமெண்ணுகிறான் எரிநாகங்கொண்டவனும்
இப்படிக்கொத்த இயலானபஞ்சவர்கள்
எப்படிக்குச்சாவார்கள் இக்கனியைத்தின்றவர்கள்

அஸ்தினாபுரத்திற்போய் ஆலோசனைபண்ணவேண்டும்
எப்படியும்பஞ்சவரை இக்காட்டிற்கொல்லவேணும்
என்றுமனதிலெண்ணி இருந்துகனிபுசித்தான்
பசியாறவுண்டானே பாதகன்திரியோதிரன்
கைபூசிக்கொண்டானே காதகன்திரியோதிரன்
சாயாம்புமன்னவனார் தருமர்பெருமாளும்
பின்னுஞ்சிலகனியை பெருமூட்டையாகக்கட்டி
அப்பாதிரியோதனை அழகானவிக்கனியை
அரண்மனைக்குக்கொண்டுபோய் அனைவருந்தான்புசிக்க
எடுத்துப்போமென்றுசொல்லி சுந்தரேயக்கனியை
வாங்கியேயக்கனியை மன்னவனுந்தோளிலிட்டான்
ஐயாவேபோய்வாறேனென்றடிபணிந்துதெண்டனிட்டார்
சாயாம்புமன்னவனார் தர்மலிங்கமேதுசொல்வார்
காண்டிபா அர்ச்சுனரே கடுகியெழுந்திருந்து
அண்ணன்திரியன்முன்னக்கனியின்மூட்டைகொண்டு
காடுகடக்களவும் கைமூட்டைநீவாங்கி
அண்ணரைவழிகூட்டி அனுப்பிவாதம்பியென்றார்
தாமருரைகேட்டு தார்விசையன்தானெழுந்து
கனிமூட்டைதோளில்வைத்து கடுகியேபின்னடந்தான்
திரியோதிரன்பின்னே நடந்தானேதேர்விஜயன்
காடுஞ்செடியுங் கடியவனாந்திரமும்
ஆறுஞ்சுனையும் அவ்வனமுந்தான்கடந்து
காடுகடந்தபின்பு கைமூட்டைவாங்கிகொண்டு
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
தூரநில்லும்அர்ச்சுனரே தொல்லுலகில்வாராதே
கடக்கநில்லுமருச்சுனரே காசினியில்வாராதே
காடுமெறித்தகாலால் நாடுமிதியாதே
அரைக்ஷணப்போதையிலே அறுத்தெறிவேனுன்தலையை
தருமர்பெருமையினால் தணித்துவிட்டேன்கோபத்தை
என்றுதிரியன்சொல்லி இழைந்துவழிநடந்தான்
அண்ணரருகாக அருச்சுனன்வந்தழுதான்
அப்போதிரியோதிரன் அதிகனிறைவாக
காடுசெடியுங் கரியமலைகடந்து
அஸ்தினாபுரத்துக்கு ஆணழகன்போயடுத்தான்
சிங்காதனமீதிற் சென்றானே திரியோதிரன்
ஆசாரிஜவரையும் அனந்தமகாராஜரையும்
மாமன்சகுனியையும் மைத்துனன்சயிந்தனையும்
அத்தண்டபேரையும் அழைத்தான்திரியோதிரன்
கொண்டுவந்தசாரக்கனியைக் கொப்பெனமுன்னேவைத்தான்
இக்கனியையுண்ணுமவரெப்படிகாண்பாண்டவர்
தேவேந்திரன்மகனார் சித்திரசேனனைப்பிடித்தார்

தேரிலேணைக்கட்டி தெய்வலோகங்கொண்டுசென்றார்
அய்யய்யோவென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்வந்து அபராதுசெய்தான்காண்
என்னைவிடுவித்து இட்டுவந்தானண்ணாண்டை
ஐவரையுங்கண்டேனே அனேகமானவார்த்தைகளை
உச்சிதமாகவேதா னொற்றுமையாய்வார்த்தைசொன்னேன்
இந்தக்கனிதான்புசிக்கும் எழிலானபஞ்சவர்கள்
எப்படிக்குமாண்டிடுவார் இயலானபஞ்சவர்கள்
என்றிவர்கள்தான்பேசி யிருந்தார்சிலவார்த்தை
இப்படியாக இருக்கிறவேளையிலே
ஆறும்வருஷம் முடிந்ததுஐவருக்கு

ஆறாவது காமதேனுபர்வதம் முற்றிற்று.

௭-வது, கெந்தர்வபர்வதம்.

ஏழாம்வருஷம் பிறக்க ஐபஞ்சவர்க்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கூடைத்தலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோவிலைவந்துசுமோடி கூடைதலையேவைத்தார்
மஞ்ஜிவைத்துதசிமோடு வனவாசம்போனார்கள்
காமதேனுபர்வதத்தைக் கடந்துவழிகூடி
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கெந்தர்வபர்வதத்தில் வந்தாரேபஞ்சவர்கள்
ஐந்திக்குபர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழிக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்குந்தாவேளையிலே
அங்கேபெருமானும் அலைகன்னைகள்தானம்பண்ணி
காறுமூர்த்தி இழைசேர்க்கபட்டுடுத்தி
சாபமூர்த்திபூசைகளும் சகலமுந்தான்முடித்து
ஆசனமிட்டுபல்லோ அரிராமர்பூசைபண்ணார்
அரிபூசைகுருபூசை அனைத்துங்கடன்முடித்து
மைதனிலேதிருநாளன்விக் கதிரோனைப்பூசித்து
எரிக்குங்கதிரோனை எம்பெருமான்தோத்தரித்து
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிவஞானமாகவே ஸ்ரீகிருஷ்ணனைதானிருந்தார்

எம்பெருமான் செபம்பண்ணும்வேளையில் கெந்தருவன் தம்பலப்புமிழ பெருமான்கோபிக்கிறது.

ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மாயனென்னுங்கெந்தருவன் வாரானேதேரேறி
தேரேறிவருகையிலே தின்றுஉமிழ்ந்தானே
பாக்கிலைகுவலரிசி வாசமுள்ளஜாதிபத்திரி

வெத்திலையும்பாக்குகளு மென்றுஉமிழ்ந்தானே
மாயவனார்கைதனிலே வந்துவிழுந்தது
துப்பியதம்பலமுந் துழாய்மவுலிகையில்விழ
கண்திறந்துபார்த்தாரே கைதனிலேதம்பலத்தை
சுற்றியங்கேபார்த்தாரே தோணவில்லையேயொருவர்
ஆகாயவீதியிலே அவனோரோதெரியாது
கைதனிலேதம்பலத்தைக் காரியுமிழ்ந்தானே
செபதபஞ்செய்கையிலே செய்ததிவனொருவமென்ன
கண்கள்சிவந்தாராம் காந்தாளமானாராம்
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுமாம்
நீலவிழிகண்கள்ரெண்டும் நெருப்புதணலாகுது
கோவைப்பழம்போலக் கூர்விழிகண்சிவக்கும்
பாவற்பழம்போலப் பத்தினியேகண்சிவக்கும்
சக்கரத்தைத்தானெடுத்து சாமிபெருமாளும்
கொல்லநினைவுகொண்டார் கோபாலரெம்பெருமாள்
மந்திரதூபமிட்டு வலதுகையில்தானெடுத்தார்
தம்பலம்உமிழ்ந்தவன்றன் தலையைநீவாங்கிவா
அரைக்ஷணப்போதையிலே அறுத்துவா அவன்றலையை
அரனார்வந்தெதிர்த்தாலும் அமரர்வந்தெதிர்த்தாலும்
பிர்மதேவன்வந்தாலும் பிரியங்கள்சொன்னாலும்
தேவபிரான்வந்தாலுந் தெண்டனிட்டுக்கொண்டாலும்
கர்த்தரேவந்து கையமர்த்திக்கொண்டாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்தடுத்தாலும்
ஆரார்தடுத்தாலும் ஆரவாரம்பண்ணாலும்
அரைநாழிக்குள்ளாக அறுத்துவா அவன்றலையை
இக்கணமேசென்றுநீ இருதுண்டம்போட்டிடுவாய்

மாயன் கெந்தருவன்மேல்கோபித்து சக்கரத்தை அனுப்புகிறது.

சக்கரத்தைதூபமிட்டு சாமியார்விட்டுவிட்டார்
வருகுதுசக்கரந்தான் வானுலகந்தானைத்தேடி
இயல்பாய்வழிதனிலே எதிர்பட்டார்நாரதரும்
நாரதமாமுனிதான் நமஸ்கரித்தார்சக்கரத்தை
இத்தனைகோபத்துடன் எங்குநீர்போறீர்காண்
அரிராமர்சக்கரந்தான் அம்முனிக்குப்பதிலுசொல்லும்

நாரதர் சக்கரத்தை நீர்போகிறகாரியம் மென்ன வென்றுவினவ சக்கரம்சொல்லுதல்.

ஸ்ரீராமரெம்பெருமாள் செபதபஞ்செய்கையிலே
வாசங்கள்தானிறைந்த வெத்திலையிலுதப்பினான்
ஆகையினால்சாமியார் அப்போதுகோபமானார்
என்னையனுப்பினார் இவன்தலையறுக்கவென்று
கெந்தருவன்றன்றலையை முந்திஅறுக்கவந்தேன்

அவ்வார்த்தையைக்கேட்டு அந்தமுனிபோய்நடந்தார்
கெந்தருவனதன்னருகே வந்தாரேநாரதரும்
ஆரடாகெந்தருவா ஆபரவர்பேரில்
தம்பலமுமிழ்ந்ததினால் சாமியவர்கோபமுடன்
சக்கரம அனுப்பியுந்தன் தலையைத்தரிக்கவென்று
வருகுதுசக்கரந்தான் மாளவிதிபாச்சே
ஆதிசிவனருகே அபயமிட்டுப்போனக்கால்
பரமசிவன்பார்த்துப் பட்சம்வைத்தாராமானால்
ஆதிசிவன்தன்னாலே ஆகும்உனைக்காக்க
அல்லாதேயாமானால் அறுத்துவிடும்உன்தலையை
தப்பிப்பிழையுமென்று தவமுனிசொல்லுகையில்
அவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தவனும்

கெந்தருவன் சக்கரத்துக்கஞ்சி மும்மூர்த்திகளண்டைபோய்
முறையிட்டுந் தீராமையால் அருச்சுனனண்டைபோகிறது.

வாய்வேகமாகவே வழிபிடித்தான்கெந்தருவன்
சக்கரம்வந்திடவே தான்புலம்பிஓடுகிறான்
ஆதிசிவனருகில் அபயமிட்டுஓடுகிறான்
அரவாபரணனே ஐயாஉனக்கபயம்
சங்கரநான்சரணம் சதாசிவாஉனக்கபயம்
சாந்தலிங்காநான்சரணம் தாணுவேஉனக்கபயம்
வெள்ளைரிஷபமேறும் வித்தகாநான்சரணம்
மாபூஷணந்தரித்த மகாதேவாஉனக்கபயம்
முக்கண்படைத்தவரே முதல்வரேஉனக்கபயம்
திரிபுரமெரித்தவெங்கள் தேவாஉனக்கபயம்
காமனைக்கண்ணாலெரித்த கடவுளேநான்சரணம்
எமனையுதைத்தவரே ஈசாஉனக்கபயம்
கங்கையணிந்தோனே கடுக்கைதரித்தோனே
திங்களைத்தன்சிரசில் தரித்தசிவனாரே
அபயமபயமையா அந்திகண்ணுஉமக்கபயம்
அபயக்குரல்கேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
ஆரடாகெந்தருவா அபயமிட்டவாரேது
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தவகையணங்கள் வார்த்தையுரையுமென்றார்
ஆண்டவனேஎன்சாமி அடியேனொருவிண்ணப்பம்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
காயாகக்காய்த்ததொரு கமுகினதுபாக்கை
வாயாரத்தின்றுதான் மண்மேலேதுப்பினேன்
தாமரைப்பொய்கையிலே சாமிபெருமாளும்
தினகரனைத்தான்பார்த்து செபதபஞ்செய்தாராம்
நானுமிழ்ந்ததம்பலம் ராமர்கையிற்றான்விழவே
கோபாலசுவாமியார் கோபம்பெரிதாகி

யள

சக்கரத்தையனுப்பினர் தலையைத்தரிக்கவென்று
என்னைக்-கொல்லவருகுது இயலான சக்கரந்தான்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
என்னைநீகாத்தருளும் சாமியெனப்பணிந்தேன்
கார்க்கக்கடனுனக்கு கார்வண்ணன்மைத்துனனே
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்வரருமேதுசொல்வார்
நான்வேறாவிஷ்ணுவேறோ நானிலத்தில்கெந்தருவா
ஆயருக்குப்பகையாகி அருகேவரலாமோ
உன்னைநான்காத்தாக்கால் உலகளந்தாரென்னசொல்வார்
கார்வண்ணனிந்தனுக்கு கடிப்பகையாவார்
காக்கமுடியாது கடக்கவேபோய்விடுங்காண்
பிரமதேவன்றன்னருகே போனீரேயாமாகில்
அவராலேயாகுங்காண் ஆதரிக்கவல்லபிரான்
என்றுஉரைத்தாராம் எண்டோளரப்போது
அழுதுபுலம்பியே அப்புரம்போய்புகுந்தான்
பிரமலோகந்தான்புகுந்து பிரமா அருகில்வந்தான்
அபயமபயமையா ஆதரிக்குங்கர்த்தாவே
என்னையேயாதரியும் என்றல்லோதெண்டனிட்டான்
ஆயுளைப்பார்த்தெழுதும் அரிபிரமனேதுசொல்வார்
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
ஆண்டவனேஐயாவே அபயமேகீர்த்துறேன்
ஆகாயவீதியிலே அழுதாதமேறிவந்தேன்
அடைக்காயும்வெற்றிலையும் அய்யாநாமென்றுதின்று
வாசங்கள்தினறுதான் மண்மேலேதுப்பினேனே
மாயனார்கைத்தலத்தில் வந்துவிழுந்ததாம்
மாயன்வெகுகோபமாகி வரவிட்டார்சக்கரத்தை
என்னையேகொல்லுதற்கு இயலாயனுப்பினர்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
எந்தனையாதரியும் என்றல்லோஅடிபணிந்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நான்முகனும்
நான்வேறாவிஷ்ணுவேறோ நானிலத்தில்கெந்தருவா
மாயருக்குப்பகையாகி வந்தாபோபாதகனே
உன்னையேஆதரித்தால் உலகளந்தாரெந்தனுக்கு
பொல்லாப்புநேர்ந்திடும் பெரும்பாவிஉந்தனுக்கு
உன்னையேஆதரிக்க உதவாதெந்தனுக்கு
எமபுரமேகிநீ எமனுடனுரைத்தால்
எந்தவிதமானாலும் எமனுனைக்காத்திடுவான்
கடுகிநடவுமென்று கைவிட்டார்பிரமதேவர்
அழுதுபுலம்பியே அதிவிரைவாய்த்தான்வாராம்
எமனருகில்வந்து இதைத்தான்புலம்புகிறான்

காலனுங்கண்டு கடுகவேயேதுசெய்தான்
ஆருக்குபகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
அப்போதுகெந்தருவன் அவருக்கெடுத்துரைப்பான்
அந்தரமார்க்கத்திலே அழுதோதமேறிவந்தேன்
வாசகங்கள் தின்றுதான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததாம் மாயருடைகைத்தலத்தில்
ஆகையால்கோபித்து அனுப்பினார்சக்கரத்தை
என்னைக்கழுத்தறுக்க எகிறிவருகுதென்றான்
என்னையுமாதரியு மென்றுமேகெந்தருவன்
காலனுங்கேட்டுமவன் கடுகியெடுத்துரைப்பான்
மாயருக்குபகையானால் மன்னவனைபார்க்கலாமோ
மாயருட ஊழியத்தை மன்னவனே செய்திடுவேன்
உன்னையேகார்த்தாலே உலகளந்தார்கோபமுற்றால்
எதிர்த்துப்புறப்பட்டால் எதிர்நிற்கப்போறேனோ
காக்கமுடியாது கட்டழகாகெந்தருவா
அமராபுரியாளும் அழகானதெய்வபிரான்
தேவேந்திரருகில் சென்றுநீர்போவீரானால்
காக்கவும்வல்லபிரான் கடிகிநீகோருமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமவன் அழுதுபுலம்பிவாரான்
தெய்வலோகந்தனிலே தேவேந்திரருக்கே
அபயமிட்டேஅடிபணிந்தான ஆனதொருகெந்தருவன்
ஆரடாதம்பிநீ அறியவுரையுமென்றான்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவார்த்தை
ஆகாயவீதியிலே அழுதோதமேறிவந்தேன
வெற்றிலையும்பாக்குமே வாசமிகுஜாதிபத்திரியும்
ஜாதிக்காய்ஏலரிசி சன்னலவங்கமுடன்
வாசகங்கள் தின்றுதான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததாம் மாயவனார்கைதனிலே
ஆகையினாலெம்பெருமாள் அடியேன்மேல்கோபமாகி
சக்கரத்தையனுப்பியெந்தன் தலையைத்தரியுமென
வருகுதுசக்கரந்தான் வல்லுயிரைவாங்கவென்று
கொல்லவருகுது கொப்பெனவேசக்கரந்தான்
ஆதரித்தென்னையாட்சி அனேகங்கோடிமோட்சமுண்டு
என்றவுரைகேட்டு ஏதுசொல்வாரிந்திரரும்
மாயருக்குபகையாகி வந்தவனை ஆதரித்தால்
எதிர்த்தாரேயாமானால் எதிர்நிற்கப்போறேனோ
மாயனுக்குச்சரியானோர் வையகத்திலாருமில்லை
உன்னையேயாதரிக்க உலகத்திலியாருமில்லை
தருமருடதம்பியவன் தார்விஜயனரசனந்தான்
அருச்சுனனுமுன்னை ஆதரிக்கவேமுடியும

அபயக்குரல்கேட்டு ஆதரிப்பான்வாழ்விஜயன்
ஆதிசிவனுன அரனுருமவந்தாலும்
எழுதும்பிரமாவும் எம்பெருமாள்வந்தாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்வந்தாலும்
ஆர்வந்தெதிர்த்தாலும ஆரவாரமபண்ணினாலும்
அருச்சுனராசனவன் அனைவோரையும்வென்றிடுவான்
வாழ்விஜயனருச்சுனனும் வல்லமையுள்ளவனகாண்
அருச்சுனனைநீகோரி அபயமிட்டுப்போனீரானால்
ஆதரிப்பான்வாழ்விசையனதிவிரைவிற்போய்ச்சேரும்
என்றவுரைகேட்டு எழுந்தானேகெந்தருவன
அழுதுபுலம்பியே அருச்சுனனைததேடிவாரான்
தெய்வலோகந்தாண்டி தேர்விஜயனைத்தேடி
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அலறிப்போய்ப்போடிவாரான்
அபயமபயமென்று அருச்சுனனமுன்னேவந்தான

அருச்சுனன்கெந்தருவனுக்கு அபயங்கொடுத்தது.

அபயக்குரல்கேட்டு அருச்சுனனேதுரைப்பான்
ஆரடாகெந்தருவா அழுதுபுலமபுவானேன
ஆரெதிர்த்துவந்தாலும அமரதுசெய்திடுவேன்
அந்தரதேவதைகள் ஐயனபிடாரிகளும்
ஆகாயவாணிகளென் னுடைத்துமாதானரிய
காக்கிறேனஞ்சாதே என்றல்லோகைகொடுத்தான்
அருச்சுனன்கைகொடுத்து அஞ்சாதேயென்றுசொல்ல
சற்றேபயந்தெளிந்தான தார்வேந்தன்கெந்தருவன்
அருச்சுனராஜனவன் அப்போதுஏதுசொல்வான்
ஆர்க்குபகையாகி அழுதுபுலம்பிவநதாய்
எவரெதிர்த்தாருன்னுடன் இங்கழுதுநீவந்தாய்
வந்தகருமமென்ன வாய்திறநதுசொல்லுமென்றான்
அஞ்சிப்பயந்தவனும் அருச்சுனனோடுரைப்பான்
ஆகாயவீதியிலே அழுதுரதமேறிவந்தேன்
வாசங்கள்தின்றுநான மண்மேலதுப்பினேன்
நானுமிழ்ந்ததமபலந்தான ராமர்கையிலவிழுந்ததாம்
ஆகையாலமாயவரும் அப்போவெகுகோபமுடன்
என்னையேகொல்லவென்று எடுத்துவிட்டார்சக்கரத்தை
சக்கரமவருகுதுகாண் தலையைதரிககவென்று
ஆதிசிவனருகில் அபயமிட்டுப்போனேனையா
தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
அயனபிர்மதேவனிடம அபயமிட்டுப்போனேனையா
ஆதரிப்பாரென்றுநான் அபயமிட்டுப்போய்ச்சேர்ந்தேன்
என்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
எமதர்மராசரண்டை எதிர்கொண்டபயமிட்டேன்
தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்

தேவேந்திரருகில் சென்றுனைபயமிட்டேன்
காத்திடுவாரென்றுநான் கடுகிஅபயமிட்டேன்
என்னாலேயாகாதுஎன்றல்லோதள்ளிவிட்டார்
அழகில்மிகுந்தவரே அருச்சுனரேயுமைநாடி
தேடியேஅபயமிட்டு தெய்வமேகைவிட்டுவந்தேன்
ஆதரித்தீராமானால் அனைவருக்குங்கீர்த்தியுண்டு
இவ்வார்த்தைதானைக்கேட்டு எழில்விசையனருச்சுனனும்
எண்ணுதுமொண்ணுரென்னெண்ணிமனங்குண்ணுகிறான்
மாயருக்குப்பகையாக வந்தவனைக்காத்தாலே
ஆயருக்குமெனக்கும அடுத்தாற்பகையாமே
என்னசெய்யப்போறேனென்று ஏங்கிவிசாரமிட்டு
ஐவர்சகாயரல்லோ ஆயர்பெருமானும்
கைபிடியென்றவரை ரட்சிக்கவேணுமல்லால்
காக்கிறோமென்றுசொல்லி கைவிடலாகாது
ஆயர்பெருமானுக்கு அன்பாவார்த்தைசொல்லி
எந்தவிதத்திலேயும் இன்றவனைக்காக்கவேணும்
அல்லவென்றுகோபமிட்டால் அமராடுசெய்திடுவோம்
என்றுநினைத்தவனும் என்னசொல்வானவாள்விசையன்
திங்களும்சூரியனும் தெற்குவடக்கானாலும்
அழகானதாமரையும் அடியிலேபூத்தாலும்
நழுக்கிப்பிழிந்தவனை நரகத்திறம்பட்டாலும்
நாவாலேசொன்னதெல்லாம நான்தவறப்போறதில்லை
எந்தவிதத்திலேயும் இடறகற்றிகாத்திடுவேன்
என்றலேவாதரித்தான இயலானவாழ்விஜயன்

அருச்சுனன் கெந்தருவனுக்கு பயந்தீர்க்க பெருமானுக்குக்கோபயவந்து சக்கரததை யனுப்புகிறது.

வருகிறசக்கரந்தான் மண்ணுவிண்ணுங்கொள்ளாமல்
கண்கள்பொறிபறக்கக் கடுகிவருகுதே
அருச்சுனராசனிடை அருகேவந்துதென்டனிட
என்னகாரியமென எங்குநின்றீர்சக்கரமே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
சாமியனுப்பிவைத்த சக்கரமேதுசொல்லும்
மாயனுக்குபபகையான மாபாவிகெந்தருவன்
அருச்சுனரேஉனனிடத்தில் வந்தானரும்பாவி
அவனைக்கழுத்தறுக்க அனுப்பினார்மாயவனார்
ஆசையாலனுப்புகிறான் அருச்சுனரேயவன்தலையை
அறுத்தெரிந்துயான்போறேன அவனையனுப்புமென
தனஞ்செயனப்போது சக்கரத்தைக்கேட்டுசொல்வான்
அபயமபயமென்று அழுதுபுலம்பிவந்தான்
அபயக்குரல்கேட்டு ஆதரித்தேனனவனை

பாரதத்தாரானவர்க்குப் பகையாளிலெனன் றறியேன்
அபயமபயமென்று தெரிக்கேனலவினை
காக்கிறேனென்றுசொல்லி கைவிடலாகாது
ஆகையால்சக்கரமே ஆயதுக்குச்சென்றுசொல்லும்
கோடிசரணம்நான் கும்பிட்டேனென்றுசொல்லும்
ஆயிரந்தெண்டனிட்டு அடிபணிந்தேனென்றுசொல்லும்
சக்கரத்தாழ்வாரும் தார்விசையற்கேசொல்லும்
அறைல்போய்வார்த்தையென்று அப்போதுதிருப்பிவந்து
மாயனைக்கண்டு வணங்கிமெய்யாசித்து
ஆதிசிவனாகில் அபயமிட்டோர்கையில்
ஆதர்க்கமாட்டோமென்று உலகுர்விலக்கிவிட்டார்
அருச்சுனன்தன்னருகில் போனான்பயமிட்டு
வணங்கிநமஸ்கரித்து மாயோன்வார்த்தைசொன்னேன்
உனக்குபகையானானே உண்மையெல்லாம்நானுரைத்தேன்
எத்தனைசொன்னாலும் இராமனருச்சுனனும்
ஆண்டவனேயுன்னருகே அனுப்பினானென்றுசொல்லுமென்று
இவ்வார்த்தைகேட்கனுமே எம்பெருமான்சேமபோதி
ஆங்காரக்கோபமுடனே அரிராமனென்னசொல்வார்
இவனைக்காப்பதற்கு ஆண்டவனாய்நாமிருக்க
இத்தனைநல்காதகனை இபலனைபஞ்சவனை
எனக்குபகையாளி தனக்குபகையலவோ
ஆதரிக்கஞாயமுண்டோ அறிவாளேசொன்னசக்கரத்தை
மறுக்காதொருகரம்நீ வாள்விசையனருகிற்சென்று
நானுரைத்தவார்த்தையெல்லாம் நல்விசயனுக்குரைத்து
மாயவற்குவேண்டாத மாபாவியானவனை
விட்டுவிட்டாலல்லாது வேணுமையாதுமென்று
குருகுலவம்சத்தார் கூட்டோடேயொழியுமென்று
கொல்லநினைப்பார்கான் குடிகெடுக்குமென்று
சொல்லியேவாருமென்று சொன்னாரேமாயவனார்
அப்போதுசக்கரத் தாழ்வாருந்தானடந்தார்
கொடுஞ்செடியும் கரியமலைதானடந்து
அருச்சுனராஜனிடை அருகேபோகதெண்டனிட்டு
மாயவனார்சொன்னதொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
காண்டீபனருச்சுனற்குச் சரியாகச்சொல்லும்
உண்டானவார்த்தையெல்லாம் ஒளியாமலேயுரைத்தான
காமபனருச்சுனரும் கேட்டேயேதுசொல்வான
மாதவனென்னைக்கொல்ல ஏழைபாலுன்னையேவ
வில்விசையனர்க்குமன்போடு அன்பாயுரைத்தேன்
எதிருத்தமாகுமோ எனக்குமாயவன்விடப்படாது
ஆயிரந்தெண்டனிட்டு அடிபணிந்தேனென்றுசொல்லும்
காக்கிறேனென்றுசொல்லி கைவிடஞாயமில்லை

கறிக்கிப்பிழிந்துயென்னை நரகத்திற்போட்டாலும்
கைவிடான்விசையனென்று கண்ணருக்குநீயுரையும்
ஊழியுள்ளகாலமட்டும் உனைமறவானருச்சுனனும்
வணங்கினானென்றுரையும் மாயனுக்குநீர்தாமும்
அனேககோடிநமஸ்காரம் அருச்சுனன்செய்தானென்றும்
தாமோதரன்றனக்குச் சக்கரமேபோய்ச்சொல்லும்
சக்கரமேபோய்ச்சொல்லுஞ் சரணஞ்சரணமென்று
சொல்லித்தொழுதானே சுவாமிபெருமானை
சக்கரத்தாழ்வாற்குத் தனஞ்செயன்விடைகொடுக்க
சக்கரத்தாழ்வாரும் தானுமங்கேபோய்நடந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
ஆறுங்குளந்தாண்டி அதிகவனந்தான்தாண்டி
மாயனருகில்வந்து வணங்கியேதெண்டனிட்டு
வல்லிசையன்சொன்னதொரு வார்த்தைகள்தானுரைக்க
ஆயனவர்கேட்டு ஆங்காரக்கோபமதாய்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்பிறந்ததென

சக்கரம் அருச்சுனன் மனமறிந்து பெருமானுக்குச்
சொல்ல பெருமான் கோபித்துச் சாத்தகியை
அனுப்புகிறது.

சொல்லினைப்பாரே குடிகெடுக்கத்திடமே
வேண்டாமோ காண்டீவன்விசையா வீண்பகைதேடாதேயென
அருச்சுனற்குச்சொல்லி அதிவிரைவிலோடியந்த
செந்தருபன்றனைத்தலையை இந்தட்சணமறுத்து
ஒட்டகனைப்போரையிலே உத்திரவுகொண்டுவாரும்
என்றுரைகேட்டு எழுந்துநடந்தாரும்
காடுசெடியுங்கரியமலைதான்கடந்து
அருச்சுனன்தானிருக்கும் ஆரணியம்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனனைக்கண்டு அடிபணிந்துதெண்டனிட்டான்
மாயனுரைத்ததொரு வார்த்தைபொன்றுந்தப்பாமல்
ஒன்றுமொழியாமல் உரைத்தானேசாத்தகிதான்
அதிரவர்சேதியெல்லாம் அருச்சுனன்தான்கேட்டு
எத்தனைவார்த்தைகள் விரக்கமாய்ச்சொன்னாலும்
இராசமக்காயவரும் எதிர்க்கவுஞாயமுண்டோ
ஆயன்பெருமானும் அறியாரோஎன்சமர்த்தை
இரண்டுகள்பேச்சுகளோ பேசுகிறீரெம்பெருமான்
கைவலுமையுண்டானால் கடகிவரச்சொல்லும்
மலையிலேதானிருந்து மோதுகிறதுஞாயமுண்டோ
வாதானவெளியிலே வரச்சொல்லுஞ்சண்டைபண்ண
காக்கிறேனென்றன்னை கைவிடப்போறேனோ
மாயனுடனேமகேஸ்வரனார்வந்தாலும்
பெருமானுடனேகப் பிர்மதேவர்வந்தாலும்

எவரெவரெதிர்த்தாலும் இனி பேசென்றுபாராதே
போவென்றுசொன்னான் போர்விசையன்கோபமதாய்
சாத்தகியாழ்வாரும் தானடந்தார்விராட்டனவே
ஆயனருகில்வந்து அடிபணிந்து தெண்டனிட்டான்
அருச்சுனன்சமர்த்தர்களும் ஆண்மைகள்பேசினதும்
சண்டைக்குமுஸ்தீதாய் தானவரச்சொன்னதுவும்
அவ்வார்த்தைசொல்லுகையில் ஆயருங்கோபமுற்று
அவ்வலரிகண்கள்ரெண்டும் செவ்வலரியாகுதப்பா

அருச்சுனன்மேல் பெருமாள்கோபமாகி சண்டைக்குப்போக
திரியோதிரனை வரவழைக்கிறது.

கோபம்பெரிதாச்சு கோபாலநாதருக்கு
சாத்தகியைத்தானழைத்து சாமிபாரேதுசொல்வார்
திரியோதிரனுக்குச் சேதியுரையுமென்றார்
மாயவற்குபகையானார் மன்னர்பஞ்சபாண்டவர்கள்
ஐவரைக்கொல்லவென்று ஆபாயணமிட்டார்
உன்னுடையசேனைகளும் யுத்தமானவர்களும்
சேரத்தனையாகச் செப்பிவரச்சொன்னார்
வாருங்களென்று வரவழையுந்திரியனைத்தான்
இப்போசமயம் இதோபயணப்பார்க்கவென்று
நாகக்கொடிவேந்தன் ராசாவைஅழையுமென்றார்
சாத்தகியாழ்வாரும் சரணமிட்டுப்போய்நடந்தார்
அஸ்தினபுரத்துக்கு அடைவுடனேபோய்ச்சேர்ந்து
திரியோதிரனுக்குச் சேதிகள்சொல்லலுற்றார்
ஐவரைக்கொல்லுகைக்கு ஆர்மனதாகி
அழைத்துவரச்சொன்னார்காண் அரவக்கொடியோனே
வருவீரோஎன்றுசொல்லி வாய்மொழிகேட்கலுற்றார்
சாத்தகிசொல்லலுமே சர்ப்பக்கொடியோனும்
திரியோதிரன்கேட்டு சிந்தைமனங்குளிர்ந்து
ஐவரைக்கொல்லுகைக்கு அதிகமனதாகி
நல்லசமயம் நமக்குக்கிடைத்ததென்று

திரியோதிரன்பெருமாளிடம்வருகிறது.

அங்கேநட்டான்சண்டாளை அடியுமென்றான்பேரிகைகள்
இன்றுவெளிகூடாரம் இப்போதடிப்போமென்றான்
கானலுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்
வெயிலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
யானையின்மேல்டங்காவும் குதிரையின்மேல்டோராவும்
ஒட்டையின்மேல்நகாரத்தினை செலுத்திப்போவ
யானையுஞ்சேனையுடன் அரசமனைப்பயணமிட்டார்
திரியோதிரன்தம்பிமார்கள் தொண்ணூற்றொன்பதுபேர்
கருணனுஞ்சகுனியும் காந்தாரிபிள்ளைகளும்
துரோணாசுவத்தாமன் சொற்பெரியபாங்கையனும்

கிருபன்கிருபாசாரி கீர்த்தியுள்ளமன்னர்களும்
பிள்ளைபவன்லக்குணனும் போர்மிகுந்தமந்திரியும்
மற்றுஞ்சிலராசர்களும் மந்திரிகள்பயணமானார்
அமரதருஞ்சமாதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
எண்ணுங்கு ஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
நாலுபக்கத்திலுள்ள ராசாக்களசேனையுடன்
கார்மேகப்போலே கறுத்தானைகூட்டம்வரும்
மேகத்துமின்னலைப்போல் வெள்ளானைக்கூட்டம்வரும்
வானத்துமின்னலைப்போல் மணித்தேரசைந்துவர
செவ்வானம்போலே சிவந்தபுரவிகளும்
அச்சுக்கிருகிறென்ன யானைநெடுந்தேரசைய
வண்டில்கிருகிறென்ன மதயானைகோஷ்டமிட
குதிரைகனைக்குமங்கே கொக்கரிக்கும்பாளயங்கள்
செந்தூளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகராடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதான்முழங்க
தேர்களசைந்துவரச் சிகரக்கொடிபறக்க
மாயனார்பட்டணமே வாரார்களெல்லோரும்
அங்கேகட்டான்சண்டாவை அங்கிறங்கப்பாளையங்கள்
திரியோதிராசன் ஸ்ரீகிருஷ்ணனருகில்வந்து
மாயவரைக்கண்டு வணங்கியேதெண்டனிட்டான்
ஏழுலகமுண்ட சாமி எம்பெருமானேதுசொல்வார்
மாநாகங்கொண்ட மகாராசாநீர்கேளும்
காலையில்தானெழுந்து கனிவாய்முகங்கழுவி
தினகரனைத்தோத்தரித்து செய்தேன்ஜெபதபங்கள்
ஆகாயவீதியிலே அரும்பாவிகெந்தருவன்
வாசங்கள்தின்றுமெந்தன் வலதுகையில்தானுமிழ்ந்தான்
அவனைக்கழுத்தறுக்க அனுப்பினேன்சக்கரத்தை
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனராஜனவன் ஆதரித்துக்கொண்டானாம்
ஆகையாலருச்சுனனை அதமாக்கவேணுமென்று
உந்தனுக்குச்சொல்லி உரகதனேவாருமென்றேன்
என்வார்த்தைதள்ளாமல் என்மேல்தயவாகிவந்தீர்
ஐவரைக்கொல்ல திரியோதிரனும் அவன்சேனைகளும் எம்
பெருமாளும் அவர்சேனைகளும் சண்டைக்குவருகிறது.
ஐவரைக்கொல்லுகைக்கு அனைவோரும்போவோமென்றார்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றார்
அமரதரும்சமாதரும் அதிரதரானவரும்

கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழக்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
அத்தண்டராஜனுமம் அல்லவருமயனைமென்றூர்
துரோணரசுவத்தாமர் செல்லிய வீரர்களும்
கிருபன்கிருபாசாரி கிர்தகி பற்றனாளுமம
எண்ணூன்கு ஆயுதங்களை எடுத்தரையிற் கட்டினூர்கள்
ஏறினூர்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடையை
தேரணியுமாவணியும் சேனைத்திரளுடனே
வாரஜெனங்களெல்லா மட்டுமிதங்களில்லே
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
வனமாய்வனங்கடந்து வருகுதுபாளையங்கள்
தினகரன்வனந்தனிலே சேர்ந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றூர்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிமன்னர்வந்தார்கள்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றூர்
காளமகாரிஷிவனத்தில் கடுகிவந்தாரண்ணேரம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றூர்
காமதேனுபர்வதத்தில சடுகிவந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றூர்
கெந்தர்வபர்வதமே கிட்டியேவாறூர்கள்
ஒற்றுளொருவனை ஓடியேசொல்லுமென்றூன்
திரியோதிரன்படையும் ஸ்ரீகிருஷ்ணன்சேனைகளும்
வருகிறூரென்றுசொல்லி வாள்விஜயனுக்குரையும
என்றுசொல்லியருச்சுனற்கு அனுப்பினூர் தூதுவனை

அருச்சுனற்கு எம்பெருமாள் சண்டைக்கு வருகிறூ
னென்று தூதனிடம் சொல்லியனுப்புதல்.

ஓடினூன் தூதுவனும் ஒருநொடியிற்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனராஜருக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மாயனும்வுரகதனும் வருகிறூர்சண்டைபண்ண
எச்சரிக்கையாகவே இருமென்றூரெ பெருமாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தானருச்சுனனும்
தருமராருகில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
அண்ணன்தருமருக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன
மச்சரதமேறி வருகிறவேளையிலே
வாசங்கள்தின்று மண்மேலேதுப்பினூனும்
அவனுமிழ்ந்ததம்பலங்கள் அரிராமர்கையில்விழ
மாயன்பெருமாளும் மகாகோபந்தானூகி
சக்கரத்தைவிட்டார்காண் தலையைத்தரிக்கவென்று
அபயமபயமென்று அலறிப்புலம்பியவன்தான்
அபயக்குரல்கேட்டு ஆதரித்தேனவனை

ஆதரித்தேனென்றுசொல்லி அமர்செய்யவாராராம்
நுவரைக்கொல்லவென்று அரிராமர்வாராராம்
மாயருடன் சண்டைபண்ண வாரீரோ அண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு எதுரைப்பார்தருமருமே
போகாதேமாயருடன் போகாதேதம்பியென
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அஞ்சாதேதம்பியரே அதமாக்கிப்போட்டிடுவேன்
திரியோதிரன்படையும் ஸ்ரீராமர்சேனைகளும்
எல்லோரையுங்கொன்று எமலோகஞ்சேர்த்திடுவேன்

வீமனும்அர்ச்சுனனும் சண்டைக்குப்புறப்படுகிறது.

என்றுமதவீமன் எழுந்தானேகோபமுடன்
தருமரையுந்திரௌபதையுந் தம்பிமாரிருவரையும்
அப்பமிட்டகெந்தருவன் அவனையுந்தானழைத்து
உத்தியானவனத்திலே உள்ளோருகையிருக்கும்
அந்தக்குகையிலே அனைவோரும்போயிருங்கள்
வந்தவிரோதியெல்லாம் மண்ணுக்கிரையிடுவேன்
எம்பெருமான்சேனைகளை எமலோகஞ்சேர்த்திடுவேன்
எச்சரிக்கையாகவே இருமென்றானப்பொழுது
அப்படியேதருமரவர் அதிவிரைவாய்த்தானெழுந்து
பக்கமலைதனிலே ஒருகுகையிற்போயிருந்தார்
வீமாருச்சுனரும விரைவாகத்தானெழுந்து
நீண்டநெடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சலலடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
ஆக்கினைக்குங்கால்களுக்கு துத்தியப்பூச்சல்லடமாம்
சல்லடத்தினிட்டமேல்லே கட்டிவரிந்துகட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆயுத்தப்பட்டார்கள்
வடக்குமுனையிலே மதவீமனவந்துநின்றான்
தெற்குமுனையிலே தோவிஜயன்வந்துநின்றான்
வருகுதுபாளையங்கள் மண்ணுவிண்ணுங்கொள்ளாமல்
ஆனைகுதிரைரதம் அளவில்லாச்சேனைகளும்
வருகிறஜனங்கள்தனை மாயவனார்தானழைத்து
திரியோதிரனை சேரவழைத்து
உன்னுடையசேனைகளை உகமையுள்ளராசர்களை
சமருசெய்யவந்த சமர்த்துள்ளமன்னர்களை
ஆனைகுதிரைகளும் அரசுமன்னருள்ளவரும்
மாவணியுந்தேரணியும் மற்றுமுள்ளாளுவமும்
உன்னுடையபாளையத்தை ஒன்றாகவே கூட்டி
வடக்குமுகத்திலே மதவீமன்தனைமேலே
சண்டைபோர்செய்யுமென்று தான்சொன்னார்திரியனுக்கு

தெற்குமுகத்திலே தேர்விஜயன் தன்னருகே
என்னுடையசேனைகளெல்லாரும்மே யெதிர்த்து
அருச்சுனன் தன்னுடனே அமர்துசெய்திடுவோம்
என்றுஅனுப்பிவைத்தார் இயலானமயவரும்
தவளச்சங்கூதினர் சண்டைக்குவாரேனென்று
ஊதினர்சின்னம் உலகளந்தார்பாளையத்தில்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
செந்தூளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வந்துயெதிர்த்தார்கள் வாள்விஜயன் தன்னுடனே
அந்தசமயத்தில் அரவக்கொடியோனும்
என்னுடையசேனையுடன் தான்வடக்குதிசையதனில்
வந்துஎதிர்த்தானே மதவீமன் தன்னுடனே
எண்ணெஞ்சேனையுடன் எக்கரித்துதான்வளைத்தார்
சிங்கநாதந்தானூதி சேனைகளுங்கொக்கரித்தார்
கண்டான்மதவீமன் கண்கொள்ளாச்சேனைகளை
எல்லவரைக்கொல்லவென்று எழுந்தானே மதகரியான்
கோபம்வருகுது கொற்றவனார்வீமனுக்கு
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூக்கிடுது
கண்ணையுருட்டிக் கதம்பினான்சேனைகளை
எட்டினானைகல்மலையை எகிறவிட்டான்பாளையத்தில்
மலைகளைதான்பிடுங்கி மதவீமன் வீசுகிறான்
குன்றுகள்பேர்த்தெடுத்துக கொப்பெனவேவீசாடுகிறான்
ஆனைகுதிரைகளும் அலறிக்கலங்குடுமாம்
அச்சுகளும்தான்முறிந்து அனேகரதம்விழுமாம்
வண்டிமுறிந்துசில மச்சுத்தேர்தானொடியும
ஜெனங்கள்மடியுது செம்புரவிஓடுகுது
சண்டங்கண்டமாகுது கடுஞ்சேனையதனையும்
அப்பாடியென்றுசொல்லி அலையுதுபாளையங்கள்
செத்தஜனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
ரத்தாறுஒடுகுது ரணங்கள்மிகக்கொப்பளிக்க
ஐயோசிவனேயென்று அலையுதுபாளையங்கள்
பார்த்துமுடியாது பாவியுடஜனங்கள்
சொல்லமுடியாது துரியோதிரன்பாளையங்கள்
இந்தவிதமாக எழில்வீமன் கொல்லுகிறான்
இப்படியாகவே இவனசண்டைபண்ணுகையில்
ஆணலழகுமன்னன் அருச்சுனன் தன்னுடனே
வந்துஎதிர்த்தாரே மாயர்பெருமானும்
வில்லைதான்நாரிபூட்டி விலைக்குணத்தொனித்தான்
மார்புளத்தானெடுத்து தோள்புளவாங்கிவிட்டான்

பாணப்ரயோகங்கள் பார்க்கமுடியாது
சொர்ணமழைபோலே செரிகிறார் பாணமது
சங்கரன்பாரிப்பமே சரமேல்சரம்விடுத்தார்
அருச்சுனனும் பின்னிடையான் அகோரசரம்பொழிந்தான்
ஆகாயந்தன்னையுமாய் அம்பாலேபந்தலிட்டு
சூரியனைத்தானமைத்தான் சூராதிசூரனவன்
வில்பிடித்தகைத்தலத்தில் பெத்தசிவப்பெரும்
வளைத்தவில்விடாமல் மாரிச்சரம்பொழிந்தார்
வாயுவினஸ்திரமும் வருணாஸ்திரமும்விட்டார்
பின்னையும் பலஸ்திரங்கள் பிரயோகமாய்த்தான்விடுத்தார்
நாலுநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
ஒருவர்க்கொருவர் உக்கிரமிலவாங்காயம்
சண்டைபாரக்களத்தில் தாக்கிப்பொருதனுற்றார்
விலக்குவாரில்லை பிருத்தசமரதனை
மாயனெம்பெருமாட்கு வருகுதுமெத்தகோபம்
என்றுமில்லாக்கோபம் எழும்புதுமாயவற்கு
விட்டதொருபாணமெல்லாம் பட்டறுத்தான்வாள்விஜயன்
அருச்சுனனைக்கொல்ல அரிராயர்கோபமதாய்
சக்கரத்தைத்தானெடுத்தார் சாமிபெருமானும்
கொல்லவேயென்றுகொண்டார் கோபாலர்அருச்சுனனை
மந்திரதூபமிட்டு மாயவனுரேதுசொல்வார்
அருச்சுனன் தன்சிரசை அரைநொடியில்வாங்குமென்றார்
சுழற்றிவிடுத்தாரே சுவாமியுஞ்சக்கரத்தை
கண்டானேவாசவிஜயன் காந்தாளமாயெழும்பி
தானுமெடுத்தானே தன்னுடையசக்கரத்தை
சக்கரத்தைமந்திரித்து சாமியைக்கொல்லவென்று
எடுத்தானேசக்கரத்தை இமைப்போர்கள்தானறிய
சக்கரத்தைமந்திரித்து தான்விடவகையறியான்
வாவென்றழைக்க வகையறியானருச்சுனனும்

சாமிபெருமாள் சக்கரமெடுக்கத்தனஞ்சயன் பதில்சக்கர
மெடுக்க இருவரும் சமாதான மாகிறது.

கண்டார்பெருமாளும் கனமோசம்வந்ததென்று
நாமல்லோகற்பித்தோம் நல்விஜயனருச்சுனற்கு
சக்கரத்தைவிட்டாக்கால் தானழைக்கவகையறியான்
சக்கரம்வந்தானேல் தன்னையறுத்துவிடும்
மோசம்வருகுதென்று முகில்வண்ணரேதுசொல்வார்
தன்னுடையசக்கரத்தை சாமியார்தேரில்வைத்தார்
தேரைவிட்டிறங்கினார் ஸ்ரீராமர்பொட்டெனவே
கண்டானேயருச்சுனனுங் கடிதிறங்கினான்
தேரைவிட்டுநாணிறக்க ஸ்ரீராமர்க்கெதிரானான்
ஒருவர்க்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்

எம்பெருமானும் அருச்சுனனும் சமாதானமானதை திரியோதிரன் கண்டு பொறாமைபட்டுச்சொல்லாமல் ஓடுகிறது.

கண்டான்திரியோதிரன் கரியமால்மோசமதை
தனஞ்சயனும்மாயனுமே தழுவிவிளையாடுவதை
எண்ணாதுமெண்ணினான் எரிநாகங்கொண்டவனும்
மாயன்கெடுத்தானே வஞ்சனைகள்செய்தானே
பொல்லாநினைவுகொண்டு பெருமாளழைத்துவந்தார்
நம்மையேகொல்லவென்று நாரணரழைத்துவந்தார்
அறியாமல்வந்துவிட்டோம் அபராதுசெய்வோமென்று
மாயவனைநம்பி வருவதுநீதியல்ல
ஐவர்சகாயரென அவனியதிற்கேட்டிருந்தோம்
அறிந்துமிருந்துநாம் அநீதமாய்மாளவந்தோம்
யுத்தம்பண்ணவந்திங் குறவாடிப்போனாரே
சொல்லுகிறேனென்றுவந்து கூடியுறவாடினார்கள்
இனியிருக்கஞாயமல்ல என்றுவழிபிடித்தான்
ஆனையுஞ்சேனையும் அண்டவொண்ணாபாளையமு
தப்பியிருந்த தளம்பெரியசேனைகளை
கூட்டிநடந்தானே கொத்துப்போல்வீரியனும்
காடுஞ்செடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுஞ்சுனைகடந்து அநேகமலைதான்கடந்து
அத்திநகர்பட்டணத்தை அடுத்தான்திரியனுமே
அந்தசமயத்தில் ஆயருமருச்சுனரும்
ஒருவற்கொருவர் உறவாடிப்போய்நடந்தார்
மலையேறிவுச்சி வாராரிருவருமாய்
தருமருந்துரோபதையுந் தம்பிமாரிருவருமாய்
கடுகியெழுந்திருந்து கார்வண்ணரைத்தொழுதார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்மாயவரை
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
பெருமாள்மனமகிழ்ந்து பிரியமுடன்தானமர்த்தி
அல்லவரைக்கையமர்த்தி அரிராமர்வீற்றிருந்தார்
தருமருடனுக சாமியவரேதுசொல்வார்
காலைக்கடன்முடித்துக் கையோதிசெபதபங்கள்
செய்துகொண்டிருக்கையிலே தேரேறியந்தரமாய்
ஆரோவொருகெந்தருவன் அதிகக்கெருவமதாய்
போகிறவனின்கையிற் புளிச்செனத்தம்பலத்தை
துப்பினன்சக்கரத்தைத் துணிக்கவாவென்றனுப்ப
கிரீடிஅபயமெனக் கெந்தருவனோடிவர
எனக்குப்பகையான இயலனைபாதகனை
ஆதரிக்கஞாயமுண்டோ அமர்செய்யசாதிப்பேன்
என்னுடையர்பொருக இராசாவேஞாயமுண்டோ
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்

அறியாதார்செய்தபிழை ஆண்டவனேமனம்பொறுத்து
தெரியாதார்செய்தபிழை தேவர்மனம்பொறுத்து
இரவும்பகலுமே எப்போதுமுன்னைத்தான்
உம்மைத்தொழுகலை உகொளவென்றிருந்தோம்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையேதெய்வமென்று உயிர்கொண்டுலாவுகிறோம்
என்றுவணங்கினர் இயலானதருமரவர்
உள்ளங்குளிர்ந்துமே உவந்தாரேதுசொல்வார்
அருச்சுனரைத்தான்பார்த்து அரிராமரேதுசொல்வார்
செய்தது உன்சபதம் தேவேந்திரன்மகனே
அபயமிட்டபேர்களைத்தா னாதரிக்கவல்லபிரான்
செப்பியதுதான் கருணை தேவேந்திரன்மகனார்
மார்க்கண்டனுக்காக மயேஸ்பரன்சொல்லிவிட்டார்
விசைபதிவார்பரமசிவன் நிலைபறிந்தான்நாமறிவோம்
உன்னிலும்வல்லபிரான் உலகத்திலாருமில்லை
சந்தோஷமாச்சுது தர்மபஞ்சபாண்டவரே
இத்தலைவிட்டு இனியவனம்போயிருங்கள்
ஏதுவினைவந்தாலும் என்னைநினைத்திடுங்கள்
போய்வாரேனென்று பெருமாளெழுந்திருந்தார்

எம்பெருமாள் விடைபெற்று தன்னிருப்பிடம் செல்லுகிறது.

ஐவரைவாழ்த்தியே அரிராயர்போய்நடந்தார்
காடுஞ்செடியும் கரியமலைதான் தாண்டி
மாயவனார் போனபின்பு வாள்விஜயனேதுசொல்வான்
வாராய்நீகெந்தருவா வார்த்தையொன்றுநீர்கேளும்
(உன்) ஆபத்துதீர்ந்தது ஆண்மையுள்ளகெந்தருவா
உந்தனரண்மனைக்கே உளமகிழ்ந்துபோய்ச்சேரும்
என்றுவிடைகொடுத்தார் எழில்விஜயனருச்சுனனும்
அப்போதுகெந்தருவன் அருச்சுனர்க்குத்தெண்டனிட்டார்
நான்செய்தபாவத்தை இராஜனேதீர்த்துவிட்டீர்

கெந்தருவன் அருச்சுனர்கையில் விடைபெற்றுக்கொண்டு
தன்னிருப்பிடம்போய்ச் சேருகிறது.

ஆபத்தைதான்தீர்த்து ஆதரித்தீர்வாள்விஜயா
உனக்கேதுநான் தருவேன் உயிர்க்கேத்தராஜாவே
பாராசாரிவெண்புரவி பஞ்சவர்ணநற்புரவி
சாகாப்புரவிநான் தாரேனகாண்வாள்விஜயா
உந்தன்ரதத்திற்கு உற்றபுரவியென்றான்
ஆனலழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
வனவாசந்தீர்ந்துநாங்கள் வந்தபிறகாக.
அப்போதுவேணுமென்று லப்புறவிதானனுப்பும்
எந்தன்மேல்தயவுநீ என்றும்மறவாதே

போய்வாருமென்றுசொல்லி புண்ணியருங்கூறினார்
மாயனென்னுங்கெந்தருவன் வணங்கியே தெண்டனிட்டு
போதச்சரணமென்று போய்நடந்தான்கெந்தருவன்
ஏழாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு
இந்தக்கதைதன்னில் இடறுண்டானால்
ஜகத்தினிலுள்ளவர்கள் சரியாயிக்கதையை
இகழ்ச்சியாயுள்ளதெல்லாம் புகழ்ச்சியாய்த்தான் திருத்தி
அகத்தினிற்றான்பொருந்தி அன்பாகத்தான்படித்தால்
சுகத்துடன்தான்வாழ்ந்து சுவர்க்கபதிசேர்வார்கள்
இந்தப்படியாக எப்போதும்வாழ்ந்திடுவார்
வாழ்த்திவிடைகொடுத்தார் மாயவனாப்போது
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

ஏழாவது கெந்தர்வபர்வதம் முற்றிற்று.

௮வது, குருபாரிஷியனம்.

எட்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணிவைத்தசீமாடு வனவாசம் போனார்கள்
குருபாரிஷிவனத்தில் குடித்தனமாய்போனார்கள்
அந்தவனத்திலே ஐவர்குடித்தனமாய்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்னசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்தவனத்திலே அனேகநாட்சென்றபின்பு

துரோபதைவனசாரிவந்து பாரிசாதபுட்பம் கேட்கிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
ஒற்றையொருநாளில் ஒண்டியாய்திரௌபதையாள்
அந்தவனத்தின திசயத்தைப்பார்த்துவர
வரத்திற்பெரியவராம் மகாரிஷியானவராம்
யோகத்திற்பெரியவராம் உத்தகுருபாரிஷியும்
சாமியிலும்பெரியவராம் தபத்திலிருந்தாரும்
(அவர்)பூசைபண்ணும் தீர்த்தம் பொய்கைபோலோடுகுது
ஓடுஞ்சலத்திலே ஓதுங்கிவரும்பூமலரும்
பாரிசாதபூமலரும் பரிமளமாய்வீசுகுது
ஆற்றிலடித்துக்கொண்டு அலைந்துவருகுது
கண்டாளே துரோபதையாள் கடிகிமனதுகொண்டாள்
மெத்தாசைபட்டாளே வேல்பொருதுங்கண்ணாளும்
எண்ணமதுபெண்ணுகிறாளெண்ணீதிரௌபதையும்
ஆரோடேசொன்னாலே ஆகுமிந்தகாரியங்கள்
எவரோடேசொன்னாலே எடுத்தளிப்பாரிம்மலரை

வெற்றிமதயானை வீமருடன்சொன்னோமானால்
பரித்துத்தருவார்காண் பரிமளத்தைநாமறிய
என்றுநடந்தாளே இளங்கொடிதுரோபதையும்
பர்ணசாலைமேலாசப் பாஞ்சாலிஓடிவந்து

துரோபதை வீமனைப் புட்பங்கேட்கிறது.

வெற்றிமதயானை வீமனைத்தான்பார்த்து
வலப்பசுங்கிளியாள் இளங்கொடியாளேதுசொல்வாள்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவிண்ணப்பம்
காற்றிலேகண்டேன்காண் கண்டாசைபட்டுவந்தேன்
பாராதுபார்த்துவந்தேன் பார்த்தாசைபட்டேனையா
என்மனதுகேற்றபடி எனக்குவிடைதாரும்
வெற்றிமதயானை வீமரப்போதுசொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெண்ணே பச்சைப்பசுங்கிளியே
ஏதுகொண்டுவந்தாய் எனக்கறியசொல்லுமென்றார்
தோகைமயிலழகி துரோபதையாளேதுசொல்வாள்
ஆயிலண்டகாவேரி ஆறொன்றுதான்வருது
பரிமளந்தோடிருக்குது பார்த்துவந்தேன்பாரிசாதம்

வீமன்பாரிசாதபுட்பம் கொண்டுவரப்போகிறது.

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
இக்கோவிருப்பெண்ணே என்றேயெழுந்திருந்து
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
தெண்டாயுதமெடுத்து சிலைவீமன்வாரானே
ஆற்றங்கரையோரம் அங்குவீமன்வாரானே
பூமரத்தைத்தேடியே போறானேவீமனவன்
யோசனைக்குயோசனை உயரமுள்ளபூமரமும்
இதுவென்னசிறுமரம் இட்சணமேகொண்டுவாரேன்
ஏழுசுற்றுமேலிகளாம் இருபக்கமாமலையும்
மாபலைகன்னிலே வல்லனுமார்காவலதாம்
பூவனத்திற்போகவென்று போகையில்வீமனவன்
வாசற்படியிலே வல்லனுமார்படுத்திருந்தார்
கண்டாரனுமாருமே கரிவீமனைப்பார்த்து

வீமனுக்கும் அனுமாருக்குஞ் சண்டையாகிப் பின்பு சமாதானப்படுதல்.

ஆரடாராட்சதனே அஞ்சாமற்போகவந்தாய்
இந்தவனத்திலே எதுக்குப்போறாயென்றான்
போகவிடேனென்றானே போரனுமானப்போது

வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
கோபம்வருகுது கோலாகலவீமனுக்கு
சாணுண்டுஇக்குரங்கு தடைபடுத்துதென்றுசொல்லி
கைரெண்டும்நீட்டியே கட்டழகன்வீமனவன்
கோடையிடிபோலே குத்தினான்நடுமுதுகில்
அந்தஅடிசத்தம் அந்தவனம்கிடுகிடென
அந்தவனத்திருந்த அநேகமிருகமெல்லாம்
மறுகாலொருவனத்தே ஓடுதேமிருகம்
அனுமாருடரோமங்கள் அயர்ந்துகொடுத்ததுகாண்
கோபம்வருகுது கோபாலதூதருக்கு
என்னையடித்தவனை இட்சணமேகொன்றிடுவேன்
என்றுசொல்லிதானெழுந்து நின்றானே நல்லனுமான்
அடித்தானேவீமனை அடிவானத்திடிபோலே
கோடையிடிபோலே குத்தினான்பார்கலங்க
அந்தஅடிபட்டவுடன் அங்கேகளைத்தானும்
மண்மேல்விழுந்தானும் பல்லாங்கபாலையாய்
விழிகள்பிதுங்கியே விழுந்தானேமூர்ச்சையதாய்
மாண்டவன்போலே மண்மேல்விழுந்தானே
அனேகநெடுநேரம் ஆனபிறகாக
மூர்ச்சைதெளிந்து முடிமன்னன்தானெழுந்தான்
கண்டானே நல்லனுமான் கிங்கியவனே துரைப்பான்
என்னுடையசண்டையிலே எவரும்பிழைத்ததில்லை
(இவன்) ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்தான்
அடித்தஅடியோடே அவனியில்விழுந்தவன்காண்
தவறியெழுந்தவன்காண் தப்பிப்பிழைத்தானே
என்றுமனதிலெண்ணி இயலனுமானே துரைப்பான்
ஆரடாராட்சதனே ஆங்காரமுள்ளவனே
ஆரென்றிருந்தீர்நான் ஸ்ரீராமதூதனல்லோ
லங்கையழித்தவன்நான் ராவணனைவென்றவன்காண்
அஞ்சனைதேவிபெற்ற அனுமந்தன்நானல்லவோ
என்னோடெதிர்த்தவனும் இனிபிழைக்கப்போறீரோ
என்றவுரைகேட்டு இயலானவீமனவன்
உற்றதுகேட்டு மெத்தபயந்தவனும்
அண்ணனென்றறியாமல் அபராதுசெய்தோமே
(என்று) பச்சைத்தழையுருவி பாதத்திற்றான்போட்டு
பூக்கைலவலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டான்
இங்காலவலம்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கத்தெண்டனிட்டான்
கண்டார்நல்லனுமார் சடிதியேயுரைப்பார்
ஆரடாதம்பிநீ அறிவுரையுமென்றான்
(உன்)ஊரேதுபேரேது உன்னுடையபேரென்ன

ஆருடையபுத்திரன்காண் அறியவுரையுமென்றான்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
என்தகப்பன்வாயுராஜர் என்தாயார்குந்தியம்மாள்
மந்தாரக்குந்தியம்மாள் பெற்றெடுத்தமகாராஜன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலமணிகளைவருண்டு
தருமராஜர்தம்பி தாக்குடன்வீமனென்பேர்
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வான்நல்லனுமான்
உத்தமனேநாமிருவர் ஒக்கப்பிறந்ததினால்
என்னுடையசண்டைக்கு எவருமபிழைத்ததில்லை
தம்பியென்றதாலையினால் தப்பிப்பிழைத்தீரே
மானாமல்நீபிழைத்தாய் மதவீமனானதினால்
(என்று)ஒருவர்க்கொருவர் உறவாடிதானபேசி
ஏதுவகையாக யிங்குவந்தாய்தம்பியரே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வார்
இந்தவனமதனில் வந்தோம்வனவாசம்
பாஞ்சாலன்பெற்றமகள் பஞ்சவர்ணநற்கிளியாள்
பாரிசாதபூமலரை பார்த்தாசைபட்டாளாம்
காணாதபூமலரைக் கண்டாசைபட்டாளாம்
பாரிசாதபூமலரைப் பறிக்கவென்று இங்குவந்தேன்
வேண்டிவந்தபூமலரை வேல்வேந்தே தாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுமந்தனேதுசொலவான்
குபேரனின்வனத்தில் கோடியுண்டுகாவலர்கள்
ஏழுலட்சங்கிங்கிலியர் இவ்வனத்திற்காவலுண்டு
இத்தனைகாவலிலே எப்படிக்குப்போய்வருவாய்
அந்தரிஷியறிந்தால் ஆக்கினைசெய்திடுவார்
கொல்லநினைப்பாரே குடிகேடுவந்திடுமே
ஆருமறியாமல் அவருடையபுட்பவனம்
என்னசெய்வேன்தம்பியரே எப்படிபோய்நீவருவாய்
(உனை)வால்முனையில்கட்டிநான் வனத்திலேவிட்டிடுவேன்
ஆருமறியாமல் அம்மலரைநீபறித்து
வாலையசக்கிவிட்டால் எடுத்துநான்வந்திடுவேன்

வீமன் அனுமான்வாலின் வழியாகச்சென்று ராட்சதரை
யெல்லாங் கொல்லுகிறது.

(என்று)வாலிலேகட்டினான் மதகரியான்வீமனைத்தான்
வாலைகிளப்பி வனத்திலேபாகவிட்டான்
இந்தவனப்புதுமை எல்லாமறியவென்று
வாலையவிழ்த்தானே மதகரியானப்பொழுது
அசக்கிவிட்டானென்று சொல்லி அனுமாரும்வாங்கினார்
வீமனைக்காணாமல் மெத்தமனந்தளர்ந்தார்
ஆயாசப்பட்டு அனுமந்தன் தானிருந்தான

வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கவென்று
சுற்றிவருகிறான் சுந்தரமாய்வனத்தை
மல்லிகைமுல்லை மலரோடுசெண்பகமும்
பாரிசாதபுஷ்பமரம் பரிமளம்வீசுகுது
வீசுகின்றபுட்பமரம் வேருடனேபிடுங்கி
படுத்துப்புரண்டானே பரிமளத்தைதானறிந்து
அந்தவனமெல்லாம அதம்பண்ணுனப்போது

பூமரங்களைவீமன் அதம்பண்ண காவலர்கள்வந்துசண்டைபண்ண
இறந்தவர்போக மற்றவர் ரிஷியாருக்குச்சொல்லல்.

அந்தவனத்திலே அனேகம்பேர்ராட்சதரும்
எல்லவருந்தான்வந்து எட்டினார்வீமரண்டை
வந்துவளைத்தார்கள் மதகரியான்வீமனுடன்
எட்டினார்சண்டை எழும்புதுசமருமப்போ
ஒருவற்கொருவர் யுத்தங்களாகுது
வெற்றிமதயானை வீமன்வெகுண்டெழுந்து
அடிப்பான்கெதையாலே அனேகம்பேர்கீழேவிழ
அனந்தம்பேர்ராட்சதரை அதமாக்கிக்கொன்றானே
இந்தவிதமாக எண்கோடிராட்சதரை
கொன்றுவதைத்தானே கோடானகோடிகளை
கொன்றவர்தான்போக நின்றதொருராட்சதர்கள்
குருபாரிஷியருகே கொப்பெனவோடிவந்தார்
அபயமபயமென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
ஏதுக்கபயமிட்டீர் என்னகருமமென்றார்
ஆமோ ஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
சிங்காரமாவனத்தைச் சீரழித்தான்பாவியவன்
மரங்களைத்தானபிடுங்கி வனமெல்லாம்அதமாக்கி
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்போட்டுவிட்டான்
இவ்வார்த்தைகேட்டு எரிக்குங்கிரவனைப்போல்
காயுங்கதிரவனைப்போல் கண்சிவந்தார்குருபாரிஷியும்
கோபம்வருகுது கொடுங்காலருத்திரன்போல்
என்னுடைய பூவனத்தில் எவரும்வருவதில்லை
தேவர்முனிவர் தீண்டொணாபூவனத்தை
ஆரடாதூதவரே ஆயிரம்பேர்போகவென்றார்
கைப்பிடி பாய்த்தானபிடித்துக் கடுகெனவேகொண்டுவாங்கள்
என்றசத்தங்கேட்டு எழுந்தார்களாயிரம்பேர்
வாய்வேகமாகவே வனத்திலேபோயிறங்கி
ஆரடாராட்சதரே ஆங்காரக்கோபமுடன்
வனத்தையதமாக்கி வந்தவனைக்கொன்றவனே
எங்களுடஐயரும்மை இட்டுவரச்சொன்னாரே
குலதிறம்பரியவர்காண் குருபாமகாரிஷியும்

உன்னை-யழைத்துவரச்சொன்னார்காண் ஐவருமப்போது
கடுகெனவேயாருமென்று கையைப்பிடித்திழுத்தார்
கையோடேகைப்பிடித்தான் கட்டுபோகையைவிட்டார்
ஆயிரந்தூதுவரை அசுரசந்தனத்தில்தட்டிவிட்டான்
அத்தனைபேரையும் அங்கொருவன் கொன்றுவிட்டான்
காலொருவன் தப்பிவந்தே அவ்வார்த்தை சேதிசொல்ல
என்றவன்கூறுமுன்பே எழில்குருபா முனிகேட்டு
கோவைப்பழம்போல கூர்விழிகள் கண்சிவக்க
சவுக்கிப்பழம்போல தனதிரண்டுகண்சிவக்க
நெருப்புப்போல கண்சிவக்க நெறுநெறென்று பற்கடித்து
சுவாசமனலெழும்பக் கருணையோன் றுக்கோதானருமல்
தானுகைவந்து எதிர்கடனைந்தானும்
ஏகினார்கண் தண்டிகையெழில்குருபாமுனியவரும்
பாரவனத்திருக்கும் பங்களாதன்னருகே

புஷ்பவனத்தை யழித்தவனை சபிப்பதற்காககுருபா
முனிவருகிறதை எம்பெருமாளறிந்து அனை
வரையும் சமாதானப் படுத்துதல்.

வருகிறவேளையிலே மாயனிதுவறிந்தார்
காவலர்கள்பஞ்சவர்க்குக் கைமோசம்வந்ததுவே
மோசங்கள்வந்து முடிந்ததேபஞ்சவர்க்கு
பொல்லாதகாலம் பிறந்ததுபஞ்சவர்க்கு
ஆகாதகாலம் ஐவர்க்குவந்ததுவே
உன்னுக்கைக்கெட்டினி உருத்தெரியாதுபோகுதையோ
தோள்வலிமையெல்லாம் தொண்டழிந்துபோகுதையோ
பெட்டகவீடேஆபரணம் பெருமைகுலையுதையோ
எழில்குருபா கீழ்ப்படிகே எதிர்ப்பாரொருவரில்லை
மாயாசக்கியல்லாகர் கைக்கெட்டிலேகொன்றிடுவார்
ஜெகைரக்கொண்டிருப்பர் அவர்க்குபாரசெய்ச்சே
சாதத்தை சாதுகேதம் படைபோகக்காப்போமென்று
வட்டமாய்க்குடைபிடி மாயாசேமாயவனர்
ஐவருக்கும் ஆபரணம்வந்துவிட்டார்
சாயம்புமன்னன் தருமருக்கண்டாராம்
கடிவெழுந்திருந்து கால்வண்ணத்தைதொழுது
சரணமடைந்தார்கள் தருமராசர்கள்
சிங்காதனங்களிட்டவர் தருமர்வீற்றிருக்க
இட்டசிங்காதனத்தில் வாசிருந்தாராம்
சாயம்புமன்னர் தருமரவர்துரைப்பார்
இன்னேரம்வேளையிலே எம்பெருமாளெங்குவந்தீர்
அடியாரைத்தேடியே ஆண்டவரேவந்ததென்ன
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
அடியார்தமாயவனர் ஆதிமூலமேதுசொல்வார்

நால்வரிருக்கையிலே நல்லதம்பியெங்கேயென்றார்
வெற்றிமதயானை வீமராசனெங்கேயென்றார்
தருமறறியேனென்றார் தம்பியரைக்காணேனென்றார்
தோராவடிவழகி துரோபதையாளே துசொல்வாள்
பாரிசாதமலரை பார்த்தாசைபட்டேனையா
பிரியமாய்வேண்டுமென்று பிணங்கினேன்வீமரண்ணை
பூபறித்துவாரேனென்று போய்விட்டார்வீமராசன்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
கைமோசம்வந்ததுகாண் கூடயில்லை தருமராவர்
ஐவர்பஞ்சபாண்டவரே அனைத்தம்பிரநாளாச்சே
குருபாரிஷிவனத்திற் கொப்பெனவேபோய்ப்புகுந்தான்
மரத்தைப்பிடுங்கியவன் வனநாசமாக்கிவிட்டான்
எழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டான்
அந்தவனத்தை அதமாக்கினபடியால்
கொல்லவருகிறார் கொப்பெனவேமாமுனியும்
தவத்திற்பெரியவர்காண் சகலகலைவல்லவர்காண்
வரத்திற்பெரியவர்காண் வல்லகுருபாமுனியும்
அதிகசாபம்தானிடுவார் ஐவரைக்கொன்றிடுவார்
என்னசெய்யப்போரேனென்று எமபெருமாள்கூறுகையில்
அஞ்சிப்பயந்துமல்லோ ஆண்டவற்கேதுசொல்வார்
இத்தனைநாள்காத்தீரே இன்றுகையைவிட்டீரே
அரக்குமாமாளிகையில் ஐவரைக்காத்தீரே
அம்பலவாசலிலே அபிமானங்காத்தீரே
ஆபத்தைதீர்க்கவந்த ஆண்டவருநீரலவோ
உம்மைவிடவேறெமக்கு உற்றதுணைதானுமுண்டோ
காக்கக்கடனுமக்கு என்றுமவர்கைகொழுதார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
குருபாரிஷியுடனேன் பேசிக்கொண்டுதானிருப்பேன்
அப்போதுநானுமேபெரும் அந்தவழிவந்திடுங்கள்
தருமரேயும்மைநான் தாழ்ந்துவணங்குகிறேன்
உன்னைவணங்கினால் வுபசாரவார்த்தைசொல்லும்
ஆரென்றுகேட்பாரே அந்தகுருபாமுனியும்
உம்மிலும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுவுரைத்தாலே எழுந்துவணங்கிடுவார்
வணங்கிநமஸ்கரிப்பார் வாழ்த்தியெடுத்தணைப்பீர்
வெற்றிமதயானை வீமனைதிரவந்தானும்
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்பேன்
அந்தரிஷியாரும் ஆரென்றுதான்கேட்பார்
உன்னிலும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுசொல்லிநனிருப்பே னிவ்விதமாய்ச்செய்யாவிட்டால்
அந்தகுருபாமுனியும் அனைத்தம்பன்னிபோட்டிடுவார்

ஆகையால்நான்போறேன் ஐயரேபின்வாரும்
என்றெழுந்தாராம் இபலானமாயுவரும்
வாரார்பெருமாளும் வனத்தூடுதான்நடந்து
குருபாமுனியெதிரே கொப்பெனவேவருகையிலே
மாயவரைக்காணுகையில் வணங்கினார் குருபாமுனி
ஒருவர்க்கொருவர் உறவாடிபேசினார்கள்
மாயன்பெருமாளை வனத்திலேயெங்குவந்தீர்
இந்தவனத்தனிலே யேதுவகையாகவந்தீர்
வந்தவகையதனை வாய்திறந்துசொல்லுமென
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வனசாரிபாகவே வந்தேன் குருபாமுனியே
வந்தவிடத்திலிந்த வனத்திலுமைக்கண்டேன்காண்
இந்நேரவேளையிலே எங்குவந்தீர்சொல்லுமென
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
வனத்திலேபோய்புகுந்து மரங்களைதான்பிடுங்கி
ஏழெட்டுத் தூதுவரை எல்லவரைக்கொன்றிடுவான்
பொல்லாதபாவியைக் கொல்லவென்றுபோறேன்காண்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார்
உம்முடையவனத்திலே ஒருவர்வரப்போரதில்லை
தெய்வலோகத்தாரும் தீண்டாதபூவனத்தே
அமரர்சித்தர்முனிவராலும் ஆகாதுன்வனமழிக்க
ஐயரேஉன்றன்வனத்தை அழிக்குப்பாலகனை
இச்சணமேசொல்லுகிறேன் இட்டுவரச்சொல்லுமென்றார்
இருவருமாகவே ஏகமாய்க்கொல்லவென்று
ஆரடாதூதுவனே அழைத்துவாராட்சதனை
என்று அவர்பேசுகையில் இபலானதருமரவர்
நகுலனைதானனுப்பி நல்வீமர்க்கேதுரைப்பார்
அண்ணருந்தம்பியரும் ஆதிநாராயணரும்
குருபாரிஷியருகே கூடிபேசியேயிருப்பார்
கொல்லவென்றால்தூதுவரைக் கூட்டிவரச்சொல்வார்கள்
அப்போதுதூதுவர்களழைத்துமைத்தான்வருவார்
வந்தவுடனுமை வணங்கிநமஸ்கரிப்பார்
அப்போதுநீரன்றை ஆசீர்வதிப்பீரென
சொல்லிவரச்சொன்னார்காண் சீக்ரமுடனேயென்று
தருமரிவையுரைக்கத் தார்வேந்தநகுலனுமே
வாயுவேகமாகவே வந்துவிட்டான்வீமனண்டை
உன்றமையனமா அண்ணருங்கிருஷ்ணரும்
இப்படிக்குச்சொல்லச் சொன்னார்களென்னையென்று
வீமனுக்குச்சொல்லிவந்து விட்டான்நகுலனுமே

அருகேவரப்பார்த்து எதிராகத்தானெழுந்து
அடிபணிந்துதெண்டனிட்டு அவரையணைத்துநிற்க
பார்த்தார்குருபாரிஷி பயந்தவருமேதுசொல்வார்
எந்தவூர்எந்தநாடு இவர்பேச்சைசொல்லுமென்றார்
ஜெபத்திலுந்தபத்திலும் செய்திடுமோர்நிஷ்டையிலும்
அதிகமுடையவர்தான் அழகானதருமரிஷி
ஆதிகயிலாசம் அரனிடந்தனிலே
உன்னுடையபேர்விளங்க ஒருமணியடிபடுது
முனிவரிவர்பேரிலே மூன்றுமணியடிபடுது
அன்னதானங்களிலே அதிகமுடையவர்தான்
யோகத்திற்பெரியவர்தான் உன்னிலும்வல்லபிரான்
எடுத்துப்பார்த்தாலே எரிந்துவிடும்லோகமெல்லாம்
பொய்வசனஞ்சொல்லாதார் புகழானதருமரிஷி
தருமரிஷியாரை தழுவியணைத்துக்கொண்டு
சிங்காதனத்தில் சிறக்கவீற்றிருந்தார்
தக்கபுகழுடைய தருமரிஷியேதுசொல்வார்
சாமிபெருமானே சன்யாசியானவரே
இருவருவாகவே இங்குவந்தவாறேது
என்றுநான்சொல்லுகையில் ஏதுசொல்வார்குருபாரிஷி
தருமரிஷியாரே சாமியேநீர்கேளும்
என்னுடையதோட்டத்தில் எவரொருவர்வந்ததில்லை
அந்தரலோகத்து அமரர்கள்வந்ததில்லை
ஆரோஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்தான்
வந்துபுகுந்து வனத்தைப்பாழாக்கினான்
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்போட்டுவிட்டான்
ஆகையாலிந்தவன்தன் அவனையதமாக்கவென்று
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமரிஷி
உம்முடையதோட்டத்தை அழிப்பதொருவரில்லை
இன்கேளுமையுங்கள் தீக்ஷணமெய்திடுவேன்
என்றவர்சொல்லுகையில் நிட்டிவந்தார்வீமனை
திக்கெல்லாமேதானெழுந்து ஸ்ரீராமர்மாயவரும்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்வீமருக்கு
ஏக்கால்வலம்வந்து முனிவனைக்கண்டுதெண்டனிட்டார்
கண்டார்குருபாரிஷி கடுகவேயேதுசொல்வார்
அண்ணாவென்றுதெண்டனிட்டீர் ஆதிபெருமானே
ஆனாலுமேனையா அரியரிஷியாரே
ஆதிகயிலாசம் அரனிடந்தனிலே
உம்முடையபேராலே ஒருமணியடிபடுது
தருமரிஷிபேராலே மூன்றுமணியடிபடுது
அந்தரிஷிபேராலே ஐந்துமணியடிபடுது

போகத்திற்பெரியவர்காண் உத்தமரிஷிமாரும்
ஆதிசிவனிலும் அதிகமுடையவர்காண்
தினமூன்றுவேளையிலே திரவியங்களஞ்சியங்கள்
அவரிருக்குமிடங்களிலே அன்னக்களஞ்சியங்கள்
ஆரோ வீரா அறியாமல்கொல்லவந்தோர்
இன்ன அவர்நினைத்தால் எல்லவரைக்கொன்றிடுவார்
என்றுசொன்னபோதே எழுந்தார்தருமரிஷி
தருமரிஷியெழுந்திருந்து சாஷ்டாங்கதெண்டனிட்டார்
குருபாமுனிபங்கு கொப்பெனவேதெண்டனிட்டார்
அடியார்கள்செய்ததெல்லாம் ஐயாமனம்பொறுத்து
தெரியாமற்செய்கதெல்லாம் தேவர்மனம்பொறுத்து
வனத்தை தழிக்கதொரு மகிமையைச்சொல்லுமென்றார்
ஆனைப்போட்டார்கள அமர்ந்துகொலுவிருந்தார்
அப்போ ஞானிரிஷி அவர்களுக்கேதுசொல்வார்
குருபாரிஷிபெருமை குவலயத்திற்சொன்னார்கள்
அந்தப்பேர்சொல்லுகையில் அதிசயப்பட்டிருந்தார்
பார்க்கப்பிரியமாக பாருலகில்நானிருந்தேன்
அந்தவனத்திலே அனந்தங்கோடிராட்சதர்கள்
என்றனைக்கொல்ல எழுந்தார்கள் துரூவர்கள்
ஆரென்றுகேளாமல் அல்லவருங்கொல்லவந்தார்
அப்போ வந்ததினால் அல்லவரைக்கொன்றுவிட்டேன்
இதுவேசரமமென்றான் இலானைவிரிஷி
குருபாமுனிபருப கொப்பெனவேதெண்டனிட்டு
அடியார்களசெய்ததெல்லாம் ஐயர்மனம்பொறுத்து
பாக்கியமாய்செய்ததினால் பாதங்கிடைத்ததுகாண
கருதிதலைஞ்செய்தாலும் காணவரிதாகும்
பார்த்தபடியாலே பாவந்தலைத்துவிட்டேன்
வாராததேவர்கள் வந்தபடியாலே
என்னுடைய ஆச்சிரமம் எல்லாரும்வாங்கையா
பரவசிலுண்ட பழவர்க்கந்தான்புசித்து
போசனஞ்செய்துநீங்கள் போவீர்கள்வாங்கவென்று
குருபாரிஷிபாருங் கொப்பெனவேதெண்டனிட்டு
பட்டுரத்தினப்பாய்போட்டு அப்பமேலேவீற்றிருந்தார்
பாயவருந்தருமரிஷி மகம்பெரிய ராமரிஷி
தம்பிமார்நால்வருடன் காமுங்கொலுவிருந்தார்
குருபாரிஷியுமங்கே கொப்பெனவேகாலெழுந்து
துரவரைத்தானழைத்துச் சொல்லுவாரோர்வார்த்தை
ஆயிரங்கலஅரிசி அடிசிற்சமையுமென்றார்
காயுங்கனியுங் கடுகச்சமையுமென்றார்
நல்லபொரிக்காயும் ராசாக்கள்போசனமும்
அடிசிற்சமைத்தோமென்று அடிவணங்கிதெண்டனிட்டார்

குருபாமுனிகேட்டு கொப்பெனவேகாலெழுந்து
கடுகசரணமென்று கைக்குச்சலங்கொடுத்தார்
பலாயிலைதைத்துப் படைத்தார்களன்னமதை
சமைத்திட்டசாதங்கறி காமெனபுசித்தார்கள்
உபசாரப்பண்ணுமவர் உண்ணுங்கோசாமியென்றார்
அத்தண்டபேரும் அமுதுபுசித்தார்கள்
சந்தனம்புட்பமும் தாம்பூலம்வாங்கிக்கொண்டார்
அத்தண்டபேரும் ஆசிகளுஞ்செய்துகொண்டார்

பஞ்சவர்களைத்தபேரும் பெருமனுமவரவரிடஞ்
செல்லுகிறது.

போய்வாரோமென்று போதநடந்தார்கள்
பர்னசாலைதன்னருகே பஞ்சபாலர்கள்சேர்ந்தார்கள்
எழுவகையாண்டவராம் எம்பெருமானைத்துதிசொல்வார்
வெற்றிமதயானை வீமன்செய்தகாரியத்தை
நாமிருந்தபடியாலே நாடியுமைக்காக்கவந்தோம்
அல்லாதேயாமானால் அனைவருமாண்டிடுவார்
எங்கேயிருந்தாலும் இடரல்லோசெய்திடுறான்
ஆகாதகாரிங்கள் அழும்புகள்செய்பவாபோ
இந்தவனத்தைவிட்டு ஏகுங்களடுத்தவனம்
அந்தவனத்தில் ஐவருமபோயிருங்கள்
ஆண்டுகழிந்ததது அவ்வனத்தில்போயிருங்கள
போய்வாரோமென்றுசொல்லி போகலுற்றாரெம்பெருமான்
எட்டாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு

எட்டாவது குருபாமுனிவனம் முற்றிற்று.

௯-வது போபரிஷிவனம்.

அந்தவனத்தைவிட்டு அப்புறமபோனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைசாமானத்தில்
கோலிவைத்தசீமாறு கூடைதலைமேல்வைத்தார்
மண்ணிவைத்தசீமாறு வனமேசடியிருப்பு
சுப்பிரமரிஷிவனத்தில் தரிகப்படவந்தார்கள்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
எழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
நெஞ்சில்ரோமமாமுனியை நினைத்தார்தருமராசர்

ஐவரிடத்துக்கு ரோமரிஷிவந்தார் தனது கஷ்டத்
தை அவரிடத்தில்சொல்ல அவர் அதற்குவழி
மானஞ் சொல்லுகிறது.

ஆசனம்போட்டு அடிபணிந்தார்தருமராசர்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்திங்குவந்தீர்
[illegible] க்ஷேமமேசொல்லுமென்றார்

வந்தவயணபனைத் தாசைபாசச்சொல்லுமென்றார்
அப்போது சகுனியும் ஆண்டவருக்குரைப்பார்
குருகுலவம்சத்தில் குந்திமைந்தரைந்துபேர்கள்
தருமன்காண வீமனவன் தம்பிதனஞ்சயனும்
நகுலசகாதேவர ஜாக்கிலவரையா
தருபாபுமென்னுங் காருணியபாண்டிருந்தோம்
பங்குப்பகையாளி பாதிநாள்தாயாதி
சென்மப் பகையாளி சென்னநாள்தாயாதி
பெரியதந்தைபிள்ளை போனதிரியோதிரன்
இவரைக்கொல்லவென்று ஆலோசனைதேடி
வருகதுன்னவாருமென்று விருந்தேகொள்ளாப்ப
மெய்பானலென்று விஷவகுடமோதனைபாய
வாரவழியினிலே வைத்தானே தண்ணீர்ப்பந்தல்
வசநாபிகண்ணீர்பந்தல் வைத்தானே பாவிபவன்
கொல்லநினைத்தானே கொடும்பாவிளக்கவைத்தான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனையும் செய்தான்பெரும்பாவி
வருகிறவழிதனிலே வசிகளைநாட்டினான்
உருக்குசிசெப்பூசி ஒருகோடிநாட்டினான்
எழுகூசியேனைக்கயாடு இரும்பூசிதானைப்புதைத்தான்
கேடுமுள்ளுநாதிரைய குறக்கேபுதைத்துவிட்டான்
மாண்டுமடியாரென்று வசிகளைநாட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி
பொய்க்குழியைவெட்டியே போட்டுவைத்தார்சிம்மாசனம்
ஆழக்குழியிலே யாட்களைப்புள்நிறுத்தி
ஆயுதங்களுடனே ஆள்நிறுத்திவைத்தானே
கொலைநினைத்தானே குருடனமகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தானபெரும்பாவி
எண்ணெயிடுக்கொள்ளுமென்று எங்களுக்குச்சொல்லியவன்
ஏழுலடசமமல்லர்களை எங்களிடந்தானனுப்பி
எண்ணெயிடச்சொல்லி எனனுயிரைவாங்குமென்றான்
அதற்குப்பிழைத்தோமே யாண்டவனார்புண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி
அரைப்படிகண்ணைக்கைகொடுத்து அபிஷேகமாடுமென்றான்
பாரவசிநாட்டிவைத்தானேநிர்மூடன்
பாரவசிகளைப பர்வதம்போலநாட்டினானே
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தானபெரும்பாவி
உண்ணுகிறசாதத்தில் ஒருக்காலமருந்தையிட்டான்

குடிக்கிறதண்ணீரில் கொலைக்காரன் நஞ்சையிட்டான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
சோழிவிளையாடி சொக்கட்டான்சூதாடி
நாடுபறித்து ராச்சியத்தைக்கொள்ளைகொண்டான்
சீமைத்துரைத்தனமுந் தேசத்தைக்கொள்ளைகொண்டான்
ஐவரையுங்கெலித்து ஆஸ்தானமுங்கெலித்து
காற்றுநுழையாத கன்னிமாடத்திலிருந்தாள்
ஐவருடதேவிதனை அம்பலத்திற்கொண்டுவந்து
தமையனுடபெண்சாதி தாயென்றுமெண்ணாமல்
மூலையிலிருந்தபெண்ணை முற்றத்திலிழுத்துவைத்தான்
அம்பலமேற்றியவன் அவமானந்தாழ்வுபண்ணன்
வாடியென்றும்போடியென்றும் வம்புகளபேசினன்
அரசர்சபைநடுவே அம்பலத்துத்துரைகள்முன்னே
சொல்லாதசொல்லியே துகிலுமுரிந்தானே
பாரவனவாசம் பரதேசம்போனபின்பு
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
அக்யாதவாசமல்லோ ஆனியபொருவருஷம்
வேஷம்விட்டுவேஷமாறி வீற்றிருக்கவென்றுசொன்னான்
பதின்மூன்றுவருஷஞ்சென்று பட்டணத்திலவந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம பாதிநாடுதாரேனென்றான்
ஆகையாலாண்டவரே ஆரணியம்வந்துவிட்டோம்
வருஷமொன்பதும்பிறகு வந்தோமிவ்வனந்தனிலே
உங்கள்வனத்திலே ஒருவருஷமவனவாசம்
உம்மைவருந்தினேன் உண்மையுள்ளரிஷியாரே
இந்தவனத்திலே இருக்கச்சிலவருளும்
என்றல்லோதருமரவர் இறங்கித்தெண்டனிட்டார்
தலத்திற்பெரியவர்தான் சன்யாசியானவரும்
உற்றுற்றுக்கேட்டாரே உரோமரிஷியாரும்
ஆயாசப்பட்டுமவர் அரவேமனஞ்சலித்து
இத்தனைவஞ்சனைகள் இடறுசெய்தபாவியவன்
கொல்லநினைத்தானே கொடும்பாவிதுரியோதனன்
நாடுகொடுப்பதில்லை ராச்சியந்தருவதில்லை
சீமைகொடுப்பதில்லை சிங்காதனந்தருவதில்லை
ஐவர்தனிலேயொருவன் அரண்பதியேபோனீரானல்
ஆதிசிவன்கையில் அஸ்திரப்பேருபெற்றால்
மாற்றானைக்கொன்றிடலாம் வையகத்தையாண்டிடலாம்
அல்லாதேபோமானால் அரசுனக்குக்கிட்டாது
என்றவர்சொல்லுகையில் ஏதுசொல்வார்தருமராயர்
ஐவரிலேயொருவர் அவ்விதியையடையவென்றால்
ஆர்சொல்லல்லாது ஆகாதொருக்காலும்

மாயன்சொல்லல்லாது மற்றொன்றுமாகாது
அவ்வார்த்தைகேட்டு அரிசர்வஜியகசொல்வார்
மாயன்பெருமாளை வரவழைப்பீரேயென்றார்

தருமர் எம்பெருமாளை நினைத்து தோத்திரம் பண்ணுகிறது.

சாராசப்புமன்னவனார் தருமராசாவுக்குச்சொல்வார்
அடியனைத்தாராமல் ராஜ்யமுடையோனேயென்றார்
ஏழுலகையாண்டவனே எம்பெருமாள் வாருமென்றார்
பச்சைவடிகொண்டு பாற்கடலில் பள்ளிகொண்டாய்
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆண்டவனே வாருமென்றார்
தருமர்வருந்தவுமெல்லாஞ் சாமியறிந்து

தருமர்தோத்திரம் பண்ணினதைப் பெருமாளறிந்து தருமரிடம்வருதல்.

ஏழுலகையாண்டவராம் எம்பெருமாள்வாராராம்
வேட்டையாடுங்காட்டினுள் மாயவரும் வந்துவிட்டார்
அவரைக்காணுகையில் ஐவருந்தாமெழுந்து
முக்காலமுமளந்த முடிவணங்கிதெண்டனிட்டார்
தேடி அவரைவரவழைத்து சிங்காசனம்போட்டார்கள்
சிங்காசனத்தின்மேலே ஸ்ரீமாயவர் இருந்தார்
என்னையழைத்தது எதற்கேயென்றார்
மனதிலிருக்கின்றது பகருமையாவென்றார்
சாரபுமன்னவனார் தருமரவரோடுசொல்வார்
மற்றொன்றுமில்லையையா மாயவரேகேளும்
இந்தவனத்தினிலே துருவாசரோமரிஷி
மாமுனிவரைத்தெரிசித்து வணங்கிப்பணிந்தோம்
ஆரென்றென்னைக்கேட்டார் அரிதானமாமுனியும்
வந்தகருமங்களை வார்த்தையெல்லாமதாயுரைத்தான்
திரௌபதிராணிசெய்த சேதியெல்லாம்நானுரைத்தேன்
அத்தனையுங்கேட்டு ஆயாசப்பட்டார்காண்
திரௌபதிராணியைச் செயிக்கவேணுமென்றார்
துரியோதனனையும் அரசாக்கிவைப்பனென்றார்
பஞ்சவரிலொருவனையும் பாழ்பதிப்பேனென்றார்
ஆதியிடத்து அவர்கோபம்பெற்றுவந்தால்
மாதுருவோனிடலும் கவலைத்தைபாண்டிடலாம்
போக்கவெனவுரைத்தார் புனிதமாமுனியும்
ஆகையாலுமமை அழையுமென்றார் அந்தரிஷி
மனதுருகிநினைக்கையில் வந்தீரேமாயவரே
இனியிதற்குக்காரியங்கள் எம்பெருமாள்சொல்லுமென
ஆயன்பெருமாளும் அவருமகிழ்ந்துசொல்வார்
வாருமபெரியவரே வனவாழ்க்கைபோதனரே
ஐவருடைவார்த்தை அதிகாரமெதனுக்கேகேள்

பஞ்சவர்கள் தங்களுக்குப் பாட்டனிருக்கின்றார் காண்
அவரையுமிங்கே அழைக்காற்றெரியுமென்றார்
வேதவியாசனை வேண்டியழையுமென்றார்

ஐவரும்வியாசபகவானை நினைத்துவணங்க
வியாசர்வருதல்

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அங்கெனவே தான்வணங்கி
வேண்டிநமஸ்கரித்து வியாசரைத்தொழுது
வாருமென்றுதானினைக்க வந்தார்வியாசரிஷி
சடையுஞ்சடைபழுத்த தம்பிரான்போலவாரார்
ஐவரிருக்குமந்த அடவியில்வந்தாரே
ஏழுலகையாண்டவனார் எதிர்கொண்டார்வியாசருக்கு
ஐவரெழுந்திருந்து அடிபணிந்தாரிருவருக்கும்
ஆயருடவியாசருமே ஆலிங்கனம்பண்ணிக்கொண்டார்
ஆசனத்துமேலாக அனைவோரும்வீற்றிருந்தார்
வேதவியாசருமே வேந்தரைப்பார்த்துரைப்பார்
என்னகருமமாக என்னையழைத்தீர்கள்
மனதிலிருக்கின்ற மர்மத்தைச்சொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
பரமன்பதம்நோக்கி பாரதஞ்செய்யவென்று
பாசுபதம்பேருபெற்று பாரதத்தைவெல்லவென்று
ஆரைநாம்போகச்சொல்வோம் அரன்பாதம்காணுதற்கு
தருமரைப்போகவிட்டால் சாமிபதங்காணறியார்
வெற்றிமதயானை வீமனாலாகாது
நகுலசகாதேவ ராஜராலாகாது
அருச்சுனரைப்போகவிட்டால் அரனாரைக்காணவல்லார்
பரமசிவனருகில் பாசுபதம்பேருபெற்று
வேணவரம்வாங்க விஜயனவர்வல்லவன்காண்
என்றுமவர்யோசனையாய் கூறிவிஜயனைப்பார்த்து
பார்த்திபா அர்ச்சுனரே பரமனைபதிநோக்கி
ஆதிசிவன்பதிக்கு அருச்சுனனேபோறீரோ
கைலாசபதியிலே கர்த்தாவைநீகண்டு
அதிகவரம்பேருபெற்று அருச்சுனனேவாருமென்ன
காண்டீபனருச்சுனனுங் கடுங்கோபமேதுசொல்வார்
அடியேனை அனுப்பிவைத்தால் அவசியம்போய்வாரேன்
அப்போபெருமாளும் அருளானதேதுசொல்வார்
கைலாசம்போனாலே கட்டழகாசொல்லேன்காண்
எதும்வழிதனிலே இருப்பார்கள்வேணபெண்கள்
மின்னல்ரம்பையூர்வசியும் மேனகைதிலோத்தமையும்
அழகில்மிகுந்தபெண்கள் அனேகம்பேர்தானிருப்பார்
கண்டால்விடுவதில்லை கடுகியேமோசங்கொள்வார்
பார்த்தாசைபட்டாலே பார்த்திபா விடுவதில்லை

கண்மூன்றுடையாரைக் காணவரிதாகும்
அல்லாமேதெய்வமானால் அருச்சுனனுந்தனுக்கு
போரவழியிலே பெண்கள் தொடர்ந்தாலும்
தங்கைதாக்கையென்று தள்ளிவிட்டுப்போனாலும்
பார்த்தாசைப்பட்டாக்கால் பரமசிவன்பாதம்
எத்தனைக்காலம் இருந்துதவம்பண்ணாலும்
பாரத்தவஞ்செயினும் பரமசிவன் காட்சிதாரார்
பயபத்தியாயிருந்தால் பரமசிவனவந்தருள்வார்
அங்கேபோனால் அதிராத்திரிவேளையிலும்
நினைவுபறாதே சிவனைநினைத்து
மௌனத்துடனனலை மூட்டி தவஞ்செய்தாலே
சிவனையும் பசிழ்ந்து சேனவரந்தருவார்
முப்பத்து முக்கோடி புண்ணியரெல்லாங்கூத்தாட
அறுபத்தென்னூறிய சித்திகள்நடப்புரிய
பார்வதிசமேதராய் பரமசிவன்வந்திடுவார்
வேணும்வரங்களெல்லாம் கொடுப்பார்பரமசிவன்
அப்படிக்குப்போகவுன்னாலாகுமோவாள்விஜயா
பரமருரைகேட்டு வாள்விஜயனேதுசொல்வான்
அந்தவகைநான் அனைத்துமறிந்திருக்கேன்
நேசமாய்ப்பெண்களென்மேலாசைமிகக்கொண்டாலும்
வாசல்முகமறித்து வார்த்தைகள்பேசினாலும்
தாயெனவே தங்கையெனவே சாமிநேரியுமென்பேன்
அர்ந்தாலைக்கறிந்தான் சுகிர்வரம்வாங்கவந்தேன்
போகச்செல்லுதோ போய்வாரேன்சாமியென்றான்
அதுவுமல்லாமல் காண்டவனமெரித்தனுக்கு
போகுமவழியினிலே மங்கைகடந்தாலும்
இந்திரன்பதியிலே செய்யுந்தவமழிக்க
மழுவேந்துஞ்சிவனாரும் வஞ்சனைகள்செய்தாலும்
எதுவினைவந்தாலும் எந்தனுக்குக்கனவாகும்
மகாதேவரைக்கண்டு வாங்கிவாரேன்வரங்களென்றான்
அப்போதுதாபரனார் அவ்வார்த்தைகேட்டுசொல்வார்
போகும்வழியினிலே பொற்கொடியாளேலகன்னி
ஆதிசிவனைநோக்கி அருந்தவசுசெய்பவள்தான்
சம்பகமாம்போல அழகில்மிகுந்தவள்தான்
அர்ச்சுனனே உனைமணக்க அதிகவரம்பெற்றவள்தான்
உன்னைக்கல்யாணம்பண்ண உகந்துயிருக்கிறாள்தான்
(அவள்) வந்தழைத்தபோதும் வாள்விஜயமன்னவனே
மாதரைக்கண்டுநீ வார்த்தையொன்றுஞ்சொல்லாதே
தாயென்றுந்தங்கையென்றும் தார்வேந்தாசொல்லாதே
வரும்போதுபெண்ணேயுனை மாலையிட்டுக்கொள்வேனென்று
சாம்புமேனியனே கண்டக்கருப்பழகா

தக்கதுசொல்லிப்போம் சாமியுடபதிக்கு
அதிகவரம்பேறுபெற்று அருச்சுனரேவரும்போது
ஏலகன்னிமாதரை இளங்கொடிமையமாலையிடு
வரும்போதுமாலையிட்டு வந்துவிடும் அருச்சுனரே
மற்றொருவினைவந்தால் வந்துநான்காத்திடுவேன்
போய்வாருமென்றுசொல்லிப் பெருமாள்செலவுதந்தார்

அருச்சுனன் சிவனைக்காண போவதற்குச்சோடித்தல்.

சூலபாணிரூபம்போற் சோடித்தாரருச்சுனனும்
எங்கெங்குமுஸ்திபு இளவிஜயன் தான்தரித்தான்
ஐந்துசடைகொஞ்ச அழகுசடைமார்புரள
குத்துசடையங்கே குலுங்கஅருச்சுனற்கு
உள்ளமெல்லாம்லிங்கம உடம்பெல்லாம்வெண்ணீறு
ஆவியெல்லாம்லிங்கம் அங்கமெல்லாம்வெண்ணீறு
காவிகாசாம்பரமுங் கட்டினன் அரைதனிலே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
கன்றுபுலித்தோலும் கபிலாசமான்தோலும்
காதிலேகுண்டலமுங் கையிற்கமண்டலமும்
ஏகவேஷ்டிதானணிந்தான் இப்பலான அருச்சுனனும்
பிரமமுடித்தாள்வடங்கள் பெரியருத்திராட்சபணி
பஞ்சபணிதாழ்வடமாம் பவளிதபாலைகளாம்
நாகபணிக்கங்கணமாம் வாடமிச்சசங்கிலியாம்
வேலாயுதம்சூலாயுதம் வெண்பலித்திருவாசனமாம்
அரைசுற்றிகிண்கிணியாம் அழகுபயில்கவடமாம்
குருயோகபுத்தகமாம் சுரைமேயாகிகொண்டலமாம்
கஞ்சாக்குடிக்கைகளாம் செனதபம்ஜெவிகளாம்
சங்குஜெபகண்டிகை தானணிந்தாரருச்சுனனும்
கணுக்கால்சிலம்புகளாம் காலிலிமிதியடிகளாம்
அஷ்டாபரணமெல்லாம் அருச்சுனனுந்தானுரித்தான்
வியாசரும்மாதவரும் மிக்கவரமொன்றுதந்தார்
ஒருவனைசிவனேயென்ன உலகெம்சிவனேயென்னும்
ஐவர்களுர்தனக்கு அதிசீதந்திருக்கதந்தாயமைத்தார்
போய்வாருமர்ச்சுனரே பொனலுவக்கதான்தேடி

அருச்சுனன் சாவரரைக் காணப்போகிறது.

அந்தச்சமயத்தில் அருச்சுனனுந்தானெழுந்து
எல்லாரையும்பணிந்து எழுந்தானருச்சுனனும்
போய்வாரேனென்றுசொல்லி போனானருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அந்துவியாசருமே
எல்லாரையும்வாழ்த்தி யிருவரும்போய்நடந்தார்
மாயன்பெருமாளும் வாழ்கருடன்மேலேறி
ஐவரைவாழ்த்திப்ப அரிராமர்போய்நடந்தார்
வில்வேந்தருச்சுனனும் விரைவாய்வனந்தாண்டி

காடுசெடிதாண்டி கடிதிபோனாரானே
அரனையாலங்கானமென்று அதிதுரிதமாகவாரான்
சிவசிவாவென்றுசொல்லி சிக்கிரமாய்வாராமே

எம்பெருமாள் பெண்வேஷமாய்வருகிறது.

அருச்சுனன்றனையறிய அரிராமரேதுசெய்வார்
மோககன்னிபெண்போலே முடிமன்னர்வடிவுகொண்டார்
சின்னஞ்சிறுபெண்ணாய் ஸ்ரீராமர்வடிவுகொண்டார்
மின்னலைப்போல மேகவண்ணர்வடிவுகொண்டார்
அல்லார்தலைமயிரும் ஐந்துமுழம் ஆறுமுழம்
ஆணைக்குக்கலந்து அறுபத்துநான்குமுழம்
காசாம்பழத்திலும் கறுத்தகருப்பழகும்
ஈச்சம்பழத்திலும் இருண்டகருப்பழகும்
வாரிக்குழல்முடிந்து வான்கவரியிட்டுசொருகி
கொண்டைக்குக்குப்பியிட்டு கொலுமுகத்துத்தொங்கவிட்டு
கம்மல்முருக்கிகளும் காதிலேயிட்டாளாம்
கழுத்திலணிந்தாளாம் கனகமணித்தாழ்வடமும்
கல்லிழைத்தபொன்காறை நடுக்கழுத்திலேதரித்தாள்
ஒற்றைச்சரங்களாம் ஒருபுறமாம்பொன்சரிகை
இரட்டைச்சரங்களாம் இராஜாங்கப்பொன்தாலி
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
அரைக்கிசைந்தொட்டியாணம் ஆடைமேற்றரித்தாளாம்
காலுக்குதண்டைகளாம் கனத்தகொலுசுகளாம்
காலாழிபீலிசருடு கல்லிணையும்புல்லிணையும்
அழகுபணிகளெல்லாம் அலங்காரம்பண்ணினார்
கதம்பமுஞ்சந்தனமும் கஸ்தூரிமணங்கள்வர
அன்னம்போலேநடந்து ஆண்டவனுர்வாராரே
அருச்சுனன்போனதொரு அடவியிலேவந்துவிட்டார்
அருச்சுனனைத்தான்பார்த்து ஆண்டவனுமேதுசொல்வார்
ஐயாபெரியவரே அறிவுள்ளசங்கமரே
திறப்படித்தவரே தெளிவுள்ளசங்கமரே
புதிதாய்தவசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
எங்கிருந்துபோறீர்காண் இயலானசங்கமரே
கோடிசரணமையா கும்பிட்டேன்சுவாமியென்றார்
உன்னழகுப்பாலனையும் உலகத்திற்கண்டறியேன்
உம்மைக்கண்டபோதையோ உருகுதேதேகமெல்லாம்
காமவிகாரத்தால் களைகாங்கிபோறேனையோ
மோகவிகாரத்தால் மூர்ச்சைபட்டுப்போறேனையோ
காமக்களையைத்தான் களிதீர்க்கலாகாதோ
மோகவிகாரத்தை மூர்ச்சையைத்தீருமையா
மன்மதனெய்தகணை மார்புருவிப்போகுதையா
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதையா

அரைநாழிகையினுடனே அமர்ந்திருந்துபோகொணுதோ
ஒருநாழிகையினுடனே உலாவிருந்துபோகொணுதோ
மார்பைப்பார்த்தே [illegible] வெகுவல்லமைதப்பார்
கண்ணழகும்பாவனையும் எறிந்துப்பாருமையா
காணிலெப்போல்பெண்களுமக்கெங்கேகிடைப்பார்கள்
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கலியுகத்திற்கிட்டாது
மாம்போமேடமாம்பனைசது பலாவிடாக்கிருமையா
தேரோடோடேதோளினைநூ காத்தாகமெல்லாக்தாருமையா
பஞ்சணைமெத்தைதனிலே கொஞ்சிவிளையாடுமையா
குங்குமமெத்தைதனிலே கூடிவிளையாடுமையா
வாருமையாசங்கமரே என்றுவழிமறித்தாள்

அருச்சுனன் மோகினியைப்பார்த்துச் சொல்லுகிறது.

எறிந்துப்பார்த்தானே விசயாருச்சுனனும்
என்னென்றுமென்னுகிறான் இயல்விஜயனப்போது
மாயவனார்சொல்லதொரு வார்த்தையெல்லாமெய்யாச்சு
என்றல்லோவாள்விஜயன் எதுரைப்பான்கன்னியற்கு
ஆதிகயிலாசம் அரன்பதிபோரேனம்மா
கர்த்தாவைக்காணவென்று கைலாசம்போறேனம்மா
வம்புகளைச்சொல்லாதே வழிதனைமறிக்காதே
பெற்றுவளர்த்தொரு பேர்பெரியதாயல்லோ
கூடப்பிறந்தவள்நீ கூட்டிப்பார்த்துண்டவள்காண்
தங்கைதமக்கைநீ தாயாருமல்லவோ
தூரநில்லும்ஆச்சியரே தோத்தகங்கள்பண்ணாதே
இடையனில்லும்ஆச்சியரே என்னருகேவாராதே
என்றுரைத்தானே எறிந்துப்பாராமல்
மற்றுமத்தக்கன்னியரும வார்த்தைகளைத்துசொல்வாள்
சேரவென்றுவந்தவரை செல்லுமென்றுசொல்லலாமோ
பெண்சாதியென்றுவந்தால் பெற்றதாயென்னலாமோ
ஆத்தாளென்றென்னலாமோ அடுத்தமுறைவந்தாலே
தாயென்றுசொல்லலாமோ தலைமுறைவந்தாக்கால்
ஆண்டுக்குமுறையுமில்லை அரியாளுக்குமுறையுமில்லை
எருதுக்குப்பசுமையில்லை இடையனுக்குமுறையுமில்லை
அரைநாழிபோகத்திலே அமர்ந்திருந்தால்போதுமையா
மார்போடேமார்பணைந்து மருவியிருக்கலாமென்றாள்
இன்பப்பழமிருக்க சேம [illegible] வாசேனன்
காலமெல்லாம்பெய்ய [illegible] வானேன்
கட்டு [illegible] காலடிக்கத்தாறியுண்டு
சோழிச்சதுரங்கம் சொக்கட்டானாடலாம்மா
இளவனைகல்லாகத்துமுண்டு செல்வழிக்கநெருக்கமுண்டு
வாருமையாசங்கமரே மனைக்குநாம்போயிருப்போம்

தானுகவந்தபெண்ணை நன்றிவிட்டுப்போகலாமோ
போனுற்பலனுமில்லை பித்தனைக்காண்பரிது
விளையாடிப்போனுலே வித்தகனைக்கண்டிடலாம்
துணையிரண்டைக்காட்டியே தானபறித்தாள்போகன்னி
இவளுடையவார்த்தைகளை இளவிஜயன்தான்கேட்டு
கோபம்வருகுது கொல்லமனந்துணிந்தான்
வில்லெடுத்துகைப்பிடித்து வில்நாரிபூட்டிவிட்டு
அம்புதொடுத்தானதிலே அலகம்பைத்தானெடுத்து
சொல்லவிளைத்தானே கோதைமறைந்தாளே

அருச்சுனன் பாணமெடுக்க பெண்மறைந்து
பெருமாள் வருதல்.

கோபாலகிருஷ்ணனவர் கொப்பெனமாயனுர்
கண்டானேவாள்விஜயன் கர்த்தனுடமாயையென்று
இளவிஜயனர்ச்சுனனு மினியவனமேபோகையிலே
மாயன்பெருமாளும் வாராரேயந்தவழி
வட்டமாங்கருடனேறி வாராரேயந்தவழி
கண்டானே அருச்சுனனுங் கடுகவேதெண்டனிட்டு
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
இன்னேரமெங்கிருந்தீர் இவ்வனவாள்விஜயா
காளையந்தஅருச்சுனனுங் கடுகியேயதுசொல்வான்
மாயவரேசொன்னதுநீர் வனத்திலெபொய்யாச்சு
ஆரோஒருதெய்வகன்னி அநேகநேரமென்னைமறித்தாள்
வந்துவழிமறித்து வார்த்தைகளாடினளே
சொல்லாதுஞ்சொல்லியே தோதகங்கள்பண்ணினளே
என்றுசொல்லி அருச்சுனனும் ஏறெடுத்துப்பார்த்தானே
கன்னியிளமையுமே கழுத்திலேகருமணியும்
கண்டானேவாள்விஜயன் கடுகநகைத்தானே
அனைத்துங்குலைத்தீரோ ஆயன்பெருமானே
மாயைக்குலைக்க மறைந்தீரோமாயவரே
மணியையழிக்க மறைந்தீரோமாயவரே
பொட்டைக்கலைக்க மறைந்தீரோபுண்ணியரே
ஆபரணந்தான்கழட்ட மறைந்தீரோஅச்சுதரே
என்னகோலம்வந்தானுர் எத்தனையாவந்தனுக்கு
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஆயன்பெருமாளும் அக்கணமேயேதுசொல்வார்
மைத்துனனுந்தனிட மனவுண்மையென்னசொல்வேன்
அருச்சுனனுந்தனிட ஆண்மையுமென்னசொல்வேன்
வாள்விஜயாவுந்தனிட மனதறியவந்தேனண்ணா
கர்த்தாவைகாணவல்லாய் கடிகிவரம்வாங்கவல்லாய்
பரமனைக்காணவல்லாய் பாசுபதம்வாங்கவல்லாய்
ஈசனைக்காணவல்லாய் இனியவரம்வாங்கவல்லாய்

பேய்வாருமென்றுசொல்லிப் பெருமானனுப்பினார்
ஆணலழகுமன்னன் அருச்சுனராசதுரை
விடைபெற்றுக்கொண்டானே வேந்தனருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அரிராமவேதுசெய்தார்
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போய்ச்சேர்ந்தார்

ஒன்பதாவது ரோமரிஷிவனம்முற்றிற்று.

௰-வது பேரண்டவனம்.

பத்தாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோவிலைவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போறார்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோறார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆலுகனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
பேரண்டவனத்திலேதான் பிரியமாய்பஞ்சவர்கள்
வந்தார்குடித்தனமாய் வனத்திலேவாசம்பண்ண
ஐந்தடுக்குபர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
பூதனாதனைத்தேடி போறானேவாள்விஜயன்
அரகராவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
ஓம்சிவாவென்றுசொல்லி ஒலித்தானேசெயகண்டிகை
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
ஒருவன்சிவனேயென்ன உலகமசிவனேயென்னும்
இருண்டவனத்திலே இருக்கிறபேரண்டன்
அநேகதூரம்போயிருந்தா னுகாரந்தேடிவர

பேரண்டச்சி அருச்சுனன்மேல் மோகித்தல்.

பேரண்டராட்சதன்றன் பெண்சாதியானவளும்
தன்னந்தனியவளாய்த் தானிருந்தாள்மண்டபத்தில்
அரகராவென்றசத்தம ஆரணங்குதான்கேட்டு
கொத்தளம்போல்முக்கழகும் மத்தளம்போல்புட்டங்களும்
ஊணமழந்திகுராங்குகலை ஒன்றுமுதுகழகாம்
செம்பட்டமயிரழகன் சிங்காரப்பல்லழகாம்

பனைமரம்போற்பல்லழகாம் பருவதப்போற்கண்ணழகாம்
கழுத்தைக்குத்திகண்டமாலை இப்பனைகுதி அரைக்கடுக்கன்
குடையைச்சுத்திஒட்டுப்புண் சூலைசத்தம்பெருஞ்சிரங்கு
இன்றுமேளயாம கில கிலத்திலேவிழும் பிணஸ்தனம
இன்னமுஞ்சொல்லுகிறேன் இண்டஸ்தனத்தழகை
சப்பளிமேல்வாரதொரு சொப்பைரந்தேங்காய்போல்
தோணிமேல்வாரதொரு சொரக்காய்போல்தானிருக்கும்
பல்லில்லைபட்டர்க்கிருக்கும் பாசிபடர்தாமரைபோல்
சீழுஞ்செவந்திருப் தேகமெல்லாம நாற்றம்வரும்
காயமெத்திப்படிந்தழுக்கு கற்றாழைநாற்றம்வரும்
அருகேவந்தின்றுமேல அசங்கிநடப்பத்தானும்
பரிமளித்தானுந்தி வராளேபோண்டச்சி
ஆண்டிபெரியவர்தன் அருகில்வந்தாள்ராட்சசியும்
பண்டாரம்பெரியவனைப் பார்த்தாசைபட்டாளாம்
வாசைதரிந்தவள் வார்த்தைகளைதுசொல்வாள்
நீல்றுணையாசங்கமே ஒடிந்தூரபோகாதே
உன்றனைசப்பட்டதல்லால் உலகில்பெருசையில்லை
பார்வைபார்த்தேனப்பா பருவினிலேயாடவேபார்
அரணாமூரின்றுடனே அமர்ந்திருந்தபோதாணும்
வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்காத்திருந்தேன்
பனமதபாணமது மார்புருகிப்போகுதையா
மோகவிகாரமதை மூர்ச்சசையைத்திருதையா
என்னைப்போல்பெண்ணுமக்கு எங்கேகிடைப்பார்கள்
தேடிப்புறப்பட்டாலுந் தேசத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைந்து மருவிவிடாய்த்திருதையா
தோளோடேதோளணைந்து சுகங்கள்தெளியுமிப்போ
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சியிருப்போமென்றாள்
வெறித்துப்பார்த்தானே என்னென்றுங்கேளானே
அகோரஅரனேயென்று ஆண்டியுந்தானடந்தான்
காமவிகாரத்துடன் கடியங்கராட்சசியும்
போண்டாராட்சசியும் பின்னேதுவார்த்தைசொல்வாள்
கண்டாசைப்பட்டுவந்தேன் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
என்னை-பாராமல்போரீரோ பாதகனேகையாலே

போண்டச்சி அருச்சுனனுடன் சபதங்கூறுதல்.

என்புருஷன்வந்தபின்பு இட்டுன்னைவாரழைத்து
உன்னென்னைப்பிரகாரம இருந்துமருவிடுவேனே
என்றுசபதமிட்டு துபலாரைராட்சசியும்
காமவிகாரங்களுடனேதானடந்தாள்
மோகவிகாரமெனும் மூர்ச்சையுடன்போனாளே

வளையலைத்தானுடைத்து மார்பெல்லாந்தான்கிழித்தாள்
முகத்திலறைந்துகொண்டு மோதிபுலம்புகிறாள்

பேரண்டச்சி அழுகுரல்கேட்டு பேரண்டன் வருதல்.

அழுதகுரல்சத்தம் அறிந்தானேபேரண்டனும்
ஏதுக்கழுகிறாள் என்னுடையதேவியரும்
வயிறுபசியாகி வாய்விட்டழுதாளோ
என்று-ஐம்பதுபானை அவனகையில்தானெடுத்து
தினந்துஎறிந்தானே தேவியருகில்விழ
பின்னும்புலம்புகிறாள் பேரண்டாட்சசியும்
ஏதுக்கழுகிறாள் இளங்கொடியாளென்தேவி
இத்தனைநாளில்லாம லின்றுபுலம்புவதேதன்
அறிந்துவருவோமென்று ஆங்காரமுள்ளவனும்
நிமைப்போதிலங்குவந்து நின்றமேபேரண்டன்
ஏதுக்கழுகிறாய்நீ என்னுடையதேவியரே
பேரண்டச்சி தன்புருஷனுடன் தன்வரலாறுகூறிச் சண்டைக்குப்

போகச்சொல்ல பேரண்டன் சண்டைக்குப் போகிறது.

பேரண்டாட்சசியாள் பிரியமுடனே சொல்வாள்
மாலையிட்டநாள்முதலாய் மனதுகுறைவந்ததில்லை
நான்-பெண்பிறந்தபாவமது போதுமையாஎந்தனுக்கு
என்-பாவிதலையிலே பத்தெழுத்தைஎழுதிவிட்டான்
செல்வத்தலையிலே செப்பேடெழுதினது
அல்லல்படவோ அமைத்துவிட்டார்பிரமதேவர்
ஐயையோபெண்பிறப்பு ஆகாதுஎன்னசெய்வேன்
நான்-புத்தியில்லாவாசியல்லோ பேரண்டராட்சதனே
வாரவழிதனிலே வைத்தீர்சமுசாரம்
என்னைத்தனியேவிட்டு இனிப்போகஞாயமுண்டோ
உன்தேவியாயிருந்தும் ஊருக்குப்பெண்டாவனோ
சுந்தரப்பெண்நானல்லவோ சொரூபமுடையவள்காண்
அழகில்மிகுந்தவளை ஆரோஒருவன்காண்
பத்தினியாளென்றென்னை பாராமலிங்கொருவன்
உத்தமியாளென்றுசொல்லி புணராமலிங்கொருவன்
ஆண்டிபெரியவர்காண் அரண்மனையில்வந்தார்காண்
வந்தபெரியவரை வணங்கியேதெண்டனிட்டேன்
தன்-கஞ்சாகுடுக்கைக்குத் தண்ணீர்கொண்டுவாருமென்றார்
தண்ணீருந்தான்கொடுத்தேன் சரணங்கள்தான்செய்தேன்
நெருப்பெடுத்துவாவென்றார் நெருப்பைக்கொடுத்தேனே
அள்ளிமேயநீறுந்தந்தா ரணிந்துகொண்டேன்நெற்றியிலே
வாடிநீபோடியென்றான் வலதுதடைபெறுமென்றான்
கையைப்பிடித்திழுத்துக் கூடிக்கொருவலென்றான்

பொல்லாத்தனங்கள்செய்து போய்நடந்தான்சங்கமனும்
அவனை-கைப்பிடியாகவே கடிகியேகொண்டுவாரும்
அல்லாதேயாமானல் அநீதமாய்மாண்டிடுவேன்
பேரண்டச்சிஅழுகையிலே பேரண்டன்தானெழுந்து
எழுந்தானேராட்சதனும் என்றுமில்லாக்கோபமுடன்
ஆலமரம்பிடுங்கி தோளிலேவைத்தவனும்
கோபித்துகண்சிவந்து கெப்பெனவேஓடிவந்தான்
நில்லும்நில்லும்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
ஆரடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமரே
என்னுடையபெண்சாதியை எந்தனிருகண்மணியை
அழகில்மிகுந்தபெண்ணை ஆகடியஞ்செய்ததென்ன
வழியிலேவீடுகட்டி வனத்தில்குடியிருந்தால்
பிச்சையெடுக்கிறவன் பெண்டோபிடிக்கிறவன்

பேரண்டனுக்கும் அருச்சுனனுக்கும் சண்டை.

அனைநாழிக்கொள்ளையிலே அவசியங்கொன்றிடுவேன்
இட்சணபோதையிலே எமபுரஞ்சேர்த்திடுவேன்
என்றேவுரும்பினான் இயலானராட்சதனும்
ஆறேலழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
வாடாநீராட்சதனே வார்த்தையொன்றுநீகேளாய்
ஆதிசிவன்பாதம் அரன்பாதங்காணவென்று
பாரத்தபசுபண்ண பரமர்பதிபோகையிலே
வாரவழிதனிலே வழிமறித்தாளுன்தேவி
கண்டாசைபட்டேனென்று கடிமையல்தீருமென்றாள்
பொல்லாதாள்சேர்ந்தணைந்து போங்களென்றாளுந்தேவி
நான்-வாயைதிறக்கவில்லை வண்ணமுகம்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏரெடுத்துபார்க்கவில்லை
வீணவார்த்தையிது மேல்போட்டுவாராதே
அநியாயசண்டையிது அமரதுசெய்யாதே
என்னோடெதிர்த்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
பெண்சாதிவார்த்தையினால் பிராணனொழிக்காதே
மானுவது தருமமல்ல மன்னுநடவுமென்றான்
எத்தனைசொன்னாலும் இரங்காமல்ராட்சதனும்
எதிர்த்தானமர்ப்போர்க்கு இருண்டவனம்நடுங்க
கண்டானருச்சுனனுங் கண்கள்சிவப்பேற
கோபம்பெரிதாகி கொல்லமனந்துணிந்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைகுணதமொனித்து
காதுமட்டாய்தானிழுத்துக் கைக்கணையைவாங்கினான்
பேரண்டராட்சதன்றன் பிராணனைப்போக்கவென்று
அலகம்பைதானெடுத்து அஸ்திரத்தைப்பூட்டினான்
மந்திரவுபதேசஞ்செய்து மார்புளவாங்கினான்

மேலிட்டிராட்சதன்மேல் விழுந்ததுஅஸ்திரந்தான்
பேரண்டன்தன் தலையைப் பிடரிவிட்டுக்கானதுவந்தே

அருச்சுனன்பாணத்தால் பேரண்டன்தலைவிழ பேரண்டச்சிபுலப்பல்.

அறுத்ததலைக்கீழேவிழ ஆகாசமதிலெழும்ப
மற்றொருகணைதொடுத்தான் வாள்விஜயனவனும்
அறுத்ததலையுமல்லோ அவன்மேனியிலே ஏவிலே
கொண்டுபோய்ப்போடுமென்றன் சொப்பனவேவாள்விஜயன்
தள்ளிப்போய்விட்டதுவே சண்டாளன்தன்தலையை
அவன்மாண்டபிறபாடு அருச்சுனனுந்தானடந்தான்
அந்தசமயத்தில் அடைவானபேரண்டச்சி
தலையையவள்பார்த்து தன்புருஷன்தலையெனவே
கண்ணீரைசோரவிட்டு கதறிப்புலம்புகிறாள்
விழுந்தாளெழுந்தாள் மண்மேலேபுரண்டழுதாள்
மாரடித்துத்தோளடித்து மண்தூற்றியேயழுதாள்
கோவென்றசத்தமுடன் குமுறிப்புலம்புகிறாள்
மலையேபருவதமே மண்மேலேசாய்ந்தீரோ
மேகமலையேநீ விண்ணுலகஞ்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியங்கள் நின்னையத்தைக்காணறியேன்
வச்சிரத்தூணேநீர் மண்ணோடுருத்தீரோ
கல்லானதூணைக் கரையானரித்ததுவோ
இரும்பானதூணேநீ இற்றுவிழுந்தாயோ
எங்கேயோவானம் இடிக்குதென்றிருந்தேன்
தப்பாமல்வானந் தலையிலிடித்ததையோ
தொழுவிலேகையைவிட்டுத் தினகரனைசாட்சியென்றாய்
சந்திபிலேகையைவிட்டுச் சந்திரனைசாட்சியென்றாய்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகமாகுதையோ
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்பலையேபருவதமே செத்துமடிந்தீரோ
செத்துமடிந்தீரோ சிவலோகஞ்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியத்தின் இன்னையங்காணறியேன்
[illegible] பறிதனை சரியவெட்டிப்போட்டாரோ
[illegible] துதனைக் குனிரவெட்டிப்போட்டாரோ
[illegible] கொதியைப்போலாகேனே
செம்ப [illegible] பெருக்கு [illegible] லாமனையே
அடியானதிடிபோலே அழுதுபுலம்புகிறாள்
பேரண்டராட்சசியாள் புரண்டுபுரண்டழுதாள்

பேரண்டகிரி யாழிசைகேட்டு தெய்வகன்னிகள் வருகிறது.

அந்தரசபைத்தில் அழகானதெய்வகன்னி
மாதுபோர்சதகன்னி இளங்கொடியார்களும்
நீந்தன்னொடென்னாறு தெய்வகன்னிமார்கள்
அழுதயாழ்கேட்டு ஆசைப்பட்டார்கள்
ஒருவரிலொருவர் ஒற்றுமையாய்ப்பேசுகிறார்
ஆரோதெரியாது அழுகுரலையுகிறான்
இதுவெல்லாமாரோ இன்னோசைகேட்டதில்லை
அழுகுரல்கேட்டு அப்புறம்போகொணாது
அழகவிடத்திலே யாவரும்போவோமென்றார்
புஷ்பவிமானத்திலே பொட்டென்றேறிவந்தார்கள்
ஆடியன்னைப்போல அழகுபூப்பூவேதன்
பெண்டாட்டியும் மெண்டழுது சொல்லுற்றும்
அனைக்கழகு அனைக்கழகுநீயானேனே
கோனைக்கழுத்து குனைறக்கழுத்துபோனேனே
மஞ்சளிழுத்தன் மணிப்பூதேன்பூவிழுந்தேன்
தாலிசரடிழுந்து தவித்திக்கலாசைக்கே
ஏதென்குலனுவைப்பென் என்னுடைய ஈக்காபரே
ஆனோவோருபண்டாரம் அரசபதிக்குப்போறன்காண்
வாடியென்னம்போடியென்னம் வப்பாசப்பேசினேனே
சொல்லாதுசொன்னீய சேர்ந்துதுபைனந்தான்
புருஷனுடனைத்தேன் போய்க்கேட்டார்சங்கமே
ஒரு-கணனைக்கொண்டுவிட்டு கடுகிப்போனார்காண்
மங்கிலியப்பிச்சை வாங்கிக்கொடுத்துப்போங்களய்யா
என்றழுதுகேட்டு இயலானகன்னியர்கள்
ஆபாசப்பட்டுமெல்லோ அதிகமனந்தவித்து

தெய்வகன்னியர் அருச்சுனனைக்கண்டு இரக்கஞ்சொல்லல்.

சங்கமனைத்தேடியே நடந்தார்கள்தையலர்கள்
ஐயாபெரியவரே அதிகவைப்படைத்தவரே
இப்படிதவரே தெளிவுதிந்தசங்கமரோ
புதிதாய்தபசுபண்ணி புத்திபெத்தக்கற்றவரே
நில்லும்நில்லும்சங்கமரே கெடுந்தூரம்போகாதே
போரவழிகளிலே பொல்லாங்குசெய்பவரோ
வேலைதைகள்பண்ணி சிவன்பதிலேபோகலாமோ
ஆதிசிவன்வாழும் அரன்பதிக்குப்போனாலும்
கோறும்வாதைக் கொடுப்பீரோபரமசிவன்
அனையாசங்கமரே இப்படிக்குச்செய்யலாமோ
ஆகாதகாரியங்கள் அழிவுதேடிப்போகலாமோ
என்றுமறித்தார்கள் இளங்கொடிமார்கன்னியர்கள்
ஆனாலழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
சிவனார்பதிக்குநான் தெரிசிக்கப்போறேனென்ன

அவள்வந்துவழிமறித்து வார்த்தைகள்பேசினாளே
சொல்லாதுஞ்சொல்லியே சேர்ந்து அணையுமென்றாள்
அவள்புருஷனவன்தன்னை அநீதமாய்க்கொல்லவந்தான்
எத்தனைசொன்னாலும் இரங்காமற்கொல்லவந்தான்
ஆயுதத்தினாலே அறுத்தேனவன்றலையை
என்மேலேகுற்றமுண்டோ ஏனென்னைதடுக்கிறீர்
இருவர்விசேஷமெல்லா மெதிராகக்கேட்டிடுவோம்
வாருமையாவென்றுசொல்லி வரவழைத்தார்சங்கமரை
கோரண்டாட்சியாள் பிரண்டுமெழுமிடத்தே
அருச்சுனராசாவை அழைத்துவந்துவிட்டார்கள்
தெய்வலோகக்கன்னியர்கள் தேன்மொழிமாதுசொல்வார்
இருவருடவார்த்தைகளை யெல்லாமிவர்கேட்டு
ஐயாபெரியவரே அகிலைப்படைத்தவரே
புதிதாய்தவசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
பெண்ணின்பிழையைப் பொறுத்தருளும்புண்ணியனே
அடியார்கள்செய்தபிழை ஆண்டவாநீர்பொறுத்து
மங்கிலியப்பிட்சைதந்து மகாதேவர்பதிபோனால்
ஆதிசிவனார் அதிகவரமருள்வார்
எங்களைப்பற்றியே இவனையெழுப்பிவிடும்
என்றுவணங்கியே இறங்கியேதெண்டனிட்டார்
அருச்சுனராஜாவும் அதிகமனமகிழ்ந்து

தெய்வகன்னியர் அருச்சுனனைக் கேட்க அருச்சுனன் மகிழ்ந்து
தேவேந்திரனுக்கு ஓலையெழுதி அனுப்புதல்.

சேமக்குருகத்தாலே சிக்கெனவேதான்வாரி
வாரியவோலையிலே வக்கணைகள்வடிவெழுதி
அண்ணனென்றுவோலை யெழுதுகிறானருச்சுனனும்
அமராபதியாளும் அங்கபிராணனைத்தப்பா
தெய்வலோகமாளும் தேவேந்திரனைத்தப்பா
மகவாகத்தந்திபெற்ற வான்விஜயனருச்சுனனும்
ஆதிசிவனைப்பாதம அடியேனுங்காணவந்து
வாரவழிதனிலே வந்ததைக்கேட்டுதன்னைப்பாண்டனை
அமராதுசெய்தவனாம் அறுத்தேனவனதலையை
போரண்டனதன்னுயிரை பிரமலோகத்திருந்தாலும்
இங்கேயிருந்து எமலோகம்போனாலும்
அவனுடையதன்னுயிரை அனுப்பிவையுமெனதப்பா
எந்தனைப்பற்றியே இட்சணமனுப்பிவையும்
அல்லாதேபோனாலே அமராபுரம்வருவேன்
தேவேந்திரன்பதியை சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆதிகொள்ளைமாடுகொள்ளை அழகானவீடுகொள்ளை
ஐயாவுன்பட்டணத்தை அனைத்துமேகொள்ளைகொள்வேன்
என்றெழுதினான் இயலானவோலையிலே

ஓலைச்சுருள் படித்து அக்குதிசந்திரிகைபிட்டு
வில்வளைத்துநாரிபூட்டி வட்டோலையனைத்தேடிநகரிக்குச்சென்
அந்தச்சுருள்ளோலைதனை அம்புவாயிலதானைகொடுத்து
இந்தமணியசக்தி அம்பேபோடுமென்று
மந்திரமாமிட்டு வாங்கிவிட்டானஸ்திரத்தை
மார்புறனதனைதொடுத்து நீதான்புனலாக்கிவிட்டான்
வருகுது அஸ்திரந்தான் வானுலகந்தானேகடி
தேவேந்திரனுடைய தேசமாணிக்கமயத்தில்
வாள்வீரபனஸ்திரந்தான் மணியனைசந்தோடித்து
மணிக்கூண்டருகேசென்று வாங்கினான் அஸ்திரத்தை
அருச்சுனன் ஓலையைத் தேவேந்திரன்பார்த்து எமனிடத்திற்சென்று

கொண்டபேராண்டன் உயிரைவாங்கி அனுப்புதல்.

செந்திரிகைவோலைச்சுருள் தேவேந்திரன்விரித்து
எழுதியவாசகத்தை இந்திரனுந்தான்படித்தானே
அறிவிருக்கும்வட்சணத்தை யாவுமறிந்துகொண்டான்
இவ்விதமேவதாவெழுத்து தேவேந்திரனவருவான்
எமபுரந்தேடியே எமனருகேபோய்ச்சேர்ந்தானே
கண்டாரேமயனும் கடுகிவெழுந்திருந்து
எதிர்கொண்டழைத்து இட்டுவந்தான்மாளிகையில்
வெகுகருமமாய் இங்குவந்தீராசாவே
அத்திபூத்ததுபோல் அதிசயமாய்த்தோணுதுகாண்
என்றுபொழுதேயமனே தான்சொல்வாரிந்திரனும்
எல்லாருயிர்வாங்கும் எமதர்மரேகேளும்
பொல்லாதபாவியவன் புகலும்பேராண்டனுயிர்
இங்குவந்ததுண்டானால் எந்தனுக்காய்தயவுபண்ணும்
என்றுவுபசாரமே இரக்கமாய்த்தானுரைத்தார்
செக்கிலேபோட்டு திருப்புகிறேன்னோம்
எண்ணையுபுண்ணுக்காயெற்படுத்தும்போதையிலே
பேரண்டன்தன்னுயிரை பெட்டெனவேதான்கொடுத்தார்
மாபாதகனுயிரை மைச்சிமிழிலேயடக்கி
அம்புவாய்தனிலடக்கி அனுப்பினாரிந்திரனும்
வாய்வேகமாகவே வந்தது அர்ச்சுனர்முன

அருச்சுனன் பேரண்டனுக்கு உயிரளித்தல்.

மைச்சிமிழைத்தான்திறந்து வல்லுயிரைமாற்றினான்
வெண்ணீறுதானேபோட்டு வேறுபட்டதலையெடுத்து
அறுத்தகலேமுண்டமும் அனைத்துத்தண்ணீர்தெளித்தான்
கட்டியெழுப்பினான் தன்னுடையபொற்சிரம்பால்
தூங்கியெழுந்தவன்போல் திடுக்கிட்டெழுந்திருந்தான்
ஆடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமனே
என்றுயெழுந்தானே இபலாணபேரண்டனும்

ஏழுபேர்கன்னியர்கள் இளங்கொடிமாரோதுசொல்வார்
ஆங்காரராட்சதனே ஐயரைச்சரணம்பண்ணும்
அபசாரமுன்மேலே அனந்தங்குற்றம்வந்திருக்க
உந்தனுயிர்தான்கொடுத்த உம்பர்பிரானுக்குபட்ச
சாஷ்டாங்கமாக சரணம்பண்ணும்ஐயருக்கு
என்றுசொன்னபோதையிலே இரங்கியேதெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சரணமிட்டான்பேரண்டனும்
இறந்துவிட்டசிவனை எழுப்பிவிட்டீராண்டவனே
உமக்-கேதுசாப்போறேன் இயலானசங்கமரே
ஆபத்துவேளையிலே அழைத்தால்வருகிறேன்
உந்தனுக்குதவியாக ஒத்தாசைபண்ணுகிறேன்
என்றுவுபசரித்தான் இயலானராட்சதனும்
அவனையுங்கையமர்த்தி அருச்சுனனும்போய்நடந்தான்
அரகாரஅரனேயென்று அரன்மேலேதியானமானான்
சிவசிவாசிவனேயென்ன சிவன்மேலேதியானமானான்
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
அடிக்கரனேசெயகண்டிகை தொனித்தனேசங்குதனே
ஏலகன்னிதன்வனத்தில் எழில்விஜயன்போந்துற்றான்

ஏலக்கன்னி அருச்சுனனைப் பார்த்து அழைத்தல்.

அரகராவென்றசத்தம் அறிந்தாளேஏலக்கன்னி
ஆடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
வாரவரார்காணும் மயிலனையேபாருமென்றாள்
திக்கெனவேதானெழுந்து தெருவீதிவந்தார்கள்
வருகிறசங்கமனை மாதர்கள்தானறிந்து
ஓட்டம்நடையுமா யோடிவந்தார்காதியர்கள்
என்தாயேஏலக்கன்னி எவரோதெரியாது
ஆதிசிவன்போலே அழகுபடைத்தவர்காண்
ஒருக்காலும்வந்ததில்லை உச்சிதமாய்வாறார்காண்
என்றசத்தந்தான்கேட்டு எழுந்தாளேஏலக்கன்னி
தண்டையசையவே தார்குழலாள்தானடந்தாள்
அருச்சுனரைக்கண்டு அதிகமயலானாள்
கண்டாசைப்பட்டாளே கட்டழகிஏலக்கன்னி
பார்த்தாசைப்பட்டாளே பசுங்கிளியாளேலக்கன்னி
வடிவழகுமொப்பனையும் வாள்விஜயன்சீரழகும்
உற்றுற்றுப்பார்த்துமவள் உள்ளமுருகுகிறாள்
காமவிகாரத்தாலே கட்டழகியேதுசொல்வாள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தவசுபண்ணி புத்திமெத்தக்கற்றவரே
வருவீர்வருவீரென்று வழிபார்த்துநானிருந்தேன்
எப்போவருவீரென்று இந்தவனங்காத்திருந்தேன்

உன்னைப்பட்டிருந்தேன் உலகில்வேறாசையில்லை
காமவிகாரத்தாலே களைப்பட்டுப்போறேனையா
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகுதையா
சித்தசனெய்தட்டகணை சிறுமார்புருகுதையா
அதிகவிசாரங்கொண்டேன் ஐயாபெரியவரே
மார்பைப்பார்தோளைப்பார வண்ணமுகந்தீர்பாரும்
என்னிலும்அழகுடையாள் எங்குங்கிடையாது
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கருதிறற்கிட்டாது
மார்போடுமார்பணைந்து மகாவிடாய்த்தீருமையா
தோளோடுதோளணைந்து சுகந்தந்தென்னைத்தெளியுமையா
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
தானமும்பொருளுமுண்டு பொக்கிஷங்கள்மெத்தவுண்டு
தின்னஏலபாக்குமுண்டு செலவழிக்கரொக்கமுண்டு
ஆடவென்றூஞ்சலுண்டு அமர்ந்திருக்கமேடையுண்டு
பத்தியுள்ளவுதற்குப் பர்ணசாலைமெத்தவுண்டு
கருவிழியாடி மன்மதலீலைபுரிந்திருப்போம்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
ஏறெடுத்துப்பாரானும் இளவிஜயனருச்சுனனும்
ஏலக்கன்னிமாதுஅவள் இளங்கொடியாளேதுசொல்வாள்
ஏன்காணும்அர்ச்சுனரே யென்றன்முகம்பார்க்கொணாதோ
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லொணாதோ
வாயைத்திறந்தாலே வச்சிரமுதிர்ந்திடுமோ
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கேனே
தாளைத்திறந்தாலே தங்கமுதிர்ந்திடுமோ
தங்கமுதிர்ந்தாலே தடவியெடுக்கேனே
என்னுடன்பேசினால் ஏதுகுறையுமுண்டோ
கல்லுங்கரையுமே கட்டைதுளிர்த்திடுமே
இரும்புகரையுமே இரங்கலேயாயுன்மனது
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகத்தைப்பார்
முகத்தோடேமுகமணைந்தால் மூர்ச்சைதெளிந்திருப்பேன்
மார்போடேமார்பணைந்தால் மகாவிடாய்தீர்ந்திருப்பேன்
தோளோடேதோளணைந்து சுகங்களைத்தீருமையா
வாருமென்றுசொல்லி பணிந்தாளேலக்கன்னி
வாயைத்திறவானும் வண்ணமுகம்பாரானும்
என்னென்றுகேளானும் ஏறமுகம்பாரானும்
சிவனைமறவாமல் சிவன்மேலேதியானமானான்
அரனைமறவாமல் அரன்மேலேதியானமானான்

ஏலக்கன்னி அருச்சுனனைக்கோடுகிழித்து ஆணையிட்டு நிறுத்தல்.

ஏலக்கன்னிமாது இளங்கொடியாள்கோபமானாள்
வாழ்க்கோடுகிழித்து இங்கேநீர்நில்லுமென்றாள்

உன்-குருவின் மேனியெல்லாம் செதில்விட்டுப்போகாதே
இவர் மேனியெல்லாம் அடிவிட்டுப்போகாதே
தமயந்தையம்மா தாய்மேலே ஆணையிட்டாள்
ஆணையிட்டுமலைக்கன்னி அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்தாள்
மாளிகைவாசலுக்குள் மண்டபத்தில்வீற்றிருந்தாள்
அவள்-வருவதற்குள்ளாக வாள்விஜயனே ஆசெய்தான்
என்று அபிமன்னியே ஏதுகாவிலைப்பான்
ஆரைநினைத்தாலே அளவற்றதெசையிலே
எவரைநினைத்தாலே என்னமுற்றதெசையிலே
ஆரைச்சதமென்பேன் அன்னியரைச்சதமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைச்சதமென்பேன்
பார்த்தமுகமெல்லாம் வேற்றுமுகமாகுதையா
எவரைநினைத்தாலே இக்கலியாகாதுகிவார்
ஆபத்தைத்தக்காப்பதற்கு ஆரேதுதுணையாம்

கோட்டில்நிற்கும் அர்ச்சுனன் காளியைத்
தோத்திரம்பண்ணல்.

அச்சுவனக்கன்னியரை அருச்சுனன் காளிநினைந்து
சூலிகபாலியம்மா காளிதுர்க்கையே
சண்டாளிபிடாரியம்மா சங்கரிபேருகவல்லி
மண்ணுப்பிடாரியம்மா வழக்காபிதுர்க்கையே
ஆபத்துவேளையிலே ஆதரிக்கவேணுமம்மா

அருச்சுனன் காளியைநோக்க காளிவந்து வரலாறுவினவல்.

என்றுநினைக்காமே இயலானகாளியை
வாள்விஜயன் தான்வருந்த மாகாளிதான்வருவாள்
டேங்கையொருகையில் டமாரமொருகையில
வாளுமொருகையில் வளைதடியொருகையில்
அம்புவில்லுங்கைப்பிடித்து ஆயுதமாகவந்தாள்
ஆடாகம்பிடி அடவியிலேயெனைநினைத்தாய்
வசேதுபேசு உன்னுடையவன்மையென்ன
என்றவள்கேட்கையிலே யிறங்கிச்சரணமிட்டான்
ஆரென்றுகேட்டாயே அச்சிபதே சொல்லுகிறேன்கேள்
பாண்டுமகாராஜன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவரில் அருச்சுனராஜனென்பேர்
மாயவனார்மைத்துனன் வாள்விஜயனென்பேரும்
ஆதிகைலாசம் அரன்பதிக்குப்போனேனம்மா
பரமனைநோக்கியே பாரகவுஞ்செய்யரான்
போறவழிதனிலே பொற்கொடியாளைக்கன்னி
கலியாணம்பண்ணுமென்று கடுகிநின்றாள்
கோடிதெளிதனைக் குறைகேட்டதினாலே
ஆணையிட்டுவெயினைமயிலைதா அரண்மனைக்குப்போய்விட்டாள்

மறுபடியுங் வருவேனென்று மாளிகைக்குப்போய்விட்டாள்
ஆகையால்வந்தாயே அபயமிட்டேயைமூக்கேன்
என்றுதான்கேட்டு அதுசொல்வாள் சண்டியும

காளியம்மன் அருச்சுனனை ஆசீர்வதித்தனுப்புதல்.

அஞ்சாதேயென்மகனே ஆணையிட்டேன் சோர்வுமில்லை
நோக்காதுங்கோதுமில்லை முதற்கோடைதீக்கூற்றி
கொரித்தழுத்திரையை நிலைகளிலேலைதுவரும்
இக்கலைகடந்து என்னைநினைத்தாக்கால்
உந்தனுடைமுத்திரையை உனக்கேதயவுசெய்வேன்
என்றுசொல்லக்காளியம்மாள் எய்தவிட்டான்வான்விஜயன்
தரிக்கிருந்தமுத்திரையைத் தாயாரினைக்கொடுத்தான்

காளி அருச்சுனனைப்போல்நிற்பதை யக்கன்னிகண்டு
தாய் அலங்காரம் பண்ணிக்கொள்ளல்.

வான்விஜயன்போனபின்பு மாகாளிமேனைசெய்தாள்
அருச்சுனனைப்போலாக அங்கேவடிவுகொண்டாள்
காஞ்சிகாசம்பரமும் கட்டி அரைதனிலே
இச்சைகொண்டச முக்கச்சைமார்புள
மாணிக்கமுதன்போலே மறைப்பிலேநின்றாளாம்
இப்படிகருங்காளி யிருக்கின்றவேளையிலே
ஒருகன்னியுடு திளைவகொடியாளோடுசெய்தாள்
மஞ்சள்குளித்தாள் மையெழுதிப்பொட்டுமிட்டாள்
வாரிமுடித்தாளாம் வாசனைசவரியுடசொருகி
கொண்டைக்கழகாக கொண்டையிற்தான்முடித்தாள்
சந்திரப்பிறைசூரியப்பிறை சேர்த்தணிந்தாளாம்
ஆண்பாதியும்பெண்பாதியும் அழகாகத்தான்முடித்தாள்
முத்தாலேகட்டியும் முனையிலேதொங்கவிட்டாள்
காதுக்குப்பொன்னோலை கைக்குவளையலிட்டாள்
செண்பகப்பூநாசியிலே சேர்த்தணிந்தாளமூக்குத்தி
தோள்வளையலக்கி தொடுத்தாள்ரவிக்கைதனை
கண்டசரமாம கல்பதக்கமோதிரமாம்
கொத்துசரப்பளியாம் கொத்துமுத்துத்தாழ்வடமாம்
முத்துசரப்பளியாம் மோகனமாலைகளாம்
சன்னைபின்னலத்தாழ்வடமாம் தாயித்துப்பேரொளியும்
கடகந்தோள் வளைக்கை நிறையபொன்வளையல்
தண்டைகொலுசுடனே சலங்கையும்பாடகமும்
காலாழிபீலி கனகணையப் புகலணையாம்
அணைக்கிறசங்கிடுப்புடனாம் அலங்காரம்பண்ணினாளாம்
பொன்னிழைத்தப்பட்டாடை பூவாடைதான்தரித்தாள்
சாந்துசவ்வாதுடனே சந்தனமும்பூசினாள்
மருவுமருக்கொழுந்தும் மல்லிகைப்பூமுடித்தாள்
வாசனைபரிமளிக்க வாராளேவனக்கன்னி

ஆடிதாதிகளை அலங்காரத்தோழிகளை
எடுத்துவாவேதான்டி இட்சணமேபோகவேணும்
தாதிமாரோடிவந்து தண்டிகைகொண்டுவந்தார்
ஏறினள்தண்டிகைமேல் எடுத்தார்செம்பருடனை
சங்கனாதனிருக்கும காயுதேதடியாராளம
பல்லக்கைவிட்டிறங்கிப் பாதுகாரணமென்றுள்
ஆனைபிட்சிடன்கோவுதேவிகளை அண்டைவேபோருமென்றுள்
ஏறினார்பல்லக்கில் இயவானசங்கமாரும்
ஏலக்கண்ணிதானும் ஏறினள்பல்லக்கில்
மாளிகைவாசலிலே வந்துயிறங்கினாராம்
பட்டொத்தைப்பாய்போட்டு பண்டாரப்பயிறதின்றுர்
ஆசனத்தின்மேலே அமர்ந்தாளேலக்கண்ணி

ஏலக்கண்ணி அருச்சுனனுக்கு விருந்திடச்சமையல்பண்ணல்.

இளங்கொடிமாதரோ ஏலக்கண்ணிதானெழுந்து
அடிசில்சமையுமென்றுள் அரண்மனையிலுள்ளவர்க்கும்
சர்க்கரைப்பால்போசனங்கள் சமையுங்கள்மாதர்களே
பஞ்சணைமெத்தையும் பள்ளியறைசோடியுங்கள்
இவ்வார்த்தைசொல்ல எழுந்தார்கள்தோழியர்கள்
விதமுறைசெய்யுந் திக்ஷிதாதியர்கள்
இக்கமுறையெங்களு வனமுளெழுந்தார்கள்
அப்புமெழுகுவார் அட்சணக்காப்பிடுவார்
வெங்கலப்பானையிலே வெந்நீருலைசாய்ப்பார்
பால்சம்பாவரிசி பதங்கலந்தான்களைந்து
கொதிப்பாற்றியேயிறக்கிக் கொப்பெனவேதான்சமைத்தார்
வாழைக்காய்கொய்வார் வழுதலங்காய்பரிவார்
சுழப்பவரைக்காயை இரண்டாய்ப்போக்கிடுவார்
கொத்தவரைக்காய்களைக் கூட்டியறிந்திடுவார்
செம்பொனவரைக்காய் சோதிக்கிடுவார்
பாவற்காய்தானரிவார் பாக்கிக்காய்தானரிவார்
இளங்காரக்காய் இளந்தமத்தைதானரிந்தார்
தேங்காய்திரிகிடுவார் மாங்காயரிந்திடுவார்
பாம்புப்புடலங்காய் பாதிப்பீர்க்கங்காய்
பிஞ்சுமுருக்கைக்காய் போனகொத்தவரை
சுண்டக்காய்வெண்டைக்காய் கத்தமுள்ளாமணக்கு
வள்ளிக்கிழங்குகளும் வாழைத்தண்டுதனையுடன்
சிறுகிழங்குசிறுவள்ளி சேப்பாயேசோமகண்டு
கருணைவாழைக்காய் காரத்துள்வள்ளியும்
அகத்திக்கீரைதனை அகத்திமுருங்கைக்கீரை
முளைக்கீரைமுடக்கறுத்தான்கீரையுடன்
காரைப்பிரண்டையும் கடற்கீரையுள்ளதுவும்
பிரண்டங்கிளைக்கீரை பொன்னாங்கொத்தமல்லி

உடைமுருக்குப்பக்கா காராமணிபருப்பும்
அவரைத்தொவரைபோலே அநேகவிதபருப்பு
கொண்டுவந்தேயவர்களும் கோதுமையுங்கோத்து
பத்துவகைதப்பளமும் மாங்காய்வடகமும்
பத்துவகைப்பச்சடியும் பாக்காய்கிழங்குடன்
புளிக்கிழங்குவர்க்கம் பிரட்டுகறிகளுடன்
ஆப்பிரக்கிட்டுக்க அரிக்கதிப்போதிக்கதியும்
இத்தனைக்குழம்பும் அடையுடன்தாளிசைத்து
காரமும்உப்பும் கலந்துஅறுசுவையும்
பத்துகுத்திசேர்த்துமிளகைப் பொடித்தேதான்வைத்து
வடகப்பொடிபோட்டு மணிச்சீரகப்போட்டு
சீரகமுமெந்தயமும் சேர்த்துதான்போட்டு
கறிவேப்பிலையும் கடுகுதிட்டமாய்ப்போட்டு
காயத்தையுமொன்று தாளித்தனியேதான்மணக்க
மணக்கக்கமகமென்ன பாதற்குப்புறையேற
தாளித்திறக்கினார் தார்குழல்மாதர்கையாலே
செம்பொன்பிரியவில்லே சோற்றுவைக்கினார்
வரிசைகாய்சேர்த்த ஊறுகாய்கொண்டுவந்தேன்
இஞ்சிபெருமிச்சை இலவானதயிர்தையும்
நாரத்தைக்கிச்சிலியும் நல்லகிடாரங்காயுடனே
தண்டிக்குருத்துகளும் முருங்கைவள்ளிக்கிழங்கு
அத்திக்காய்பாவக்காய் அழகானதூதுவளை
சில்லக்காய்சுக்கங்காய் விளாம்பிஞ்சுபச்சடியாம்
கண்டக்காய்களாக்காயும் கருக்கானமுள்ளங்கி
மாங்காய்முதலான மற்றுமுள்ளமரக்காயும்
பத்துவகைசேர்ந்த வகைமானக்கிழங்குகள்
ஆதண்டக்காயும் அரிதானகக்கரிக்காயும்
பாவற்காய்கொவற்காய் பச்சைவிளாங்காயும்
சுக்கங்காய்தூதுவேளை சுருக்கானபாவற்காயும்
அவரைக்காயுடன் அறுபதுவகைகாயும்
பழவகைகள்தான சேர்த்த பலவகையைத்தான்கேளும்
மாம்பழம்வாழைப்பழம் மகிமையின்பலாப்பழமும்
செவ்வாழைகதலிவாழை திரண்டகொட்டைவாழையும்
மாதுளைக்கிச்சிலியும் மாவொட்டுமாம்பழமும்
அன்னாசிஅருநெல்லி அழகுகொய்யாப்பழமும்
தமர்த்தம்பழங்களும் தவிரித்தமாதுளையும்
மற்றுமுண்டானபழ வகையெல்லாம்சேர்த்தார்கள்

ஏலக்கன்னிக்குத் தாதிகள் பள்ளியறைசோடித்தல்.

அதிலேயொருதாதி ஆணைக்குதானெழுந்து
பள்ளியறைதான்திறந்து பைங்கிளியாள்சுத்திபண்ணி

சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரசுவர்பூசி
கண்மூன்றுடைய கனவயிரகட்டிலிட்டு
மெத்தைமடித்திட்டு மேலேயணைகோலி
சாம்பரிந்தமல்லிகையைக் கட்டிலின்மேலேசொரிந்து
கண்ணாடிசல்லிகட்டி கவுரிமான்சங்குவிட்டு
மாவிலைத்தோரணமும் மல்லிகைமாலைகட்டி
எங்குமலங்கரித்து ஏந்திழைமாரோடிவந்து
ஏலக்கன்னிமுன்னாலே இளங்கொடிமார்தெண்டனிட
அடிசில்சமைத்ததென்று ஆரணங்குதெண்டனிட
கெண்டியில்தீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைக்க
ஏலக்கன்னிசங்கமரும் எழுந்தாரிருவருமாய்
ங்கபூசிக்கொண்டு கடுகியேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
இட்டாரேபோஜனங்கள் இவருக்கழகாக
பச்சென்றபழவகையும் பச்சடியும்பாலித்தார்
பொறித்தகறிவகையும் பொன்போல்சிறுபருப்பும்
காராவின்நெய்வார்த்து கடிகிப்பொசியுமென்றார்
சிமிட்டிமுழிப்பளவில் செகமாதாகாளியம்மை
வைத்ததொருசாதமெல்லாம் மாயையாயுண்டுவிட்டாள்
மற்றுமொருகாலே வட்டித்தார்போசனங்கள்
மறுபடியும்போசனத்தை மாயையாயுண்டுவிட்டாள்
ஆயிரம்பேருக்கு சமைத்த அடிசிலெல்லாம்
ஐயரொருவருக்கு அன்புடனேவட்டியென்றாள்
கடுகளவுநாழிகையில் காளியம்மையுண்டுவிட்டாள்
இன்னஞ்சோறில்லையே என்பசியாறுகைக்கு
வயிறுபசியாற்றாமல் மாலையிட்டுக்கொள்வேனோ
மேதினியிலெப்படிக்கு விவாகமதுசெய்வேன்காண்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏலகன்னியேதுசொல்வாள்
எரியோவுன்வயிறு இயலானசங்கமரே
மடுவோகுளமோவுன் வயிறுகுஞ்சங்கமரே
பெண்டுபிள்ளையில்லாமல் பிழைத்தீரோஊர்திரிந்து
இன்றையதினத்திலே போசனமிட்டாச்சு
நாளைபதினத்திலே ஒன்றாய்போசித்திடுவீர்
வாருமென்றுசொல்லியே வருந்தி யபீர்கொடுத்தாள்
வாய்ப்பூசிகைபூசி மாளிகைக்குப்போய்நடந்தார்
பள்ளியறைவீட்டிலே பஞ்சணையில்வந்தார்கள்
சங்கமருமனமகிழ்ந்து தம்புருதான்தொனித்தாள்
இன்னாரவாத்தியங்கள் கோஷ்டமுடன்தான்படித்தாள்
காதாரக்கேட்டுமே காளியம்மைதான்மகிழ்ந்தாள்

நலக்கன்னி காமவிகாரத்தால் அருச்சுனனென்று அணையப்போக

காளி நான் அருச்சுனனல்லவென்று சொல்லல்.

காமம்பொறுக்காமல் கடிதியேயலக்கன்னி
மார்பில்விழுந்து மருவியணையவந்தாள்
காளியென்றுதானறிந்து கைவிட்டாளேலக்கன்னி
என்னைக்கெடுத்தீரே என்பாவங்கொண்டீரே
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கநாயமுண்டோ
அருச்சுனராசாவென அங்கெனையேய்ப்பமறந்தாள்
வில்லூரில்நந்தசங்கமே நெடுந்தூரம்போகாதே
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கநாயமுண்டோ
என்னைக்-கலியாணஞ்செய்து கடுகநடவுமென்றாள்
ஆனைவழுதுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
ஆதிகயிலாசம் அரன்பதிக்குப்போறேனே
இவனூர்தன்னையாலே சேனவரம்பெற்று
வரும்போதலக்கன்னி மாலையிட்டுக்கொள்ளுகிறேன்
என்னைமறக்காதே நலக்கன்னிதாயகமே
போகச்செலவுதாராய் போய்வாரேன்பெண்மயிலே
ஆணையிட்டாலல்லாது அடியேன்செலவுகொடேன்
என்றதுகேட்டுமே ஏதுசொல்வானவன்விஜயன்
ஆணையிட்டுத்தாரேனே ஆரணங்கைவிவாகஞ்செய்யு
மாதர்செலவுதரவாள்விசையன்போய்நடந்தான்
அந்தவனத்தைகடந்து அப்புறம்போகலுற்றான்

பேராண்டன்வனம் முற்றிற்று.

௧௧-வது சபாமிருகவனம்.

அந்தவனத்தைவிட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனமேகுடிபுகுந்து
காடுகடந்து கரியமலைதான்தாண்டி
சபாமிருகந்தானிருக்கும் தனிவனத்திற்போனார்கள்
ஐந்தடுக்குப்பர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அங்கேகுடித்தனமாய் ஐவர்களாயிருந்தார்
இப்படியாகச் சிலநாளிருக்கையிலே
சபாமிருகவனந்தனிலே தனஞ்சயனுமப்போது
வெள்ளானைவனந்தனிலே வில்விசயன்வாரானாம்
உலகமதிர்ந்திடவே உந்தமனும்வாரானாம்
ஒருவன் ஆரேனென்ன உலகமானேனென்னும்

ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
சிவசிவாவென்றுசொல்லி தொனித்தானேசங்குதனே
சங்குதொனிகேட்டு சபாமிருகந்தானெழுந்து
வால்கிளப்பிளும்மாளமிட்டு வருகுதுவெள்ளானே
தன்விழியேபார்த்து தாளுேமர்தானே
கொம்பினால்மலையையது குத்திக்கிளப்பிவிடும்
அருச்சுனரைக்கொல்லவென்று ஆனைவருகையிலே

அருச்சுனன் ஆனையைக் கொல்லுகிறது.

கண்டானேவாள்விசையன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வளைத்துநாணிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அர்த்தசந்திரபாணமெடுத் தஸ்திரத்தையுச்சரித்தான்
மதயானையைக்கொல்லவென்று மார்புரளவாங்கிவிட்டான்
அருச்சுனன்விட்டதொரு அர்த்தசந்திரபாணமது
மதயானைதன்னையே வகுத்துயிருபிளவாய்
வீறிட்டுவிழுந்ததே வில்விசயன்தன்கையால்

அருச்சுனன் கையினால் விழுந்தயானை ஒருபிராமணனுகவந்தது.

ஆனைமடிந்திடவே அதிலொருபிராமணன்தான்
பஞ்சாங்கப்பிராமணனும் பார்ப்பான்வெளியானுன்
கண்டானேஅருச்சுனனும் கடிகிப்பிராமணனே
வாரும்பிராமணரே மதயானைமுழுங்கிற்றே
ஆனுற்கேள்சங்கமரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
தெய்வலோகந்தன்னிலே சிவனுடையபூங்காவனம்
ஐயர்பூங்காவனத்தில் அதிகாரமென்னுதுகாண்
அம்மைபூங்காவனத்தில் அதிகாரமென்னுதுகாண்
அம்மைபூங்காவனத்தார்கள் ஐயர்வனம்போகொணுது
ஐயர்வனத்தார்கள் அம்மைவனம்போகொணுது
ஒற்றையொருநாளில் உச்சிதத்தைப்பார்ப்போமென்று
அம்மைவனங்களிலே அதிகாலைபோகையிலே
ஆயிரம்பெண்களிலே அதிலேஒருதாதி
கண்ணுக்கினியபெண்ணை கண்டாசைப்பட்டேனே
பார்த்தாசைப்பட்டேனே பைங்கிளியைகைபிடித்தேன்
என்னைதிமிறிவிட்டு ஈஸ்வரியாள்பக்கஞ்சென்ருள்
ஈஸ்வரியாள்தன்னுடனே இச்சேதியுரைத்தாள்காண்
அம்மையதுகேட்டு ஆதிசிவன்பக்கஞ்சென்ருள்
உமையவளதுகேட்க உம்பர்பிரான்பக்கல்வந்து
ஐயாதுவுன்வனத்தில் அதிகாரஞ்செய்கிறவன்
எந்தன்வனக்கன்னியரை இவனபிடிக்கஞாயமுண்டோ
என்றுமிகச்சொல்லுகையில் ஈஸ்வரனார்தான்கேட்டு
என்னைவரவழைத்து ஈந்தார்பெருஞ்சாபம்
என்னுடையசாபமது எப்போதுதீருமென்றேன்

ஆதிகயிலாசம் அருச்சுனன்வருகிறான்
அருச்சுனனைக்கொல்லவே ஆங்காரமாய்போகையிலே
அருச்சுனன்கோபமுற்று அம்பாலேகொன்றிடுவான்
என்றதுபோல்நீரும் என்சாபம்போக்கிவிட்டீர்
வாருமென்றிருவருமாய் வனத்திலேபோறார்கள்
போகப்பிராமணனும் புதுமையொன்றுசொல்லலுற்றான்

அருச்சுனனுக்கு பிராமணன் குயவன் வரலாறுகூறல்.

ஆனாற்கேள்சங்கமரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
செப்புமொழிதவறான் திருநீலகண்டரவர்
கோடுகடவாதார் குயவன்குயத்தியரும்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
மகாராசன்வாசலிலே மங்களகாரியத்தால்
கோவுங்குடமுட்டி கொண்டுவாவென்றுரைத்தார்
அந்நேரம்நீலகண்டன் அனேகமுட்டிசொப்பனிட்டு
பொன்போலவனைத்துமே போட்டான்பெருஞ்சூளை
சூளைகலைந்து சுட்டசிறுமுட்டிசுட்டு
மகாராஜன்வாசலிலே வைத்தானேகொண்டுவந்து
மகாராஜன் தான்பார்த்து மகிழ்ச்சியாய்குயவருக்கு
சொர்ணமணிமுத்தும் துகிலாடையுமெடுத்து
நீலிலாபூஷணத்தை நீலகண்டனுக்கருளி
போய்வாருமென்றுமே போகச்சிலவருள
வெகுமானம்பெற்றுமவன் வீதிவருகையிலே
அந்திகாலமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
காற்றுமழையுங் கடிகிவருகுது
தேவதாசிவீதி தெருத்திண்ணையோரத்தில்
வந்துயிரங்கினான் வான்மழைபோகளவும்
அந்தசமயத்தி லவ்வீட்டுதாசியவள்
போசனமுண்டுமே பொற்கலத்தைதான்கழுவி
சன்னல்கதவையவள் தான்திறந்துஊற்றினாள்
மண்ணுடையான் தன்மேலே வந்துவிழுந்தது
சம்போசிவசங்கரனே சலந்தெளித்தாராரென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாசியவள்
அஞ்சியயர்ந்துமே ஆரென்றுகேட்கலுற்றாள்
மண்ணுடையான்நான்காணும் வந்தேனிதுவழியாய்
வான்மழைக்குமாதரசே வந்தொதுங்கினேன்
ஆரோதெரியாது அள்ளிஜலந்தெளித்தார்
என்றதுகேட்டுமே ஏலம்பசுங்கிளியாள்
மெத்தபயந்துமவள் வீட்டோரங்கொண்டுசென்று
அபிஷேகமாட்டிவைத்தாள் ஆனந்தமாரனுக்கு
சாமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
ஆபரணமிட்டு அலங்காரம்பண்ணினான்

போஜனமிட்டுமவள் புட்பமுந்தான்கொடுத்தாள்
சந்தனமுந்தாம்பூலம் தான்கொடுத்தாள்தையலரும்
அன்றையராத்திரி அங்கிருந்தகுயவனவன்
மற்றநாட்காலையில் வந்தானேவாழ்மனைக்கு

குயவன்மனையாளுக்கும் குயவனுக்கும்தர்க்கம்.

குயவனுடதேவி கொம்பனையாள்கண்டாளாம்
கண்டுபுருஷனைக் கண்ணீரத்தானுதித்தாள்
கோவென்றசத்தமுடன் குமுறியழுதாளாம்
ஆரோடேபோகம் அமர்ந்திருந்தீர்மன்னவரே
என்னைவிட்டுபிரிவதற்கு என்னமனம்வருமோ
வேசியர்கள்வீட்டிலே விளையாடிவந்தீரோ
உன்னுடனேபேசேனே உன்முகத்தைப்பாரேனே.
பெற்றதகப்பனைப்போல் பிரியமுடன்பார்த்திருப்பேன்
குருக்களுடைமையை கொள்ளைகொண்டுபோனவர்கள்
தாயில்லாப்பிள்ளைகளை தலையிலடித்தவர்கள்
சிசுவதைபண்ணவர்கள் ஸ்திரீவதைபண்ணவர்கள்
பெரும்பாவிசேருகிற பெரும்நரகில்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டாள் இளங்கொடியாளக்குயத்தி
இவ்வார்த்தைகேட்டுமவன் எரிபந்துநீலகண்டன்
கண்கள்சிவந்துமே காந்தாளப்பட்டானும்
மெய்யானவார்த்தைதனை விளம்பினேன்மெல்லியற்கு
பொல்லாதவார்த்தையினாற் புலம்புறாளேதுசெய்வேன்
என்றுமனஞ்சலித்து ஏதுசொல்வான்நீலகண்டன்
இன்றுமுதலாக இனிநெடுநாள்வரைக்கும்
உன்னுடனேபேசினால் உனக்குத்தகப்பனென்றான்
அவ்வார்த்தைதள்ளினாலனேகபாவஞ்சொல்லுகிறேன்
அபயமென்றுவந்தவனை அனியாயம்பண்ணபாவி
பெரும்பாவிசேருகிற பெருநரகம்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டான் இயலானநீலகண்டன்
அப்படியாக அனேககாலந்தானிருந்தார்

ஆதிசிவனும்பார்வதியும் பண்டாரவேஷமாக
வந்துஇருவரையும் ஒருமைப்படுத்தி
மோட்சமீதல்.

ஆதிசிவனுக்கும் ஆதிபரமேஸ்பரிக்கும்
பொறுத்துமுடியவில்லை பொல்லாச்சபதமிது
இருவரையும்பேசிவைக்க ஈஸ்பரனார்வந்தாராம்
மெத்தப்பெரியவராய் மேல்நாட்டுச்சங்கமாய்
ஆண்டிப்பெரியவராய் ஆண்டவன்வடிவெடுத்தார்
அம்மையுமையவளும் ஆண்டிச்சிவடிவெடுத்தார்
விநாயகன்வீரபத்ரன் வேல்பொருந்துங்கந்தனுமே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்

கன்றுபுலித்தோலும் கைலாயமான்தோலும்
சடையுஞ்சடைமுடியும் தம்பிரானைப்போலாக
நீலகண்டனுக்காக நினைத்தார்திருவோடு
கதிரோனைப்பாத்திரமாய் கடுகெனவேவுகைபிடித்து
வாரார்பரமசிவன் வனமாய்வனங்கடந்து
காடுசெடியுங் கரியமலைதான்கடந்து
நீலகண்டன்வாசலுக்கு நிமலரும்வந்துவிட்டார்
ஆடபத்தாநீ அறிவுள்ளபுண்ணியனே
என்பிள்ளைபெண்சாதி யிங்கிவர்களெல்லோரும்
பசிபோமேநாங்கள்வந்தோம் பசியாற்றிநீரனுப்பும்
பிள்ளைபசியாற்றில் புண்ணியங்கள்வேணதுண்டு
குழந்தைபசியாற்றில் குமாரனைப்பெற்றிடுவாய்
உந்தனுறன்முறையார் உன்னுடையபெண்சாதி
வாழ்ந்துசுகமாவீர் மகாதேவர்புண்ணியத்தால்
என்றல்லோசங்கமரும் ஈய்ந்துவிட்டார்வெண்ணீறு
வாங்கியணிந்துகொண்டு வணங்கியேதெண்டனிட்டான்
நல்லதுசங்கமரே நான்செய்தபாக்கியத்தால்
வந்தீர்களிப்போநான் வாழ்ந்துசுகமானேன்
பத்துநாழிகைப்பொழுதில் பசியாறிநீங்கள்வந்தால்
போசனமுண்பீர்காண் போய்வாருஞ்சங்கமரே
என்றதுகேட்டுமவ ரேதுசொல்வார்சங்கமரும்

ஈஸ்பரர் நீலகண்டன்மனஞ் சோதித்தல்.

நான்-போசனம்பண்ணுகிற பொன்னான திருவோடு
இங்கேவைத்துநான்போறேன் எடுத்துபறவாமல்வையும்
ஊர்திரிந்துநான்வாரேன் உன்வசத்திருக்கட்டென்றார்
என-பாட்டனார்நாளையிலே பண்ணின திருவோடு
பாத்திரம்போய்விட்டால் பழிவந்துசேருமென்றார்
என்றதுகேட்டு ஏதுசொல்வான்நீலகண்டன்
ஆனற்கேள்சங்கமரே ஐயாபெரியவரே
என்னுடையதேவிபுடன இவ்வார்த்தைதனுரைத்து
சாதங்கறிவகைகள் சமைக்கவேசொல்லுமையா
பாலற்பயிர்பந்தலின்மேல் பாத்திரத்தைவைத்துவையும்
ஆரண்மனைக்குள் நுழைந்து ஆச்சியைத்தானழைத்து
மண்ணுடையான்வார்த்தைதனை மாதருடனுரைத்தார்
பந்தலின்மேலாகப் பாத்திரங்கள்வைத்ததின்பின்
பாத்திரத்தைப்பார்த்திரென்று பண்டாரந்தானடந்தார்
செப்பிநடந்தாரே திருநீலகண்டன்வாழும்
அத்தெருவுதான்கடந்து அடுத்ததெருவீதியெல்லாம்
ஆத்திமுலருகில் ஆதிசிவன்வந்தமர்ந்தார்
அந்தச்சமயத்தில் ஆதித்தன்போய்மறைந்தார்
சுக்கிலாதேவிமகன் சூரியன்தான்மறைந்தான்

குயவனுடதேவியரும் குடிவாழ்க்கைசெய்திருந்தாள்
அனேகநெடும்போது ஆனபிறகாக
மண்ணுடையான்தானெழுந்து வாசலிலேவந்துநின்று
பாவற்பந்தலைப்பார்த்தான் பாத்திரத்தைகாணோமென்று
தேவியெதிரில்வந்து திகைத்தாப்போல்நின்றுவிட்டான்
கைநீட்டிநீலகண்டன் கண்காட்டிகேட்கிறான்
ஆரணங்குமாதுகன்னி அறியேனென்றுசாடைபண்ணுறாள்
மனதுசஞ்சலமாக மண்ணெடுத்துப்பண்ணுகிறார்
பன்னீருந்தானெடுத்து பாத்திரம்பண்ணினான்
சுடிகியேசூளைபோட்டு கவிழ்த்துவைத்தான்பந்தலிலே
ஐயரும்அம்மையுமாய் ஆதிசிவன்வாராராம்
திருநீலன்மாளிகையில் சிவசிவாவென்றுவந்தார்
கடிகியேநீலகண்டன் கைக்குச்சலங்கொடுத்தான்
கைப்பூசிக்கொண்டு கடுகியேஉள்நுழைந்தார்
பாத்திரங்கொண்டுவந்தார் பண்டாரம்பார்த்துவிட்டார்
என்னுடையபாத்திரம் எங்கேஎன்றார்சங்கமரும்
வைத்துநீர்போனபின்பு மாயமாய்போச்சுதையா
ஆகையாலாண்டவனே ஆட்சணமேசெய்துவைத்தேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்சங்கமரும்
என்-பாட்டனார்நாளையிலே பண்ணிவைத்தபாத்திரத்தை
ஏமாத்திமோசம்பண்ணி இல்லையென்றுசொல்லலாமோ
மகாராஜனிடத்தில்வாரும் வழக்கைப்போய்ச்சொல்வோமென்றார்
மடிபிடித்துசங்கமரும் வாராரேதாவிழுத்து
முடிமன்னன்தன்சபைக்கு முன்பாகவந்துசொன்னார்
பசித்தமென்றுசோறுகேட்டேன் பகலைக்குவாருமென்றார்
வச்சிரத்தாலிழைத்த மாணிக்கப்பாத்திரத்தை
இவர்கையில்நான்கொடுத்து இஷ்டரிடம்போயிருந்தேன்
வந்துபின்னேகேட்டாலே மாயமாகாணோமென்றான்
ஆகையினாலேதான் அழைத்துவந்தேனும்மிடத்தில்
அதிதிபரதேசி யாருமில்லையிந்தனுக்கு
ஆண்டியுடமையென்று அவரிடத்தில்நீர்கேட்டு
வாங்கியேதாருமென்றார் மகாராஜாராஜாவே
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மகாராஜன்
ஆடாநீலகண்டா அறிவுகெட்டபாதகனே
பரதேசியுடமையை பறிக்கிறதுதருமமோடா
குயவனைகுப[illegible] செப்பனமேவகட்டுமென்றார்
வெள்ளிப்பிரம்பாலே வீசியடியுமென்றார்
மாறியடியுமென்றார் வந்தகுயவனைத்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தார்தலையாரி
எருக்கமலராலே எட்டியடித்தாரே
உன்னம்நடுங்கமேனி உதிரம்வடியுதங்கே

அப்போமகாராசரிடம் ஆண்டியவரேதுசொல்வார்
இன்னஞ்சிலநாளண்டை இட்டியோன்போறேனையா
கட்டவிழ்த்துவிட்டிடென்றார் கடிகிநிலைகண்டனைத்தான்
ஆரண்மனையைத்தாண்டி அப்புறம்போகையிலே
ஆதிசிவனாரும் அந்தேமனமகிழ்ந்து
ஈசன்சிவபத்திலே நல்வரிசிங்கத்திலே
பேழைவயிற்றோனும் பெருச்சாளிவாகனத்தில்
கந்தர்மயில்மேலே கடுகியேவந்துநின்றார்
தங்களுடவாகனத்தில் சாமிகளுமேறிவந்தார்
வந்தாரேஇராக மன்னுடையான்கண்டுவிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
குயவன்குபக்தியுட குறைகளைத்தீர்த்தாரும்
காட்சிகொடுத்துக் கைலாசம்போனாராம்
நிலைகண்டன்பேறுபெற்ற நிலமாருமிவ்வனந்தான்
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
புண்ணியவனத்திலே போய்ஸ்நானப்பண்ணிவந்தால்
என்பாவந்தீரவே நல்வரனூர்வரமளிப்பார்
என்று-பொய்கைகளிலே பொட்டெனவேஸ்நானஞ்செய்து
வெண்ணீறுநினைந்து திருநீற்றுக்காப்பணிந்து
அரனைநினைந்து அள்ளியிட்டான்வெண்ணீறு
பஞ்சாட்சரமணிந்து பகவானைப்பூசைசெய்து
அரகராஅரனேயென்ன அடித்தானேசெயகண்டிகை
ஓம்நமசிவாயவென்று ஒலித்தானேசங்குதனை
ஒருவன்சிவனேயென்ன உலகஞ்சிவனேயென்னும்
அரகாரவென்றுசொல்லி அந்தவனந்தாண்டினான்
மற்றுமொருவனத்தில் வாராரிருவருமாய்
இந்தவனம்ஆருடைய தென்றான்விசயன்

சபாமிருகவனங்கடந்து ஊர்க்குருவிவனம் வருதல்.

ஊர்க்குருவிபேறுபெற்ற வனமென்றானுத்தமனும்
வாயில்லாச்சீவன் மாமேருப்பட்சிகள்தான்
எத்தவிதமாய்த்தான் நல்வரனைக்கண்டதுகாண்
அந்தவிசயத்தை ஆண்டவனேசொல்லுமென்றார்.

பிராமணன் அருச்சுனனுக்கு ஊர்க்குருவி வரலாறு கூறுதல்.

அப்போபிராமணரும் அருச்சுனற்கேதுசொல்வாரா
ஊர்க்குருவிபட்சிபதி ஆண்டாணும்பெண்ணுமாக
இந்தவனமதனி லிருந்துவாழும்நாளில்
பிள்ளைகள்பெற்றிருக்கப் பெருத்தவனங்களிலே
போவார்வருவார்குஞ்சைப் போயெடுத்துக்கொள்வார்கள்
இரைதேடிவருவதற்குள் எடுத்துக்கொண்டுபோவார்கள்
கூண்டினிடமாகக் குருவிவந்துபார்த்தவுடன்
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டிருக்கும்

மறுகாலொருகாலும் [illegible]யிருக்கும்
பெண்குருவியானது புருஷனுக்கே [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] பெண்குருவி
[illegible]
[illegible]
[illegible] குருவி
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] லிருந்தார்
[illegible] அழகான பெண்குருவி
[illegible]
இருமுட்டையிட்டு இருக்குமடைகாக்க
[illegible]
[illegible]
[illegible]
தாயுந்தகப்பனும் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
பட்சமாகத்துக்கொப் பார்ப்பமென்றானிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகான பெண்குருவி
[illegible] பார்க்கையிலே
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

மைந்தனைப் பறிகொடுத்து வெற்றிவேந்து சொல்லும்
பரிகெடுத்தா யெங்கள் பாலகனைக் கொலைசெய்தென்று
என்றும் பகையாக வேற்பட்டாயெனைத் தனக்கு
புதல்வனைப் பறிகொடுத்த பட்சிப்பெண்குருவி
இவையேயோ தெய்வமென்று வேப்புகு பெண்குருவி
அக்கச்சபாரதத்தில் ஆண்குருவியேது சொல்லும்
மனதுசலியாதே மக்களைப்பெற்றோனே
சமுத்திராசருடன் சண்டைமிகச்செய்து
புதல்வனை மீட்பேனென் பெடையே பெண்மயிலே
என்றுரைத்தது இப்படியங்கவர்கள்
முக்கியமாய் விழித்து முனிவரெழுந்தது
அன்னையென்றறிந்து பெழுதுகிட்டுருக்கான்
ஏக்காய்த்துக் கழுகள் பருந்துகளாம்
காடைப்புறா மயிலுக்குயிலினமாம்
காடைக்குருவிகளாம் கவுதாரிபட்சிகளும்
அன்னமயிலார்களோடும் ஆனைமயிலினமும்
கிளிகழுகு முதற்கொண்டவையும் ஆக்கைகளும்
பட்சிகளெல்லாஞ் சிறகுக்கு ஓடியேவாத்தொன்று
சமுத்திராசருடன் சண்டைபண்ணப் போகவேணும்
எனதுடைய இனக்காக ஒரோரூபவாகனங்கள்
வாருங்கள்பெருஞ்சிறிய வாயசக்கைகத்தாலழுத்து
இன்னமக்கொடுத்து உள்ளமெல்லாக்கொல்லி
தெய்வலோகத்தார்க்கும் சேதிசொல்லியனுப்பின
வாயுவேகமாக வருகுதாம் பட்சிகள்
அவனியிலுள்ளவர்க்கும் அந்தரமுள்ளவர்க்கும்
செப்பித்திருப்புகையில் திருப்பாற்கடலிருக்கும்
ஆயருடவாகனம் அழகாயெழுந்திருந்து
பாதனைத் தெண்டனிட்டு வணங்கியேதுசொல்லும்
தங்குலாசனுக்கும் சமுத்திராசனுக்கும்
யுத்தங்களாகிறதாம் உலகளந்தபெருமாளே
என்னைவரவழைத்தார் யாதுமேபோய்ச்சொல்வேணும்
சாஷ்டாங்கதெண்டனிட்டு சாமிக்குரைத்தப்போ
குஞ்சுகளைத்தரக் கொப்பெனவே வெழுந்தார்
பிரமருடவாகனம் பெட்டன்னம் சாரினமும்
கந்தருடவாகனம் கானமயிலினமும்
மன்மதவாகனம் வர்ணக்கிளியினமும்
சனியனுடவாகனம் சமர்த்தானவாயசமும்
அவரவர் கொண்டை இரும்பளித்த கொண்டையிலே
சமுத்திராசருடன் சண்டைசெய்யப்போயினார்கள்
அமராதந்தக்குறுமென்று அறிந்தாயோ பின்னது
ஆசையாலாண்டவனே சொல்லுவேனோ போகவேணும்

எங்களுக்குச்செலவருளும் என்றுபணிந்து
அந்தண்டதேவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்
சமுத்திராசருடன் சண்டைகளெப்படியோ
இப்புதுமைபார்ப்போமென்று இயல்யானதேவரெல்லாம்
நாளும்வருகிறோம் கடவுள்கள்முன்னேயென்றார்
தெய்வலோகப்பட்சி திரும்புதுபூமியிலே
தனித்தனிபட்சியெல்லாம் சமுத்திரக்கரையோரம்
தன்குலத்தாசருக்கு சரணமிடும்பட்சியெல்லாம்
அப்போதுசிட்டினந்தான் அனைவருக்குமேதுசொல்லும்
சமுத்திரக்கரையோரம் தாவுதேடிபிள்ளைபெற்றால்
அலைபெருகிதண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோனது
என்னுடையபிள்ளைதனை எடுத்துக்கொண்டுபோனது
ஆகையாலுங்களையும அலசியம்நானழைத்தேன்
வாருமென்றபோதையிலே வந்தீர்கள்தயவுசெய்து
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுங்கள்
என்னுடையபிள்ளையை எவ்விதமும்வாங்கிடுங்கள்
உகந்துஅனைவோர்க்கும் உபசாரஞ்செய்கையிலே
அந்தண்டபட்சிகட்கும் அதிககோபமுண்டாகி
காக்காயொருவரிசை கழுகுமொருவரிசை
அன்னமொருவரிசை ஆழ்வாரொருவரிசை
பருந்துமொருவரிசை பச்சைக்கிளியொருவரிசை
மயிலுமொருவரிசை வல்லூறொருவரிசை
குயிலுமொருவரிசை குருவியொருவரிசை
காடையொருவரிசை கவுதாரியொருவரிசை
புல்புல்லொருவரிசை புறாக்களொருவரிசை
உள்ளானொருவரிசை உலக்குருவியொருவரிசை
நாரையொருவரிசை நாகணவாயொருவரிசை
கொக்குவொருவரிசை கோட்டானொருவரிசை
அந்தச்சமயத்தில் அனேகவிதபட்சியெல்லாம்
அந்தப்புறங்களிலே அவ்வருப்பாசேர்ந்திருந்தார்
அப்போதுமூவர்களும் அயிராவதத்தோனும்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்களும்
ஆகாயமார்க்கத்தில் அந்தரமாய்நின்றுகொண்டு
பட்சிகள்நின்றிருக்கும் பாவனையைப்பார்த்தார்கள்
எழும்பியேஅந்தரமாய் எட்டிப்பறக்கிறதும்
தானாகவேபறந்து தண்ணீரில்தான்குதித்து
இருபக்கம்ரெக்கையிலே எடுத்துஜலங்கொண்டுவந்து
பாரெல்லாம்நீர்தளும்ப பறந்துதெளிக்கிறது
அரைநாழிகொள்ளையிலே அடியோடேவற்றிவிட
சமுத்திரமானதெல்லாம் தண்ணீர்வரண்டுவிட
சமுத்திராசன் சகிக்கமுடியாமல்

தேவர்கள் தலைவனுடன் செப்பமுறையிட்டார்
அந்தண்டர்பேரும் அனைவரும்வந்திறங்கி
கிட்டினதனைத்தானெழுந்து செப்புவார்தேவரெல்லாம்
உன்-தவமனைவாங்கித்தாரோம் சமுத்திரனிருண்டுபண்ணனும்
எப்போதும்போலேநீர் ஏற்படுத்தும் சமுத்திரத்தை
என்றுசொல்லப்பட்டிகள் மெய்யலைமொருமித்து
மயிலையருகழைத்து வார்த்தைகளைதுசொல்லும்
கந்தருக்குச்செலவன்ராஜன் கைகொளைனுண்டுசெய்வார்
என்றுசொல்லமயிலினைக்க வெள்ளையொருமித்து
வேலவனுர் ஒன்பதத்தில் விழுந்துமுறையிட்டு
ஆண்டவனேயென்சாமி அடியேனுல்முடியாது
தீர்த்தினைத்தான்வசமேய திரும்பெருகிவிடும்
அடியேனைப்பற்றியே அலைகடல்உண்டுபண்ணும்
என்றுபணிந்து இறங்கியேதொழுதுநிற்க
கந்தர்மனமகிழ்ந்து கடுகியேவில்லினைத்து
வில்லெடுத்துநாணிபூட்டி வெகுவலித்துமத்திரித்து
அலைகடலில்நீரையெல்லாம் அயபுவிலாருமுத்தாக
பூமியதிரவே பொய்ப்பாயும்வேலிதுதான்
மண்ணிலுள்ளநீரையெல்லாம் வழித்தொருமுத்தாக
முக்காலவைத்து முன்னைந்துகடல்பெருக
சந்தோஷப்பட்டானே சமுத்திராசனென்
குருவிடபின்னேப கொண்டுவந்துதந்தாராம்
ஆதிசிவனாரும் அதிவரந்தந்தாராம்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவரெல்லாம்
சுகமாகச்செல்வத் துடனேயிருப்பீரென்று
வாழ்த்திவிடைகொடுத்து மகாதேவர்போய்நடந்தார்
ஊர்க்குருவிபேறுபெற்று ஒக்குவனமிதுதான்
என்றதுகேட்டு எழில்விஜயராசாவும்
உற்றுற்றுக்கேட்டு உள்ளமிகமகிழ்ந்தார
அந்தச்சமயம் அருச்சுனராசரிடம்
போகவிடைதருமெனப் புகன்றான்பிராமணனும்
போய்வாருமென்று போகவுற்றான்போர்விஜயன்

பதினோராவது ஊர்க்குருவிவனம் முற்றிற்று.

கஉ-வது காளபயிரவவனம்.

பன்னிரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
காளபயிரவ வனத்திலேகொலர்கள்

அந்தேகருமக்கனமாய் இவர்தமிருந்தார்
காண்டாவனமெரித்த காலையுமக்கணமே
ஆரணமிலே காலைதனில்வசதமர்ந்தான்
அந்தேகவறுவிகள் அவ்வமயம்போழுது
சாமிவபன் றுளக்கோர்ம தனக்குவிளக்குமவ
மெய்விரின் றுலக்கோர்க்கா ணெய்தவமயிலுற்ச
வைதுமணக்கனக வப்போதுமபோவிருந்தார்
அக்கரிஷிகளன்னை அருச்சுனன் தனக்கொடுத்தான்
அங்கிருக்குமரிஷிகள் அவைகயபெரியவர்கள்
இக்கனிகாவமட்டும் இருந்துசலம்பண்ணினோம்
இருந்தவம்பண்ணி எம்மாறும்வந்ததில்லை
ஆகிசிவனுமை ஆண்டவனைக்காணவில்லை
பாமசிவனைப் பார்க்கவரிதாகும்
கைலாசவாசனிலே கலிதவம்பண்ணினோமே
பரமசிவனுமை பார்ப்பதற்கேலோ
சுகமாகவாழ்ந்திடுவீர் குறிதமாய்பதிலேன்
இவ்வார்த்தைதானகேட்டு இராசனைவாமிழுபன்
எல்லோர்க்குமுச்சாஷிட்டு எழில்விஜயன்போய்நடந்தான்
கடிதிடந்தாலே கைலாசபருவதத்தில்
பொய்கையில்ஸ்நானம்பண்ணி பூசைதவமுடித்து
காளபைரவனைக் கருதித்தியானமபண்ணா
எழுபதடிக்கம்பம் எழில்விஜயன்நாட்டினான்
எழுபதடிக்கம்பத்தினமேமே லெழுமிசைகளைத்தான்
எழுமிளகின்மேல எழுவிளாம்பழுக்களைவைத்தான்
எழுவிளாம்பழுக்கின்மேல் எலுமிச்சங்கனிகளைவைத்தான்
எலுமிச்சங்கனியின்மேல் எழுகொட்டைப்பாக்குவைத்தான்
எழுகொட்டைப்பாக்குமேல் எழுகுண்டுமணிவைத்தான்
எழுகுண்டுமணியின்மேல் எழுகடுகைவைத்தான்
எழுகடுகின்மேல எழுசெப்பூசிவைத்தான்
எழுசெப்பூசியின்மேல எழுசெவ்வலரிவைத்தான்
எழுசெவ்வலரியின்மேல் எறினான்தீரவிஜயன்
ஒருக்காலைக்கால் ஊன்றி ஒருக்காலைமுழுங்காலில்வைத்தான்
கண்ணிரண்டுமுடியே கர்த்தன்மேல்தியானமாய்தான்
ஆகாரமில்லைபென்று அடக்கான்பெருங்கடுங்கை
ஓம்நமசிவாயவென்று ஓதிதவமேசெய்தான்
ஒருவன்சிவனேயென்றால் உலகமெல்லாம்சிவனேயென்னும்
அருந்தவசுபன்ணுகிறான் அருச்சுனராசனுமை
அகோரத்தபசுபண்ணுறான் அண்டவினைக்காணவென்று
ஆதிசிவனுக்கு அப்பொழுதுசெப்ததவம்
பொறுக்கமுடியவில்லை போர்விஜயனசெய்ததவம்
ஆதிசிவனுக்கு அக்கினிபாய்ச்சிருந்த

காலனைக்காலா லுதைத்த கைலாசநாதரவர்
கோபம்பெரிதாகி கொப்பெனவேயெழுந்திருச்சார்வார்
ஆடாதுதுவமே ஆனைமுகக்கணபதியரை
மயக்கிரியானை இங்கேவரவழையுமென்றார்
விண்ணோட்டுத்தேவனை விநாயகனைத்தாடியழையுமென்றார்
விக்கினவிநாயகனை வேலனையழையுமென்றார்
நந்திமாதுகூடி நெடுங்கோடிவில்லரங்களைகொன்றார்
அவ்வார்த்தைதனைக்கேட்டு அந்நேரமேழுந்து வந்தான்
வைகுந்தநாதனும் மாயவனைத்தேடி விட்டு
ஆதிசிவனோ அழைத்துவரச்சொன்னாரென்றார்
அந்நேரமாயனும் ஆதிசங்கரனாருடைய
காலிலேவிழுந்தான் எமதர்மராசனுக்கும்
பாதமலர்க்கனைகள் பிரமதேவனுடைய திருவும்
மதிசூடும்வால்மீகர் மகாதவமுடையவரும்
அகத்தியர் முதல் அனைவருக்குஞ்சொல்லிவிட்டான்
இந்திராவையுந்தார் இக்கிரமமாருமென்றான்
அகிலாண்டநாதன்கேட்டு அவரவர்கள் பயணமானார்
வந்தருடனேயிங்கு வந்துவிட்டார் மாயவனார்
மதங்குமிப்பங்கு வந்துவிட்டார் சித்திரனார்
மாதண்டாளிலேறி சதுர்முகனிங்குவர
அன்றுபிரமாவும் அன்னத்தின்மேலேவந்தான்
வாகனமேலேறிக் கந்தருமவந்துவிட்டார்
மகிழ்வாகனத்தில் முன்னேறும்வந்துவிட்டார்
முப்பத்துமுக்கோடி முனிவரும்வந்துவிட்டார்
அகிலவாகனத்திலே அக்கினியும்வந்துவிட்டார்
வந்துபணிந்தார்கள் மகாதேவனார்பக்கலிலே
அதிகப்பிரியமுடன் ஆதிசிவனேதுசொல்வார்
மாயனைப்பெருமானே வார்த்தையொன்றுகேட்டீரோ
ஆரோதெரியாது ஆதிகைலாசமலைதானே
யாரோதெரியாது இங்கேதவம்பண்ணுகிறான்
மலையக்கன்னிலேதான் கடுங்கோரதவமுண்டோ
அக்கரைக்கு அப்பாலே கானகந்தன்னிலேதான்
சரிதவம்பண்ணுக்கால் காட்சியாக்கதிபிவோம்
இதைக்கண்டறிய வந்தோபோய்சொல்லுமென்றார்
இவன்-ஆரோதெரியாது ஆண்மையாய்ச்செய்துவிட்டான்
அவன்-தன்மட்டுமல்ல சத்தங்கள்போகிறான்
ஆரோதெரியாது அறிந்துவந்துசொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தைகேட்டுசொல்வார்
பாண்டுமகாராசனைபெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
காவிலேவிட்டதிலே மைத்துனப்பார்வையுள்ளோன்

பீமசேனுக்கிளைகன் விஜயிற்கு மூப்பமுகன்
சோனிலனுண்மையோலே தொப்புளில் யுயிர்த்தகலசம்
பல்லிய பாசவினை பாகத்திலெச்சுதாமரை
பஞ்சவரிலிவனொருவன் பார்த்திபனென்றூர்காண்
இடதுகைஸ்வோபமையிருது வலதுகால்வீரதண்டை
சலவிருது வைவிருது சமர்த்துகன்படைத்தவன்காண்
இவபூமைசுருநூமைசு சிவன்பாதம்மறவான்காண்
என்னதவப ீவண்டி பின்துவந்தாலென்றறியேன்
என்றதுதான்கேட்டு பேதுசொல்வாரிவ்வாரும்
தருமர்கப்பியாளுடம் சமர்த்துடையோனுனும்
கைலாயக்கணிலே கடிவொருாயமுண்டோ
இவ்வ - இகதவிகமாயிருந்து எதுதலைபண்ணுவும்
வருகிவிருந்தாலு மாமருளப்போறேனே
தலைச்செடுத்திலேன் தருமர்தம்பிஅர்ச்சுனனை
என்றுமகாதேவர் வரிபறந்துக்கவெந்து
வாயுராசனைத்தானேயவா வெவன்றழைத்தாரும்
அருச்சுனனைசெய்யுமக்க அருந்தவசும்பமனைது
தலைகிலே ... மைக சமுத்திரத்திற்போடுமென்றார்
அதை ... பூவிக்கொண்ணயிலே அதமாக்கிவாருமென்றார்
என்றதுதான்கேட்டு எழுந்தானேவாயுராசன்
ஆயன் ... ருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
... யைக்கொண்டே கரியமாலப்போது
அருச்சுனனுக்கு அவர்க்குவாகரானாக்கே
காக்கவேணுமென்று கரியமாலோடிவந்தார்
பாவையாயவந்தாரே வாள்விஜயன்முன்னாலே
... அர்ச்சுனரே கைமோசம்வந்ததடா
ஆ ... பரமசிவன் அதிககோபங்கொண்டாரே
வாயுராசன்தனையிப்போ அனுப்பினார்மகாதேவர்
தவசுநிலைசம்பமனைக சமுத்திரத்திற்போடவாரான்
வாயுராஜனுக்கு ஏதுவாயிருப்பாயா
என்றதுதான்கேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
உமையேசப்பிலேய உம்பர்புறம்வந்தேன்
ஆசைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகாமல்
சோனில்லிசபாலை தொண்டழிந்துபோகாதே
பெட்டியிலேபூஷணம் பெருமைகுலையாதே
காக்கக்கடனுமக்கு கரியமாலெப்பெருமாள்
அண்ணருந்தம்பியரும் அனுப்பினார் உன்னைநம்பி
ஆசாரம்பிஇங்குவந்தேன் ஆதிகயிலாசம்
என்னமாயிருந்தாலும் ஈஸ்வரனேரந்தனுக்கு

ஏத்தவிளையாற்றி வாமனுஷத்திசெய்யுமையா
என்றுவனைமிருகே இடையொ [illegible]
இனைநடனைக்குனிந்து ஸ்ரீராமபொன்னைசெய்தார்
தருமர்தம்பி அருச்சுனன்றன் தவசுநிலைகப்பாமது
வாயுபாஜன்வந்து வனமையமாயசக்கிருந்தான்
ஆதிசிவன்வந்து ஆசைக்கினவித்தானும
தேனாநிதேவரெல்லாம் சேர்ந்துபக்கிருந்தும்
அருச்சுனன்தனக்கிலே அசையாமலிருக்கவென்றார்
[illegible]
அருமபிராமன் ஆதிசிவனைநினைந்தார்
அத்தசமயத்தில் ஆங்காரவராகன்
[illegible]
செற்றிருந்து இனையடைக்குறுகநோக்கி
[illegible]
[illegible] அசையாமல்தானிருக்கும்
[illegible]
[illegible]
[illegible]
இருப்பினான்வராகன் [illegible]
அருச்சனைப்பார்த்து அதிகப்பிரியமாய
பக்ஷிறுமைகலைபிரான் என்றுபனைமிழ்த்து
அருச்சுனருக்கு அந்திரத்தாபோனைநூன்
வாயுவினைநிரந்தை வாள்விஜயன்கைகொடுத்தான்
வாங்கிப்பொன்கரித்து வாள்விஜயனே தொசொல்லான்
காவானப்பிரார்த்திகான் என்றவனைத்தழுக்க
என்றுகேட்டு வந்துசொல்லுவான் புராசன்
ஆதிசிவனைசழுக்க அனுப்பினான் வேண்டத்தில்
தனக்கிலைகப்பந்தை சமுத்திரத்தில்போடுமென்றார்
ஆனையாலிருவாகதேன ஆசக்தினைகப்பனை
காண்டுஅடியவில்லை இனவிரபாகுபோடுசிக்க
ஆதிசிவன்வந்தினார் அங்காரதந்திடுவார்
ண்டுநடக்கையிலே இளவிஜயனே சொல்லுவான்
உம்பர்பிரானுக்கு ஒருவார்த்தைசொல்லுமையா
என்னவென்றுசொன்னான் பெயரில்விஜயனார்க்கனம்
இருபனைவைத்துபாசுபதம் கிரீடிக்குந்தாருமையா
வேண்டும்வரங்கள்தனை விபலதாருமையா
கேட்டவரங்கள் இருபைவைத்துதாருமையா
வாங்கள்தந்தாலொழிய மலையைவிட்டுப்போவதில்லை
தவசுநிலைவைவிட்டுத் தனஞ்செயனும்போவதில்லை
ஆண்டவனேஐயாவே அசட்டையாயிருந்தால்
மண்டைபிளப்பேனென்று வாமதேவருக்குரையும்

தலையுடைப்பேனென்று சங்கார்த்துரையும்
என்றுவிசய னெடுத்துரைக்கப்போது
வாழ்த்திவிடைபெற்று வருகிறனையுபாசன்
ஆதிசிவனுக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மான்மழுதரித்தகோலா மலர்ப்பாதம்சரணமையா
அருச்சுனன் தவசழிக்க ஆண்டவனே முடியாது
உம்பர்பிரானே உம்மாலுமாகாது
காட்டுதராவிடிலோ கண்டபடித்தாவிடிப்பான்
வரங்கள்கொடாவிடிலோ மண்டையுடைப்பேனென்றான்
என்றதுகேட்டு ஈஸ்பரனார்கோபமானார்
கேட்டமோமாயவரே கொலைத்துடன்சொன்னது
மண்டையுடைக்கவும் வரம்வாங்கும்வல்லவரோ
காண்டீபத்தாலடித்து கடிவரம்வாங்குவாரோ
தலையுடைப்பேனென்ற தனஞ்செயனையிப்போதே
மண்டைதனையுடைத்து வல்லுயிரைவாங்கிடுவேன்
என்றுபரமசிவன் எரிபறந்துகண்சிவந்து
ஆடாவிடிபகவான் அதிவிரைவாய்வாருமென்றான்
வழிடியுங்கூடியொரு பேரிடியாயிடித்து
அருச்சுனன்றன்தலையை அறுபத்துசுக்கலாக்கி
கொன்றுஅதமாக்கிக் கொப்பெனவேவாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரவிடிபகவான்
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துநடுக்கமுற
ஏழுதானிடிபகவான் ஏழுலகந்தானதிர
ஆகசமையத்தில் அமராமரோடிவந்தார்
அர்ச்சுனைபார்த்திபா ஆதிசிவன்கோபமானார்
இடிபகவானேதனை ஈஸ்பரனாருப்பினர்
தலையுடைக்கவென்று தான்வாரான்இடிபகவான்
தப்பித்துக்கொள்ளுமென அமரர்போய்விட்டார்
அச்சமயத்தில் ஆங்காரவிடிபகவான்
தெய்வலோகந்தானதிர தேவர்கிடுகிடென்ன
பாதாளஆதிசேடன் பயந்துகிடுகிடென்ன
கெற்பங்கிடுகிடென்ன கிளிகள்கலிக்கொள்ள
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துகிடுகிடென்ன
எட்டுதிசைகடுங்க ஏழுலகந்தத்தளிக்க
வழிடியுங்கூடியொரு பேரிடியாய்த்தானிடித்து
அருச்சுனற்குநேராக ஆகாயமீதிருந்து
உருமொய்ப்பலக்கூட்டி உச்சிமேலேதானிடித்தான்
வரட்டும்இடிபகவான் என்றுநல்லோனாம்விஜயன்
இடிபகவான்வருகையிலே எழில்விஜயனென்னசெய்தான்
ஒஞ்சரித்துக்காணிருந்து ஒருபக்கம்இடிக்கவே
கண்முழிபிதுங்குது கண்ணீருந்தான்வடிய

இளைப்புந் தவிப்புமா யிருக்குதடி [illegible]ருக்கு
மெச்சினேன் மருமகனை [illegible] என்றார்
என் மகனே [illegible]
இப்பொழுது [illegible] என்றான்
அவ்வார்த்தைதனைக் கேட்டு அருச்சுனனே சொல்லுவான்
இனிமேல் இவ்வியுகத்தில் [illegible]
அருச்சுனனை [illegible] அப்படி நீ போமோ
என [illegible]
அவரிடம் போமென்று ஆனந்தப்பட்டா னிடும்பகுமான்
[illegible]
என்றதுகேட்டு [illegible] னிடும்பகுமான்
ஆதிசேஷ[illegible]
[illegible] வந்து அகப்பட்டே னுன்கையில்
சத்தியமா யென்னைத் [illegible] கப்பிவிட்டான் [illegible]
உன் புண்ணியத்தால் பிழைத்துப் போகிறேன்
அவ்வார்த்தைதனைக் கேட்டு அருச்சுனனே சொல்லுவான்
ஆதிசேஷ[illegible] அடிபணிந்து [illegible] சொல்லும்
ஏதுக்கு நீங்களென்னை [illegible] செய்தாலும்
அருச்சுனன் வாத்துக்கு அழிவுவரப் போகுதில்லை
[illegible]
[illegible] சொல்லும்
இடும்பகுமாருக்கு [illegible]
[illegible]
[illegible]
அந்தச்சமயத்தில் ஆதிசேஷ[illegible]
[illegible]
ஆண்டவனேயென்று அடிபணிந்து [illegible]
உன்வார்த்தை [illegible]
[illegible]
இறங்கித் தலைசாய்த்து என்னைப் பிடித்துக் கொண்டான்
சத்தியவான் அர்ச்சுனனும் தப்பவிட்டான் [illegible]
எதிர்செய்தாலும் [illegible]
[illegible]
[illegible]
பின்னும் நினைவு கொண்டான் [illegible]
என்று சொல்லி இடும்பகுமான் [illegible]
அத்தனைக்கு [illegible] ஆண்பிள்ளை [illegible]
அரைகாழ்க் கொள்ளையிலே [illegible]
அனேகமான செல்வ[illegible]
செல்லுகளோ [illegible] போய் [illegible]
[illegible]

அணைத்துவிட்டுவாருமென்று சொன்னார்பாகபாணி
வருகுதுசெல்லுதான் வாள்விசயன் தன்னருகே
அந்தச்சமயத்தில் அசிராமர்ஓடிவந்தார்
அருச்சுனவான்விசையா அனேகமேகம்வருகுதடா
ஆண்டவனை கோபமதாய் அனேகருஞ்செல்லனுப்பிவைத்தார்
எச்சரிக்கையாகவே இருங்காணருச்சுனரே
என்றுசொல்லியே எமபெருமானேவிட்டார்
அந்தச்சமயத்தில் அனேகமானசெல்லுவர
சுரேந்திரன் மைந்தனையுஞ் சூழ்ந்துசெல்லுகள்தான்
கண்டானே அருச்சுனனும் காண்டீபந்தன்னைத்தான்
வில்லினைத்தானிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அக்கினி அஸ்திரத்தை அருச்சுனனுச்சரித்து
மார்பினவாங்கிறான் வளரவிட்டான் அக்கினியை
அருச்சுனன் தபசுநிலை கம்பத்தருகாக
அக்கினிவருகுது அண்டமுடியாது
செல்லுகளண்டாமல் செந்தணலாய்ப்பத்துகுது
பார்த்துபயந்து பறந்ததுசெல்லுகள்தான்
இந்திரன்தன்னருகே சரணமிட்டுவேதுசொல்லும்
ஐயாவேசுவாமிரே ஆண்டவரேநீர்கேளும்
அருச்சுனன்தன்னருகே அக்கினிவளருகுது
ஆற்றமுடியாமல் ஐயாவேவந்துவிட்டோம்
இதுவென்கேட்டு அதிககோபமுண்டாகி
அந்தனைக்கும்வல்லவனே அருச்சுனராசனுந்தான்
என்றுபரமசிவன் எரிபறந்துகோபமுடன்
வருணபகவானை வாருமெனறுதானழைத்து
யானையுடகால்பெருமன் யானைமழைபெய்யுமெனக்
கட்டளையிட்டு கடுகியேபோமென்றார்
இதுசொல்வார்த்தை அவ்வருணன்தானுமல்
சமுத்திரத்தின்நீரையுண்டு தான்வருதுமேகங்களும்
கார்மேகமேழும் கறுத்துஎழும்பியது
ஆனைக்கால்போலவே அவ்வருணன்மழைபொழிய
அந்தச்சமயத்தில் ஆபருமோடிவந்தார்
அருச்சுனவான்விஜயா ஆண்டவனுர்கோபமதாய்
வருணபகவானை மழைபொழிய அனுப்பினார்
எச்சரிக்கையாக இருமென்றுதானடந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவருணராசன்
மேகமெழும்பி மின்னல்வருகையிலே
கண்டானேவான்விஜயன் கனமோசம்வருகுதென்று
வில்லினைத்தானிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
சங்காரமாரிபோலே சரமேற்சரம்பொழிந்தான்
அம்பினால்முடிபந்தல் அருச்சுனன்போட்டுவிட்டான்

மாங்கமழைபொழியாமல் வான்சரத்தால்பந்தலிட்டான்
வருணபகவானும வந்துமழைபொழிந்தான்
வெள்ளமாய்த்தான்பெருக வேணமழைபொழிந்தான்
அருச்சுனன்வளர்த்தினை அக்கினிக்குச்சேதமில்லை
வருணபகவானும் மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷப்பட்டானும் தார்விசயனர்ச்சுனன்மேல்
மண்ணிலும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
வருணாஸ்திரத்தை வாள்விஜயன் கைக்கொடுத்தான்
வாங்கியேவாள்விஜயன் வருணனுக்கேதுசொல்வான்
ஆரணப்பநீர்வந்தீர் அமராதுசெய்யவென்று
என்றதுகேட்டு எதுசொலவான்வருணராசன்
ஆதிசிவனார் அனுப்பினார்வந்தேனென்றான்
எழில்விஜயாவுனைசெயிக்க வென்றால்முடியாது
சொனர்தனதனக்கு இவ்வார்த்தைசொல்லப்போறேன்
ஆனல்வருணனேநீர் அரனுக்கெடுத்துரையும்
கோடிசரணமும் கும்பிட்டேனென்றுசொல்லும்
அகச்சாடல்செய்வதேதுக்கு அர்ச்சுனன்மேல்கோபமேனோ
கடிகியேவந்தெனக்கு காட்சிதரச்சொல்லுமையா
போய்வாருமென்று பொட்டெனவேசாணமிட்டான்
வாய்வேகமாகவே வருணராசன்வந்துவிட்டான்
ஆதிசிவனுக்கு அடிவணங்கிதெண்டனிட்டான்
அருச்சுனன்தன்னைசெயிக்க ஆராலுமுடியாது
உம்பர்பிரானாரே உம்மாலேமுடியாது
அத்தனைக்கும்வல்லபிரானுகையினாலிங்குவந்தேன்
கோறினவரத்தைநீர் கொடுத்தனுப்புமீஸ்பரரே
என்றதுகேட்டு ஈஸ்பரனார்கோபமானார்
வாள்விஜயன்தன்னுடைய மனமுடுக்கழிக்கிறேன்பார்
கழுகுகளுங்கூளிகளுங் கடிகியேயுண்டுபண்ணார்
அருச்சுனன்மாங்கிஷத்தை அடங்கலுமுண்ணுமென்றார்
கல்லிப்பிடுங்கியே கடிகியேகொல்லுமென்றார்
இமையோர்பிரானாரும் இனமேதுண்டுபண்ணார்
கருவண்டுசெவ்வண்டு கணக்கில்லாதுண்டுபண்ணார்
கொட்டுகின்றகுளவியை கோடியவருண்டுபண்ணார்
சுரேந்திரன்மகனுடலை துளையாய்த்துளையுமென்றார்
அரைக்ஷணநாழிகையில் அருச்சுனனைக்கொல்லுமென
மகாதேவர்சிலவருள வருகுதுசேனைகள்தான்
குளவிகளுங்கூளிகளும் கூட்டமாய்வருகுதங்கே
கனமோசமவருகுதென்று கரியமால்தானிருந்து
அருச்சுனராசன்டை அரிராமரோடிவந்தார்
காண்டீபா அருச்சுனனே கழுகுகள்வருகுதடா
குளவிகளும்கழுகுகளுங் கூளிகளும்வண்டுகளும்

அனேகம்வருகுது அங்கந்துளைப்படுத்த
எச்சரிக்கையாகவே இருங்காணும்அர்ச்சுனரே
என்றதுகேட்டு இந்திரன்மகனைத்துரைப்பான்
அடியேனுக்கிலதாரும் ஐயர்பெருமானே
உன்வலிமையாலே உம்பர்புரம்வந்தேன்
எந்தவிதத்திலேயும் ஈடேறப்பாருமையா
வணங்கிச்சரணம்பண்ணுன் மாயன்பெருமானை
தாணியனாக்கவரும் சந்தோஷப்பட்டாராம்
கழுகுகளுக்கெல்லாம் கவ்விச்சதைகொண்டாலும்
அருச்சனனதேகத்துக்கு அழிவில்லாமேதாயிருக்க
என்றுவரமளித்து எம்பெருமான்போய்நடந்தார்
வந்துபின்னிற்று சொல்விஜயன்தேகமெல்லாம்
சல்லடைக்கண்போல சமமாய்த்துளைப்படுத்தும்
எப்போதும்போல ஏற்படுத்துந்தேகமெல்லாம்
கைகள்நகம்பேர்த்து கடிக்கும்பல்லுங்கூர்மழுங்கி
மூக்குகள்தாமொடிந்து முண்டங்களாயேகுது
ஆதிசிவனருகில் அடிபணிந்துதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கழுகுகள்முறையிடும்
எங்களாலானமட்டும் எழில்விஜயன்தேகமதை
சல்லடைக்கண்களைப்போற் சதைகளைத்துளைத்திட்டோம்
சதைகளைத்துளைத்திட்டோம் சதைகளைப்பிடுங்கிட்டோம்
குப்பல்குப்பலாகவேதான் குவிப்போமங்கேதுமை
குவித்தவைநாழிகைக்குள் கூடிவிடுதேகமதாய்
துளைத்தவைநாழிகைக்குள் தோன்றுமுடல்முன்போல
பின்னுஞ்சதைகவ்விப் பிடுங்கியெறிந்திட்டோம்
அருச்சுனன்தேகமதை அழித்தேதாம் அழியவில்லை
கடிக்கும்பல்லுங்கூர்மழுங்கி கைகள்நகம்பேர்ந்ததையா
எங்களால்முடியாது இனிவிஜயனைச்செயிக்க
ஆராலுமுடியாது அருச்சுனனைச்செயிக்க
கோதினவார்த்தை கேட்டிடுமாண்டவரே
அவ்வார்த்தைகேட்டு ஆதிசிவனதுசொல்வார்
எத்தனைநாள்தவமிருந்தால் விஜயன்றுகேட்பனோ
என்றுபரமசிவன் இருந்தார்சிங்காசனத்தில்
கற்பூரமண்டபத்தில் காத்துக்கொண்டிருந்தார்
மாயன்பெருமாளும் மறுபடியுமோடிவந்தார்
அருச்சுனைபார்த்தப்ப ஆசீர்வாதஞ்செய்தார்
கற்பூரக்கொடிமுடியில் காத்துக்கொண்டிருந்தார்
கற்பூரக்கொடிமுடியைக் கலையாற்கொண்டுவிட்டால்
கலகமதைத்தொடுத்திட்டால் காட்சிகொடுத்திடுவார்
என்றதுசொல்லி எம்பெருமான்போய்நடந்தார்
அப்போதருச்சுனனும் ஆனமுகத்தோடுசொல்வான்

வில்லைத்தாநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அக்கினிபாணமதை அருச்சுனனுச்சரித்து
மந்திரத்தைஉச்சரித்து மண்டபத்தைக்கொளுத்துமென்று
மார்புரளவாங்கியே தோள்புரளவிட்டுவிட்டான்
வந்தபாணம் மகாதேவர்மண்டபத்தில்
கற்பூரமண்டபத்தைக் கொளுத்திக்கொளுத்திடவே
மண்டபந்தானெரிய மகாதேவர்பார்த்துவிட்டார்
பார்த்தீரோமாயவரே பார்த்திபன்தன்வலுவை
என்வீட்டைக்கொளுத்தியே வேணவரம்வாங்கவந்தான்
இப்படிச்செய்தவர்களெவர்களையுந்தானறியேன்
சதுர்யுகமட்டும் தவசுகள்பண்ணலும்
அருச்சுனன்தன்தமக்கு அரியவரந்தருவதில்லை
கற்பூரமண்டபத்தைக் கருக்கிவிட்டெழுந்து
சாம்பிராணிமண்டபத்தில் சாமிவந்துகொலுவிருந்தார்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாய்க்கொளுத்துமென்றார்
சொல்லிவிட்டாரே சுவாமிபெருமாளும்
மறுகாலருச்சுனனும் வரிவில்லைத்தான்கொண்டு
அக்கினியஸ்திரத்தை அருச்சுனன்முடுக்கிவிட்டான்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாயுருக்கிடுது
கண்டார்மகாதேவர் கடுகியங்கேதுசொல்வார்
கண்டீர்களோதேவர்களே காண்டீபன்றன்மைகளை
என்வீட்டைக்கொளுத்தியே வேணவரம்வாங்கவந்தான்
இந்தத்துன்பமுள்ளவனை எங்குமேகாணலியேன்
வெள்ளைநீறுமண்டபத்தில் விமலரும்போயடைந்தார்
மாயன்பெருமாளும் மாயமாயோடிவந்து
அர்ச்சுனபார்த்திபா அதிகமோசம்வந்ததடா
விபூதிமண்டபத்தில் வேந்தரும்வந்தமர்ந்தார்
அப்பெரியமண்டபத்தை அதமாக்கிப்போடுமென்றார்
அவ்வார்த்தைசொல்லி அரிராமர்போயடைந்தார்
வில்லைத்தாநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
வருணபகவான் வரமளித்த அஸ்திரத்தை
மந்திரரூபமிட்டு வாங்கினான்மார்புரள
வந்துவிழுந்தது மயேஸ்பரனார்மண்டபத்தில்
வான்மழைபோலாக வந்துபொழிந்திடுதாம்
வெண்ணீறுமண்டபமும் மெத்தக்கரைந்திடவே

கண்டார்மகாதேவர் கண்கொள்ளாக்கோபமுடன்
ஆயன்பெருமானே அருச்சுனன் ஆண்மைதனை
கண்டீரோமாயவரே காண்டீபன் ஆண்மைதனை
எத்தனைமண்டபத்தை இடித்துத்தகர்த்துவிட்டான்
இப்படிப்பட்டவற்கு எப்படிவரமருள
இங்கிருந்தோமானால் இப்படிக்குப்பண்ணுகிறான்
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போகவென்று
எழுந்தார்மகாதேவர் எல்லோருங்கூடிவர
அந்தச்சமயத்தில் அரிராமனோடிவந்து
அருச்சுனாபார்த்திபா அதிகமோசம்வந்தது
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போனார்
போய்விட்டாராமானால் பிற்பாடுகாணொணாது
காணக்கிடையாது கர்த்தருடசேர்வை
போகாமல்வைத்தால் பெருமானைக்கண்டிடலாம்
என்றதுசொலலே எம்பெருமான்போய்நடந்தார்
மாயவனார்போனபின்பு வாள்விஜயனேதுசொல்வான்
காண்டீபன்வில்லுனைத்து கணையெடுத்துஉச்சரித்தான்
கடிதிமறித்துவிடும் என்றுகணைதொடுத்தான்
வந்துவளைந்தது வான்விசயன்விட்டபாணம்
மகாதேவர்முன்பாக வளர்ந்தது அக்கினிபோல்
முக்கண்ணுடையவரை முன்னேதடுத்ததுகாண்
கண்டார்பரமசிவன கண்கொள்ளாக்கோபமுடன்
கண்டீரோதேவர்களே காண்டீபன் ஆண்மைகளை
இப்படிப்பட்டவற்கு எப்படிவரங்கொடுப்பேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்தேவரெல்லாம்
தருமர்தம்பிஅருச்சுனற்கு சமர்த்துகள்மெத்தவுண்டு
இவருடனெதிர்த்தவர்கள் எவரும்பிழைப்பதில்லை
காட்சிதந்தாலல்லாது கனமோசம்வந்துவிடும்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்ஈஸ்பரும்
அருச்சுனன்சமர்த்துகளை ஆண்மைகளைக்காணுகிறேன்
தவசுநிலைக்கம்பமதை தரையோடமிழ்த்துகிறேன்
என்றுபரமசிவன் எமனைத்தானழைத்து
எமதர்மராசனே ஏனம்போல்வடிவெடுத்து
அருச்சுனன்தன்னருகில் அபயமிட்டோடுமென்றார்
கடிதிபனுப்பினார் கடவுளுமவனையங்கே

எமதர்மராசன் ஏனம்போல்வடிவெடுத்து
பன்றிவடிவெடுத்து பார்த்திபன் அருகில்வந்தான்
அபயம் அபயமென்று அழுதுபுலம்பிவாரான்
அபயமென்றசத்தம் அருச்சுனன் தான்கேட்டு
அபயக்குரல்கேட்டால் ஆதரிக்கவேணுமென்று
அசைப்புஅஸ்திரத்தை அருச்சுனன்விட்டுவிட்டான்
காட்டுப்பன்றிதன்னையுந்தீ சமயத்தில்கட்டுமென்றான்
மந்திரமுபயிட்டு வாக்கினானருச்சுனனும்
வந்தது அஸ்திரந்தான் வளைத்துபேகட்டுருது
சம்பத்துடனேதான் கட்டியேபோட்டுது
கட்டுண்டான்காலன் காண்டீபன்தன்சரத்தால்
அந்தச்சமயத்தில் ஆதிசிவனெழுந்தார்
மெத்தப்பெரியவராய் வேடன்வடிவெடுத்தார்
பிரமதேவன்தானும் பெரியவொருவேடரானார்
விக்கினவிநாயகனார் வேடர்வடிவெடுத்தார்
சூர்குலம்வேரறுத்த சுப்பிரமணியர்வேடரானார்
அமராபதியாளும் அங்கபிரான்வேடரானார்
அடியளக்கமாயவரும் அக்கேறுவேடரானார்
அருச்சுனனைவெல்லவென்று அனைவருமேவேடரானார்
தன்வரியைதானழைத்து இப்போசமயமென்றார்
தன்பரியாள்தன்னுடனே எழுபேர்வேடரானார்
வாரார்வடிவெடுத்து வாசவிஜயன்தன்னருகே
காற்செருப்புத்தோல்குல்லாவும் கையில்துப்பாக்கிசனும்
மான்வலையுஞ்சில்லாக்கோல் மருந்துகேப்குண்டுசனும்
ரெட்டைகுண்டுதுப்பாக்கி கேசிசமுப்தோளில்வைத்து
சின்னவேடன்பெரியவேடன் சிவனார்கிழவேடரானார்
பொன்னாற்றமுக்கடித்துப் புறப்பட்டார்வேடரெல்லாம்
மற்றமுள்ளதேவதைகள வயிரவனார்வடிவெடுத்தார்
கருநாயுஞ்செந்நாயும் கணக்கில்லாநாய்களோட
காட்டைவளைத்தார்கள் கருநாயைச்சுற்றிவிட்டார்
அம்புவில்லாயுதமும் ஆண்டவனார்கைப்பிடித்து
வாரார்கள்வேடரெல்லாம் வளைத்துதாத்தியல்லோ
அத்தண்டவேடுவரும் அருச்சுனனருகில்வந்து
ஆர்காணுஞ்சங்கமமோ அறிவைப்படைத்தவரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே

நீயப்படிக்கலவரே தெளிவறிந்தசங்கமரே
ஏழைகண்டாய்வேடுவனான் எட்டுநாள்காத்திருந்தேன்
காத்திருந்திவ்வேனமதைக் கணையாலேயெய்துவிட்டேன்
காயப்பட்டேயேனம் கடுகியேவந்ததிங்கே
ஏனம்வந்தசாடையிது இப்போர்தடிபிடித்து
அடிபிடித்துவந்தோம்நாம் ஆனதொருசங்கமரே
சம்பத்துடனேநீர் கட்டிவைத்தகாரியமேன்
பசியோடிருக்கிறோம் பன்றிதனைவிட்டுவிடும்
பிள்ளைகளுங்குட்டிகளும் பெரும்பசியாய்ப்புலம்புகிறோம்
கட்டவிழ்த்துவிட்டுவிடும் கடுகப்புசித்திடுவோம்
என்றுசொல்லிக்கொண்டு ஈஸ்வரனார் தான்வரவே
காண்டீபனருச்சுனனுங் கடுகியேதுசொல்வான்
இவதரியானமாகவே இல்விஜபனேதுசொல்வான்
ஆரடாவேடுவனே அப்புறத்தேபோய்விடுங்காண்
அபயக்குரல்கேட்டால் ஆதரிப்பனல்லாமல்
இனிமேல்விடுவேனென்று எண்ணாதேஉன்பனில்
பன்றியைத்தின்றாலே பசியாறிப்போவாயோ
குழந்தைக்குழந்தனுக்குங் குலத்தார்க்கும்போதுமோகாண்
தன்னைப்போலசீவன்களை தான்கொல்லஎண்ணுவரோ
சிவனாரைநோக்கியே செய்கிறேன்தவசுநிலை
எதிரிட்டுக்கொள்ளாதே இடையுங்கள்வேடுவரே
அரகராஅரனேயென்று அடித்தானேசெயகண்டிகை
சம்போசிவனேயென்று தொனித்தானேசங்குதனை
ஆதிசிவனும் அருச்சுனற்கேதுசொல்வார்
எத்தனைசொன்னாலும் இரங்கலையோவுன்மனது
தருமம்நினைத்தாக்கால சாமிவந்துதுணையாவார்
வயிறுபசிதீர்த்தாக்கால் மகாதேவர்துணையாவார்
உன்-தாயார்தகப்பனுக்குந் தமயர்க்குந்தம்பியர்க்கும்
ஒருகோடிமோட்சமுண்டு உச்சாகஞ்செய்யுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனரேதுசொல்வார்
ஒருகாலுரைத்தேனே மறுகாலுரைப்பேனோ
தவசுநிலைவேளையிலே சத்தங்கள்போடாதே
சந்திரர்கள்சூரியர்கள் தவறிநிலைதப்பினாலும்
காலம்பிரண்டு கலியுகம்வந்தாலும்
நறுக்கிப்பிழிந்தென்னை நரகத்திற்போட்டாலும்

வாயாரச்சொன்னசொல்லு மறந்துவிடப்போரதில்லை
ஆதரிப்பேனல்லாமல் அலையவிடப்போரதில்லை
மறுவார்த்தைபேசாதே வல்லுயிரைவாங்கிடுவேன்
எதிரேவரவேண்டாம் இடையநில்லும்வேடரே
ஆகாஅம்மேனேயென்ருன் ஆங்கேபேலேதியானமாருன்
அப்போதுபரமசிவன் அருச்சுனற்கு எதுசொல்வான்
நான்-ஏழையென்ருேசங்கமரே என்னைமிரட்டுகிருய்
என்னைதுரத்திவிட்டுடன் பன்றியைத்தின்னவென்ரு
என்னைமிரட்டுகிருய் இவ்வார்த்தைதானறியேன்
நான்போவேனென்று எண்ணுதேயுன் மனதில்
ஆறுபேர்வேடுவர்கள் அருங்கிளியாள்வேடிச்சி
உத்தமரேநீயொருவன் உகந்துமேகூடியல்லோ
பன்றிதனைச்சுட்டு பங்கிட்டுக்கொள்ளுவோமவா
பங்குப்போட்டுத்தின்று பசியாறிக்கொள்ளுமென்ருர்
என்றதுகேட்டு எதுசொல்வார்சங்கமரும்
ஜாதிக்குதக்கபுத்தி தானிருக்கும்வேடருக்கு
என்றுசொல்லிவேடரு மேதுசொல்வாரப்போது
ஆண்டிபயலுக்கு அறிவுகிடையாது
பசிக்குதெனவேண்டி பன்றிமேலம்புதொட்டேன்
தப்பித்துவோடிவரக் கம்பமதிற்கட்டலாமோ
கீழேயிறங்கிவாடா கேடுகெட்ட ஜங்கமனே
என்சமத்தும்உன்சமத்தும் இப்போதெரியுமடா
சண்டைக்குவாடாநீ சமத்துள்ளசங்கமனே
என்றவுடன்கம்பம்விட்டு இறங்கினுன்வாள்விசையன்
வாள்விசையன்றன்முதுகில் பச்சரேகைபார்க்கவென்று
பரமசிவனும்வந்து பார்த்தனுடன்சண்டைபண்ணுர்
ஆண்டவனென்றறியாமல் அடித்தான்காண்வில்லாலே
பரமனுங்கிழ்விழுந்து பார்த்தனையெடுத்துக்கொண்டார்
பார்வதியாள்பார்த்தாளே பார்த்தனிடமச்சரேகை
பார்த்திபனென்று பார்வதியாள்பேர்கொடுத்தாள்
பாசுபதாஸ்திரம் பரமனுந்தான்கொடுத்தார்
அநேகவரம்பெற்று அருச்சுனனுந்தான்வாரான்
அண்ணனிடம்வந்து ஆசையுடனுரைத்தான்
பன்னிரண்டுவருஷமும் பாரவனந்திரிந்து
ஐவர்பஞ்சபாண்டவரே ஆணியப்பிட்டுநீங்கள்

அக்கியாதவாசம் அருந்தபசுசெல்லுமென்று
இச்சையுடனுரைத்து எம்பெருமாள்பயணமானார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
துவாரகாபுரிநோக்கி சுவாமியவர்போகலுற்றார்
அப்பால்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
ராமருடதன் தயவால் பன்னிரண்டுவருஷஞ்சென்று
வனவாசமேதிரிந்து வாரார்கள்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
நாடேவருகிறார் ராமருடதன் தயவால்
இந்தக்கதையிலே எழுத்துப்பிழையிருந்தால்
தப்புபிழைதிருத்தி தயவுபண்ணிரட்சிக்கவும்
ஆல்போலதழைத்து அருகுபோல்வேரூன்றி
பால்போல்ருசிக்கப் பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கியநால்வேத முயிர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்று வரமளித்தார்ஈஸ்வரனார்.

விருத்தம்.

இப்பெருங்கதையை யுரைத்தவர்படித்தோ
ரெழுதினோர்பொருள்விரித் துரைத்தோர்
செப்பருமன்பாற் கேட்டுளோரிதன்பேர்
செப்பினோர்தீமையிற் றீர்ந்தே
எப்பெருஞ்சிறப்பு மைந்தரும்வாழ்வு
மிசைந்ததீர்க் காயுளுமுளராய்
ஒப்பருங்கதியி னிலைபெறவிளக்கி
யும்பரும்புகழ வாழ்குவரே.

பஞ்சபாண்டவர் வனவாசம்

முற்றிற்று.